
ஆட்ட நாயகன்
சுபா

## உள்ளே...


| | | |
|---|---|---|
| 1. | ஆட்ட நாயகன் | 5 |
| 2. | உளவுக்காரி | 80 |
| 3. | தேசத் துரோகி | 187 |


# ஆட்ட நாயகன்



துவங்கும் முன்

ஏப்ரல் 10, வெள்ளிக்கிழமை

ஆனந்த் ஆட்டோவிலிருந்து இறங்கினான்.

அதன் இருக்கையில் படுக்க வைக்கப்பட்ட அலுமினியம் தகடுகளை எடுத்து கைகளால் இடுக்கிக் கொண்டான். கீழே இருந்த பிளாஸ்டிக் வாளியை அதில் இருந்த திரவத்துடன் தூக்கினான். இப்போது இரு கைகளிலும் பொருட்கள், கையிடுக்கில் தகடுகள்.

நேர் மேலே சூரியன். ஆனந்தின் நிழல் அவன் காலடியில் கிடந்தது.

ஆனந்த் எதிரே இருந்த கட்டிடத்தைப் பார்த்தான். சற்றே விரிந்த தாமரை மொக்கு போல அமைப்பு. கண்ணாடி சுவர்கள்.

ஆனந்தைப் பார்த்ததும் வாயிற் காப்போன் தடுத்தான்.

''ஸ்டோர்ஸ் ரூம் பின்புறம் இருக்கிறது'' என்றான். ஆனந்தின் கைகளில் இருந்த பொருட்களைப் பார்த்தபடி.

''நான் ஸ்டோர்ஸ் சப்ளை செய்ய வரவில்லை'' என்றான் ஆனந்த். ''விஞ்ஞானி நந்தகோபாலின் அழைப்பின் பேரில் வந்திருக்கிறேன். பத்து மணிக்கு வரச் சொல்லியிருக்கிறார்...''

''அத்தாட்சிக் கடிதம்?''

ஆனந்த் வலது கையில் இருந்தவற்றைக் கீழே வைத்து விட்டு, தன் பையிலிருந்து கவரை எடுத்தான்.

கூடவே ஒரு மழமழ புகைப்படமும் வந்தது. கை நழுவிக் கீழே விழுந்தது.

''யார் இந்தப் பெண்?''

என் காதலி என்று அவனுக்கு பதில் சொல்லவில்லை. ஆனந்த் அவசரமாகக் குனிந்து அந்தப் புகைப்படத்தை எடுத்து பாக்கெட்டில் செருகினான்.

ப்ரியா, நீ என்னுடனேயே இரு... நீதான் எனக்கு உற்சாகம் தர வேண்டியவள்...

கவரைத் திருப்பி வாங்கி செருகிக் கொண்டு, திறக்கப்பட்ட கதவு வழியே ஆனந்த் உள்ளே நுழைந்தான்.

ரிசப்ஷனில் இருந்த ஸ்லீவ்லஸ் பெண்ணிடம் கடிதம் காட்டியதும், காக்கிச் சட்டை அணிந்த ஒரு பணியாளர் வந்து ஆனந்திடமிருந்து பொருள்களை வாங்கிக் கொண்டார்.



''இவரை கான்ஃபரன்ஸ் ஹாலிற்கு அழைத்துப் போங்கள்'' என்றாள், ரிசப்ஷன் பெண்மணி.

படபடக்கும் நெஞ்சுடன் அவரைப் பின் தொடர்ந்தான் ஆனந்த்.

கான்ஃபரன்ஸ் ஹாலின் மரக்கதவுகள் அவனைப் பொறுத்த வரையில் சொர்க்கக் கதவுகளாகத் திறந்தன. உள்ளே கோட்டும், சூட்டும் அணிந்த தேவர்கள் அவன் வரவிற்காக காத்திருந்தது போலிருந்தது.

''குட்மார்னிங் எவ்ரிபடி'' என்று கைகளைக் கூப்பினான்.

ஆறு நபர்கள் வட்டமான மேஜையைச் சுற்றி உட்கார்ந்திருந்தனர். ஐந்து ஆண்கள். ஒரு பெண்மணி.

அந்த ஹாலின் இன்னொரு கதவு திறந்து உள்ளே அடுத்த மனிதர் நுழைந்தார். அவர் உயரமாய் இருந்தார். சற்று சதுரமான முகம், மூக்கின் மத்தியில் நிற்கும் தங்க பிரேம் கண்ணாடி, பிரஷ் மீசை. கோட் பையில் தங்க முடியுடன் பேனா. அவர்தான் விஞ்ஞானி நந்தகோபால் என்பது ஆனந்திற்கு உடனே புரிந்தது. விஞ்ஞானப் பத்திரிகைகளில் அடிக்கடி பார்த்த புகைப்படங்களில் இருந்த அதே முகம். அவருக்கு வணக்கம் சொன்னான்.

அவர் கண்ணாடியை சற்றே மேலேற்றிக் கொண்டு, ''நீங்கள்தான் ஆனந்தா?'' என்றார்.

''யெஸ், சார்...''

''உட்காருங்கள்'' என்று அவனுக்கு ஒரு இருக்கையை காண்பித்துவிட்டு, நந்தகோபால் மற்றவர்கள் பக்கம் திரும்பினார்.

மேஜையிலிருந்து ஒரு பைலைப் பிரித்து, விவரங்களை சரி பார்த்துப் பேசலானார்.

''இவர் பெயர் ஆனந்த். எலக்ட்ரிகல் இன்ஜினீயர். மிகக் குறைந்த விலையில் தட்டுப்பாடற்ற மின்சாரம் தயாரிப்பது பற்றி இவர் அரசுக்கு ஒரு விண்ணப்பம் சமர்ப்பித்திருந்தார். இவருடைய, ஆராய்ச்சி முடிவு உண்மையானது தானா, இவர் சொல்லும் முறையில் மின்சாரம் தயாரிப்பது சாத்தியமா என்று கண்டறியத்தான் அரசாங்கம் நம் குழுவை நியமித்திருக்கிறது. இவருடைய ஆராய்ச்சி குறித்த எந்த சந்தேகமாய் இருந்தாலும் நீங்கள் தயங்காமல் குறுக்கிட்டுக் கேட்கலாம்... ஆனந்த் எல்லாக் கேள்விகளுக்கும் பதில் சொல்லக் கடமைப்பட்டவர்... அவருடைய ஆராய்ச்சி முடிவு மட்டும் வெற்றிகரமாக இருந்தால், அது இந்தியாவில் ஒரு மாபெரும் புரட்சியையே தோற்றுவிக்கும் என்பதை மறக்காதீர்கள்...''

சொல்லிவிட்டு அவரும் தன் இருக்கையில் அமர்ந்தார். ஆனந்தின் நா உலர்ந்தது. தொண்டை வறண்டது. பாக்கெட்டில் இருந்த போட்டோவை ஒரு முறை தொட்டான்.

'ப்ரியா... என்னுடனேயே இரு... எனக்கு உற்சாக மூட்டு' என்று மௌனமாக அவளிடம் வேண்டினான்.

தன் உபகரணங்களை எடுத்து மேஜை மீது ஒவ்வொன்றாகப் பொருத்தினான். அத்தனை பேரும் அவனையே உன்னிப்பாக கவனிக்கும் உணர்வின் காரணமாக எலும்புகள் நடுங்கின. தன்னைத்தானே தைரியப்படுத்திக் கொண்டு பேசலானான்.

''மதிப்பிற்குரிய விஞ்ஞானிகளே... என் ஆராய்ச்சி பற்றிய முழு விபரங்களையும் ஏற்கெனவே நீங்கள்



படித்திருக்கக் கூடும். இப்போது இங்கே உங்கள் கண் முன் நான் அதை டெமான்ஸ்ரேட் செய்து காட்டப் போகிறேன்...''

வித்தை காட்டுபவன் போல அவன் ஒவ்வொரு பகுதியாகத் தொட்டுக் காட்டினான்.

''இது இயற்கை நமக்கு அளித்துள்ள பரிசு'' என்று இரண்டு உள்ளங்கைகளையும் திறந்து காட்டினான். இவை ஒரு காட்டுமரத்தின் பழங்களில் கிடைக்கும் கொட்டைகள். அந்த மரத்திற்கு 'மின்தானமரம்' என்று நான் பெயரிட்டுள்ளேன். இந்தக் கொட்டைகளை இந்த இயந்திரத்தில் போட்டு, சில ரசாயனங்களை சேர்த்தவுடன், இந்தக் கொட்டைகள் கரையும்... கரையும்போது இதிலிருந்து வெளிப்படும் சக்கையை மின்சாரமாக மாற்றுவதற்கான கருவிகள்தான் இவை.''

''வெயிட்'' என்றாள், அந்த அம்மணி. ''இந்த விதைகளை ரசாயனத்துடன் சேர்க்கும் இந்தப் பாத்திரத்திற்கு எதற்கு மின்சாரத் தொடர்பு கொடுத்திருக்கிறீர்கள்?''

''விதைகளை ரசாயனத்தில் குறிப்பிட்ட வேகத்தில் தான் அரைக்க வேண்டும். இந்த பாத்திரம் ஒரு மிக்ஸியைப் போல சுழன்று விதையை உடைத்து பொடியாக்கும் - அதே சமயம் மெலிதான வெப்பத்தையும் இந்தக் கலவைக்குள் செலுத்தும்... அதற்காகத்தான் இந்த இயந்திரத்திற்கு மட்டும் வெளியிலிருந்து மின்சாரம் தேவை...''

அம்மணி மௌனமாக கைகளை மடியில் சேர்த்துக் கொண்டாள்.

ஆனந்த் உபகரணங்களை விளக்கிவிட்டு தன் சோதனைகளை அவர்களுக்கு முன் துவங்கினான். நான்கு கட்டங்

களைத் தாண்டி, ஒரு மின்காந்தப் பகுதி அருகே இருந்த இரண்டு ஒயர்கள் மூலம் தொடர்பு ஏற்படுத்தியதும், மின் பல்பு எரிந்தது. ஒரு மின்விசிறி சுழன்றது. மூன்று பேர் கைகளைத் தட்டி தங்கள் பாராட்டுதல்களைத் தெரிவிக்க, விஞ்ஞானி நந்தகோபால் எழுந்தார். ரசாயனப் பகுதிக்குப் போகும் மின்சாரத்தைத் துண்டித்தார்.

உடனே பல்பு அணைந்தது.

ஆனந்த் பதறினான். "அந்தக் கொட்டைகள் குறிப்பிட்ட வேகத்தில் ரசாயனத்துடன் கலந்து சுழல வேண்டும். அதற்காகத்தான் அந்த இயந்திரம்... அப்போதுதான் மின்சாரம் உற்பத்தியாகும். அதை ஏன் அணைத்தீர்கள்?"

"பொய்! நீ சொல்வதெல்லாம் பொய். செய்வதெல்லாம் பித்தலாட்டம். விதைகளை ரசாயனத்தில் கலக்கும் பாத்திரத்திற்குத் தேவை என்று பிளக் மூலம் மின்சாரம் எடுத்து, அதையே இந்த ரசாயனங்கள் மூலம் அடுத்தடுத்து நகர்த்தி, கடைசி கட்டத்தில், உன் ஆராய்ச்சியில் தயாரான மின்சாரம் போலக் காட்டுகிறாய். இந்த ஸ்விட்ச்சைத் தட்டியதும், உன் மின்சார உற்பத்தியே நின்று விட்டது!" நந்தகோபால் ஆவேசத்துடன் பேசினார்.

"நோ சார்" ஆனந்த் இரு கைகளையும் உயர்த்தி பேசும் குரலில் பேசினான். "இந்த பாத்திரத்தில் அரைப்பதற்குத் தேவையான வேகத்தையும், வெப்பத்தையும் சீராக வைத்துக் கொள்ள மட்டும்தான் எனக்கு வெளியிலிருந்து மின்சாரம் தேவை. இதே காரியங்களை மின்சாரம் இல்லாமல் செய்ய முடிந்தால் கூட இந்த ரிஸல்ட் மாறாது. அதற்கான விதிமுறைகளை நாம் கண்டு பிடிக்கலாம். ஆனால் அவசரப்பட்டு, இங்கே வரும் மின்சாரத்தைத் தான், இதில் உற்பத்தியான மின்சாரமாக நான் சொல்லி ஏமாற்றுகிறேன் என்று மட்டும் சொல்லாதீர்கள்..."



"பின் இயந்திரத்துக்கு உள்ளே போகும் மின்சாரத்தை கட் பண்ணியவுடன், ஏன் உன் மெஷின் உபயோகமற்றுப் போனது?"

"இந்த ரசாயன மாற்றத்தில் ஒரே வேகம் இருக்க வேண்டும்... அது தடைப்பட்டவுடன் உற்பத்தியும் தடைப்பட்டு விட்டது..."

"உடான்ஸ்! இன்னொரு முக்கியமான உள்சதி உண்டு. மின்சாரம் வேறு வேறு சக்திகளில் உருவாகிறது. அதை நாம்தான் நமக்கு ஏற்ற வோல்டேஜ் விகிதத்தில் எடுத்துக் கொள்கிறோம். சில மேல்நாடுகளில் 110 வோல்ட் மின்சாரம்தான் பயன்படுகிறது. நமது நாட்டில் 240 வோல்ட் மின்சாரம் பயன்படுத்துகிறோம். இப்படி இருக்கையில், நீ கொண்டு வந்திருக்கும் இயந்திரம் மிகச் சரியாக இருநூற்று நாற்பது வோல்ட் மின்சாரத்தையே உற்பத்தி செய்கிறதே. அது எப்படி? நூறு வோல்ட்டாகவோ, நானூறு வோல்ட்டாகவோ அது ஏன் இல்லை?"

"அது - அது... இந்த மின்தான மரத்தின் விதைகளுக்கு அந்த பண்பு இருக்கிறது என்றுதான் நான் நினைக்கிறேன்..."

"இல்லை! உள்ளே அனுப்பும் மின்சாரத்தின் அதே அளவு வோல்டேஜ் வெளியே வரும் மின்சாரத்திலும் இருக்கும்... ஏன் என்றால் அவை இரண்டும் ஒரே மின்சாரம் தான்..."

"இல்லை சார்... பாட்டரியால் இந்த ரசாயன வேகத்தைக் கட்டுப்படுத்த முடிந்தால் கூட, வெளியே வரும் மின்சாரம் இதே அளவுதான் இருக்கும்..."

"அதை முதலிலேயே நீ செய்து காட்டியிருக்க வேண்டும்."

''வேண்டுமானால், ஒன்று செய்யுங்கள்... உள்ளே செலுத்தப்படும் மின்சாரத்தின் அளவை ஒரு மீட்டர் வைத்து அளவிடுங்கள். வெளியே வரும் மின்சாரத்தை இன்னொரு மீட்டர் வைத்து அளந்து பாருங்கள்... நிச்சயம் வித்தியாசம் இருக்கும்...''

''ஒன்றாக இருந்தாலும் நீ ஏதாவது முட்டாள் தனமாக விளக்கம் கொடுப்பாய்... நீ செய்த பித்தலாட்டத்தைப் பார்த்து அதற்கு சான்றிதழ் வழங்க நாங்கள் ஏமாளிகள் அல்ல. உன்னிடம் பணம் வாங்கி ஒத்துழைக்கும் துரோகி களும் அல்ல. ஐ'ம் ஸாரி. அரசாங்கத்தை நீ ஏமாற்ற நாங்கள் ஒரு போதும் துணையிருக்க மாட்டோம்...''

''சார்...''

''ஐ'ம் வெரி ஸாரி... உன் இயந்திரத்தை மூட்டை கட்டிக் கொண்டு உடனே கிளம்பு...''

அவருடைய வார்த்தைகளுக்குக் காத்திருந்தவர்கள் போல குழுவில் இருந்த அனைவரும் எழுந்து விட்டனர்.

''எனக்கு இன்னொரு சான்ஸ் கொடுங்கள், சார்... இந்த வகையில் மின் உற்பத்தி செய்ய முடிந்தால் அது இந்தியா விற்கு பேருதவியாக இருக்கும்...''

''ஜென்டில்மேன், எங்களுடைய நேரம் பொன்னானது. அதை உன்னைப் போன்ற திருட்டுப் பயல்களுக்காகத் தொடர்ந்து வீணடிக்க முடியாது...'' நந்தகோபாலின் குரலில் இரக்கமே இல்லை.

அவர்கள் அனைவரும் அந்த அறையை விட்டு வெளியேறினர்.

ஆனந்த் அதிர்ந்து போய் நின்றான். பாக்கெட்டிலிருந்து போட்டோவை எடுத்தான்.



''ப்ரியா... நான் தோற்று விட்டேன்...''

சூடான கண்ணீர் முத்துக்கள் ப்ரியாவின் முகத்தில் விழுந்து தெறித்தன.

**இனி கதை துவங்குகிறது.**



# 1

செப்டம்பர் 10, வியாழன்

மேகங்களுக்கு மேலே விமானம் பறந்து கொண்டிருந்தது. ஜன்னல் கண்ணாடியில் முகம் புதைத்து வெளியே பார்த்துக் கொண்டிருந்த ப்ரியாவின் கண்களில் பட்டாசு வெளிச்சம்.

''மேகத்தைப் பாத்தீங்களா, ஆனந்த்? பால் நுரை போல எவ்வளவு அழகு! பாக்கவே லவ்லியா இருக்கு... தெரியாத் தனமாக யாராச்சும் இங்க நடந்து வந்தா, என்னா ஆகும் ஆனந்த்?''

''என்ன ஆகும்? விமானத்துல ஒரு தேவதையைப் பாத்த சந்தோஷத்தோட சொய்யின்னு பூமிக்கு இறங்கிப் போக வேண்டியதுதான்...'' ஆனந்த் அவளுடைய கையை எடுத்து மடியில் வைத்து விரல் விரலாக நீவிக் கொடுத்தான்.

''ஏய்... யாரும் பாக்கக் கூடாதுன்னுதான் இவ்வளவு செலவு பண்ணி பிளேன்ல அழைச்சிட்டு வந்திருக்கீங்க. அப்புறம் பிளேன்ல என்னை பாத்திட்டு அது இதுன்னு ஏன் பயமுறுத்தறீங்க?''

போலியான பயத்தை கண்களில் தேக்கி அவள் திகைத் ததே வேடிக்கையாக இருந்தது.

அவளை இவ்வளவு கிட்டத்தில் பார்க்கும் போது, ஆனந்திற்குள் மின்சாரம் வெடித்தது. இன்னும் இரண்டு

நாட்களுக்கு இவள் அருகிலேயே இருக்கப் போகிறாள் என்ற எண்ணமே உள்ளங்கால் முதல் உச்சி மண்டை வரை கிர்ர்ர் என்று போதை ஏற்றியது.

ப்ரியாவின் சருமத்தில் சூரிய வெளிச்சம் பட்டு, தகதகவென்று மின்னியது. வளைந்த புருவங்கள், பெரிய வெண் விழிகள், தீர்க்கமான நாசி, வடிவமான சிவந்த ஈர உதடுகள், மேல் உதட்டுக்கு மேலே ஒரு அழகு மச்சம். தலையசைக்கும்போது ஊஞ்சலாடும் காது ஜிம்மிகள்.

அப்படியே சாய்ந்து அவள் காது மடலைக் கடித்தான். அவள் சிலிர்த்து விலகினாள்.

''ஏய் வாலு, சரியான நாய்க்குட்டி நீ.. கடிக்கறே பாரு...''

''கடிக்கப் போறேன்... கிள்ளப் போறேன்... வாசனை பாக்கப் போறேன்... வாயில் போட்டு மெல்லப் போறேன்... நாக்கு நுனியால தொட்டுப் பாக்கப் போறேன்... என் செல்ல சாக்லெட் கேக்கை அணு அணுவா ருசிச்சி சாப்பிடத்தான் மும்பைக்கு தூக்கிட்டு வந்தேன்?''

''அவ்வளவு தானா?'' போலியான ஏமாற்றத்தைக் குரலில் காட்டினாள் ப்ரியா. ''நீ என்னவோ என்ன லவ் பண்றே, மெட்ராஸ்ல இருந்தா ஒரே தொந்தரவா இருக்கு. அதனால மும்பை வரைக்கும் பிரைவேட்டா ஒரு ட்ரிப் போயிட்டு வரலாம்னு சொன்னேனு நெனைச்சிட்டிருந் தேன்... கடைசில கடிச்சு தின்றதுக்குதான் அழைச்சிட்டு வந்தியா?''

''கடிக்கக் கடிக்க லவ்வு ஜாஸ்தியாவும் ப்ரியா... அது தான் இதுல ஸ்பெஷாலிட்டி. நீயும் கடிச்சுப் பாரேன்...''

''போடா போக்கிரி...'' என்றபோது, ஸ்பீக்கர்களில் அறிவிப்பு வந்தது.



''மும்பையை நெருங்கி விட்டோம்... தயவு செய்து உங்கள் இருக்கைகளை நிமிர்த்திக் கொள்ளுங்கள்... சீட் பெல்ட்டை அணிந்து கொள்ளுங்கள். பயணத்தை நீங்கள் ரசித்திருப்பீர்கள். கேப்டன் வர்மாவும், அவர் குழுவும் உங்களுக்கு மாலை வணக்கம் சொல்வதில் மகிழ்கிறோம்...''

சீட் பெல்ட்களை அணிந்தனர். கையுடன் கை கோர்த்து விரல்களை முறித்தனர். விமானம் மேகத்தை மோதிக் கீழே இறங்க, திடீரெனத் திரை விலக்கப்பட்டது போல் மும்பை!

தீயின் நாக்குகளின் வடிவத்தில் நகரத்திற்குள் அங் கங்கே பிரவேசித்திருந்த கடல். சாக்பீஸ்களை நிற்க வைத்தது போல் தெரியும் உயர உயரமான கட்டிடங்கள். டெலிவிஷன் கோபுரம். செல்லுலார் போன்களின் கோபுரங்கள்.

விமானம் தழையத் தழைய செல்வம் செழிக்கும் மும்பை நகரம் மிதந்து மிதந்து மேலே வந்தது.

விமான நிலையத்தை வட்டமிட்டபோது, அட நாய்க் குட்டிகள் போல எத்தனை விமானங்கள்! இவ்வளவு பெரிய விமான நிலையமா?

விமானம் ரன்வேயைத் தொட்டபோது ஏற்பட்ட சின்ன உதறலுக்கு ப்ரியா ஆனந்தை இறுகப் பற்றினாள். அவன் எதிர்பாராத கணத்தில் பச்சக் என்று கன்னத்தில் ஒரு முத்தம் பதித்தாள்.

''டியர் நிஜமாகவே மும்பை வந்துட்டோம்...''

''யெஸ்'' என்றான், ஆனந்த் மூச்சை உள்ளுக்கிழுத்து.

''சாமிகிட்ட வேண்டிக்க.. தூரத்து சித்தப்பா பையன், ஒண்ணு விட்ட மாமாவோட மச்சினன்னு எவனாவது பாத்துத் தொலைக்கக் கூடாதுன்னு வேண்டிக்க... உடனே

ஊருக்கு போன் போட்டு உங்க பொண்ணு காலேஜ்ல எஜுகேஷன் டூர் போயிருக்கானு நெனைச்சிருக்கீங்களே, அவ ஒசரமா ஓணான் மாதிரி மூஞ்சி இருக்கற மீசை வச்ச ஒரு பையனோட மும்பைல சுத்திட்டிருக்கானு வத்தி வச்சிடுவானுங்க...''

''ஆனந்த் இப்படிலாம் நீ பேசினா என் மூடு அவுட் ஆயிடும்.. நானே திக்கு திக்குன்னு வந்திட்டிருக்கேன்... என்னை பயமுறுத்தாத...'' ப்ரியாவின் கண்கள் கலங்கின.

''அட லூஸ் பொண்ணே... அப்படி எவனாச்சும் பாத்தாதான் என்ன? அவன்கிட்டேயே போய் டயம் கேட்போம்.. ஹாய்யா பூய்யான்னு நீ ஏதாவது ஒரு பாஷைல பேசு... செல்லமா அவன் மண்டைல தட்டு... சைனாலேர்ந்து வந்த பொண்ணுனு நான் சொல்லிடறேன்... உலகத்துல ஏழு பேர் ஒரே மாதிரி இருப்பாங்களாமே...''

''நீ வர வர ரொம்ப பேத்தறே...''

''நீ பக்கத்துல இருந்தா எல்லாமே குழம்பிப் போயிடுது ப்ரியா... ஆமா இவன் என்ன பீச் ரோடுல ஊர்வலம் போகற மாதிரி ரன்வேலயே இத்தனை நேரம் ஊர்ந்துட்டிருக்கான்?''

''மும்பை பெரிய ஏர்போர்ட் கண்.ணா... எந்த ஹோட்டல்ல ரூம் புக் பண்ணியிருக்கே?''

''ஹோட்டல் ஸாண்ட்ஸ்.''

''மணல்?''

''யெஸ். ஜுஹு பீச் பக்கத்துல ஹோட்டலாம்... நல்லா இருக்கும்னு என் பிரெண்டு சொன்னான். நைட்ல அப்படியே பீச் பக்கம் ஒரு வாக் போயிட்டு... மணல்ல உட்கார்ந்து மடிமேல தலை வச்சு...''



''சொல்லாதே... இப்பவே உடம்புல குறுகுறுங்குது...'' என்றாள் ப்ரியா. இரண்டு பெரிய இமைகளையும் அழுந்த மூடி.

விமானம் முடிவாக நிறுத்தத்திற்கு வந்து அவர்கள் கைகோர்த்து எழுந்தார்கள்.

தங்கள் பெட்டிகளைக் கவர அவர்கள் கன்வேயர் பெல்ட் அருகில் காத்திருந்தபோது, ஸ்பீக்கரில் அந்த அறிவிப்பு வந்தது.

''சென்னையிலிருந்து ஏர் இந்தியா விமானம் மூலம் வந்து இறங்கிய பயணிகள் மிஸ்டர் கே.ஆனந்த் மற்றும் மிஸ். பிரியா இருவரும் உடனே ஏர்போர்ட் மேனேஜரின் அறைக்கு வரச் சொல்லி கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். மிக அவசரம்.''

திடுக்கிட்டார்கள். ஒருவரை ஒருவர் பார்த்துக் கொண்டார்கள்.

யாருக்கும் தெரியாமல் வந்ததைக் கூட யாரோ மோப்பம் பிடித்து விட்டார்களா என்ன?

''ஆனந்த் எனக்கு பயமாயிருக்கு...'' என்றாள் ப்ரியா அவன் கையைப் பற்றியபடி, ''எங்கப்பாவுக்கு விஷயம் லீக் ஆகி மும்பைக்கு தகவல் கொடுத்துட்டாரா?''

''ஆனந்த் அண்ட் ப்ரியான்னு தெளிவா நம்ம பேரைச் சொல்றாங்களே, ஒரு வேளை... ஊர்ல யாருக்காவது ஆபத்தா?''

''ஆனந்த் இப்படியே ஓடிப் போயிரலாமா?''

''ச்சீ, வா... என்னதான் விஷயம்னு தெரிஞ்சுக்கலாம் வா.''

பயணப்பைகளைத் தூக்கிக் கொண்டு ஏர்போர்ட் மேனேஜரின் அறைக்கு அவர்கள் நடந்தார்கள். அதற்குள்

அதே அறிவிப்பு இன்னும் இருமுறை ஒளிபரப்பாகி விட்டது.

ஏர்போர்ட் மேனேஜரின் மேஜை மீது ஆறேழு போன்கள் இருந்தன.

''மிஸ்டர் ஆனந்த்?'' என்றார்.

''யெஸ்...''

''உட்காருங்கள்'' என்றார் ஆங்கிலத்தில். எழுந்து ஒரு திரை விலக்கினார்.

ஒரு ஆண் போலீஸ், ஒரு பெண் போலீஸ் இருவருமாக அந்த அறைக்குள் நுழைந்தனர்.

''மிஸ்டர் ஆனந்த், சென்னையில் உங்கள் கம்பெனியில் கையாடிவிட்டு நீங்கள் தப்பித்து வந்து விட்டதாக நினைத்து விட்டீர்கள்... ஆனால், நான் உங்களை கைது செய்கிறேன்... உங்களுக்கு பக்கத் துணையாக இருந்த மிஸ் ப்ரியாவையும் கைது செய்ய உத்தரவு இருக்கிறது.''

''வாட் டூ யூ மீன்?'' ஆனந்தின் உதடுகள் கோபத்தில் துடித்தன. ''நான் யாரையும் ஏமாற்றிவிட்டு வரவில்லை... என் கம்பெனி அனுமதித்த லீவில்தான் புறப்பட்டு வந்திருக்கிறேன்... உங்களுக்கு ஏதோ தவறான தகவல் கிடைத்திருக்கிறது... இப்பொழுதே என் கம்பெனிக்கு போன் பண்ணிக் கேட்போம்...''

''ஐ'ம் ஸாரி... நீங்கள் போனை உபயோகித்தால் ஆதாரம் எதையாவது கலைத்து விடக்கூடும்... முதலில் போலீஸ் ஸ்டேஷன்... அங்கு விசாரணை... அப்புறம் மற்றவர்களுக்கு போன்...''

''கைது செய்யும் அதிகாரம் உங்களுக்கு இருப்பதை நான் எப்படி நம்புவது?''



''நியாயமான கேள்வி. இதோ இரண்டு பேரையும் கைது செய்ய அரஸ்ட் வாரண்ட், போகலாமா?''

''என் வக்கீலுடன் -'' என்று ஆனந்த் போன் மீது கை வைக்க, அந்தக் கை பிய்த்துப் பிடுங்கப்பட்டது.

''உங்கள் வருகைக்காக ஒரு மணி நேரமாக இங்கேயே காத்திருக்கிறோம். இனிமேலும் எங்கள் நேரத்தை வீணாக்காதீர்கள்... தேங்க்யூ மிஸ்டர் மேனேஜர். உங்கள் ஒத்துழைப்பு இல்லாவிட்டால் இந்த கிரிமினல்களைப் பிடித்திருக்கவே முடியாது... சொப்னா... அவளை இழுத்து வா...''

பெண் போலீஸ் ப்ரியாவை நெருங்கினாள். ப்ரியாவின் பயணப் பெட்டியைப் பறித்துக் கொண்டாள். ஆண் போலீஸ் ஆனந்தின் பெட்டியைப் பறித்து வேகமாக நடக்க, வேறு வழியில்லாமல் ஆனந்தும், ப்ரியாவும் அவர்களை பரபரப்பாக பின் தொடர்ந்தனர்.

வெளியே மும்பை வானம் மெலிதாக தூற ஆரம்பித்தது.

மஞ்சளும் கறுப்புமாக டாக்ஸிகள் அணிவகுத்து நின்றன.

அங்கிருந்த ஒரு மாருதி வேனை அவர்கள் நெருங்கினார்கள். அதன் பக்கத்தில் POLICE என்ற ஸ்டிக்கர் ஒட்டியிருந்தது. மாருதி வேனின் கதவைத் திறந்து அவர்களுடைய பெட்டிகளை உள்ளே எறிந்த ஆண் போலீஸ் 'கெட் இன்' என்றான்.

''இது போலீஸ் வேன் போல இல்லையே...'' என்றான் ஆனந்த், காக்கி உடை அணிந்த டிரைவரைப் பார்த்துக் கொண்டே.

''மும்பை போலீஸ் வாகனங்களை இதற்கு முன் நீ பார்த்திருக்கிறாயா? நேரத்தை வீணாக்காதே. இங்கே போக்குவரத்து நெரிசல் அதிகம்... நாம் உடனே இந்த இடத்தைக் காலி செய்ய வேண்டும்...''

பெண் போலீஸ் ப்ரியாவை உள்ளே உந்தித் தள்ள, ஆனந்த் வேறு வழியின்றி அவள் பின்னே ஏறினான். மும்பை ஜனம் இதையெல்லாம் சற்றும் பொருட்படுத் தாது அவரவர் வேலையை அவரவர் கவனித்து நகர்ந்தனர்.

வேனின் கதவு மூடியது. கறுப்புக் கண்ணாடிகள் ஏற்றப் பட்டிருந்தன. ஆனந்தின் பக்கத்தில் ஆண் போலீஸ், ப்ரியாவின் பக்கத்தில் பெண் போலீஸ் வந்து நெருக்கி யடித்து உட்கார்ந்தனர். வேன் புறப்பட்டது.

போலீஸ் உடையில் இருந்தவன் சட்டென்று பாக்கெட்டி லிருந்து ஒரு சிறு ஸ்ப்ரே பாட்டிலை எடுத்தான். அவர்கள் முகத்தில் ப்ஸ்க், ப்ஸ்க் என்று ஸ்ப்ரே செய்தான்.

ஆனந்த், ப்ரியா இருவரும் நினைவிழந்தனர். வேன் நிறுத்தப்பட்டது. ஒட்டப்பட்டிருந்த POLICE என்ற ஸ்டிக்கர் பிய்க்கப்பட்டது.

வேன் மும்பை போக்குவரத்தில் கலந்து விரைந்தது.



## 2

''குட்ஈவினிங்... கமான் எழுந் திருங்கள்... உங்களுக்கு கொடுக்கப் பட்டிருப்பது மெலிதான மயக்க மருந்து தான்... அதற்கு இத்தனை நேரம் தூங்க வேண்டாம்...''

ஆனந்தை ஒரு கை பிடித்து உலுக்கியது.



ஆனந்த் சரக்கென்று தீக்குச்சி உரசப்பட்டது போல் விழித்தான். ஒரு நாற்காலியில் உட்கார வைக்கப்பட்டிருந் தான். இரண்டு கைகளும் தனித்தனியே நாற்காலியுடன் பிணைக்கப்பட்டிருந்தன.

பக்கத்தில் இன்னொரு நாற்காலியில் ப்ரியா. அவளை யும் இதே போல் கட்டிப் போட்டிருந்தனர். அவள் இன் னும் விழிக்கவில்லை.

''வாட் இஸ் திஸ்!'' ஆனந்த் பொருமினான். ''மும்பை போலீஸ் நடந்து கொள்ளும் லட்சணம் இதுதானா?''

எதிரே இருந்தவன் உயரமாய் இருந்தான். மீசையற்ற நீளமான முகம். சற்றே தூங்கி வழியும் கண்கள். தலை முடி நடுவில் வகிடு எடுக்கப்பட்டு இருபுறமும் வழிந்தது. சட்டையின் இரண்டு பொத்தான்கள் விலக்கப்பட்டு மார்பின் கருமுடியும், அதில் புரளும் தங்கச் சங்கிலியும் பளிச்சிட்டன.

சற்று நீளமான மூக்கு, ஒட்டிய கன்னங்கள். தடித்த உதடுகள்.

அந்த உதடுகள் இப்போது புன்னகையாய் வளைந் திருந்தன.

''மும்பை போலீஸிற்கு இந்த அளவு கூட கண்ணியம் இருக்காது ஆனந்த். நாங்கள் போலீஸ் இல்லை...''

''யார் நீ?''

''என் பெயர் அமர் என்று வைத்துக் கொள்வோம். உன்னையும், உன் அருமைக் காதலியையும் நான் மாதக் கணக்கில் கட்டிப் போட்டு வைக்கப் போவதில்லை. ஜஸ்ட்

பதினாலு அல்லது பதினேழு மணி நேரங்கள். அதுகூடப்
ப்ரியாவைத்தான். உன்னைக் கொஞ்ச நேரம் விடுவிப்
போம். உன்னால் எங்களுக்கு ஒரு காரியம் ஆக வேண்டி
யிருக்கிறதே...''

''யார் நீங்கள்? ஏர்போர்ட்டில் எங்கள் பெயரை எப்படிச்
சொன்னீர்கள்? நானும் ப்ரியாவும் மும்பை வருவது
உங்களுக்கு எப்படித் தெரியும்?''

''நீ செய்த ஆராய்ச்சிகளைப் பற்றிக் கூடத் தெரியும்...''

''இதோ பார். எங்களிடம் அதிகப் பணம் கிடையாது...
இருப்பதைக் கொடுத்துவிட்டுப் போகிறோம்... எங்களை
விட்டு விடு...'' ஆனந்தின் கண்களில் இரண்டு சொட்டு
கண்ணீர் திரண்டது.

''அடடா, ஆண் பிள்ளை அழலாமா? கமான், சியர்
அப்...''

அமர் அவனை நெருங்கி தன் விரல் நுனியால்
கண்ணீரைத் துடைத்தான்.

''ப்ரியாவை முழுசாக, சேதமில்லாமல் உன்னிடம்
ஒப்படைக்க நாங்கள் தயாராயிருக்கிறோம்... எங்கள் கை
விரல் கூட அவள் மீது தப்பான இடத்தில் படாது. அதற்கு
நான் உத்திரவாதம். இரவு நீங்கள் இதே அறையில் கூட
இருக்கலாம். எனக்கு ஆட்சேபனை இல்லை... ஆனால்
நாளைக் காலை நீ எனக்காக ஒரு காரியம் செய்ய
வேண்டும். செய்ய மறுத்தாலோ, அடம் பிடித்தாலோ,
தப்பிப்பதற்காக முட்டாள்தனமான முயற்சியில் ஈடுபட்
டாலோ, அப்புறம் ப்ரியா உனக்கு புது ரோஜாவாகக்
கிடைக்க மாட்டாள். நாங்கள் மொத்தம் இருபது பேர்
இருக்கிறோம். அத்தனை பேரும் கசக்கிய பிறகு அவள்
எப்படி இருப்பாள் என்று நீயே யோசி...''



''மை காட்! அவள் என்ன தப்பு செய்தாள்?''

''எங்கள் ஹீரோவைக் காதலித்தாளே... அதுதான்
தப்பு.''

''நான் என்ன செய்ய வேண்டும்?''

''இப்போதுதான் புத்திசாலிப் பையனாக நடந்து
கொள்ள ஆரம்பித்திருக்கிறாய்... உன் கைகளை இப்போது
அவிழ்த்து விடுவோம்... நீ சமத்துப் பிள்ளையாக வாஷ்
பேஸினுக்குப் போய் முகத்தை நன்றாகக் கழுவி, தலையை
ஒழுங்காக சீவி விட்டு வந்து உட்கார்... அவிழ்த்து
விட்டிருக்கிறார்களே என்று எங்களைத் தாக்கவோ,
தப்பிக்கவோ முயற்சி பண்ணாதே. மதுக்கர்...!''

மதுக்கர் என்று அழைக்கப்பட்டவன் அந்த அறைக்குள்
பிரவேசித்தான். விமான நிலையத்திற்கு போலீஸ்
உடையில் வந்தவன்.

''ப்ரியாவை அந்த அறைக்குள் வைத்துப் பூட்டு.
அப்புறம் இவனை அவிழ்த்து விடு...''

மதுக்கர் கைதட்ட இன்னும் இரண்டு தடியன்கள்
உள்ளே வந்தார்கள். ப்ரியாவை நாற்காலியோடு சேர்த்து
அப்படியே தூக்கினார்கள். அந்த அசைவில் ப்ரியா
விழித்துக் கொண்டாள்.

கணநேரம் குழப்பம். அப்புறம் நிலைமை புரிந்ததும்,
அவள் அலறப் பார்க்க, நாற்காலி இறக்கப்பட்டது. அமர்
அவளை நெருங்கி, வாயை மூடி பட்டையான பிளாஸ்திரி
ஒன்றை ஒட்டினான்.

ப்ரியா மானின் விழிகளால் ஆனந்தைப் பார்த்தாள்.
கண்களாலேயே 'ஏன், ஏன்' என்று கெஞ்சினாள்.

''ப்ரியா...'' ஆனந்த் பதறி எழுந்திருக்கப் பார்த்தான்...
நாற்காலியுடன் கட்டியிருந்த கட்டு தடுத்தது.

''ப்ரியா... கவலைப்படாதே முரண்டு பிடிக்காதே. இதோ நானும் உன் பக்கத்திலேயே இருப்பேன்...'' ஆனந்த் தடுமாறும் குரலில் அரற்றினான்.

ப்ரியா அவன் கண்களிலிருந்து மறைந்தாள்.

அவளை இறக்கிய அறையின் கதவைச் சாத்தி வெளியே பூட்டினான் மதுக்கர்.

பின் அங்கிருந்த அலமாரி திறந்து, ஒரு டவல், ஒரு உயர்ரக சோப், ஒரு புதிய சீப்பு. சிறிய பவுடர் டப்பா இவற்றை எடுத்து வெளியே வைத்தான். ஆனந்தை நெருங்கினான். அவனுடைய கைகளின் கட்டுக்களை அவிழ்த்தான்.

பள்ளி நாட்களில் கற்ற கராத்தேயை பயன்படுத்தலாமா என்று கணநேரம் யோசித்த ஆனந்த் ப்ரியாவை எண்ணி, மொழி புரியாத புதிய நகரத்தை நினைத்து, அந்த எண்ணத்தைப் பொசுக்கினான்.

''ஒரு இண்டர்வியூவிற்குப் போவதென்றால் எப்படி முகத்தை பளிச்சென்று வைத்துக் கொள்வாயோ, அப்படி வைத்துக் கொள்ள வேண்டும். முகம் கழுவி, இந்தப் புதிய சட்டையை அணிந்து டை கட்டி, உன் நாற்காலியில் வந்து உட்கார்'' என்றான், அமர் புத்தம் புதிய சட்டை ஒன்றை நீட்டி.

''எதற்காக இப்படியெல்லாம்...?''

''கேள்விகள் எங்களுக்குப் பிடிப்பதில்லை. சொன்னதைச் செய்.''

ஆனந்த் எழுந்தான். கைகளைத் தேய்த்துக் கொண்டான். வாஷ்பேஷினுக்கு நடந்தான்.



அமர் குறிப்பிட்டபடி, முகத்தைத், தெளிவாக்கி, முழுக்கை சட்டை அணிந்து, டை கட்டி அந்த நாற்காலியில் வந்து அமர்ந்தான்.

''கூண்டிலிருந்து தப்பித்த குரங்கு போல ஏன் முகத்தை வைத்துக் கொண்டிருக்கிறாய்? நீ இண்டர்வியூவிற்கு வந்தவன் போல் உட்காரச் சொன்னேன்...''

''அப்படியானால் ப்ரியாவை வெளியே விடுங்கள்... அவளை அடைத்து வைத்திருக்கும் போது, என்னால் எப்படி சிரிக்க முடியும்?''

''சிரிப்பது சிரிக்காதது உன் இஷ்டம்... ஆனால் நீ நாங்கள் சொல்வது போல் செய்யாவிட்டால், எங்கள் காரியம் முடியாது காரியம் முடியவில்லையென்றால், உன்னையும், ப்ரியாவையும் வெளியே விடப் போவதில்லை... உடனே ஒத்துழைத்தால், உடனே விடுதலை...'' அமர் ஒரு காலைத் தூக்கி ஆனந்தின் நாற்காலி மீது வைத்து ஊன்றி நின்றான்.

''சரி... ஈ... ஈ... போதுமா?''

''ஈ... என்று இளிக்கச் சொல்லவில்லை. ஜஸ்ட் ஒரு போட்டோவுக்கு புன்னகைப்பது போல் புன்னகை செய்...''

எதற்காக என்று புரியாமலேயே ஆனந்த் தன் வசீகரமான புன்னகையை முகத்தில் இருத்திக் கொண்டான்.

''குட்... கீப் இட் அப்.''

அமர் ஒரு சொடுக்கு சொடுக்கினான். உடனே அவன் கையில் ஒரு கேமிரா கொண்டு வந்து தரப்பட்டது.

அமர் சற்று தள்ளி நின்று ஆனந்தை க்ளிக் க்ளிக் என்று ஃபிளாஷ் அடித்து மூன்று போட்டோக்கள் எடுத்தான்.

''எதற்காக போட்டோ?''

''நாளைக்கு நீ போக வேண்டிய இடம் அப்படி! இந்த அட்டையில் கட்டத்திற்குள் இரண்டு கையெழுத்துப் போடு.''

''எதற்காக?''

''ஏன் இப்படி பிள்ளைப் பூச்சி போல நொய் நொய் என்று கேள்விகளாகக் கேட்கிறாய்?'' அமர் சலிப்புடன் பேசி, பேனாவைத் திறந்து நீட்டினான். ''நான் என்ன உன் சொத்தையா என் பெயருக்கு மாற்றித் தரச் சொல்கிறேன்? இந்தச் சின்ன அட்டையில் இந்தச் சின்னக் கட்டத்திற்குள் கையெழுத்துப் போட்டால் குறைந்தா போய் விடுவாய்?''

ஆனந்த் அந்த அட்டையை ஆத்திரத்துடன் பிடுங்கி, குறிப்பிட்ட கட்டங்களில் தன் கையெழுத்தைப் பதித்தான்.

''வெரிகுட்...'' அமர் அந்த அட்டையை எடுத்துக் கொண்டான். ''விமானத்தில் உப்பு சப்பில்லாமல் சாப்பிடக் கொடுத்த அயிட்டங்கள் உங்களுக்குப் போதாது. என்ன சாப்பிடுகிறீர்கள்? வெஜிடேரியனா, நான் வெஜிடேரியனா?''

''ஒன்றும் வேண்டாம்...''

''கோபித்துக் கொண்டு வயிற்றைப் பட்டினி போடாதே...''

''எனக்குப் ப்ரியாவைப் பார்க்க வேண்டும்...''

''பார்ப்பது மட்டுமில்லை... அவள் கூடவே நீ தூங்கலாம். இரட்டைக் கட்டில் தேவையா?'' என்று அமர் கண்ணடித்தான்.

''இரக்கமில்லாதவன் நீ!''



''என் தொழிலுக்குத் தேவை இன்டலிஜன்ஸ்தான். இரக்கம் இல்லை... மதுக்கர்... இவனையும் உள்ளே அனுப்பு. பேப்பர் பிளேட்டில் வைத்து சாப்பாடு கொடு இருவருக்கும்.''

அமர் எழுந்தான்.

''நிம்மதியாகத் தூங்கு ஆனந்த். தப்பிப்பதைப் பற்றி பிளான் செய்து உன் இரவை வீணாக்கி விடாதே. நாளைக் காலை நீ சுறுசுறுப்பாக இருக்க வேண்டும். ஒரே ஒரு விஷயம் மட்டும் தெளிவுப் படுத்தி விடுகிறேன். இது மும்பையிலிருந்து சற்று ஒதுக்குப் புறமான இடம். இந்தக் கட்டிடத்தில் இருக்கும் ஆறு ஃபிளாட்களையும் நாங்களே தான் வைத்திருக்கிறோம். இந்தக் கட்டிடத்தின் வராண்டாவில் இரவு முழுக்க விழித்திருந்து காவல் காக்க, துப்பாக்கியுடன் இரண்டு பேர் உட்கார்ந்திருக்கிறார்கள். அவர்களைத் தாண்டி நீ அப்படியே கீழே இறங்கினாலும் கேட்டில் ஒருத்தன் காத்திருப்பான்... அவனை ஏமாற்றி விட்டு காம்பவுண்ட் சுவர் ஏறிக் குதிக்கத் திட்டமிட்டிருந்தால், மூன்று பசித்த அல்சேஷன்கள் இரவு முழுதும் காம்பவுண்டிற்குள் ரோந்து போய்க் கொண்டே இருக்கும்... அதனால் தயவு செய்து தப்பிக்கப் பார்த்து உன்னையும் காயப்படுத்திக் கொண்டு ப்ரியாவின் பத்திரத்தையும் கிடப்பில் எறியாதே... குட்நைட்...''

அமர் விருட்டென்று அந்த அறையை விட்டு விலகியதும், மதுக்கர் ஒரு சிறு துப்பாக்கியால் ஆனந்தைப் பார்த்தான்.

''வா... உன் முதலிரவு அறைக்கு வழி காட்டுகிறேன்.''



3

மேலே மின்விசிறி கிர்ர் என்று சுற்றிக் கொண்டிருந்தது.

ஜன்னல்கள் சாத்தப்பட்டு கதவுகள் மூடியிருந்தன.

வெகு உயரத்தில் நான்கைந்து சூப்பர் நாவல்களை நுழைக்கும் அளவிற்கு காற்றோட்டத்திற்கான திறப்பு.

அறையில் ஒரே ஒரு டியூப்லைட். இணைப்பாக ஒரு சிறு டாய்லட். அதன் ஜன்னலிலும் குறுக்கு வாட்டில் கூடுதலான இரும்புக் கம்பிகள். நாற்காலியை வெளியே எடுத்துப் போய் விட்டார்கள்.

சுவரில் சாய்ந்து உட்கார்ந்திருந்தான் ஆனந்த்.

அவன் மடியில் தலை சாய்த்து ப்ரியா. அவள் கன்னங்களில் கண்ணீர்க் கறை உலர்ந்திருந்தது.

''ஸாரி ப்ரியா'' என்றான் ஆனந்த், அவள் கூந்தலைக் கோதிவிட்டு ''ஒரு ஜாலி ட்ரிப்பா உன்னை மும்பை அழைச்சிட்டு வரணும்னு எத்தனை நாள் பிளான் தெரியுமா? ஹோட்டல் ஸாண்ட்ஸ்ல ஏஸி ரூம் போட்டு ரெண்டு பேரும் ஒரே பாத்ரூம்ல குளிக்கலாம்னு சொன்னேன்... கடைசில இந்த டொக்கு ரூம்ல வந்து மாட்டிக்கிட்டோம். ஜுஹு பீச்ல ராத்திரி நிலா வெளிச்சத்துல உன்னை மடில சாய்ச்சிக்கலாம்னு ஆசைப்பட்டேன்... ஆனா இந்த இருட்டு ரூம்ல துப்பாக்கிக்கு நடுவுல உன்னைக் கொண்டு வந்து தள்ளிட்டேன்... ஸாரிடா...'' சொல்லும் போதே அவன் குரல் பிசகியது. தழுதழுத்தது.

''ஏய் லூசு. என்னவோ நீ பிளான் பண்ணி என்னை இக்கட்டுல கொண்டு வந்து மாட்டிட்ட மாதிரி ஏன் புலம்பறே?'' ப்ரியா அவன் கன்னத்தை வருடினாள்.



''என்னாலதான் நீ மாட்டினே?''

''யார் சொன்னது?''

''அவனுங்களுக்கு என்கிட்டதான் ஏதோ காரியம் ஆகணும்... கூட வந்த உன்னையும் சேத்து அமுக்கிட்டாங்க...''

''எங்கேயோ மெட்ராஸ்லேர்ந்து வந்த நம்மளை எதுக்கு இவங்க மடக்கணும்? ஏற்கனவே தெரிஞ்சிருந்ததாலதான நம்ம பேரைச் சொல்லி ஏர்போர்ட்லயே மடக்கினாங்க? இவங்கள்லாம் யாரு ஆனந்த்? என்ன வேணுமாம் நம்மகிட்ட?''

''எனக்குப் புரியல, ப்ரியா பதினாறு, பதினேழு மணி நேரத்துல நம்மளை விட்டுடுவோம்னு சொல்லியிருக்காங்க... நாளைக்கு எனக்கு ஏதோ வேலை இருக்குனு சொன்னாங்க... விடிஞ்சாதான் எதுவும் புரியும்...''

''எனக்கு பயமா இருக்கு ஆனந்த். எனக்காக பாத்துக்கிட்டு நீ எதுவும் ஆபத்துல மாட்டிக்காதே. போலீஸை நம்மால காண்டாக்ட் பண்ணவே முடியாதா?''

''சான்ஸே இல்ல. நாம இருக்கறது கீழ்ப் போர்ஷனா, மாடிப் போர்ஷனானு கூடத் தெரியல. வெளியே பாக்க முடியல. பக்கத்துல போன் இருக்கா தெரியாது... நாளைக்கு நான் வெளில போனா ட்ரை பண்றேன்...''

''என்னைத் தனியா விட்டுட்டுப் போவியா ஆனந்த்...''

பயத்தில் அவள் அவனுடன் இன்னும் ஒன்றிக் கொண்டாள்.

''தெரியலையே...'' ஆனந்தின் குரல் பரிதாபமாக வந்தது. ''என்ன வேலை கொடுப்பாங்கன்னு தெரியலையே...''

''என்னைத் தனியா விட்டுட்டுப் போயிடாதே ஆனந்த்... ப்ளீஸ்...'' அவன் கையை எடுத்து நெஞ்சில் அழுத்திக் கொண்டாள். காதலினால் அல்ல. அச்சத்தினால்.

## 4



### செப்டம்பர் 11, வெள்ளி

களைப்பா, அசதியா, அல்லது கவலையா, ஏதோ ஒன்று அவர்கள் அறியாத நேரத்தில் இழுத்து தூக்கத்தில் தள்ளியிருந்தது.

அதிகாலையில் கதவு திறக்கப்படும் ஒலி கேட்டு ஆனந்த் திடுக்கிட்டு விழித்தான்.

மதுக்கர்!

''குட்மார்னிங்... இப்போது நேரம் காலை ஐந்து மணி. பெட் காபி, பெட் சாயா பழக்கம் உண்டா?''

அவனுடைய குரல் கேட்டு கூட ப்ரியா விழிக்க வில்லை.

ஆனந்த் அவள் தூக்கத்தைக் கலைக்காமல் மெல்ல எழுந்தான். ''பல் தேய்த்த பின் காபி'' என்றான்.

''பல் தேய்த்து விட்டு நீ மட்டும் வா...''

மதுக்கர் காத்திருந்தான்.

பாத்ரூமில் ஆனந்த் நுழைந்ததும், ப்ரியாவிற்கு விழிப்பு வந்தது. சட்டென்று எழுந்து உட்கார்ந்தாள்.

மதுக்கரைப் பார்த்ததும் அவள் விழிகள் அச்சத்தால் விரிந்தன.

''சிஸ்டர்... என்னைப் பார்த்து பயப்படாதே... உன் காதலன் நாங்கள் சொல்லும்படி நடக்கும் வரையில் என்



தங்கை போலப் பார்த்துக் கொள்வேன்... ஆனந்த் ஒத்துழைக்க மறுத்தால்தான் உனக்கு நரகம்.''

''ஆனந்தை என்ன செய்யப் போகிறீர்கள்?'' ப்ரியா சுவரோடு ஒன்றிக் கொண்டு கேட்டாள்.

''நாங்கள் ஆனந்தை ஒன்றும் செய்யப் போவதில்லை... ஆனந்த்தான் எங்களுக்காக ஒரு சின்ன காரியம் செய்யப் போகிறார்...''

''என்ன காரியம்?''

''ஒரு சின்ன கொலை செய்ய வேண்டும்... தட்ஸ் ஆல்.''

''என்னது! கொலையா?'' ஆனந்த் உள்ளிருந்து அலறினான்.

''கொலை என்றால் கொலை இல்லை... கொலை செய்வதுபோல் ஒரு நடிப்பு...''

''ஐ டோண்ட் அண்டர்ஸ்டாண்ட்...''

''என்ன செய்ய வேண்டும் என்று அமர் சொல்வார்... வெளியே வா...''

''என்னை நேற்றிரவு போட்டோ எடுத்தீர்களே, எதற்கு?''

''அமர் சொல்வார்.''

''அதுவும் அமர்தானா?''

''எதுவும் அமர்தான்... வா... அமர் உனக்காகக் காத்திருக்கிறார்...'' என்றான் மதுக்கர் விறைப்பாக.

ஆனந்த் முகத்தைத் துடைத்துக் கொண்டு ப்ரியாவைத் திரும்பிப் பார்த்தான். ''டார்லிங்... நீ பயப்படாதே'' என்றான். மதுக்கருடன் வெளியே வந்தான்.

ப்ரியாவை மட்டும் அந்த அறையில் தனியே விட்டு வெளியே பூட்டினான் மதுக்கர்.

அமர் புதிய சிகரெட்டுடன் நின்றிருந்தான்.

''குட்மார்னிங் ஆனந்த். நன்றாகத் தூங்கினாயா?'' என்றான். புகையை வாயிலும் மூக்கிலுமாக வெளியே விட்டு.

''தூங்குவதற்காகவா என்னை அழைத்து வந்தாய்?'' ஆனந்த் சற்றே கோபத்துடன் கேட்டான்.

''உன்னை எதற்காக அழைத்து வந்தோம் என்று சொல்லும் நேரம் வந்து விட்டது ஆனந்த். அதனால் கோபிக்காதே. மதுக்கர், அந்தப் பெட்டியை ஆனந்திடம் கொடு...''

ஒரு அடி நீளத்திற்கு முக்காலடி அகலத்திற்கு நகைப் பெட்டி போல இருந்த ஒன்றை ஆனந்திடம் நீட்டினான் மதுக்கர்.

''ஆனந்த் அந்தப் பெட்டியைத் திற...''

ஆனந்த் அதன் கொக்கி நீக்கித் திறந்தான். அதிர்ந்தான்.

''இது ஒரு ரிவால்வர்...''

''யெஸ்... இத்தாலியத் தயாரிப்பு நாற்பதடி தூரத்தி லிருந்து கூடத் துல்லியமாய் சுடும். கையில் எடுத்துப் பார்..''

''எ... எதற்கு?''

''சொன்னதைச் செய்...''

''எனக்குத் துப்பாக்கிகளைக் கையாண்டு பழக்கமில்லை'' ஆனந்த் பதட்டத்துடன் சொன்னான்.

''துப்பாக்கியை எடு... எடுத்து அதோ அந்த படத்தைக் குறி பார்...''

''மாட்டேன்...''



''முட்டாள்... அந்தத் துப்பாக்கியில் குண்டுகள் எதுவும் போடப்படவில்லை. பக்கத்தில் ஒரு அடுக்கில் தோட்டாக்கள் நிற்க வைக்கப்பட்டிருக்கிறது பார்... அவற்றை துப்பாக்கியில் போடு...''

''பயமாய் இருக்கிறது.''

அமர் ஒரு துப்பாக்கியை எடுத்தான். ''இதைப் பார்... நான் செய்வது போலவே செய். தோட்டாவை ஒவ்வொன்றாக எடுத்து இப்படிச் செருகு...''

''இப்போதெல்லாம் கார்ட்ரிஜ் என்று தோட்டாக்கள் நிரப்பிய பகுதியையே தருவார்களே...''

''உனக்குத் துப்பாக்கிகள் பற்றித் தெரிந்திருக்கிறது!''

''தெரியும். கையாண்டதில்லை.''

''கற்றுக்கொள்...''

''எதற்கு?''

''நாம் ஒரு சின்ன நாடகம் ஆடப் போகிறோம். அதற்கு இது ஒரு ஒத்திகை. சொன்னதைச் செய்...'' அமர் ஆனந்தின் அருகில் வந்து, தன் கையில் இருந்த துப்பாக்கியைத் திறந்து தோட்டாக்களை செருகிக் காட்டினான்.

ஆனந்த் அதே போல தன்னிடமிருந்த துப்பாக்கியில் தோட்டாக்களை செருகினான். சரேலென துப்பாக்கியை உயர்த்தி அமரைக் குறி வைத்தான். முகம் இறுகியது.

''இப்போது துப்பாக்கி என் கையில்... நான் சொல்வதை நீ செய்...'' என்றான் உறுமலாய்.

அமர் சற்றும் அச்சப்படாமல் சிரித்தான். ''நான் என்ன அப்படி ஒரு அடி முட்டாளாயிருப்பேன் என்று நினைத்தாயா? துப்பாக்கியில் ஸேப்டி கேட்ச் என்ற ஒரு பகுதி

இருக்கிறதே அது எங்கே இருக்கிறது என்று கூட உனக்குத் தெரியாது. அதை விடுவிக்காமல் சுட முடியாது. சுட்டுப் பாரேன்...'' என்று சட்டையை விலக்கி மார்பைத் திறந்து காட்டினான்.

ஆனந்த் தயங்கினான். மதுக்கர் அவனை நெருங்கி துப்பாக்கி வைத்த பெட்டியைத் திறந்து காட்டினான்.

''இதில் வைத்து விடு... வேண்டுமானால் அமரிடம் இருக்கும் துப்பாக்கியில் முயற்சி செய்து பார்...''

ஆனந்தின் விரல்கள் நடுங்கின. உண்மையிலேயே ஸேப்டி கேட்ச் பற்றிக் கேள்விப்பட்டிருந்தானே தவிர, அது எந்தப் பகுதியில் இருக்கிறது. எப்படி இயக்க வேண்டும் என்று எதுவும் அவனுக்குப் புரியவில்லை. தோல்வியை ஏற்றுக் கொள்ளும் விதமாக துப்பாக்கியை அந்தப் பெட்டியில் துப்பாக்கிக்கு என்று ஒதுக்கி இருந்த வெல்வெட் பரப்பில் வைத்தான்.

அமர் அந்தப் பெட்டியை மூடி மதுக்கரிடம் நீட்டினான்.

தன் கையிலிருந்த துப்பாக்கியை ஆனந்திடம் கொடுத்தான்.

''நீ கையில் வைத்துப் பார்த்தது உண்மையான துப்பாக்கி... இப்போது வைத்திருப்பது ஒரு டம்மித் துப்பாக்கி. இதில் இருக்கும் தோட்டாக்களும் போலியானவை. இதை சுட்டுப் பார்க்கிறாயா?''

ஆனந்த் அந்தத் துப்பாக்கியைக் கையாண்டதுமே அது போலி என்று தெரிந்தது. முன்னதாக அவன் கையாண்ட உண்மைத் துப்பாக்கியின் எடையில் பாதி கூட இருக்காது இந்தத் துப்பாக்கிக்கு.

''இந்தத் துப்பாக்கியை உயர்த்தி சுட்டுப் பார்...''



ஆனந்த், அமர் சுட்டிக்காட்டிய படத்தை நோக்கி குறி வைத்து, விசையை இழுத்தான். டப் என்று கேப் வெடிப்பது போன்ற சத்தம் வந்தது. துப்பாக்கி முனையிலிருந்து புகை மிதந்து வந்தது.

ஆனந்த் மிரண்டு பார்த்தான்.

அமர் பகபகவென்று சிரித்தான். ''நத்திங்.. இது டிராமாத் துப்பாக்கி. சத்தம் தான் செய்யும். சாகடிக்காது. இந்தத் துப்பாக்கியைத்தான் இன்று நீ பயன்படுத்தப் போகிறாய்...''

''பயன்படுத்தி?''

''ஒரு ஆளை பயமுறுத்தப் போகிறாய்!''

''யாரை?''

''உன்னை அவமதித்தாரே... அசிங்கப்படுத்தி திருப்பி அனுப்பினாரே... விஞ்ஞானி ஒருத்தர் - அவரை...''

''எ... என்ன சொல்கிறாய் அமர்?''

''விஞ்ஞானி நந்தகோபாலை நினைவிருக்கிறதா?''

''ஆமாம்...''

''ஏப்ரல் பத்தாம் தேதி உன் ஆராய்ச்சியைப் பித்தலாட்டம் என்று கூறி சபையில் அவமானம் செய்தாரே, அந்தப் பெரிய விஞ்ஞானியை இன்றைக்கு சுடப் போகிறாய்'' என்றான் அமர்.



## 5

ஆனந்த் குழப்பத்துடன் அமரை நிமிர்ந்து பார்த்தான்.

''நீ சொல்வது எதுவும் எனக்குப் புரியவில்லை...''

"இதைப்படி..." அமர் ஒரு அழைப்பிதழை ஆனந்திடம் தூக்கிப் போட்டான்.

ஆனந்த் அதைப் பிரித்தான் படித்தான்.

அழைப்பிதழ் ஆங்கிலத்திலும் அச்சாகியிருந்தது.

அகில இந்திய விஞ்ஞானிகள் சந்திப்பு

நாள்: செப்டம்பர் 11, வெள்ளி.

இடம்: சத்ரபதி சிவாஜி அரங்கம், மும்பை.

தலைமை: விஞ்ஞானி டாக்டர் நந்தகோபால்.

முன்னிலை: விஞ்ஞானி விக்டர் ஹேடோஸ், அமெரிக்க விஞ்ஞானிகள் கழகம்.

பொருள்: போர் முனையில் ரசாயனம்.

நேரம்: காலை 10 முதல் மதியம் 2 வரை.

அழைப்பிதழின் கீழே 'அனுமதி அழைப்பு உள்ளவர் களுக்கு மட்டும்' என்று அச்சாகியிருந்தது.

"இது உனக்கான அழைப்பிதழ்..." - என்றான் அமர். "இதை வைத்துக் கொண்டுதான் நீ இந்த சந்திப்பிற்குப் போகப் போகிறாய்..."

"நானா? நான் ஏன் போக வேண்டும்?"

"விஞ்ஞானி நந்தகோபால் ஒரு பொது மேடையில் இந்தியாவிற்காக உயிரையே கொடுப்பேன். எந்த சக் திக்கும் அஞ்ச மாட்டேன் என்று சவடால் பேசியிருந்தார். இப்போது உலகத்தின் பல பாகங்களிலிருந்து விஞ் ஞானிகள் கலந்து கொள்ளும் இந்த சந்திப்பில் கேவலம் ஒரு துப்பாக்கிக்கு அவர் எப்படி பயந்து நடுங்குகிறார் என்பதை வெளியுலகிற்கு நிரூபிக்கவே இந்த நாடகம்... துப்பாக்கியுடன் பேசப் போவது நீ!"



"யார் வேண்டுமானாலும் பயமுறுத்தி விட்டுப் போக லாமே... குறிப்பாக என்னை ஏன் தேர்ந்தெடுக்கிறீர்கள்?"

"நல்ல கேள்வி! மற்றவர்களைப் பார்த்தால் அவருக்கு சந்தேகம் வரலாம். வராமல் போகலாம்... ஆனால் உன்னைப் பார்த்தால் அவருக்குப் பக்கென்று இருக்கும்... அவரால் அவமானப்படுத்தப்பட்டவன் நீ. அதனால் உன்னைப் பார்த்தால் அது நிஜத் துப்பாக்கி என்றே அவருக்குத் தோன்றி விடும். அவருடைய பயம் நிஜ பயமாக இருக்கும்.

"மூக்கை நேரடியாகத் தொடாமல் தலையைச் சுற்றித் தொடுவது போல் இருக்கிறது. நீ சொல்வது. இந்த ஒரு நாடகத்திற்காக என்னையும், ப்ரியாவையும் சென்னையி லிருந்து கவனித்து மும்பை வந்ததும் கடத்தி... நம்ப முடியவில்லை..."

"நீ நம்புவது பற்றி எனக்கு அக்கறையில்லை."

"சரி அவரை பயமுறுத்துவதற்காகவே என்று வைத்துக் கொண்டாலும், அவரைத் துப்பாக்கிக்கு பயப்பட வைத்து என்ன சாதிக்கப் போகிறாய்? அவர் பயப்படுகிறார் என் பதை யாருக்கு நிரூபிக்க வேண்டும்? அப்படி நிரூபித்து, அவரை அவமானப்படுத்தும் அளவிற்கு உனக்கும் அவருக்கும் என்ன பகை?"

அமர் கைகளைக் கொட்டிச் சிரித்தான். "ஆனந்த்! கேள்விகள்! எத்தனை கேள்விகள்! உனக்கு பதில் சொல் லும் பொறுமை எனக்கு இல்லை... கமான் சொல்வதை யெல்லாம் செய், போதும்... போய்க் குளித்து விட்டு வா, உடுத்திக் கொண்டு புறப்பட வேண்டும்."

அமர் விலக, மதுக்கர் அவனை நெருங்கினான்.

ப்ரியா தலையை இடதும், வலதுமாக அசைத்தாள். அவள் அப்படிச் செய்யும்போது, அவளை இழுத்துப் பிடித்து முத்தமிட வேண்டும் போல எப்போதும் ஒரு உத்வேகம் கிளம்பும். ஆனால் இந்த சந்தர்ப்பத்தில் அவளைப் பார்க்கும்போது ஆனந்திற்கு ஒரு கவலை தான் வந்தது.

''நம்பாத ஆனந்த், அமர் சொல்றதை நம்பாத...'' என்றாள் ப்ரியா. ''துப்பாக்கி வச்சு பயமுறுத்தறதாவது, அவன் சொல்லும் காரணம் கொஞ்சம் கூட நம்பும்படியாக இல்ல... இதுக்குப் பின்னால ஏதோ ஒரு விபரீதம் இருக்கு ஆனந்த்...''

''எனக்கும் அப்படித்தான் தோணுது. ப்ரியா. ஆனா, நான் என்ன செய்ய முடியும். சொல்லு... தனியா வந்திருந்தா கூட தைரியம் இருக்கும். இப்ப உன்னை வேற வம்புல இழுத்து விட்டிருக்கோமோனு நெஞ்சுல உறுத்தலா இருக்கு...''

''ஆனந்த் என்னையே நெனச்சிட்டு ஏதாவது முட்டாள் தனமா பண்ணி ஆபத்துல மாட்டிக்காத... அந்த சயன்டிஸ்ட் மீட்டிங்ல போலீஸ் பாதுகாப்பு இல்லாமலா இருக்கும்?''

''உலகம் பூரா எல்லா இடத்துலேர்ந்தும் பெரிய பெரிய விஞ்ஞானிகள் வராங்க... நிச்சயம் பாதுகாப்பு இருக்கும்... ஏன் கேக்கற?''

''அவங்ககிட்ட நீ அவரைக் காட்டிக் கொடுக்க முடியாதா, ஆனந்த்?''

''அப்படி ஏதாவது செய்ஞ்சு உன்னை ஆபத்துல மாட்டி விடச் சொல்றியா?'' ஆனந்த் ப்ரியாவை அருகே இழுத்து



அணைத்துக் கொண்டான். ''எனக்கு நீ முழுசா வேணும், ப்ரியா. உன் மேல ஒரு சின்ன நகக்கீறல் பட்டாக்கூட என்னால தாங்க முடியாது...''

''நீ ஆம்பிளையா நடந்துக்கிட்டாதான் எனக்குப் பிடிக்கும் ஆனந்த்...''

''யெஸ்... அங்க போறேன். நெலமை எப்படி இருக்கோ, அதுக்குத் தகுந்த மாதிரி நடந்துக்கறேன்...'' ஆனந்த் அவள் முகத்தை நிமிர்த்தி பயந்த விழிகளைப் பார்த்து நெற்றியில் முத்தமிட்டான்.

காத்திருந்தது போல் கதவு சடடென்று திறந்தது.

மதுக்கர் உள்ளே நுழைந்தான். ''ஸாரி சிஸ்டர்... மீட்டிங்கிற்கு நேரமாகி விட்டது. பிரதரை அழைத்துப் போக வேண்டும்...''

ஆனந்தின் கையை அழுத்திக் கொடுத்தாள் ப்ரியா.

மதுக்கர் உள்ளே நுழைந்து ஆனந்தின் டையை சரி செய்தான். குனிந்து ஆனந்தின் புதிய ஷூவிலிருந்த ஒரு தூசியைத் துடைத்தான். ''வா'' என்றான்.

ஆனந்த் ப்ரியாவிடமிருந்து கணகளை விலக்க முடியாமல் பார்த்துக் கொண்டே மெல்லப் பின் வாங்கி, மதுக்கருடன் வெளியே வந்தான்.

''யூ லுக் ரியல்லி ஸ்மார்ட்'' என்றான் அமர்.

ஆனந்த் முகத்தில் உணர்ச்சி எதுவும் காட்டவில்லை. ''இந்தா...''

அமர் நீட்டிய சிறு அட்டையை வாங்கியதும்தான். அது ஒரு அடையாள அட்டை என்று புரிந்தது.

அந்த அடையாள அட்டையில் ஆனந்தின் வண்ணப் புகைப்படம் ஒட்டப்பட்டு, விஞ்ஞானிகள் கழகத்தின் முத்திரை குத்தப்பட்டிருந்தது.

''இந்த ஐடன்டிடி கார்டு தயார் செய்வதற்காகத்தான் என்னை நேற்று போட்டோ எடுத்தாயா?''

''யெஸ். கீழே இருக்கும் கையெழுத்து நீயே போட்டது தான். இந்த அட்டையும், அழைப்பிதழும் இருந்தால்தான் உன்னை உள்ளே அனுமதிப்பார்கள்... நானும், நீயும் முதல் வரிசையிலேயே உட்காரப் போகிறோம்... நான் அமர், ஆனந்த் இருவருடைய பெயரும் 'A' என்ற எழுத்தில் ஆரம்பிக்கிறது. அடுத்தடுத்த இருக்கைகள் நமக்கு ஒதுக்கியிருக்கிறார்கள்...''

''எப்... எப்பொழுது இடத்தையெல்லாம் ரிஸர்வ் செய்தாய்? நேற்றா?'' ஆனந்த் வியப்புடன் கேட்டான்.

''இல்லை கண்ணா... பத்து நாட்களுக்கு முன்னாலேயே மெம்பர் ஷிப் முடிந்தது. அப்போதே உன் பெயரும் என் பெயரும் கொடுத்து பணம் கட்டியாகி விட்டது...''

''ஒருவேளை நான் மும்பை வராமல் போயிருந்தால்?''

''நீயாக வரவில்லை என்றால், எப்படியும் இன்றைக்குக் கொண்டு வரப்பட்டிருப்பாய்... எங்கள் வேலையை ரொம்ப சுலபமாக்கி விட்டாய் நீ...''

''யூ மீன், பத்து நாட்களுக்கு முன்னாலேயே நான் தான் இந்த வேலையைச் செய்ய வேண்டும் என்று தீர்மானித்து விட்டீர்களா?''

''வெரிமச...''

''மை காட்! இதில் ஏதோ பெரிய சதித்திட்டம் இருக்கிறது. நந்தகோபாலை என்ன செய்யப் போகிறீர்கள்?''

''ஆரம்பித்து விட்டாரப்பா கேள்விகளை!'' அமர் சிரித்தான். ''இந்த ஐ.டி. கார்டு வெளியே தெரியும்படி பாக்கெட்டில் இப்படி செருகிக் கொள்ள வேண்டும்... நானும், நீயும் ஒரே காரில்தான் போகிறோம்... கிளம்பு...''



அடிமை ஆடு போல் அமரின் பின்னே நகர ஆரம்பித்தான் ஆனந்த்.

''வெயிட்!'' என்றான் அமர்.

மதுக்கரைப் பார்த்து அவன் சைகை செய்ய, மதுக்கர் ஒரு கறுப்புத் துணி எடுத்து, ஆனந்தின் கண்களைக் கட்டினான்.

''இப்பொழுது வா...'' என்று அமர் அவன் கை பிடித்து வெளியே அழைத்துச் சென்றான்.

படிகளில் இறங்குவது தெரிந்தது. மறுபடி படிகளில் வேறு திசையில் ஏறுவதும் தெரிந்தது. அப்புறம் ஒரு லிஃப்ட்டில் நுழைக்கப்பட்டு, எத்தனை மாடிகள் என்று புரியாதபடி பயணம் செய்து வெளியே வந்தார்கள்.

பயணம் செய்த நேரத்தை வைத்து கணக்கிட்டதில் இரண்டாவது மாடியாக இருக்கும் என்று தோன்றியது. வேண்டுமென்றே அவனைக் குழப்புவதற்காக படி யேறலும், படி இறங்கலும் நடைபெற்றிருக்க வேண்டும் என்று ஆனந்த் நினைத்தான்.

காரில் ஏற்றப்பட்டபோது, அது மாருதி வேன் என்பதும் புரிந்தது.

பத்துப் பதினைந்து திருப்பங்களுக்குப் பிறகு, ஆனந்தின் கண்கட்டு அவிழ்த்து விடப்பட்டது.

மும்பையின் காலைப் போக்குவரத்து வெகு பரபரப்பாக இருந்தது. பெரிய சாலையில் அங்கங்கே பந்தல் போட்டு ராட்சஸ அளவு கணபதி பொம்மைகள் அலங்கரித்தன. லவுட் ஸ்பீக்கர்களில் பக்திப் பாடல்களை அனுராதா அலறிக் கொண்டிருந்தார். ''இன்னும் நான்கு நாட்களில் இந்த கணபதி பொம்மைகளை ஊர்வலமாக

எடுத்துப் போய் கடலில் கரைப்பார்கள்'' என்றான் அமர். ''எந்த கணபதியைப் பிடித்திருக்கிறதோ, அந்த கண பதியை மனதார வேண்டிக்கொள். 'போகும் காரியம் நன்றாக நடக்க வேண்டும். ப்ரியாவை பத்திரமாகத் திரும்பப் பெற வேண்டும் என்று...''

ஆனந்த் பதில் சொல்லவில்லை.

திடீரென்று சாலையின் குறுக்கே, ஒரு அலங்கார வளைவு. அப்புறம் வரிசையாக பல பேனர்கள், தோரணங்கள் சாலைகள் முடிவில் அந்தக் கட்டிடம் தென்பட்டது.

சத்ரபதி சிவாஜி அரங்கம்.

இரண்டாள் உயர கேட்கள். கேட்களின் இருபுறமும் துப்பாக்கி ஏந்திய காவலர்கள்.

மாருதி வேன் நிறுத்தப்பட்டது. அடையாள அட்டை கள் காட்டப்பட்டதும், உள்ளே அனுமதிக்கப்பட்டது.

பார்க்கிங் பகுதியில் வேனை நிறுத்தி இறங்கியபோது ஆனந்த் கவனித்தான்.

சற்று தூரத்தில் வந்து நிறைய பென்ஸ் கார் கதவு திறந்து, இறங்கிக் கொண்டிருந்தார், விஞ்ஞானி நந்த கோபால்.



## 6

''என் கூடவே வா'' என்று முணு முணுத்தான் அமர்.

நந்தகோபால் விலகி நடப்பதை கவனித்துக் கொண்டே அமரின் பின்னே நடந்தான் ஆனந்த்.

அடையாள அட்டை வெளியே தொங்கியது.



மூன்று வாயில்கள் வழியே அழைப்பிதழ் வைத்திருந்த வர்கள் உள்ளே அனுமதிக்கப்பட்டனர். ஒவ்வொரு வாயிலிலும் ஒரு செக்யூரிட்டி ஆசாமி நின்று இருந்தார். கையில் துப்பாக்கிகளையும், இதர ஆயுதங்களையும் கண்டறியும் மெட்டல் டிடக்டர்.

ஆனந்தின் உடம்பில் ஒட்டியபோது, டிடக்டர் கீ... கீ... என்று சட்டைப் பை அருகே குரல் கொடுத்தது.

ஆனந்த் பாக்கெட்டிலிருந்து ஒரு சாவிக் கொத்தை எடுத்து நீட்ட செக்யூரிட்டி சிரித்தார். தோளில் தட்டி போ என்றார். ஆனால் அமர் எப்படியும் மாட்டுவான்! அவன் இடுப்பில் அந்த டம்மி துப்பாக்கியை எடுத்து செருகிக் கொள்வதை ஆனந்த் பார்த்திருந்தான்.

ஆனால் அமரின் உடல் மீது அந்த இயந்திரம் ஒட்டப் பட்டது. எந்த ஒலியும் எழுப்பவில்லை. அமர் உள்ளே அனுமதிக்கப்பட்டான்.

ஆனந்த் வெகுவாக அதிசயித்தான்.

''எப்படி?'' என்றான், அமரிடம் முணுமுணுப்பாக.

''மெட்டல் டிடக்டரை அணைத்து விட்டால் அது சப்தம் எழுப்பாது'' என்றான் அமர், புன்னகைத்து ''எங்கள் கரங்கள் நீண்டவை. எங்கும் பரவியிருப்பவை.''

''மை காட்!''

''முதலில் முகத்திலிருந்து அந்த அதிர்ச்சியை விலக்கு. முகத்தை சாதாரணமாக வைத்துக் கொள்...'' என்றான் அமர் சற்றே கோபமாக.

அந்தக் காரிடாரில் சற்று தூரம் நடந்ததும் ஆண்கள், பெண்கள் என்று இரு பாலருக்குமான டாய்லட்கள் இருந்தன. ஆனந்தின் கையைப் பிடித்து அமர் டாய்லட் டிற்குள் இழுத்தான்.

டாய்லட் வெகு சுத்தமாக புதிதாகக் கட்டப்பட்டது போல் இருந்தது. அவர்களைத் தவிர வேறு யாரும் இல்லை.

அமர் தன் பாண்ட்டிலிருந்து டம்மி ரிவால்வரை உருவி அடுத்து ஆனந்தின் இடுப்புக்குள் நுழைத்து, கோட்டால் முற்றிலுமாக மூடினான். காரிடாரில் மறுபடி நடை தொடர்ந்தது.

''நான் உன் காலை மிதித்ததும் நீ செயல்பட வேண்டும் சட்டென்று துப்பாக்கியை எடுத்துக் கொண்டு எழுந்திருக்க வேண்டும். அந்த சமயத்தில் அந்த இடத்திலிருந்து நான் நழுவி விடுவேன்... துப்பாக்கியை வெளிக்காட்டாமல், நந்தகோபாலுடன் நீ வம்புக்குப் போக வேண்டும். உன் ஆராய்ச்சியை அவமதித்ததைப் பற்றிப் பேசு. அப்படி அன்றைக்கு என்னை மேலே முன்னுக்கு வர விடாமல் செய்தீர்களே, அது உங்கள் சுயநலம்தானே என்று கேள். பதிலுக்கு அவர் ஏதாவது சொல்வார். உடனே கோபப்பட்டவன் போல் துப்பாக்கியை எடுத்து நீட்டு. என்னை மதிக்காத உங்களுக்கு ஒரு மேடை தேவையா? இந்த மேடையே உங்களுக்கு சாவு மேடையாகட்டும் என்று துப்பாக்கியில் விசை இழுப்பது போல் செய். கேப் வெடிக்கும். புகை வரும் சத்தத்தையும், புகையையும் பார்த்து அவர் மிரண்டதும், அதைத் தூக்கிப் போட்டு விட்டு சிரி...'' காரிடரில் நடந்து கொண்டே பேசினான், அமர்.

''அதுவரை நான் உயிரோடு இருந்தால்...''

''வாட் டூ யூ மீன்?''

''விஞ்ஞானியைப் பார்த்து நான் துப்பாக்கியை நீட்டினால் செக்யூரிட்டி ஆட்கள் சும்மா வேடிக்கை பார்த்துக் கொண்டா நிற்பார்கள்? டிஷ்யூம், டிஷ்யூம் என்று இரண்டே தோட்டாவில் என் வாழ்க்கையை முடித்து விட மாட்டார்களா?''



''மாட்டார்கள்...'' என்றான் அமர், ''நீ துப்பாக்கியைத் தூக்கியமே முதல் வரிசையிலும், இரண்டாவது வரிசையில் இருப்பவர்களும் எழுந்து தாறுமாறாக குறுக்கிலும், நெடுக்கிலும், ஓட ஆரம்பிப்பார்கள். அந்தக் குழப்பத்தில் செக்யூரிட்டியால் உன்னைக் குறி வைக்க முடியாது...''

''அவர்கள் ஓடுவார்கள் என்று என்ன நிச்சயம்?''

''அவர்களுக்கு அப்படிச் செய்யச் சொல்லிதான் உத்தரவு கொடுக்கப்பட்டுள்ளது...''

ஆனந்த் நடந்து கொண்டிருந்தவன் சட்டென்று நின்று விட்டான். ''உத்தரவா? முதல் இரண்டு வரிசையில் இருப்பவர்கள் கூட உண்மையான விஞ்ஞானிகள் இல்லையா? எல்லோரும் உன்னால் ஏற்பாடு செய்யப்பட்டவர்கள்தானா?''

அமர் அவன் தோளில் கை வைத்து நகர்த்திக் கொண்டே பேசினான். ''அவர்களில் உண்மையான விஞ்ஞானிகளும் இருக்கிறார்கள். ஆனால், மனித சுபாவம் பற்றி நிறைய தெரிந்து வைத்திருப்பவன் நான். ஒரு ஆபத்தான சூழ்நிலையில் பக்கத்தில் இருப்பவன் எந்த திசையில் ஓடுகிறானோ, அதே திசையில் சேர்ந்து ஓடத்தான் யாருக்கும் தன்னிச்சையான உணர்வு வரும்...''

காரிடாரின் முடிவில் அடையாள பாட்ஜ் குத்திய ஒரு வெள்ளைச் சீருடை மனிதர் நின்றிருந்தார்.

அவர்களை உள்ளே அனுமதிக்கும் முன், அழைப்பிதழ் வாங்கிப் பார்த்து, எந்த இருக்கையில் உட்கார வேண்டும் என்று குறிப்புக் கொடுத்தார்.

அந்த ஆடிட்டோரியத்திற்குள் நுழைந்ததும், ஆனந்த் பிரமித்தான்.

சுமார் ஆயிரம் பேர் அமரக்கூடிய அரங்கம். இருக் கைகள் வரிசை வரிசையாக படிகளாக அமைக்கப்பட் டிருந்தன. கீழ் வரிசை அதாவது முதல் வரிசை பத்திரிகை யாளர்களுக்கும், புகைப்படக்காரர்களுக்குமாக ஒதுக்கப் பட்டிருந்தது.

இரண்டாவது வரிசையில் இருக்கை எண்கள் 11, 12 இரண்டும் அவர்களுக்கு ஒதுக்கப்பட்டிருந்தது. ஒவ் வொரு வரிசையிலும் இடதுபுறம் 1 முதல் 12 வரை, அதற் கப்புறம் பொதுப்பாதை, நடுவில் 13 முதல் 28 வரை, அப்புறம் இன்னொரு பொதுப்பாதை. அதற்கும் அப்புறம் வலதுபுறம் 29 முதல் 40 வரை இருக்கைகள் அமைந் திருந்தன.

ஆனந்தை உள் இருக்கையில் உட்கார வைத்துவிட்டு, அமர் பாதைக்கருகில் இருந்த நடு இருக்கையில் அமர்ந்தான். குஷன் நாற்காலியில் உட்கார்ந்தாலும், முதுகுப்பற பாண்ட்டிற்குள் இடுப்பு பெல்ட் அருகே செருகியிருந்த துப்பாக்கி ஆனந்திற்கு உறுத்தியது.

ஒவ்வொரு இருக்கையையும் தேவையான அளவு சாய்த்துக் கொள்ளலாம் அல்லது அவசியமென்று நினைத் தால் நிமிர்த்திக் கொள்ளலாம். ஒவ்வொரு இருக்கைக்கு முன்னாலும் மடக்கி முன் இருக்கையின் முதுகோடு பொருத்தக் கூடிய ஒரு சிறு எழுது மேஜை. உட்கார்ந்த சற்று நேரத்திற்கெல்லாம் ஆளுக்கொரு பிளாஸ்டிக் ஃபோல்டர் கொண்டு வந்து கொடுக்கப்பட்டது. அதில் சில வெள்ளைக் காகிதங்கள், மூன்று நிறங்களில் பால் பாயிண்ட் பேனாக்கள்.



இருக்கையின் கைப்பிடியில் பதிந்திருந்த மைக்கை தனியே எடுத்துப் பேசலாம்.

ஆனந்த் பார்வையை சுழல விட்டான். ஆயிரம் பேர் அமரக்கூடிய அரங்கத்தில் சுமார் அறுநூறு பேர் அமர்ந் திருந்தார்கள். மேலேயிருந்து டியூப்லைட்கள் வெளிச்சம் தூவிக் கொண்டிருந்தன. மறைவிடத்து ஸ்பீக்கர்களில் ஷிவ்குமார் ஷர்மாவின் சந்தூர் இனிமையைப் பொழிந்து கொண்டிருந்தது.

ஆனந்த் தனது வலது புறம் அமர்ந்திருந்தவரைப் பார்த்தான்.

அவருடைய அடையாள அட்டை பெயரைச் சொன்னது.

அகில்ராஜ் வயது முப்பத்தாறு.

நீளமான முகம். பெரிய உருட்டை விழிகள். கண் களுக்குக் கீழே மெலிதான கறுப்பு வளையங்கள். நேரான பெரிய மூக்கு, மீசை இருபுறமும் இறங்கி குறுந்தாடியுடன் கை கோர்த்திருந்தது. சதுரமான கண்ணாடிகள் வழியே பார்வை தாக்கியது.

கொண்டு வந்திருந்த தோல் பையிலிருந்து அச்சடித்த சில காகிதங்களை எடுத்துப் படித்துக் கொண்டிருந்தவர், நிமிர்ந்து ஆனந்தைப் பார்த்தார். ஒரு புன்னகை கொடுத் தார்.

''மெட்ராஸா?'' என்றார்.

''சென்னை'' என்றான் ஆனந்த்.

புன்னகையைத் தொடர்ந்த அகில்ராஜ். ''நானும் தமிழன் தான். ஆனால் இருப்பது திருவனந்தபுரம்'' என்றார்.

தமிழர்! ஆனந்திற்கு பரபரத்தது. அமர் மும்பையைச் சேர்ந்தவன். அவனுக்குத் தமிழ் எழுத்துக்கள் நிச்சயம்

பழக்கமாய் இருக்காது. அமருக்குத் தெரியாமல், அகில்ராஜிற்குத் தகவல் கொடுக்க முடிந்தால்.

ஆனந்த் தனக்குக் கொடுக்கப்பட்ட ஒரு வெள்ளைத் தாளை எடுத்தான்.

பேனாவால் நிறுத்தி எழுதினான்.

***ஆபத்து! விஞ்ஞானி நந்தகோபாலை தனியே சந்தித்து ரகசியமாக எச்சரிக்கவும்! இடது புறம் இருக்கை எண் பன்னிரெண்டில் அமர்ந்திருப்பவன் பெயர் அமர்! சதிகாரன் போலீஸிடம் தெரிவிக்கவும்! நன்றி!***

அவன் எழுதுவதைப் பார்த்துக் கொண்டிருந்த அமரின் கண்கள் சுருங்கின.

''என்ன எழுதுகிறாய்?'' என்று உறுமினான்.

''நீதானே காரியம் ஒழுங்காக நடக்க வேண்டும் என்று கடவுளிடம் வேண்டச் சொன்னாய்? இது தமிழில் என் கடவுளுக்கு எழுதிய பிரார்த்தனை!''

''நான் நம்பவில்லை...''

''வேண்டுமானால் இவரைக் கேள்...'' ஆனந்த் சட்டென்று பக்கத்திலிருந்த அகில்ராஜிடம் அந்தக் காகிதத்தைக் காட்டினான்.

அகில்ராஜ் அந்தக் காகிதத்தின் வரிகளை மேய்ந்து விட்டு, ''யெஸ்?'' என்றார்.

''இது பிரார்த்தனைப் பாடல்தானே?'' என்றான், ஆனந்த் ஒரு கண்ணைச் சிமிட்டி.

''ஐ'ம் ரியல்லி ஸாரி... எனக்கு தாய்மொழிதான் தமிழே தவிர நான் படித்தது மும்பையில். கல்லூரிப் படிப்பு வரை இந்திதான்... தமிழில் பேசத் தெரியுமே தவிர, ஒரு எழுத்து கூடத் தெரியாது...''



ஆனந்த் சுக்கு நூறானான். அகில்ராஜிற்கு உண்மையிலேயே தமிழ் படிக்கத் தெரியாதா அல்லது அமரை ஏமாற்றுவதற்காகச் சொல்கிறாரா என்று அவனுக்குப் புரியவில்லை.

அகில்ராஜ் எந்தவித பாதிப்பும் இன்றி, தன் நோட்ஸை மேற்கொண்டு படிக்க ஆரம்பிக்க, ஆனந்தின் நம்பிக்கை புகையாகிப் போனது. அகில்ராஜிற்கு தமிழ் தெரியவில்லை! நிச்சயம் யாராவது ஒரு தமிழர் இந்த வரிசையில் இல்லாமலா போய் விடுவார்? அவன் எட்டிப் பார்த்த நேரத்தில் அந்தத் தாளை சட்டென்று பறித்தான் அமர். நான்காய், எட்டாய், பதினாறாய் மடித்து பாக்கெட்டிற்குள் வைத்துக் கொண்டான்.

''இனி ஒரு வார்த்தை கூட தமிழில் நீ எழுதக் கூடாது'' என்றான் ஆவேசமான குரலில்.

ஆனந்த் தலையசைத்தான்.

''எழுந்திரு... நீ இந்த இருக்கைக்கு வா... நான் உன் இடத்தில் உட்கார்கிறேன்'' என்றான் அமர்.

ஆனந்த் வேறு வழியின்றி எழுந்தான். முன்பாவது பக்கத்தில் ஒரு அகில்ராஜ் இருந்தார். சந்தர்ப்பம் கிடைத்தால் ரகசியமாக தகவல் தரமுடியும். ஆனால் இப்போது அவனுக்கு அடுத்து பொதுப் பாதை, வலதுபுறமோ அமர்!

ஆனந்த் தன் அதிர்ஷ்டத்தை நொந்து கொண்டான்.

''யுவர் அட்டென்ஷன் ப்ளீஸ்'' என்று ஸ்பீக்கர்களில் குரல் வந்தது. ''இன்னும் சற்று நேரத்தில் நிகழ்ச்சி துவங்க இருக்கிறது. அவரவர் இருக்கையில் அமருமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.''

ஆனந்த் மேடையைப் பார்த்தான்.

அமரின் முகம் இறுகியிருந்தது.

இன்னும் சில விஞ்ஞானிகள் கடைசி நிமிட பரபரப்பாக அரங்கத்திற்குள் நுழைந்து கொண்டிருந்தார்கள்.

அகில்ராஜ் எந்தக் கவலையும் இன்றி யாருடனோ செல்லுலார் போனில் சிரித்து சிரித்துப் பேசிக் கொண்டிருந்தார் இந்தியோ, ஆங்கிலமோ, தமிழோ, மலையாளமோ இல்லாத வேறு புதிய மொழி என்பது மட்டும்தான் புரிந்தது.

அந்த மொழியாவது தனக்குத் தெரிந்திருக்கக் கூடாதா?

ஆனந்த் வேறு வழியின்றி மேடையை வெறிக்க ஆரம்பித்தான்.

நான்கு திசைகளிலிருந்து நான்கு வீடியோ கேமிராக்கள் மேடையை நோட்டமிட்டன. ஒரு காமிரா அரங்கத்தில் அமர்ந்திருந்தவர்களையே கவனித்துக் கொண்டிருந்தது.

மேடையில் வெளிச்சம் மெல்ல மெல்லப் பரவியது.

விஞ்ஞானிகள் வந்து அமர்ந்தனர் - நந்தகோபாலைத் தவிர. அவருடைய நாற்காலி மட்டும் காலியாக இருந்தது.

வரவேற்புரை நிகழ்த்துபவர் மைக்கைப் பிடித்தார்.

''நண்பர்களே... பல நாடுகளிலிருந்து இங்கு வந்து கூடியிருக்கும் விஞ்ஞானிகளே... அன்பு கொண்டு எங்கள் நிகழ்ச்சியை நிறைவு செய்ய வந்திருக்கும் பத்திரிகையாள அன்பர்களே... அனைவருக்கும் வணக்கம்... நிகழ்ச்சி துவங்குவதில் சிறு தாமதம் குறித்து மன்னியுங்கள். தலைமை விஞ்ஞானி திரு. நந்தகோபாலுக்கு பிளட் பிரஷர் கூடுதலாக இருப்பதால், அவர் சற்றே ஓய்வெடுத்துக் கொண்டு, இன்னும் பத்து நிமிடங்களில் நம்முடன் கலந்து கொள்வார் முதலில் இறை வணக்கம்...''



அனைவரும் எழுந்து நின்றனர்.

இறை வணக்கம் முடிந்து அமர்ந்ததும், ஆனந்திற்கு அடுத்த இருக்கையில் பாதையின் மறுபுறம் பதின்மூன்றாம் எண் இருக்கையில் உட்கார்ந்திருந்தவர் அவன் புறம் திரும்பினார்.

''டாய்லட் எங்கே இருக்கிறது, தெரியுமா?''

ஆனந்த் உடனடியாக எழுந்தான். ''வாருங்கள்... நானே காட்டுகிறேன்'' என்றான். ''எனக்கும் போக வேண்டும்...''

அமர் பக்கம் திரும்பி, ''டாய்லட் வரை போய் வந்து விடுகிறேன்'' என்றான்.

அவன் பதிலுக்குக் கூடக் காத்திருக்காமல், பக்கத்து இருக்கை நண்பருடன் கடகடவென்று வெளியே நடந்து விட்டான்.



## 7

டாய்லட்டிற்குள் அவர்களைத் தவிர வேறு யாருமில்லை என்பதை கவனித்தான்.

''மிஸ்டர் ஆகாஷ்!''

அவர் பீங்கானிலிருந்து திரும்பிப் பார்த்தார்.

''உங்கள் பெயர் எனக்கு எப்படித் தெரியும் என்று யோசிக்காதீர்கள். உங்கள் ஐ.டி. பார்த்து தெரிந்து கொண்டேன். நான் இப்போது சொல்வதை கவனமாகக் கேட்டுக் கொள்ளுங்கள். இது மிகமிக அவசரமான விஷயம்...''

ஆனந்த் தன் குரலைத் தழைத்துக் கொண்டான்.

''விஞ்ஞானி நந்தகோபாலிற்கு எதிராக ஏதோ சதி நடக்கிறது. என்னிடம் ஒரு துப்பாக்கி கொடுத்து அவரை

பயமுறுத்தச் சொல்லியிருக்கிறார்கள். என் காதலியைப் பணயக் கைதியாகப் பிடித்து வைத்துக் கொண்டு, என்னை மிரட்டுகிறார்கள். எனக்குப் பக்கத்தில் அமர் என்பவன் உட்கார்ந்திருக்கிறான். அவன்தான் இத்தனைக் கும் காரணம்... நீங்கள் போலீஸில் சொல்லி அவனை எப்படியாவது...''

ஆனந்த் சொல்வதை எல்லாம் ஆகாஷ் பெரிய கண்களைத் திறந்து கேட்டார். பின் வார்த்தைகளை மெல்ல வெளியே விட்டார்.

''இது ஏதாவது விளையாட்டா, அல்லது நீங்கள் சொல்வது எல்லாம் நிஜமா?''

''எல்லாம் நிஜம்... நூறு சதவீத நிஜம்?'' என்று பின்னாலிருந்து குரல் வந்தது.

இருவருமே சடக்கென்று திடுக்கிடலோடு திரும்பிப் பார்த்தார்கள்.

மதுக்கரும், அவனைத் தவிர இன்னும் இரண்டு ஆட்களும் அங்கே நெருக்கமாக நின்றார்கள்.

''மது....க்...கர்...'' ஆனந்தின் வாய் குழறியது.

''உனக்கு எவ்வளவோ எச்சரிக்கைகள் தந்தும் நீ அதை அலட்சியம் செய்து விட்டாய்... நீ உண்மையாகவே ப்ரியாவைக் காதலிக்கிறாய் என்று நினைத்திருந்தேன். ஆனால் உனக்கு அவளைப் பற்றி அக்கறையே இல்லை என்பதை இப்போது புரிந்து கொண்டேன்...''

''ப்ரியா! அவளை எதுவும் செய்து விடாதீர்கள்...''

''ப்ரியா இருக்கட்டும். முதலில் இந்த அப்பாவி மனிதரை எடுத்துக் கொள்வோம். இவர் பெயர் ஆகாஷ் என்பதால் உனக்கு அடுத்து உட்கார நேர்ந்தது. கேவலம்,



டாய்லட் போக வேண்டும் என்று நினைத்தது. இவர் வாழ்க்கைக்கே இன்றைக்கு முடிவாகிப் போனது...''

ஆகாஷ் மிரண்டு பின் வாங்கி அங்கிருந்த சிறுநீர் பீங்கானில் மோதி நின்றார்.

மதுக்கர் அவரை நெருங்கினான்.

ஆனந்த் குறுக்கில் பாய்ந்தான். ''மதுக்கர்... ஆகாஷை விடு... அவர் தப்பேதும் செய்யவில்லை...''

''நீ சொன்னதையெல்லாம் கேட்டுக் கொண்டாரே, அது தப்புதானே...''

மதுக்கர் ஆனந்தை இடது பக்கம் தன் சகாக்களிடம் தள்ளினான். ஆகாஷின் அடிவயிற்றில் கும்மென்று குத்தினான்.

விஞ்ஞானமும், பரிசோதனைச் சாலையும் மட்டுமே பார்த்துப் பழகியிருந்த ஆகாஷ் அந்தத் தாக்குதலுக்கு சற்றும் தயாராய் இல்லை. குபுக்கென்று முன்புறம் மடங்கினார்.

''டாய்லட்டின் கதவு உள் பக்கம் தாளிடப்பட்டிருக் கிறதுதானே?'' என்றான், மதுக்கர்.

''ஆமாம்...''

ஆகாஷை அப்படியே டைல்ஸ்கள் பதித்த தரையில் இழுத்துப் போய் கடைசியில் இருந்த டாய்லட்டின் கதவைத் திறந்து உள்ளே இழுத்துப் போனான்.

தன்னைப் பிடித்திருந்தவர்களிடமிருந்து உதறிக் கொண்டு விலகப் பார்த்த ஆனந்த் தோற்றுப் போனான்.

சில நிமிடங்களில் மூடிய டாய்லட்டிலிருந்து மதுக்கர் வெளிப்பட்டான். ரத்தம் சொட்டும் கத்தியை எடுத்துப் போய் வாஷ்பேஸினில் கழுவினான் மதுக்கர்.

''ஆகாஷை என்ன செய்தீர்கள்?'' ஆனந்த் நடுக்கத்துடன் கேட்டான்.

''நாளைக்கு சாட்சி சொல்ல அவன் உயிரோடு வரக் கூடாது அல்லவா? அதனால் சதக்... என் உடைகளைக் கறையாக்காமல் அவனைத் தீர்த்துக் கட்டி விட்டேன். அப்படியே கப்போடில் உட்கார வைத்துவிட்டு வந்திருக்கிறேன். கதவைத் தாழ்ப்பாள் போட்டு விட்டேன். அவனைக் கண்டு பிடிக்கும் முன் நம் காரியம் முடிந்து போயிருக்கும்.''

ஆனந்த் தன்னை பிடித்திருந்தவர்களை உதறினான்.

''நீங்கள் சொன்னதெல்லாம் பொய். நந்தகோபாலை சும்மா பயமுறுத்தப் போவதாக முதலில் சொன்னீர்கள். அது வெறும் விளையாட்டு. ஆனால் அதை நிறைவேற்று வதற்காக, ஒரு உயிரையே கொலை செய்கிறீர்கள் என்றால், நீங்கள் சொன்னது ஒரு உண்மை அல்ல. இதன் பின்னால் ஒரு பெரும் சதித்திட்டம் இருக்கிறது.''

''யெஸ் சதிதான்... பிடித்தோ பிடிக்காமலோ நீயும் இதில் இப்போது கலந்து விட்டாய்... திடீரென்று பின் வாங்க முடியாது. ஆகாஷைப் பற்றி மட்டும் கவலைப் படுகிறாயே. உன் ப்ரியாவிற்கு என்ன ஆயிற்று என்று தெரிந்து கொள்ள வேண்டாமா? அவளோடு பேசுகிறாயா?''

மதுக்கர் தன் ஸெல்லுலார் போனில் சில எண்களைத் தட்டினான். இந்தியில் சில வார்த்தைகள் பேசி விட்டு, போனை ஆனந்திடம் கொடுத்தான்.

''ஆனந்த்!'' மறுமுனையில் ப்ரியாவின் குரல் அழுகையில் உடைந்தது.

''ஆனந்த் அங்கே நீ செய்யக்கூடாத எதையோ செய்தாயாம். அதனால் முதல் தவணையாக என் தாவணியை உருவி விட்டார்கள். பாவாடையும், பிளவுஸுமாக உட்கார்ந்திருக்கிறேன்.''



''ப்ரியா!''

''அடுத்து நீ செய்கிற ஒவ்வொரு தப்புக்கும் ஒவ்வொரு உடையாக உருவப் போகிறார்களாம்.''

''ஐயோ! ஐ'ம் ஸாரி ப்ரியா...''

''ஆனந்த். நீ சீக்கிரம் வந்து என்னைக் கூட்டிப்போ.. எனக்கு ரொம்ப பயமாயிருக்கிறது.''

''ப்ரியா. இங்கே இவர்கள் என்ன செய்தார்கள் தெரியுமா?'' என்று ஆனந்த் ஆரம்பித்ததும், போன் பிடுங்கப் பட்டது.

''இப்போது ப்ரியாவுடனும் பேசி விட்டாய். என்ன முடிவு செய்திருக்கிறாய்? எங்களுடன் ஒத்துழைக்கப் போகிறாயா இல்லையா?'' மதுக்கர் கோபமாகக் கேட்டான்.

ஆனந்திற்கு சட்டென்று தன்னிடமிருந்த ரிவால்வர் நினைவுக்கு வந்தது. அது டம்மித் துப்பாக்கி என்று அவர்கள் மறுபடி மறுபடி சொன்னாலும், அது பொய்யாக இருக்கும் என்று தோன்றியது. ஒரு வேளை அது உண்மையான துப்பாக்கியாக இருக்குமோ? அவன் சுட்டதும் பொசுக்கென்று நந்தகோபால் மேடையில் செத்து சுருண்டு விழுவாரா?

இப்போதுதான் புரிகிறது. அப்படித்தான் இருக்க வேண்டும். இடுப்பிலேயே துப்பாக்கியை வைத்துக் கொண்டு எதற்காக இவர்களுக்கு பயப்பட வேண்டும்?

சரேலென துப்பாக்கியை உருவினான்.

மூவரையும் குறி வைத்து துப்பாக்கியை வட்டமிட்டான்.

மதுக்கர், ''சபாஷ்!'' என்றான். ''மிகச் சரியாகப் பிடித்திருக்கிறாய்... இப்படித்தான் நந்தகோபாலுக்கு எதிராகவும் பிடிக்க வேண்டும்...''

''இப்போது பிடித்திருப்பது உங்களுக்கு எதிராக!'' என்றான் ஆனந்த் உறுமலாக.

''உன் கை எப்படி நடுங்குகிறது பார். ஆனந்த் எங்களுக்கு எதிராக இந்த டம்மித் துப்பாக்கியை பிடித்து என்ன ஆகப் போகிறது? சுட்டால் சத்தமும், புகையும்தான் வரும்.''

''பொய்... இதை வைத்து நந்தகோபாலை சுடுவதற்குத் தான் என்னிடம் கொடுத்திருக்கிறீர்கள்.''

''முட்டாள்... இது டம்மித் துப்பாக்கிதான். இல்லையென்றால் இவ்வளவு தைரியமாக உனக்கு எதிரே நிற்போமோ? சுடு என்று சொல்வேன்... ஆனால் ஒரே பிராப்ளம். இது சத்தம் போட்டு விடும். அதற்காக யோசிக்கிறேன். சுட்டு நீ அவர்களை எல்லாம் கூப்பிட்டாலும் மறுபடி ஒரு விஷயத்தை மறந்து விடுகிறாய்... ப்ரியா...''

ப்ரியா என்ற பெயர் சொல்லப்பட்டதும் ஆனந்தின் துப்பாக்கி தழைந்தது.

மதுக்கர் அவனை நெருங்கி துப்பாக்கியைப் பிடுங்கினான். சட்டென்று பிளந்து உள்ளே காட்டினான். ''பார். தோட்டா இருக்கிறதா, தீபாவளி சமயத்தில் வெடிக்கும் ரோலர் கேப் இருக்கிறதா?''

ஆனந்த் துப்பாக்கியைப் பார்த்தான்.

தோட்டாக்கள் இல்லை. தீபாவளி கேப் போல் அல்லாமல் வேறு வடிவத்தில் இன்னும் அடர்த்தியான கேப் சுருள் தான் இருந்தது.



மதுக்கர் துப்பாக்கியை மூடிக் கொடுத்தான்.

''போ... போய் உன் இருக்கையில் உட்கார்... முட்டாள்தனமாக எதையும் முயற்சிக்காதே! ப்ரியாவின் உடை ஒவ்வொன்றும் பிரிக்கப்பட்டு கடைசியில்... வேண்டாம், நீ நல்ல பிள்ளையாக நடந்து கொள்வாய்.''

டாய்லட்டின் கதவைத் திறந்து அவர்கள் வெளியேறினர்.

ஆனந்த் தன் இருக்கைக்குத் திரும்பும் வரை மதுக்கர் பின்னால் நின்று பார்த்துக் கொண்டிருந்தான்.



## 8

அவன் உட்கார்ந்ததும், அமர் அவன் தொடையைத் தட்டினான். ''பார், உன் முட்டாள்தனத்தால் ஒரு விஞ்ஞானியின் உயிர் டாய்லட்டில் போயிற்று...''

ஆனந்த் திடுக்கிட்டு அவனைப் பார்த்தான்.

''எனக்கு அதற்குள் விஷயம் எப்படி தெரிந்தது என்று பார்க்கிறாயா?'' அமர் தன் பாக்கெட்டைத் தட்டிக் காட்டினான். ''உலகத்தின் எந்த மூலையிலிருந்து, எந்த மூலைக்கும் பேசக் கூடிய வசதி வந்து விட்டது. செல்லுலார் போன் இருக்கும் வரை பிரச்சனை இல்லை. மதுக்கருக்கு தகவல் தந்து உன்னை கவனிக்கச் சொன்னது நான்தான். டாய்லட்டில் நடந்ததை என்னிடம் சொன்னது அவன்தான்...''

ஆனந்தின் முகம் வியர்வையால் நனைந்தது.

வியர்வை அருவிக் கோடுகளாக இறங்கி அவன் கழுத்தை ஈரமாக்கிச் சட்டைக் காலரை நனைத்தது.

''உன் முகத்தை சாதாரணமாக வைத்துக் கொள்'' அமர் சற்றே சாய்ந்து ஆனந்தின் காதில் எச்சரித்தான்.

மேடையின் பக்கத்துத் திரை விலக்கி விஞ்ஞானிகள் நந்தகோபால் நுழைந்தார். கூடியிருந்தவர்களைப் பார்க்க கைகளைக் கூப்பியவாறு அவர் நுழைய, அனைவரும் படபடவென்று கை தட்டி ஆரவாரம் செய்தனர்.

அவரைப் பார்த்ததுமே ஆனந்திற்கு அடிவயிற்றில் குப்பென்று நெருப்பு பிடித்தாற் போலிருந்தது. வயிற்றுக் குள் நரம்புகள் முடிச்சிட்டுக் கொண்டன.

நந்தகோபால் தன் இருக்கையில் வந்த அமர்ந்தார்.

மைக்கைப் பிடித்திருந்தவர் உற்சாகத்தோடு தொடர்ந் தார்.

''விஞ்ஞானி நந்தகோபால் அவர்களை உங்கள் ஒவ்வொருவருக்கும் தெரியும். இந்த ஆண்டில் இவ ருடைய கண்டு பிடிப்பு உலகத்தையே புரட்டி எடுக்கப் போகிறது. மிக மெல்லிய உலோகம் ஒன்றை இவருடைய ஆராய்ச்சியில் கண்டு பிடித்திருக்கிறார். உலோகம் மெலிதாக அமைக்கப்படுமே தவிர, அது இருப்பதிலேயே மிக உறுதியான உலோகமாக அமையும் என்பதும் நிரூபணம் ஆகியிருக்கிறது. இந்த உலோகம் முக்கியமாக விண்வெளிக் கலன்களை அமைப்பதில் பெரும் பங்கு வகிக்கும் என்று விஞ்ஞான உலகம் நம்புகிறது. இந்த சந்திப்பில் விஞ்ஞானி நந்தகோபால் அவர்கள் தன்னுடைய கண்டு பிடிப்பைப் பற்றி விளக்கமாகச் சொல்வார். அவர் பேசி முடித்ததும் உங்களில் கேள்வி கேட்க விரும்பு பவர்கள் கேட்கலாம். சந்தேகங்களை தீர்த்துக் கொள்ள விரும்புபவர்களுக்காக ஒரு மணி நேரத்திற்கு மேல் ஒதுக்கப்பட்டிருக்கிறது.''



சிறு இடைவெளியாக அவர் பேச்சை நிறுத்த, நந்த கோபால் எழுந்து எல்லோருக்கும் கை அசைத்து அமர்ந்தார்.

''நந்தகோபால் அவர்களுக்கு இந்திய விஞ்ஞானிகள் கழகம் தனது பாராட்டுதல்களைத் தெரிவிக்கிறது. இந்த ஆண்டின் சிறந்த இந்திய விஞ்ஞானி என்ற விருதை இந்த மேடையில் வழங்குவதில் பெருமை கொள்கிறது.''

அரங்கம் கைதட்டல்களால் அதிர, அமர் இடது புறம் சாய்ந்தான். ஆனந்தின் காதில் கிசுகிசுத்தான்.

''அலர்ட்டாக இரு... எந்த நிமிஷம் வேண்டுமானாலும் நீ செயல்படும் நேரம் வரலாம்... நான் உன்னை மிதித்து விட்டு எழுந்து போய்விடுவேன். நீ எழுந்து முன் வரிசையைத் தாண்டி இறங்கி மேடைக்கு அருகே ஓடிப் போய் நின்று துப்பாக்கி காட்டி மிரட்ட வேண்டும்.''

''ம்'' என்றான் ஆனந்த். உணர்ச்சியின்றி.

பார்வையை அரங்கத்தில் மறுபடி ஓட்டினான்.

நான்கு வாயில்களிலும் நான்கு செக்யூரிட்டி ஆசாமிகள் துப்பாக்கி சகிதமாக நின்றனர். அவன் பயமுறுத்துவது புரியாமல் செக்யூரிட்டி ஓடி வந்து பின்புறமாக அவனை சுட்டு வீழ்த்தக்கூடும்.''

இனி அச்சமில்லை. உயிர் போனால் போகட்டும். என் ப்ரியா பத்திரமாய் இருந்தால் போதும்...

சிந்தனை இப்படி தறிகெட்டு ஓடினாலும் ஆனந்தின் கை சற்று மறைவாக செயல்பட்டது. ஒரு தாளில் பரபரப் பான கிறுக்கலாய் அவன் எழுதினான்.

***அபாயம்! விஞ்ஞானி நந்தகோபாலைக் காப்பாற்றுங்கள்! அவருக்கு அமரால் ஆபத்து!***

மேடையின் பக்க வழியிலிருந்து பிரேம் போடப்பட்ட ஒரு பெரும் சான்றிதழும், தங்க நிறத்தில் ஒரு பரிசுக் கோப்பையும் உள்ளே கொண்டு வரப்பட்டன.

அமர் எழுந்தான்.

ஆனந்தின் காலை மிதித்து விட்டு நகர்ந்தான். படிகளில் மேல் வரிசை நோக்கி ஏறினான்.

ஆனந்த் எழுந்தான்.

தான் எழுதிய தாளை முன் வரிசையில் இருந்த பத்திரிகையாளனின் மடியில் போட்டு விட்டு வேகமாக மேடை நோக்கி நகர்ந்தான்.

அதே சமயம் தலைமை விஞ்ஞானி விருதை வாங்கி நீட்ட, அதைப் பெற்றுக் கொள்ள விஞ்ஞானி நந்தகோபால் எழுந்து மேடையில் முன் வந்தார்.

மூன்று வீடியோ கேமிராக்கள் அவரை நோக்கித் திரும்பியிருக்க, மேடையின் வலது புறம் இருந்த கேமிரா மட்டும் ஆனந்தின் நடையையே தொடர்ந்து கண்காணிப்பதை ஆனந்த் கவனித்தான்.

அவனுக்கு சரேல் என்று விஷயம் புரிந்தது. நந்தகோபாலை அவன் சுடும்போது வீடியோ தெள்ளத் தெளிவாக அதை பதிவு செய்து விடும்.

நந்தகோபால் விருது வாங்கும் காட்சியைப் படம் எடுக்க புகைப்படக்காரர்களும் நெருக்கமாக வரத் துவங்க, மேடையின் கீழே பதினைந்து போ்கள் சூழ்ந்து விட்டார்கள்.

''நந்தகோபால்!'' என்று ஆனந்த் திடீரென்று அலறினான்.

மேடையில் இருந்த அத்தனை பேரும் திடுக்கிட்டுத் திரும்பினார்கள்.



அரங்கமே ஸ்தம்பித்தது.

ஆனந்த் துப்பாக்கியை எடுத்தான். தனக்கு நெருக்கமாக இருந்தவர்களை விலகச் சொல்லி சைகை செய்தான்.

தன் எச்சரிக்கையைப் படித்து அந்த பத்திரிகையாளர் நடவடிக்கை எடுக்க சற்று நேரம் தர வேண்டும் என்பதால் தன் உரையாடலை வளர்க்க விரும்பினான்.

''நந்தகோபால்... என்னைத் தெரிகிறதா? ஏப்ரல் பத்தாம் தேதி என் ஆராய்ச்சியை கேலி செய்து அத்தனை பேர் மத்தியிலும் அவமானப்படுத்தினாயே... நினைவிருக்கிறதா? என் ஆராய்ச்சி என்றால் கேலி, உன் ஆராய்ச்சி என்றால் நோபல் பரிசா?''

நந்தகோபாலின் அருகில் இந்த விஞ்ஞானிகள் அச்சத்துடன் இரண்டடி பின் நகர, நந்தகோபால் உலர்ந்து போன உதடுகளை நாவால் ஈரம் செய்து கொண்டார்.

''தம்பி உன் பெயர் என்ன?''

''ஆனந்த்!''

''ஆனந்த்! துப்பாக்கியை முதலில் கீழே போடு நம் விஷயங்களை விரிவாகத் தெளிவாகப் பிறகு பேசுவோம்."

செக்யூரிட்டி ஆட்கள் தடதடவென்று படிகளில் ஓடி வருவது கேட்டது.

''நோ, இப்போதே!'' என்றான், ஆனந்த். ''இங்கேயே! என் ஆராய்ச்சிகளை நீங்கள் ஏற்றுக் கொள்ளவில்லையென்றால் எனக்கு வேறு வழி இல்லை. டிஷ்யூம்...''

''உன் தவறான ஆராய்ச்சியை எப்படியப்பா...''

ஆனந்த் அதற்கு மேலும் தாமதிக்க விரும்பாமல், துப்பாக்கியை உயர்த்தி, விசையை இழுத்தான்.

டப் என்ற சத்தம் புகை!

நந்தகோபால் மார்பைப் பிடித்துக் கொண்டு அப்படியே பின்புறம் சரிந்தார்.

ஆனந்த் மறுபடி சுட்டான்.

நந்தகோபால் மெல்லிய துள்ளலுடன் மேடையில் பரவினார்.

ஆனந்த் சரேலெனத் திரும்பிப் பார்த்தான்.

அவன் எதிர்பார்த்தபடியே தான் நடந்திருந்தது.

கடைசியாக காலியாக இருந்த வரிசைகளின் மத்தியில் இருந்த நாற்காலியில் இருந்து அமர் துப்பாக்கியுடன் எழுந்தான்.

ஆனந்த் இங்கே டம்மித் துப்பாக்கியால் சுட்ட அதே நேரம் அவன் உயரத்திலிருந்து நிஜத் துப்பாக்கியால் சுட்டு விட்டான் என்பது புரிந்தது.

நந்தகோபால் கீழே சரிந்ததும், அரங்கமே அலறிக் கொண்டு எழுந்தது. வாசல் நோக்கி அனைவரும் ஒரே சமயத்தில் ஓடப் பார்க்க, திமுதிமுவென்று குழப்பம்.

அமர் அத்தனை பேரையும் விலக்கிக் கொண்டு கீழே ஓடி வந்தான். திகைத்திருந்த கூட்டம் அவனை ஆட்சேபிக்கவில்லை.

''பிடியுங்கள்... அவனைப் பிடியுங்கள்'' என்று கத்திக் கொண்டே, ஆனந்தின் மீது பாய்ந்தான். பாய்ந்து அவனை உருட்டித் தள்ளிப் புரண்டு எழுந்தான்.

அப்படி எழுந்தபோது, ஆனந்தின் கையிலிருந்த டம்மித் துப்பாக்கி அவனால் சாதுர்யமாகப் பிடுங்கப்பட்டு அவனுடைய பாண்ட் பாக்கெட்டிற்குள் போய் விட்டது.



நந்தகோபாலைச் சுட்ட உண்மையான துப்பாக்கி, கீழே கிடந்தது.

ஒரு பத்திரிகையாளர் துப்பாக்கியை அள்ளக் குனிய,

''நோ!'' என்று அலறினான், அமர். ''அதைத் தொடாதீர்கள். அதில் கொலைகாரனின் கைரேகைகள் இருக்கும்.''

சுரீர் என்று ஆனந்திற்குப் புரிந்து விட்டது.

எவ்வளவு அழகாக அவன் முட்டாளடிக்கப்பட்டு விட்டான்.

காலையில் இந்த உண்மையான துப்பாக்கியை அவனிடம் கொடுத்து தோட்டாக்களை நிரப்பச் சொன்ன போதே, அமர் தீர்மானித்திருக்க வேண்டும். துப்பாக்கி மட்டுமல்ல, தோட்டாக்களிலும் ஆனந்தின் கைரேகைகள் தான் இருக்கும்.

இப்போது அந்தத் துப்பாக்கியை அமர் பிரயோகித்த போது, அந்த கைரேகைகள் அழியாத வண்ணம் தன் கைகளில் நிச்சயம் கண்ணுக்குப் புலப்படாத மெல்லிய கையுறை அணிந்திருப்பான்.

இதோ செக்யூரிட்டி ஆட்கள் நெருங்கி விட்டார்கள்.

ஆனந்த் சுட்டதற்கு அரங்கமே சாட்சி.

போதாதற்கு ஒரு வீடியோ கேமிரா வெகு விசுவாசமாக அவன் துப்பாக்கியை எடுத்தது. சுட்டது எல்லாக் காட்சிகளையும் பதிவு செய்திருக்கிறது.

ஆனந்த் கீழே பார்த்தான்.

இரண்டு தோட்டாக்கள் மட்டுமே துப்பி விட்டு மிச்சம் நான்கு தோட்டாக்களுடன் அபாயகரமாய்க் கிடக்கும் நிஜத் துப்பாக்கி.

வெகு அருகே கள்ளத்தனமும், கயமைத்தனமும் நிறைந்த அமர்.

நெருங்கி வந்து விட்ட காவலர்கள்.

ஆனந்த் தீர்மானித்தான்!



## 9

ஆனந்த் மின்னல் வேகத்தில் குனிந்தான். நிமிர்ந்தான். அவன் கையில் அமர் பயன்படுத்திய நிஜத் துப்பாக்கி வந்து விட்டது. அதன் ஸேப்ட்டி கேட்சை விடுவித்து அவன் அமரை அருகே இழுத்து அவன் நெற்றியில் துப்பாக்கியை பதித்தான்.

தொண்டை நரம்பு புடைக்கக் கத்தினான்.

''எல்லோரும் விலகுங்கள்... என்னை யாராவது நெருங்கினால் இவனை சுட்டு விடுவேன்...''

கூட்டம் கல் எறியப்பட்ட நீர்ப் பரப்பு போல் சுழித்து வட்டத்தைப் பெரிதாக்கியது. செக்யூரிட்டி ஆட்கள் துப்பாக்கிகளை விறைப்பாகப் பிடித்து நின்றார்கள்.

அமர் திகைத்துப் போய் ஆனந்தைப் பார்த்தான். இந்த செயலை அவன் சற்றும் எதிர்பார்த்திருக்கவில்லை.

''நீ... நீ...''

''இது நிஜத் துப்பாக்கி அமர்... அசையாதே...''

அமர் அதிர்ந்து நின்றான். ஆனந்த் துப்பாக்கி பிடித்திருந்த விதத்தில் அவனுக்குக் காலையில் தரப்பட்ட பயிற்சிகள் கவனம் இருந்தது.

''ஹலோ... போலீஸ்!'' என்றான், ஆனந்த் குரலை உயர்த்தி, ''இவன் பெயர் அமர், இவன்தான் விஞ்ஞா



னியை சுட்டான். இவனை நான் உங்களிடம் உயிரோடு ஒப்படைக்க வேண்டும் என்றால், நான் சொல்வதைக் கேளுங்கள்...''

ஆனந்த் அமரைப் பிடித்து அப்படியே பின்புறம் தள்ளி சுவர் அருகே கொண்டு போனான்.

இப்போது மேடையில் மும்பை போலீஸ் தலைகள் தோன்றின.

ஒரு போலீஸ் அதிகாரி விறைப்பாக நடந்து மைக்கைப் பிடித்தார்.

''ஆனந்த்...!'' என்றார், குரல் எல்லா ஸ்பீக்கர்களிலும் அதிர்ந்தது. ''கவலைப்படாதே... உன் மீது குற்றம் இல்லை... உண்மையான குற்றவாளியை எங்களிடம் ஒப்படைத்து விடு...''

''நோ!'' ஆனந்த் அமரை நெருங்கினான். ''அமர்! முதலில் மதுக்கரைக் கூப்பிடு. உன் ஆட்களைக் கூப்பிடு. அவர்கள் உடனடியாக இங்கே சரணடைய வேண்டும். என் ப்ரியாவை என்னிடம் பத்திரமாகத் திருப்பித் தர வேண்டும். அவள் மீது தூசு பட்டால் கூட உன் உயிர் உன்னிடம் இருக்காது. கூப்பிடு... கமான்...''

துப்பாக்கி அவனுடைய கன்னத்து சருமத்தை அழுத்த, அமரின் கண்கள் பெரிதாக விரிந்தன.

''மதுக்கர்... வா..'' என்று அலறினான்.

கூட்டத்திலிருந்து மதுக்கர் மட்டும் உள்ளே அடி யெடுத்து வைத்தான்.

''மற்றவர்கள் எங்கே?'' ஆனந்த் உறுமினான்.

''ஓடிவிட்டார்கள்...'' மதுக்கர் பிரமித்துப் பார்த்தான்.

''அமர்... என் ப்ரியாவுடன் நான் பேச வேண்டும். ஐந்து நிமிடத்துக்கு ஒரு தடவை அவள் பத்திரம் பற்றி நான் அவளிடம் கேட்பேன், அதற்கு வழி செய்...''

''மதுக்கர்... ஸெல்லுலாரில் நம்பர் போட்டு ஆனந்திடம் கொடு'' என்றான், அமர் பதட்டமாக.

போன் கைக்கு வந்தது. கவனத்தை அமரிடமிருந்து நகர்த்தாமல் ஆனந்த் துப்பாக்கியை அழுத்தியபடி ப்ரியாவிடம் பேசினான்.

''ப்ரியா... கவலைப்படாதே... உன்னை அழைத்துப் போக நான் வருகிறேன்... உன்னை யார் மிரட்டினாலும், அவர்களுடைய தலைவன் அமர் என் துப்பாக்கி முனையில் இருக்கிறான் என்று சொல்... யெஸ்... ஆமாம். வந்து கொண்டேயிருக்கிறோம்...''

ஸெல்லுலாரை பாக்கெட்டில் வைத்தான்.

''ஆனந்த்!'' போலீஸ் அதிகாரியின் குரல் கெஞ்சலாக வந்தது. ''அமரை நீ எங்களிடம் ஒப்படைத்துவிடு... உன் காதலியை மீட்டுத் தருவது எங்கள் பொறுப்பு...''

''மாட்டேன் போலீஸின் கைக்குள் வந்து விட்டால் அமரின் பயம் போய்விடும்... நீங்கள் அவனை சுட மாட்டீர்கள் என்று அவனுக்குத் தெரியும்... ப்ரியாவை பணயக் கைதியாக்கி, அவனை உங்களிடமிருந்து அவர்கள் மீட்டு விடுவார்கள். ப்ரியா என்னிடம் வந்து சேரும் வரைக்கும் அமர் என் பொறுப்பில்தான் இருக்க வேண்டும்...''

போலீஸ் அதிகாரி தன் பூட்ஸ் காலை மேடையில் உதைத்து தன் அதிருப்தியைத் தெரிவித்தார்.

''எவ்வளவோ புத்திசாலித்தனமாக நடந்து கொண்ட நீ இப்போது அடம் பிடிக்கிறாய்...''



''என்ன புத்திசாலித்தனம்!'' என்றான் ஆனந்த், வெறுப்பாக, ''விஞ்ஞானியைக் காப்பாற்ற முடியவில்லையே... காவு கொடுத்து விட்டேனே...''

''நோ! விஞ்ஞானி நந்தகோபால் சாகவில்லை... சார்... நீங்கள் எழுந்திருக்கலாம்...''

போலீஸ் படை சூழ்ந்து நிற்க, மேடையில் கிடந்த நந்தகோபால் மெல்லக் கை ஊன்றி நிமிர்ந்தார். அவருடைய கோட்டில் மார்புப் பகுதியில் இரண்டு பொத்தல்கள். பொசுக்கப்பட்ட பொத்தல்கள்.

கூட்டம் மொத்தமும் 'ஆ' என்றது.

அமர் தளர்ந்தான்.

''ஆனந்த் செய்த புத்திசாலித்தனம்தான்...'' என்றார் அதிகாரி மைக்கில். ''தன் அருகில் இருந்த அகில்ராஜ் என்பவரிடம் அவன் தமிழில் தகவல் தந்தான். அகில்ராஜ் தகவலைப் படித்த பின் அமர் பக்கத்தில் இருந்ததால், தகவல் தனக்குப் புரியவில்லை என்பது போல் நடித்தார். ஆனால் உடனேயே ஸெல்லுலாரில் கூப்பிட்டு நந்தகோபாலுடன் பேசினார்.

''ஆமாம்'' என்றார் அகில்ராஜ் புன்னகையுடன், ''ஆனந்த் என் பக்கத்தில் உட்கார்ந்தபோது கோட் விலகி இடுப்பில் செருகியிருந்த துப்பாக்கியின் முனை தெரிந்தது. அதனால் துப்பாக்கி மூலம்தான் நந்தகோபாலுக்கு ஆபத்து என்று புரிந்தது. அதை அவரிடம் சொன்னேன்...''

''பாதுகாப்புக்கு வந்திருந்த மும்பை போலீஸிடம் நந்தகோபால் உடனடியாக இதைத் தெரிவித்தார். ஆனால் அப்போது வந்து அமரை மடக்கினால், ஏதாவது அசம்பாவிதங்கள் நடக்கும். அவனுடைய கூட்டாளிகள் பிடிபடா

மல் தப்பித்து விடலாம் என்பதால் இந்த நாடகத்தை நாங்கள் தயார் செய்தோம்... புல்லட் துளைக்க முடியாத புல்லட் ப்ரூஃப் உடையை அணிவித்து அதன் மீது சட்டையும் கோட்டும் போட்டு மூடி அனுப்ப நேரமான தால்தான் விழாவின் துவக்கத்தில் நந்தகோபால் தாமத மாக வந்து சேர்ந்தார்... யாரும் தப்பித்துப் போக முடியாத படி வெளியே மும்பை போலீஸ் சூழ்ந்ததும் அப்புறம் தான்... நாங்கள் சொல்லும் வரை எழுந்திருக்க வேண்டாம் என்று நந்தகோபாலை நாங்கள் தான் எச்சரித்திருந்தோம்...'' போலீஸ் அதிகாரி ஆனந்தின் பக்கம் கை காட்டினார். ''இன்று நந்தகோபால் உயிருடன் இருக்கிறார் என்றால் ஆனந்த்தான் அதற்குக் காரணம். ஆனால் இப்போது பிடிவாதம் பிடிக்கிறார்.''

''உங்களுக்கு இவர்களைப் பற்றித் தெரியாது. ஆபீஸர்... என்னிடம் விஷயம் கேட்டுக் கொண்டார் என்பதற்காக எனக்குப் பக்கத்தில் உட்கார்ந்திருந்த விஞ்ஞானி ஆகாஷை மதுக்கர் இரக்கமில்லாமல் தீர்த்துக் கட்டினான். டாய்லட்டில் ஒரு கப்போர்டு மீது ரத்தம் இழந்து அவர் கிடக்கிறார். அதே கதி என் ப்ரியாவுக்கு நேர நான் விட மாட்டேன். ஸாரி... ப்ரியா என்னிடம் வந்ததும், இவனை ஒப்படைப்பேன்... அதற்கு முன் கிடையாது. கிடையாது, கிடையாது...''

இரண்டு கான்ஸ்டபிள்கள் இப்போது டாய்லெட்டை நோக்கி ஓடினார்கள்.

''ஆபீஸர், நான் சுடுவதை இம்மி பிசகாமல் வீடியோ எடுத்தவரையும் பிடியுங்கள்... அமர் உள்ளே வந்ததும் வீடியோவை அவர் அணைத்து விட்டார்... அவரும் அமரின் கையாள்தான்... அதே போல் வாசலில் நின்



றிருந்த செக்யூரிட்டி ஆட்களிலும் அமரின் ஆட்கள் இருக் கிறார்கள். இல்லாவிட்டால் இரண்டு துப்பாக்கிகளை எப்படி உள்ளே கொண்டு வந்திருக்க முடியும்?''

''சரி; ஆனந்த்... ப்ரியாவை இங்கே கொண்டு வரச் சொல்வோம்.. ப்ரியா வந்ததும், நீ அமரை ஒப்படை...''

''இல்லை... எங்களை ஒளித்து வைத்த இடத்தையும் நான் போலீஸிற்குத் தெரிவிக்க விரும்புகிறேன்'' என்றான் ஆனந்த். ''என் திட்டத்தை மாற்றாதீர்கள்... குழப்பாதீர்கள், நான், அமர், மதுக்கர் மூவரும் மட்டும் காரில் போகி றோம்... போலீஸ் அதற்கு முதலில் வழி செய்யட்டும்...''

வீடியோ கிராபர் மடக்கப்பட்டான். இன்னும் அங்கேயே ஒன்றிரண்டு பேர் தப்பிக்க பார்த்து மடக்கப்பட்டார்கள்.

போலீஸ் அறிவிப்புக்கு மேல் அறிவிப்பாக செய்தது. கூட்டத்தை அமைதிப்படுத்தியது. ஆனந்த் கேட்டபடி வழி செய்து கொடுத்தது.

அவர்களுடைய மாருதி வேன்.

டிரைவர் இருக்கையில் மதுக்கர்.

பின் இருக்கையில் துப்பாக்கி முனையில் அமர். அவனை மிரட்டும் ஆனந்த்.

''போலீஸ் எங்களைத் தொடர வேண்டாம்... ஏதாவது சாத்தியமாகச் செய்வதாக நினைத்து குழப்ப வேண்டாம்...'' என்றான் ஆனந்த்.

வேன் சீறிப் புறப்பட்டது.

''மதுக்கர்... நான் இரக்கமில்லாதவனாகி விட்டேன்... ஒரு உயிரை காலையில் நீ எவ்வளவு அலட்சியமாகத்

தீர்த்துக் கட்டினாய்... அந்த அலட்சியம் இப்போது எனக்கும் வந்து விட்டது. அதனால், ஒழுங்காக வேனை ஓட்டு... அமர் மீது உனக்குப் பிரியம் இருந்தால், முட்டாள் தனமாக எதுவும் செய்யாதே...''

மதுக்கர் அவனைத் திருப்பி முறைத்து விட்டு வேனை செலுத்தினான்.



## 10

ஆனந்தின் விரல் வலித்தது. துப்பாக்கி விசையில் வெகு நேரம் வைத்திருந்ததால் அந்த விரலின் நரம்பும் தசையும் கெஞ்சின. ஆனால் அவன் பிடிப்பை தளர விடவில்லை. துப்பாக்கியை இன்னும் சற்றே அழுத்தினான்.

வேன் எங்கே போகிறது என்று மும்பைப் போக்கு வரத்தை கவனிக்க வேண்டும் என்று ஒருபுறம் துடிப்பாக இருந்தாலும் அமரை விட்டு பார்வையை நகர்த்தவும் யோசனையாய் இருந்தது.

நந்தகோபால் உயிருடன் எழுந்து நின்ற காட்சி மறுபடி மறுபடி மனதில் வந்து நின்றது. அவனுக்கு ஆச்சரிய மாகயிருந்தது. ஒரு தேர்ந்த விஞ்ஞானியால் இப்படி தத்ரூபமாக நடிக்கக் கூட முடியுமா? சுடப் போகிறார்கள் என்று தெரிந்தும் தைரியமாக மேடையேறி வர முடிந் ததா?

அவர் மீது என்னென்னவோ கோபம் இருந்தாலும், எல்லாம் இப்போது சரியாகி விட்டது போல் இருந்தது.



''அமர்.. நீ யார்? விஞ்ஞானி நந்தகோபாலைக் கொல்லுவதால் உனக்கென்ன லாபம்?''

''நீ போலீஸ் இல்லை... உன் கேள்விகளுக்கு பதில் சொல்ல வேண்டிய அவசியம் இல்லை...'' அமர் உறுமி னான்.

''அவசியம் இருக்கிறதோ இல்லையோ, அவசரம் இருக் கிறது. துப்பாக்கியின் மறுமுனையில் நான் இருக்கிறேன் என்பதை மறந்து விடாதே...''

அமர் அவனை ஆழமாக முறைத்தான்.

''நந்தகோபால் ஒத்துழைக்க மறுத்தார்...''

''எதற்கு?''

''அவருடைய கண்டுபிடிப்பை இந்தியாவிற்குத்தான் கொடுப்பேன் என்று அடம் பிடித்தார். இந்தியாவில் சட்டம் போட்ட ஒரு சான்றிதழும், ஐநூறு ரூபாய் காசோலையும் கொடுப்பார்கள். வேறென்ன கிடைக்கும் இங்கே? கோடி கோடியாய், கொட்டித் தர அமெரிக்கா தயாராயிருந்தது. மறுத்து விட்டார். இந்த ஆராய்ச்சி முடிவுகள் முழுவதும் அவருடைய நெருக்கமான உதவி யாளனுக்கு மட்டும் தெரியும்... அவனும் இந்தியா, தேசப் பற்று என்று என்னவோ கதை விட்டான். இன்றைக்கு அரங்கத்தில் அவர் ஆராய்ச்சி பற்றி பேசும் முன் அவரைத் தீர்த்து விட்டால், உயிருக்கு பயந்து அவருடைய உதவியாளன் எங்களிடம் உண்மைகளைச் சொல்லி விடுவான். ஆராய்ச்சி முடிவுகள் எங்கள் கைக்கு வந்து விடும்... அப்படியே இல்லையென்றாலும், அந்த

ஆராய்ச்சியின் சில முக்கியமான விவரங்கள் நந்தகோபாலோடு அழிந்து போகும்.. அமெரிக்காவை விட இந்தியா வலுவானதாக மாற முடியாமல் போகும்... அது போதும்...''

''நீ ஒரு இந்தியன்!''

''இல்லை... நான் ஒரு வியாபாரி...''

''நந்தகோபாலை சுடுவதற்கு வேறு இடம் கிடைக்கவில்லையா?''

''கிடைக்கும். ஆனால் அவருடைய ஆராய்ச்சி முடிவுகளுக்காக அவரைக் கொன்று விட்டார்கள் என்ற சந்தேகம் யாருக்கும் வந்துவிடக் கூடாது என்பதில் கவனமாக இருந்தோம். இது தனிப்பட்ட பகையின் காரணமாக நிகழ்ந்த ஒரு விபத்தாகத் தோன்ற வேண்டும் என்று முடிவு செய்தோம்... அவருடைய வாழ்க்கையில் அவருக்கு எதிரியாகக் கூடியவர்களைத் தேடினோம். உன்னைப் பற்றிய விவரங்கள் கிடைத்தன... உன்னை எப்படி சம்மதிக்க வைப்பது என்பது பற்றி யோசித்துக் கொண்டிருந்த போது, நீ மிக சௌகர்யமாக மும்பைக்கு வந்து சேர்ந்தாய்... அதுவும் காதலியுடன்! நேரே எங்களிடம் வந்து சிக்கினாய்... இன்னும் ஒன்றிரண்டு நாள் முன்னதாக வந்திருந்தால், உனக்கு இன்னும் கூடுதலாகப் பயிற்சி கொடுத்திருக்கலாம்...''

''அமர்'' மதுக்கர் அழைத்தான்... ''ஆனந்தின் கண்கள் கட்டப்படவில்லையே... நம் இருப்பிடம் அவனுக்குத் தெரிந்தால், பரவாயில்லையா?''

''முட்டாள்!'' அமர் வெடித்தான். ''துப்பாக்கி இருப்பது அவன் கையில், கண்களை மூடிக் கொள்ள அவன்



சம்மதிப்பானா? போ... நேரே ப்ரியாவை ஒளித்து வைத்திருக்கும் இடத்திற்குப் பா...''

அந்த உரையாடலில் ஆர்வமற்று ஆனந்த் காருக்கு வெளியே கவனத்தை செலுத்துவான் என்று அவர்கள் எதிர்பார்த்திருந்ததால், ஏமாந்தார்கள் ஆனந்த் அசையாமல் அமரை வெறித்தான்.

வேன் சில திருப்பங்களுக்குப் பிறகு நிறுத்தத்திற்கு வந்தது. ஒரு கேட் திறந்து உள்ளே போனது.

''இறங்கலாம்'' என்றான் மதுக்கர்.

''ஒவ்வொருவராக'' என்றான் ஆனந்த்.

அந்தக் கட்டிடம் சிறியதாய் இருந்தது. இரண்டு மாடிகள் இருந்தன. பழமையான சுவர்கள். இற்று விடும் போல் ஜன்னல் கதவுகள்.

''இங்கா?'' ஆனந்த் கேட்டான்.

''இப்போது ப்ரியா இங்கேதான் இருக்கிறாள். வா...''

மதுக்கர் முன்னால் நடந்தான். கதவை சங்கேத முறையில் தட்டினான்.

உள்ளே தாள் விலகும் ஓசை கேட்டது.

துப்பாக்கி ஏந்திய ஒருத்தன கதவைத் திறந்தான்.

அமரின் கன்னத்தில் பதிந்திருந்த துப்பாக்கி பார்த்து அதிர்ந்தான்.

''போ... போய் ப்ரியாவை வெளியே கூட்டி வா...'' என்றான், மதுக்கர்.

அவர்கள் உள்ளே நுழைந்தார்கள்.

கதவை காலால் சாத்தினான் மதுக்கர்.

ஹால் பழமையாக ஆறு தூண்களின் உயரத்தில் நின்றிருந்தது. ஹாலிலிருந்தே படிகள் ஏறி மாடிக்குச் சென்றன. இந்த வீட்டிலா அவர்கள் கட்டிப் போடப்பட்டார்கள்?

ஹாலின் மையத்திற்கு அமரைத் தள்ளிச் சென்ற ஆனந்த் அங்கிருந்த படிகளைப் பார்த்தான்.

சற்று நேரத்தில் படிகளில் பெண்களின் பாதங்கள் ஒலித்தன.

ஆனந்த் நிமிரவில்லை. அமர் மீது கவனமாயிருந்தான்.

கடைசிப் படிகளில் ப்ரியா இறங்கும்போது தான் அவளைப் பார்த்தான்.

''ஆனந்த்!'' ப்ரியாவின் குரல் க்ரீச்சிட்டது. ''நீ எப்படி...?''

''ப்ரியா... தைரியமாகச் சொல்... இவர்கள் உன்னை ஒன்றும் பண்ணவில்லையே...?''

ப்ரியா பயந்த விழிகளால் அங்கிருந்த நான்கு தடியன்களையும் மாறி மாறிப் பார்த்தாள்.

''இல்லை... உன்னிடமிருந்து போன் வந்ததும் என் புடவையைத் திருப்பித் தந்தார்கள்... யாரும் என்னைத் தொடவில்லை...''

''குட்... இந்த பக்கம் வந்துவிடு...''

''வெயிட்...'' மதுக்கர் குறுக்கில் புகுந்து அவளை இழுத்துப் பிடித்தான். ஒரு சின்ன அசைவில் அவன் கையில் ஒரு கத்தி, அதை ப்ரியாவின் கழுத்தில் பதித்தான். ப்ரியா க்ரீச்சிட்டாள்.

''அமரை முதலில் விடுவி...''



''ஈஸி... ஈஸி...'' என்றான் அமர். ''டென்ஷனில் யாரும் யாரையும் காயப்படுத்தி விடாதீர்கள்... என்னை ஆனந்த் விடுவிக்கும் அதே நேரத்தில் ப்ரியாவை நீயும் அனுப்பு...''

''அப்படியானால் அது இந்த வீட்டிற்குள் வேண்டாம்'' என்றான் ஆனந்த்.

''வாட் டூ யூ மீன்?''

''அமரை நான் விடுவித்து விட்டு, பூட்டிய வீட்டிற்குள் ஆறு முரடர்களுக்கு நடுவில் ஒற்றைத் துப்பாக்கியால் என்னால் எதுவும் செய்ய முடியாது என்று எனக்குத் தெரியும்...''

''நீ ப்ரியாவை அழைத்துக் கொண்டு வெளியேறலாம்...''

''நோ... அமரையும் ப்ரியாவையும் நாம் மாற்றிக் கொள்வதே வீட்டிற்கு வெளியே நடக்கட்டும்... காரை விட்டு நடந்து வந்தோமே, அந்த கான்கிரீட் தளத்தில் ஆட்களை மாற்றிக் கொள்வோம்.''

''ஆனந்த் நீ அநாவசியத்திற்கு பயப்படுகிறாய்...''

''இல்லை, முன்னெச்சரிக்கையாய் இருக்கிறேன்.''

''செய்...'' என்றான் அமர்.

ப்ரியாவுடன் மதுக்கரும், அமருடன் ஆனந்தும் நடந்தார்கள்.

''இன்னொரு விஷயம்'' என்றான், ஆனந்த். ''வீட்டிற்கு வெளியே நாம் அடியெடுத்து வைக்கும்போது, நம்மைத் தவிர வேறு யாரும் வெளியே வரக்கூடாது. உன் அடியாட்கள் வீட்டிற்குள்ளேயே இருக்க வேண்டும். அவர்களை வைத்து கதவை வெளியே தாளிட வேண்டும்...''

அமர் நின்றான். "நீ ரொம்ப புத்திசாலி..." என்றான்.

"சதிகாரர்களுடன் உறவாடும் போது அதிக புத்திசாலித் தனம் தேவைப்படுகிறது..."

"வேறு வழியில்லை... ஆனந்த் சொல்கிறபடி செய்..." என்றான் அமர்.

அவர்கள் நால்வரும் வெளியே வந்ததும் மதுக்கர் கதவைச் சாத்தி வெளியே தாளிட்டான்.

ஆனந்த் அமரைத் தள்ளிக் கொண்டு கார் அருகே போனான்.

"உனக்குக் கார் வேண்டுமா?" என்று கேட்டான் அமர்.

"நீயும், ப்ரியாவும் காரை எடுத்துப் போங்கள்... ஆனால் இந்த இடத்தை மட்டும் போலீஸிற்குக் காட்டிக் கொடுக் காதே."

ஆனந்த் முகத்தில் மலர்ச்சி வந்தது.

அவனே காரைக் கேட்க வேண்டும் என்று நினைத் திருந்தான். அமர் தானாகவே அதைத் தருகிறான்.

மதுக்கர் ப்ரியாவை முன்னே தள்ளினான்.

ஆனந்த் அமரை முன்னே அனுப்பினான்.

இருவரும் கான்கிரீட் பாதையில் அருகே கிடந்தனர். ப்ரியா அவனை நெருங்கியதும் அப்படியே நெஞ்சில் சாய்ந்தாள். அழுகை பீறிட்டது.

ஆனந்த் துப்பாக்கியின் குறியை அமர் பக்கம் வைத்திருந்தான்.

"ப்ரியா காரில் ஏறு... நீதான் வண்டி ஓட்டப் போகிறாய்."

மதுக்கர் கேட்களைத் திறந்தான். ப்ரியா மாருதி வேனில் ஏறினாள். கதவு திறந்து விட்டாள்.



ஆனந்த் மறுபக்கம் ஏறினான்.

வேன் புறப்பட்டது.

கேட் அருகே மதுக்கர் கையசைத்து நிறுத்தினான்.

"தோஸ்த், என் கையில் என்ன என்று பார்த்தாயா?"

"ரிமோட் கண்ட்ரோல்..." என்றான் ஆனந்த்.

"வேனில் ஒரு வெடிகுண்டு இருக்கிறது. எங்கள் காரை இன்னொருத்தன் எடுத்து விடக் கூடாதே என்பதற்காக வைக்கப்பட்ட வெடிகுண்டு. இதோ இந்த பொத்தானை அழுத்தி விட்டேன். இப்போது வெடிகுண்டு தயாராகி விட்டது. இனிமேல் காரில் எந்தக் கதவைத் திறந்தாலும் குண்டு வெடிக்கும்..."

"யூ... யூ..."

"அவசரப்பட்டு விடாதே... நான் கோபப்பட்டு இந்தப் பொத்தானை அழுத்தி விட்டால், கதவைத் திறக்காம லேயே வெடித்து விடும்..."

ப்ரியா அலறினாள். பயத்தில் கதவைத் திறந்து வெளியே குதிக்க நினைத்து கைப்பிடியில் கை வைத்தாள். ஆனந்த் அவளை இழுத்துப் பிடித்தான்.

"அவசரம் ஆபத்தானது" என்றான். "காரைக் கிளப்பு... கதவைத் திறக்காமல் வெளியேற நூறு வழி இருக்கிறது."

"ஐயோ... என்னால் ஓட்ட முடியாது..."

"ப்ரியா!" ஆனந்த் அதட்டினான். "சொன்னதைச் செய்..."

டிஷ்யூங் என்று துப்பாக்கி வெடித்தது.

மதுக்கர் கையில் இருந்த ரிமோட் எகிறிப் போனது.

அமர் மிரண்டு நிமிர, காம்பவுண்டு சுவரின் மீது மும்பை போலீஸ்! மதுக்கரும், அமரும் கைகளை உயர்த்தினர்.

''ஆனந்த் உன் அதிர்ஷ்டம் ஒவ்வொரு முறையும் இப்படியே ஆகிறது... துப்பாக்கியை நீ வைத்திருக்கிறாய்... ஆனால் வேறு யாரோ சுடுகிறார்கள்...'' என்று குரல் வந்தது.

போலீஸ் அதிகாரி!

ஆனந்த் துப்பாக்கியைத் திருப்பிப் பிடித்து முன்புறக் கண்ணாடியை உடைத்தான்.

''ஏன்?'' என்றார் அதிகாரி.

''கதவைத் திறந்தால் வெடிக்கும் வெடிகுண்டு வைத்திருக்கிறார்கள், இந்தக் காரில்!''

''மை காட்!''

போலீஸ்காரர்களின் உதவியோடு முதலில் ப்ரியாவும், அடுத்தது ஆனந்தும் முன்புறம் இறங்கினார்கள்.

''நந்தகோபாலை நீ ஏன் கொல்ல நினைத்தாய் அமர்?''

''விவரங்களையெல்லாம் நான் தருகிறேன்'' என்றான் ஆனந்த், ப்ரியாவை அருகில் இழுத்துக் கொண்டு.

துப்பாக்கியைத் திருப்பி பிடித்து அவரிடம் நீட்டினான்.

''யூ ஆர் வெரி ஸ்மார்ட் ஆனந்த்!''



## 11

செப்டம்பர் 13, ஞாயிறு

மேகங்களுக்கு மேலே விமானம் பறந்து கொண்டிருந்தது.



ஜன்னல் கண்ணாடியில் முகம் புதைத்து வெளியே பார்த்துக் கொண்டிருந்த ப்ரியாவின் கண்களில் ஏக்கத்தின் நிழல்.

''ஸாரிடா ப்ரியா...'' என்றான் ஆனந்த். ''ரகசியமா இருக்கணும்னு நாம நெனச்சது இன்னிக்கு இந்தியா பூரா ஃப்ளாஷ் ஆயிருச்சி... ஒரு விதத்துல நல்லதுதான்னு வச்சிக்க... உங்கப்பாவை எப்படி மீட் பண்ணி விஷயத்தைச் சொல்றதுன்னு பயந்திட்டிருந்தேன். இண்டியன் எக்ஸ்பிரஸ் படிச்சே நம்ம லவ் பத்தி இந்நேரம் அவருக்குத் தெரிஞ்சு போயிருக்கும்.''

ப்ரியா அவன் கையை இழுத்து மடியில் அழுத்திக் கொண்டாள். ''மும்பையை நெனைச்சாலே உடம்பு உதறுது...''

''டோண்ட் ஒர்ரி... இந்த வாட்டி மும்பை மிஸ் ஆயிருச்சி... ஆனா ஹனிமூனுக்கு நாம இங்கதான் வரோம்...''

ப்ரியா திடுக்கிட்டு நிமிர்ந்தாள்.

''வேணாம். வேணாம் வேணாம்... மும்பைக்குத்தான் நீ அழைச்சிட்டு வருவேன்னா, அந்தக் கல்யாணமே வேணாம்ப்பா...''

# உளவுக்காரி

1

சூரியனின் முதல் கிரணங்கள் கண்ணாடி ஜன்னலைத் தொட்டன. ஊடுருவின. கனமான மெத்தையில் ஒருக்களித்து படுத்திருந்த முகிலனை அடைந்தன.

அந்த சுளீர் வெளிச்சம் முகிலனின் இமைகளைத் தாண்டி அவன் விழிகளைத் தீண்டின.

முகிலன் படுக்கையில் அசைந்தான். விடை போட்டது போல் விழிகளைத் திறந்தான். உறங்கும் போது ஆழ்ந்து தூங்குவதற்கும், விழித்ததும் அடுத்த கணத்திற்குள் முற்றிலும் தூக்கத்தை உதறுவதற்கும் அவன் உடல் பயிற்சி பெற்றிருந்தது.



எழுந்தான். படுக்கை விரிப்பை முனையோடு முனை மடித்து விட்டு, பிரஷ்ஷை எடுத்தான்.

முகம் கழுவிக் கொண்டு அவன் அறைக் கதவைத் திறந்து வெளிப்பட்ட போது, 'குட் மார்னிங்' என்ற இனிமையான குரல் எதிர்கொண்டது.

சின்ன சிணுங்கலுடன் எவர்சில்வர் டம்ளரில் ஆவி பறக்கும் காபியுடன் வீணா அவனை நெருங்கினாள். முகத்தை சற்றே பக்கவாட்டில் திருப்பிக் காட்டினாள்.

முகிலன் அவள் கன்னத்தில் தன் இதழ்களைப் பதித்து எடுத்தான். காபியை அவளிடமிருந்து வாங்கிக் கொண்டான்.

''அய்யே.. முள் குத்துகிறது.. சீக்கிரம் ஷேவ் பண்ணித்தொலை..'' என்றாள், வீணா. அவன் கன்னத்தில் விரல் நுனிகளில் தட்டி.

''ஓஷோ மாதிரி தாடி வளர்த்த ஒருத்தன் உனக்கு புருஷனாக வந்து சேர்ந்தால் என்ன செய்வாய்?'' என்றான் முகிலன். அவன் கண்ணோரங்களில் குறும்பு ஒளிர்ந்தது.

''முதலில் என் அண்ணனிடம் போய் ஷேவ் பண்ணிக்கொண்டு வா என்று உன்னிடம் அனுப்பி விடுவேன்.''

சிரித்தபடி வீணா நகர்ந்தாள்.

முகிலனுக்கு மூச்சில் சந்தோஷம் ததும்பியது. பள்ளிக்கூட வயதைத் தாண்டியபிறகு வீணாவோடு ஒரு தடவை கூட சண்டை போட்டதாக நினைவு இல்லை. ஊரில் இருக்கும் நாட்களில் அவளுடைய முகத்தில் விழிப்பதும், அவள் கன்னங்களில் இதழ் பதிப்பதும் தவறியதே இல்லை.

''வயசுக்கு வந்த பொண்ணுடா அவ... அண்ணன் தங்கச்சியா இருந்தா கூட கன்னத்துல முத்தம் கொடுக்கறதுல்லாம் தேவையா?'' என்று ஒரு முறை - ஒரே ஒரு முறை அம்மா சற்று கவலையுடன் சொல்லிவிட்டு வாங்கிக் கட்டிக் கொண்டாள்.

''முகிலை ஏன் அம்மா ஆண்பிள்ளையாய் பார்க்கிறாய்? அவன் என் அண்ணன். அறுபது வயசானாலும் ஒருத்தருக்கொருத்தர் வெட்கமில்லாமல் முத்தம் கொடுத்துக் கொள்வோம். உனக்கு இந்த மாதிரி ஒரு அண்ணன் இல்லையே என்று வயிற்றெரிச்சல்.''

பூவிதழைப் போல மிருதுவாக இருக்கும் வீணாவின் சருமத்தை அவன் விரல்கள் தொடும் போது முகிலனுக்குக் கிளர்ச்சியாய் இருக்கும். ஒரு பெண்ணைத் தொடும் ஆணுக்கு எழும் கிளர்ச்சி இல்லை அது. பச்சைக் குழந்தையை முகர்ந்து பார்க்கும் தாய்க்கு எழும் கிளர்ச்சி.

முகிலன் சோபாவில் அமர்ந்து செய்தித்தாளைத் தொட்ட போது, அவனுடைய போன் ஒலிக்க ஆரம்பித்தது.

உள்ளங்கைக்குள் அடங்கும் செல்போன், எங்கிருந்து வருகிறது? பொத்தானை தொட்டான். மறுமுனையின் எண்கள் பளீரிட்டதும் விறைத்தான்.

தலைவர் அலுவலகம்.

''முகிலன் விறைப்பாக, குட் மார்னிங் சார்'' என்றான்.

''முப்பது நிமிடத்தில் உன்னை எதிர்பார்க்கிறேன்.''

அவ்வளவுதான். மறுமுனை ஓய்ந்தது.

முகிலன் பரபரப்பானான்.



''வீணா...'' என்று அலறினான்.

''என்ன முகில்?'' - வீணா ஓடி வந்தாள்.

''போன் வந்தது'' இன்னும் அரைமணியில் இருக்க வேண்டுமாம்...

''காபி?''

''நீ குடி.. ஷேவ் பண்ணி, குளித்து விட்டு வருவதற்குள் என் பெட்டியை ரெடி பண்ணு...''

''டிபன்?''

''நேரமிருந்தால்...'' என்று டவலை உருவி எடுத்துக் கொண்டவன் வீணாவைப் பார்த்துத் திரும்பினான்.

''மறக்காமல் குட்டிப் பிசாசையும் எடுத்து வை...'' என்றான்.

* * *

குட்டிப் பிசாசு என்று அண்ணன் எதைச் சொன்னான் என்று வீணாவிற்குத் தெரியும்.

முகிலனின் பிரத்யேக பீரோவைத் திறந்தாள். லாக்கரைத் திறந்ததும், லெதர் உறையோடு அந்தத் துப்பாக்கி.

அந்த ரிவால்வரை எப்படிக் கையாள வேண்டும் என்று முகிலன் அவளுக்கு சொல்லிக் கொடுத்திருந்தான். தோட்டாக்களைப் போடுவது எப்படி, வெளியே எடுப்பது எப்படி, பயன்படுத்தாதபோது வைத்திருப்பது எப்படி, எல்லாமே அவளுக்கு கற்றுக் கொடுத்திருந்தான்.

முகிலன் வெளியே போகும் ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் இதை எடுத்துப் போவதில்லை. அவசியம் என்று கருதினால் மட்டுமே எடுத்துப் போவான்.

அவனைத் தவிர அவன் பீரோவின் இந்த இரகசிய அறைகளைத் திறப்பதற்கு வீணாவிற்கு மட்டுமே அனுமதி இருந்தது. அவன் அம்மாவைக் கூட கிட்டே விட்டதில்லை.

பாரத தேசமெங்கும் நரம்புப் பின்னல்களாகப் பின்னிப் படர்ந்திருக்கும் முக்கியமான ரகசிய சர்வீஸில் முகிலன் முக்கிய பொறுப்பில் இருக்கிறான் என்பது வீணாவிற்கு மட்டும் தான் தெரியும்.

அவன் ஏதோ ஒரு அரசாங்க உத்யோகத்தில் இருக்கிறான் என்று தான் அம்மாவுக்கு சொல்லப்பட்டிருந்தது. அவனுடைய நிழல் நடவடிக்கைகள் பற்றி அம்மாவுக்கு சுத்தமாகத் தெரியாது.

வீணாவிற்கு அவள் அண்ணனைப் பற்றி எப்போதுமே பெருமை. அவனுடைய சிறுசிறு சாகசங்களைச் சொல்லக் கேட்டு வாய் பிளந்து உட்கார்ந்திருப்பது அவளுக்கு சுவாரஸ்யமான வாடிக்கை.

சீக்ரெட் சர்வீஸில் இருந்த ஒரு பெண் திடீரென்று இறந்து போனது பற்றி அவன் சொன்ன போது, "அந்த இடத்தில் என்னை சேர்த்துக் கொள்ளச் சொல்லேன்" என்று கெஞ்சியிருக்கிறாள். முகிலன் நிர்தாட்சண்யமாக மறுத்துவிட்டான்.

ஒரே ஒரு முறை ரெஸ்டாரண்ட் ஒன்றில் தற்செயலாக சந்தித்த சில உயர் அதிகாரிகளை அவளுக்கு அறிமுகப்படுத்தியிருக்கிறான்.

அவனுடைய வேலை பற்றி அவளுக்குத் தெரியும்.

தலைமை அலுவலகத்திலிருந்து நேரடியாக போன் வந்தால் அவசரம் என்று அர்த்தம்.



பொதுவாக அவனுடைய மேல் அதிகாரியிடமிருந்து தான். தலைவரே நேரடியாகக் கூப்பிட்டால் அதில் ஏதோ ஒரு முக்கியத்துவம் இருக்கும்.

முகிலனை திடீரென்று வெளியூர் போகச் சொல்லிப் பணித்துவிட்டால் இருக்கட்டும் என்று எப்போதும் இரண்டு செட் மாற்றுடைகளுடன் அவனுக்கு ஒரு பயணப் பெட்டி தயாராக இருக்கும்.

வீணா அந்தப் பெட்டியைத் திறந்தாள். குட்டிப் பிசாசை மேலாக ஜீன்ஸ் பேண்ட்டின் மீது வைத்தாள். பெட்டியை மூடினாள்.

அவனுக்கு டிபன் எடுத்து வைக்க விரைந்தாள்.

## 2

முகிலன் தன் மாருதியை ராட்சத வேகத்தில் செலுத்தினான்.

நகரத்தின் போக்குவரத்து மிகுந்து போய் லட்சக்கணக்கான வாகனங்கள் தெருவிற்கு வந்துவிட்டன. சாலைகளின் அகலம் போதவில்லை. டெலிபோன்காரர்கள், கேபிள்காரர்கள், கழிவுநீர்க்காரர்கள் தோண்டியது போக மிச்சமிருக்கும் தார் சாலைகளை ஒரு சாதாரண மழையே அரித்துப் போட்டிருந்தது.

முகிலன் காரில் இருந்த டிஜிட்டல் கடிகாரத்தில் நேரம் பார்த்தான். இன்னும் ஏழே நிமிடங்கள் தான் இருக்கின்றன.

சொன்ன நேரத்திற்கு இரண்டு நிமிடம் தாமதமானால் கூட தலைவர் ரசிப்பதில்லை.

காரின் பின் இருக்கையில் கட்டையான பயணப் பெட்டி. அவன் வயிற்றருகே பாண்ட்டிற்குள் செருகிய ரிவால்வர்.

முகிலன் வீணாவை நினைத்தான். நன்றி கலந்த புன்னகை அவன் உதடுகளில் பிறந்தது.

இளம் வயதிலேயே அப்பாவை இழந்த பிறகு அம்மா வின் நிழலில் அவர்கள் வளர்ந்திருந்தார்கள். வீணா என்றொரு தங்கை இல்லாமல் போயிருந்தால் அவன் பாலைவனத்து மணலாய் பயனின்றி பறந்திருப்பான்.

சிறு வயதிலிருந்தே அவள் தான் அவனுக்கும் சேர்த்து பொறுப்பான முடிவுகளை எடுத்திருக்கிறாள்.

அவன் படித்த இன்ஜினியரிங் தான் அவனை சீக்ரட் சர்வீஸிற்கு அழைத்துப் போனது. மினியேச்சர் ஸ்பீக்கர்கள், மினியேச்சர் மைக்ரோபோன்கள், இவற்றின் இணைப்பு - இவற்றில் அவன் நிபுணனாய் இருந்ததால் தான் அவனை ரகசிய சர்வீஸ்காரர்கள் கவனித்து தங்கள் மடிப்புகளுக்குள் இழுத்துக் கொண்டனர்.

வீணா மட்டும் என்ன - அவனுக்கு இணையாகப் படித்தவள் தான். எலக்ட்ரானிக்ஸ் துறையில் அவள் பல சாதனைகளை செய்து பல்கலைக்கழகத்தில் தங்கமெடல் வாங்கியது சாதாரண விஷயமா?

''முகில்.. உங்கள் ஆட்களிடம் பேசி என்னையும் உங்கள் சர்வீஸில் சேர்த்துக் கொள்ளேன்... உன்னோடு இருந்த மாதிரியும் இருக்கும். சுவாரஸ்யமான அனுபவங் களும் கிடைக்கும்'' என்று அவள் அப்போது விளையாட் டாகச் சொன்னது உண்டு.



வீணாவின் கள்ளமில்லாத அபார அழகு கண்டு முகிலன் பலமுறை பிரமித்திருக்கிறான். இந்த அழகு வீட்டில் வைத்து பூஜிக்கப்பட வேண்டியது அழகு. அவனுடையதைப் போன்ற பரபரப்பான பணிகளில் ஈடுபடுத்தி வற்றிப் போக வைக்கக் கூடாத அழகு.

அவள் கோரிக்கைகளை அவன் ஒருபோதும் பொருட்படுத்தியதில்லை.

அவளுக்கு அவன் ரகசியமாக மாப்பிள்ளை கூடத் தேர்வு செய்துவிட்டான்.

அவனுடைய கல்லூரித் தோழன் ஜெயசூர்யா, இப் போது கம்ப்யூட்டர் துறையில் அபாரமான உயரத்தில் இருப்பவன். அண்மையில் அவனை சந்தித்தபோது முகிலன் வீணா பற்றி அவனிடம் பேசினான்.

ஜெயசூர்யாவிற்கு வீணாவை ஏற்கெனவே தெரியும். வீணாவிற்கு ஜெயசூர்யாவை அண்ணனின் நண்பனாக முன்பே தெரியும். இருவருக்கும் பரஸ்பரம் ஒருவர் மீது ஒருவர் மரியாதையும், அன்பும் உண்டு.

வீணாவிடம் தன் மனதிலிருப்பதை முகிலன், இன் னும் சொல்லவில்லை. தகுந்த சந்தர்ப்பத்திற்காகக் காத் திருந்தான்.

ஜெயசூர்யாவும், வீணாவும் அறிவு பூர்வமாகவும் உயர் மட்டத்தில் இருப்பவர்கள், அழகானவர்கள், அன்பான வர்கள், உலகம் பற்றிய பொதுவான கருத்துக்கள் கொண்ட வர்கள்.

அம்மாவுக்கு ஜெயசூர்யா பற்றித் தெரியும். அவன் மீது அவளுக்கு எப்போதும் ஒரு பிரத்யேக பாசம் உண்டு.

இன்றைக்கென்ன சிந்தனை வீணாவையே மைய மிட்டுக் கொண்டிருக்கிறது?

முகிலன் புன்னகை மாறாமல் காரைத் திருப்பினான். அந்த மெல்லிய தெருவிற்குள் செலுத்தினான். நிறுத்தி னான்.

ஒரு ஜெராக்ஸ் கடைக்கும், மருந்து கடைக்கும் நடு வில் குறுகலான படிகளில் ஏறினான்.

கொரியர் சர்வீஸ் ஸார்ட்டிங் ஆபீஸ்.

அதற்கு அடுத்த படிகளில் மீண்டும் ஏறினால் -

இரண்டாவது மாடியில் பழைய டெலிவிஷன்கள் அடுக்கப்பட்ட எலக்ட்ரானிக்ஸ் கண்ணாடிக் கதவைத் தள்ளித் திறந்தான்.

ஒரு டெலிவிஷனைத் திறந்து அதன் உள்பாகங்களை ஆராய்ந்து கொண்டிருந்த மிஸஸ் மாத்யூ நிமிர்ந்தாள். புன்னகைத்தாள்.

''முகில்.. வா...''

மிஸஸ் மாத்யூவிற்கு வெட்டி விடப்பட்ட தலைமுடி களில் அங்கங்கே வெள்ளை நியான் கம்பிகள் போல நரை. பதினைந்து வருடங்களுக்கு மேலாக இங்கே இருக்கிறாள். டெலிவிஷன் சர்வீஸிற்கும் அவளுக்கும் எந்தத் தொடர்பும் இல்லை.

ஆனால் ரகசிய சர்வீஸின் பெரும்பாலான அலுவல கங்கள் இப்படித்தான் வேறு ஏதோ வணிகப் போர்வை யில் மறைவான அறைகளில் இயங்குகிறது.



கட்டை விரலை மடக்கி பின்புறம் காட்டினாள் மிஸஸ் மாத்யூ.

தலைவர் அறைக்குள் போகச் சொல்கிறாள்.

அவனுக்காக அவர்கள் தயாராயிருக்கிறார்கள்.

முகில் எந்த அறிவிப்பும் இல்லாத அந்த சாதாரண மரக்கதவைத் தள்ளித் திறந்தான்.

எதிரே வரிசையாக எலக்ட்ரானிக்ஸ் தொடர்பான புத் தகங்கள் அடுக்கி வைத்த அலமாரி. அலமாரியின் இடது புறம் இருந்த குமிழை அழுத்தினான்.

மறைவான கேமிராக்கள் மூலம் வந்திருப்பது யார் என்று உள்ளேயிருந்து தலைவர் பார்த்து அனுமதிக்க விரும்பினால் அவர் ஒரு விசையை இயக்குவார்.

இயக்கினார்.

அலமாரி. அப்படியே மூன்றடி நகர்ந்து ஒரு திறப்பு காட்டியது. நுழைந்தான். பின்னாலேயே அலமாரி நகர்ந்து மூடியது.

பரந்த பெரிய அறை. வெளியில் இருக்கும் சர்வீஸ் கடைக்கு எந்த விதத்திலும் நெருக்கமில்லாத ஒரு திகைப்பூட்டும் அலுவலக சூழ்நிலை.

பெரிய மேஜைக்குப் பின்னால் தலைவர். அந்த மேஜை யின் பிரம்மாண்டம் காரணமாக அவர் எப்போதுமே சிறியவராக்கிக் காணப்படுவார். அவருடைய பெயர் புருஷோத்தம் என்று யாரோ சொல்லியிருக்கிறார்கள். ஆனால் முகிலனுக்குத் தெரிந்த வரை அவர் நம்பர் ஏ.

ஐம்பதைத் தாண்டிய வயசு. அனுபவங்களின் வரு டங்கள் அவருடைய அகலமான நெற்றியில் கோடு

களாய்ப் படுத்தியிருந்தன. அகலமான மூக்கு. அதன் கீழ் மீசையற்ற பாட்டை, சதா வளைந்திருக்கும் உதடுகள். முகவாய்க் குழி.

துளைக்கும் கண்கள் வட்டக் கண்ணாடிகளுக்குப் பின்னிருந்து ஆராய்ந்தன. மேஜை ஆஷ்ட்ரேயில் உயிருடன் இருக்கும் பாதி சிகரெட்டிலிருந்து புகை நூல் எழும்பியது.

''உட்கார், முகில்.''

அப்போது தான் அறையின் இன்னொரு பக்கத்திலிருந்து உபதலைவர் நடந்து வருவதை கவனித்தான்.

வணக்கம் சொன்னான்.

உபதலைவர் உயரமானவர். ஆங்கிலேயர்களைப் போல கூர்மையான முகலட்சணம். ஒரு பொருளாதார கம்பெனியின் சுறுசுறுப்பான பார்ட்னர் போன்ற தோற்றம். அவர் பெயர் ரத்தினம் என்று அவனுக்கு சொல்லப்பட்டிருந்தது.

ரத்தினம் ஒரு நாற்காலியில் உட்காரும் வரை முகிலன் பொறுமையாக நின்றிருந்தான்.

அவர் அமர்ந்ததும் அவனும் அமர்ந்தான்.

நம்பர் ஏ தொண்டையை செருகிக் கொண்டார்.

''ஆமைராஜ் பற்றி உனக்கு, என்ன தெரியும், முகிலன்?''

முகிலன் நிமிர்ந்து உட்கார்ந்தான்.

''அவனுடைய உண்மையான பெயர் அருமைராஜ். இக்பால் என்று இன்னொரு பெயரும் நம் ரிக்கார்டுகளில்



இருக்கிறது. இது தவிர அவ்வப்போது வெவ்வேறு பெயர்களில் அவன் ஒளிந்து கொள்வதுண்டு. வாணியம்பாடி ரயில் தண்டவாளத்தைப் பெயர்த்து விபத்துக்குக் காரணமானவன். கோவையில் தொடர்குண்டு வெடிப்பில் தொடர்புள்ளவன். காவிரியில் விஷம் கலப்பேன் என்று அரசாங்கத்தை மிரட்டினான். அந்நிய நாடுகளின் பணஉதவியோடு இந்தியாவின் அமைதியைக் கெடுத்து வன்முறை செய்யத் தயங்காதவன். நடிகை கோமதியைக் கடத்திப் போய் அரசாங்கத்திடமிருந்து அடாவடித்தனமாக தன் தோழர்களை விடுவித்துக் கொண்டவன். நடிகை கோமதியைத் திருப்பித் தரும் முன் ஒருமுறை கற்பழித்தான் என்று அவள் ரகசிய வாக்குமூலம் அழுது கொண்டே கொடுத்திருக்கிறாள். அடர்ந்த காடுகளில் ஒளிந்து கொண்டு தமக்குப் போக்கு காட்டுகிறவன்.''

முகிலன் இருவரையும் மாறிமாறிப் பார்த்துக் கொண்டே தொடர்ந்தான்.

''எதிரியைப் பார்த்ததும் ஆமை தன் ஓட்டுக்குள் பதுங்கி விடுவது போல் நம்மிடம் மாட்டாமல் அவன் பதுங்கி விடுவதால் அவனை ஆமைராஜ் என்று நம் புத்தகங்களில் குறித்துள்ளோம். பாகிஸ்தான், ஆப்கானிஸ்தான், இலங்கை என்று அக்கம்பக்கத்து நாடுகளிலிருந்து இந்தியாவின் அமைதியைக் கெடுக்க வரும் தீவிரவாத அமைப்புகளுக்கும் அவனுக்கும் தொடர்பு இருப்பது நிரூபணமாகியிருக்கிறது.

''ஆமைராஜ் வழக்கமாகப் பதுங்கியிருக்கும் வனப்பகுதியிலிருந்து வெளியே வந்திருப்பதாக தகவல் கிடைத்திருக்கிறது'' என்றார் ரத்தினம். அவனுடைய நட

வடிக்கைகள் ரகசியமானவை. அவன் மறுபடியும் காட்டுக்குள் நுழைந்து பதுங்கி விடுவதற்கு முன்னால் அவனை நாம் மடக்க முடிந்தால் நல்லது...''

''ஆமைராஜ் தன் ஓட்டிலிருந்து வெளியே தலை காட்டுகிறானா? ஆச்சரியமாயிருக்கிறதே.''

''ரத்தினம் சொன்னதைக் கேட்டியா?'' நம்பர் ஏ குறுக்கில் புகுந்தார். ''அடுத்த ஐந்தாறு நாட்களுக்கு அவன் வெளியே தான் இருப்பான் என்கிறார், இவர். முடிந்தால் அவனை வலைவீசிக் கண்டுபிடி.. அவன் உயிருடன் கிடைத்தால் நமக்கு நல்லது...''

''யெஸ் சார்...''

''அவனைக் கண்டுபிடித்ததும் முதலில் எங்களிடம் தெரிவிக்க வேண்டும்...''

''யெஸ் சார்...''

''உனக்கு உதவிக்கு ஆள் தேவை என்றால் நம்பிக்கையானவர்களை மட்டும் வைத்துக் கொள்.''

''யெஸ் சார்.''

''பன்னிரண்டு மணி நேரத்திற்கொரு தடவை ரத்தினத்திற்கு நீ ரிப்போர்ட் செய்ய வேண்டும். அவருடைய பிரத்யேக போன் நம்பரை வாங்கிக் கொள்.''

''யெஸ் சார்...''

''நம்பர் ஏ கையகல கண்ணாடி அட்டையை அவன் பக்கம் மேஜையில் தள்ளினார்.''

''இது ஸ்பெஷல் ஐடன்டிடி கார்டு.. இந்த அடையாள அட்டை எல்லா போலீஸ் ஸ்டேஷன்களுக்கும் உன்னை



அனுமதிக்கும். ராணுவ அதிகாரிகள் உனக்கு ஒத்துழைப்பார்கள்...''

''தேங்க்யூ சார்...''

''உனக்கு கீழே பணியாற்றுபவர்களுக்கு ரகசியங்கள் கசிந்து விடாமல் பார்த்துக் கொள்... இந்த ஆப்ரேஷன் முடியும்வரை இந்த புதுபோனை பயன்படுத்து...''

அவர் கொடுத்த புது செல்போனை பெற்றுக் கொண்டான்.

''கவனமாய் இருப்பேன் சார்...''

''இந்த கார்டைக் காட்டி தேவையான பணத்தை நீ அக்கவுண்ட்ஸ் செக்ஷனில் வாங்கிக் கொள்ளலாம்...''

''தேங்க்யூ சார்...''

''ஆல் தி பெஸ்ட்...''

''ரத்தினம் அவனிடம் தன்னுடைய பிரத்யேக எண்ணை சொன்னார். பத்து இலக்க எண். ஒரு முறை உரக்கச் சொல்லிப் பார்த்தான். நினைவு அடுக்கில் அது பதிந்து போனது.

அவர்களுக்கு வணக்கம் சொல்லிவிட்டு வெளியே வந்தான்.

மிஸஸ் மாத்யூவிடம் ஒரு சாவி வாங்கி கம்ப்யூட்டர் அறையில் நுழைந்தான். அவனுக்கென்று இருந்த பிரத்யேக சங்கேத வார்த்தையை டைப் அடித்ததும் கம்ப்யூட்டர் தன் பதிவுகளுக்குள் அவனை அனுமதித்தது.

அருமைராஜ் பற்றிய கோப்புகளை ஆராய ஆரம்பித்தான்.

* * *

அரைமணி நேரத்தில் அவன் முகத்தில் ஒரு தனி பிரகாசம் வந்தது.

காசிநாதன்.

அருமைராஜின் கிளைகளில் ஒன்றாக இருந்தவன்.

காசிநாதனை முதலில் சந்திக்க வேண்டும் என்று தீர்மானித்தான் முகிலன்.

## 3

சென்னை சிறைச்சாலை. பிரத்யேக அறை.

முகிலன் தனக்கு எதிரில் உட்கார வைக்கப்பட்டிருந்த காசிநாதனைப் பார்த்தான்.

காசிநாதனை சந்திக்க சிறப்பு அனுமதி பெறுவது அவனுக்கு சிரமமாகவே இல்லை.

காசிநாதனின் முகம் சற்று ஒடுங்கியிருந்தது. சிறை வாழ்க்கையின் களைப்பு அவன் கண்களிலும் தெரிந்தது.

''காசி.. உன்னை நான் ஒரு நல்ல சேதியோடு சந்திக்க வந்திருக்கிறேன்...''

''என்ன? என்னைத் தூக்கில் போடப் போகிறார்களா?''

''அது வழக்கு முடிந்த பின் தான் தீர்மானமாகும்... ஆனால் அதற்கு முன் பரோலில் கூட நீ வெளியே



போகக்கூடாது என்று சொல்லியிருந்தார்கள். நினைவிருக்கிறதா?''

''காவல்துறை மனிதர்கள் கொடுமைக்காரர்கள்...''

''உனக்கு நான் அனுமதி வாங்கித் தருகிறேன்... இரண்டு நாட்கள் நீ உன் குடும்பத்துடன் போய் இருந்து விட்டு வருவதற்கு ஏற்பாடு செய்து தருகிறேன். உன் மகள் வயசுக்கு வந்தபோது அந்த வைபவத்திற்குக் கூட உன்னால் போக முடியவில்லையே.. அவளோடு நீ சிறிது நேரம் இருந்து விட்டு வரலாம். உன் மகனுடன் விளையாடலாம். உன் மனைவியுடன் பேசலாம்.. உன் குடும்பத்தாருடன் இரண்டு நாள் இருக்க உனக்கு விருப்பமா?''

காசிநாதன் முகிலனை நம்ப முடியாமல் பார்த்தான். மெல்ல மெல்ல அவன் கண்களில் ஏமாற்றம் திரும்பியது.

''வேடிக்கை பேச்சு என்னை வேதனைப்படுத்துகிறது.''

''வேடிக்கை இல்லை உண்மை...''

''அதற்கு ஈடாக என்னிடம் என்ன எதிர்பார்க்கிறீர்கள்?''

''அப்படிக் கேள்.. அருமைராஜ் நகரத்திற்கு வந்தால் எங்கே தங்குவான்? யார் யாரை சந்திப்பான்?''

''தெரியாது.''

''நீ பயப்படுகிறாய்.. அருமைராஜால் உனக்கு எந்த ஆபத்தும் வராமல் பார்த்துக் கொள்ள வேண்டியது எங்கள் பொறுப்பு... எனக்கு உபயோகமான விவரங்களை நீ கொடுத்தால் உன் குடும்பத்தாருடன் இரண்டு நாட்கள் செலவு செய்ய உனக்கு வசதி செய்து தருவேன்.''

காசிநாதன் முதலில் மறுத்தான். அருமைராஜிற்கு துரோகம் செய்தவர்கள் உயிருடன் மீண்டதாக சரித்திரம் இல்லை என்றான். அஞ்சினான்.

முகிலன் பேசிப் பேசி தைரியமூட்டி அவன் மனசைக் கரைத்தான்.

''மோகனா...'' என்றான், காசிநாதன். ''அருமைராஜின் அன்புக் காதலி...''

காசிநாதன் சொல்லச் சொல்ல அந்த விவரங்களை மூளைக்குள் ஏற்றிக் கொண்டான் முகிலன்.

## 4

வீணா மேஜையில் அமர்ந்து கால்களை ஆட்டிக் கொண்டே வாக்மேனைக் கேட்டுக் கொண்டிருந்தபோது போன் ஒலித்தது.

''போனை எடுக்கக் கூடாதா?'' என்று உள்ளேயிருந்து அம்மா அலறியபோது தான் சுயநினைவுக்கு வந்தவள் போல் காதுகளிலிருந்து ஹெட்போன்களை எடுத்தாள்.

ரிசீவரை எடுத்தாள்.

''ஹாய் டார்லிங்...''

''முகில்! எங்கே இருக்கிறாய்?''

''சொல்லக்கூடாது. என் போன் நம்பரை மட்டும் குறித்துக் கொள்.. எமர்ஜென்ஸி என்றால் மட்டும் தொடர்பு கொள்...''



''சொல்...''

முகிலன் சொல்லச் சொல்ல உள்ளங்கையில் எழுதிக் கொண்டாள்.

''அம்மா கேட்டால். பெங்களூரிலிருந்து பேசியதாகச் சொல்.''

''முகில்... பெரிய பிராஜக்டா?''

''ஆமாம்.. ஆமை வெளியே வருகிறது.''

''ஓ காட்! முகில், ஜாக்கிரதை, ரொம்ப ரொம்ப கவனமாக இரு...''

''யெஸ் டியர்...''

''தினம் ஒரு தடவையாவது என்னுடன் போன் பேசு.''

''ஓகே டியர்.. பை!''

போனை வைத்ததும், வீணா தன் நெஞ்சில் கனமாக ஏதோ ஏறி உட்கார்ந்து விட்டது போல் உணர்ந்தாள்.

ஆமை என்பது அருமைராஜைக் குறிக்கும் என்பது அவளுக்கு தெரியும். முகிலன் தன் அலுவலக விஷயங்களைத் தன் பிரத்யேகக் கம்ப்யூட்டரில் ஏற்றியபோது, பல சமயம் அவளுடைய உதவியை நாடிப் பெற்றிருந்தான். அவனுடைய ரகசியங்கள் அவளைத் தாண்டிப் போகாது என்ற தைரியம் அவனுக்கு இருந்தது.

வீணா முகிலனைப் பற்றி நிறையப் பெருமைப்பட்டிருக்கிறாள். எப்போதாவது கவலைப்பட்டிருக்கிறாள்.

இப்போது கவலைப்பட்டாள்.

# 5

முகிலன் இடது கையில் பிடித்திருந்த பிரெட் துண்டத்தை ஒருமுறை கடித்தான்.

அடிவயிற்றில் பசி தெரிந்தது. அவசரத்திற்கு பக்கத்து கேண்டீனில் வாங்கி வந்திருந்த பிரெட் பட்டர் ஜாம் வெறுப்பேற்றியது.

பிரெட் சதுரம் பலகை போல் விறைத்து விட்டது. ஜாம் என்பது போன நூற்றாண்டின் துவக்கத்தில் செய்தது போல் பழைய நெடி அடித்தது. நல்ல ஹோட்டலுக்கு போய் வயிற்றை நிரப்பிக் கொண்டு வர நேரமில்லை.

காசிநாதன் கொடுத்த சொற்பத் தகவலை வைத்துக் கொண்டு மோகனாவைக் கண்டுபிடிப்பது சுலபமாயில்லை. அவள் இரண்டு முகவரிகள் மாறிவிட்டாள். வெளிப்படையாக அவளைப்பற்றி அவன் அந்த முகவரிகளில் விசாரித்ததால் காற்று வாக்கில் அந்த சேதி அவளை எட்டிவிட்டால் அத்தனையும் பாழ்.

மோகனாவின் தற்போதைய முகவரியை வெகு கவனமாக வேன் டிரைவர், போஸ்ட்மேன், வேலைக்காரியின் உறவினர் என்று வெவ்வேறு நபர்கள் மூலம் ஆழ்ந்து கேட்காமல் சேகரிக்க அவனுக்கு எட்டுமணி நேரங்களுக்கு மேல் ஆகிவிட்டது.

ரத்தினத்திற்கு ஒரு முறை போன் செய்தான்.



“வேட்டை துவங்கிவிட்டது சார்...”

அவ்வளவு தான் சொன்னான்.

மோகனாவின் முகவரியை ஊர்ஜிதம் செய்து கொண்டு ஏதாவது முன்னேற்றம் இருந்தால் மட்டும் அடுத்த தகவல் தரலாம் என்று முடிவு செய்தான்.

மோகனாவின் புதுமுகவரி வேளச்சேரியில் இருந்தது. சற்று உள்ளடங்கிய ஒரு தெரு. இரும்புக்கடை ஒன்று, பர்னிச்சர் கடை ஒன்று இவற்றின் மாடியில் ஒரு குடியிருப்பு பகுதி.

கீழ்த்தளத்தில் இருக்கும் கடைகளைத் தொந்தரவு செய்யாமல் குடியிருப்பு பகுதிக்குப் போய்வர அந்தக் கட்டிடத்தின் பின்புறம் பிரத்யேக படிக்கட்டு இருந்தது.

இரண்டு குடியிருப்புகளாகப் பிரிந்து இருந்த மாடித் தளத்தை மோகனாவே முற்றிலும் எடுத்துக் கொண்டிருந்தாள்.

அந்தக் கட்டடத்திற்கு நேர்பின்னால் பத்தடி உயரத்திற்கு ஒரு காம்பவுண்டு சுவர். அதற்கு அந்தாண்டை ஒரு பெரிய பளிங்கு கல் விற்பனை மையம்.

யார் கண்களிலும் படாமல் அருமைராஜ் வந்து போக வேண்டுமென்றால் அந்தக் கடை மூடும் வரை காத்திருக்க வேண்டும் என்று முகிலனுக்குப் புரிந்தது.

அதே தெருவில் இருந்த இன்னொரு கட்டிடத்தை முகிலன் தேர்வு செய்திருந்தான். இருளடர்ந்த அதன் பின்புறம் இருந்த மரத்தைப் பிடித்து மேலேறி, கட்டிடத்தின் மொட்டைமாடியில் இறங்கினான்.

அவ்வப்போது பெய்த மழையில் உலராத பகுதிகளில் பாசி அடர்ந்திருந்தது. வழுக்கிவிடத் தயாராயிருந்தது.

முகிலன் கவனமாக அடிமேல் அடி எடுத்து வைத்தான்.

மொட்டை மாடியில் சிமெண்ட் பாதங்கள் வைத்து இரும்புக் கட்டுமானம் எழுப்பப்பட்டிருந்தது. அந்த கட்டுமானத்தைச் சார்ந்து இரண்டு ராட்சத விளம்பர பேனர்கள் அமைக்கப்பட்டிருந்தன. குறுக்கும் நெடுக்கும் ஓடும். இரும்பு தளவாடங்களுக்கு நடுவில் ஒளிந்து கொள்ள நிறைய வசதி இருந்தது. அவன் இருட்டில் பதுங்கியிருப்பது வெளியே தெரியாமல் ராட்சத பேனர் மறைத்தது.

முகிலன் அமர்ந்திருந்த இடத்திலிருந்து மோகனாவின் குடியிருப்பு தெளிவாகத் தெரிந்தது.

கண்ணாடி ஜன்னல்கள், உள்ளே விலகியிருந்த திரைகள்.

மோகனாவின் படுக்கையறையில் மெல்லிய வெளிச்சம். அவன் பார்க்கையில் மோகனா ஒரு வசீகரமான நைட்டியில் நுழைந்தாள்.

ஐந்தரை அடிக்கும் மேல் உயரம். செதுக்கப்பட்டது போன்ற முகம். எல்லாவித விளம்பரங்களுக்கும் மாடலாக இருக்கத் தகுதி உயர்வு வடிவமைப்பான உடல்.

மோகனா ரூம் ஸ்ப்ரேயால் அறையை வாசமாக்குவது மெல்லிய திரையினூடே தெரிந்தது. நொடிக்கொருதரம் கண்ணாடியைப் பார்த்து அவள் தன் முகத்தை சரி செய்து கொள்வது தெரிந்தது.

யாரோ விருந்தாளியை எதிர்பார்த்துக் காத்திருக்கிறாள் என்பது தெளிவாகத் தெரிந்தது.



முகிலன் பார்வையை அந்த ஜன்னலிலிருந்து நகர்த்தாமல் பிரெட் துண்டத்தை, இன்னொரு முறை கடித்தான்.

காத்திருந்தான், காத்திருப்பதையே ஒரு கலையாகப் பயிற்சி பெற்றிருந்ததால், களைப்பு, சலிப்பு, இரண்டையும் நெருங்கவிடாமல் காத்திருந்தான்.

மோகனா மெல்ல கண்ணாடியைத் திரும்பித் திரும்பிப் பார்த்துக் கொண்டே படுக்கையறை விட்டு வெளியேறினாள்.

முகிலன் காத்திருந்தான்.

அரைமணி நேரம், ஒரு மணி நேரம், இரண்டு மணி நேரம்.

மோகனா தொலைக்காட்சிப் பெட்டிக்கு முன்னால் உட்கார்ந்திருந்தாள், அருமைராஜின் அடையாளமே இல்லையே! முகிலன் தவித்தான்.

வெளியே முற்றிலும் இருட்டு.

அவன் அமர்ந்திருந்த உயரத்திலிருந்து பின்புறமிருந்த மாபெரும் பளிங்கு விற்பனை மையம் தெரிந்தது. விற்பனை நேரம் முடிந்து ஆபீஸ்கள் மூடப்பட்டு விட்டன. கல் அடுக்குகள் இருந்த பகுதியில் ஒரு மெல்லிய விளக்கு எரிந்து கொண்டிருந்தது. அதன் எதிர் சுவர் அருகில் இருந்த கேட்டில் சீருடை அணிந்த வாட்ச்மேன் ஒருத்தன் உட்கார்ந்திருந்தான்.

மோகனாவின் குடியிருப்புக்குக் கீழ் இருந்த இரண்டு கடைகளும் கூட மூடிவிட்டன.

இருட்டு. எங்கும் இருட்டு. மோகனாவின் குடியிருப்பு ஜன்னல் சதுரங்களில் மட்டும் வெளிச்சம்.

மோகனா டெலிவிஷனை அணைத்து விட்டு அவசர மாக எழுந்திருப்பது தெரிந்தது.

முகிலன் கைக்கு அடக்கமான பைனாக்குலர்களை கண்களுக்கு உயர்த்தினான். விழி பதித்துப் பார்த்தான்.

மோகனா நொடி நேரம் கண்ணாடிக்கு முன் பிரேக் அடித்து தன்னைப் பார்த்துக் கொண்டாள். பின் குதிநடை யில் போய் வீட்டின் கதவைத் திறந்தாள்.

முகம் முழுவதும் தாடி. கண்களில் கறுப்புக் கண்ணாடி. தலையில் கவிழ்ந்த தொப்பியுடன் அந்த இளைஞன் உள்ளே நுழைந்தான்.

மோகனா கதவைச் சாத்தி உள்ளே தாளிட்டாள்.

அடுத்த கணம் அவளை அணைத்து அவன் அப் படியே உயர்த்தினான். நசுக்கினான். அவள் உதடுகளைத் தன் உதடுகளால் சறுக்கினான்.

மோகனா அவன் தாடியை பிய்த்தாள். மீசையைப் பிடுங்கி எடுத்தாள். கறுப்புக் கண்ணாடியைப் பறித்தாள்.

முகிலன் உடம்பில் மின்னல் பாய்ந்தது.

அருமைராஜ்! அருமைராஜே தான்! இடது கன்னத்தில் காதிலிருந்து முகவாய் வரை. இறங்கும் அந்த வெட்டுத் தழும்பு, காமமும், கொடூரமும் ததும்பும் அந்தக்கண்கள். தலையிலிருந்து விக்கையும் அகற்றியவுடன் பளபளக்கும் மொட்டை.

சந்தேகமே இல்லை.

இவன் அருமைராஜ் தான்.

எத்தனை பல மாதங்களாக இவனைத் தேடி வலைவீசிக் களைத்திருக்கிறது ரகசியத்துறையும், காவல்துறையும்.



முகிலன் ஸ்பெஷல் ரிவால்வரை எடுத்தான். அதன் முனையில் டெலஸ்கோப் கருவியை பொருத்தினான். டெலஸ்கோப்பின் கூட்டல் வழியே பார்த்தபோது அருமைராஜின் நெற்றியில் துவரம்பருப்பு அளவிற்கு இருந்த பள்ளம் கூடத் தெரிந்தது.

முகிலன் விசையை இழுக்க வேண்டியதுதான். அந்த உயர்சக்தி ரிவால்வரிலிருந்து வெளிப்படும் தோட்டா கண்ணாடியைத் துளைத்து அதிவேகமாக அருமை ராஜையும் துளைத்துவிடும்.

விசையை இழுக்க அவன் விரல் துடித்தது.

எத்தனை உயிர்கள் அருமைராஜால் நீக்கப்பட்டிக் கின்றன. எத்தனை இழப்புகளை இந்திய அரசாங்கம் அவனுடைய இரக்கமற்ற வன்முறையால் சந்தித்திருக் கிறது. அவனுடைய பதுங்கு குழியிலிருந்து அருமைராஜ் தானாகவே வெளியே வந்திருக்கிறான். இதோ முகிலனின் விரல் அசைவில் அவன் உயிரே ஊஞ்லாடிக் கொண்டிருக் கிறது.

முகிலன் தன் ரத்தம் வேகம் எடுப்பதை உணர்ந்தான்.

அருமைராஜும் மோகனாவும் படுக்கையறைக்குள் ஒருவர் இடுப்பை மற்றவர் கோர்த்து நடந்து வருவது புலப்பட்டது.

விசையை இழுக்கத் துடித்த தன் விரலை மடக்கி விட்டு, முகிலன் தன் செல்போனை எடுத்தான். பத்து இலக்கங்களைப் படபடவென்று தட்டினான்.

''சொல் முகில்'' - எதிர்முனையில் ரத்தினத்தின் குரல்.

''சார்.. ஆமையைப் பார்த்துவிட்டேன்.'' - முகிலன் மூச்சை இழுத்துப் பிடித்துக் கொண்டு சொன்னான். ''தனியாக வந்திருக்கிறான்... என்னுடைய துப்பாக்கி ரேஞ்ஜிற்குள் தான் இருக்கிறான்.''

''எங்கேயிருந்து பேசுகிறாய்?''

''வேளச்சேரி.. சார் அவன் தப்பித்துப் போகும் முன் நான் சுடலாமா?''

''வேண்டாம் முகில்...'' - ரத்தினத்தின் குரல் அவசர மாக ஒலித்தது. ''அவன் நமக்கு உயிரோடு வேண்டும். எக்காரணம் கொண்டும் - ரிபீட் - எக்காரணம் கொண்டும் அவனை சுடாதே. அவன் மீது கண் வைத்திரு. நம் ஆட்கள் இன்னும் அரைமணி நேரத்திற்குள் அவனை சூழ்ந்து விடுவார்கள். இடத்தை மட்டும் சொல்...''

முகிலன் படபடப்பாக சொன்னான்.

''நீ இப்போது இருக்கும் இடத்திலிருந்து அவனைக் கண்காணிக்க முடிகிறதா முகில்?''

''ஆமாம், சார். வெகு துல்லியமாக.''

''கண்காணித்துக் கொண்டிரு. நம் ஆட்கள் வந்தபின் உள்ளே போகலாம். அவனிடம் ஆயுதம் ஏதாவது இருக் கிறதா?''

''வெளிப்படையாகத் தெரியவில்லை சார்.''

''குட்.... நீ இருக்கும் இடத்தை விட்டு அசையாதே!''

தொடர்பு அறுந்தது.

துப்பாக்கி விசையை இழுக்க பரபரப்புக்கும் விரலை முகிலன் கஷ்டப்பட்டுக் கட்டுப்படுத்தினான்.



அருமைராஜை காயப்படுத்தாமல் உயிருடன் பிடிப்ப தாவது, உப தலைவர் ஏன் இப்படி அடம் பிடிக்கிறார்? ரகசிய சர்வீஸின் ஆட்கள் வந்து சூழ்ந்தவுடன் அந்த இடமே யுத்தகளமாக மாறப்போகிறது.

இரவின் அமைதியைக் கெடுத்து துப்பாக்கிகள் அதிரப்போகின்றன. வெடிகள் வெடிக்கப் போகின்றன.

முகிலன் பரபரப்போடு பைனாக்குலர் வழியே அருமை ராஜின் அசைவுகளைத் தொடர்ந்தான்.

அருமைராஜ் மோகனாவை ஆட்டுக்குட்டியை தூக்கு வது போல் தூக்கி முகத்தில் முத்தத்தால் தேய்த்தபோது மோகனா விறைத்து அவன் கையிலிருந்து உதறி இறங் குவது தெரிந்தது.

படுக்கைக்கு அருகில் இருந்த தொலைபேசி ரிசீவரை அவசரமாக அள்ளி ஹலோ என்பது மௌனமாகத் தெரிந்தது.

அவள் முகம் இறுகியது. ரிசீவரின் வாயை பொத்திக் கொண்டு அருமைராஜிடம் ஏதோ சொன்னாள். அருமை ராஜ் முகத்தில் இத்தனை நேரம் இருந்த காமம் சட்டென்று வடிந்து போனது. ஒரே பாய்ச்சலில் டெலிபோனை அடைந்து ரிசீவரை அவளிடமிருந்து பிடுங்கினான்.

மறுமுனை பேச்சு கேட்டு அவன் முகத்தில் திடுக்கிடல் தெரிந்தது.

முப்பது நொடிகள் அந்தக் காட்சி தொடர்ந்தது.

அருமைராஜ் ரிசீவரை பரபரப்பாக வைத்தான்.

முகிலன் அமர்ந்திருந்த திசை நோக்கி ஜன்னலில் பார்வையை எறிந்தான்.

வெளிச்சத்தில் இருந்து கொண்டு அடர் இருட்டில் பதுங்கியிருக்கும் தன்னை அவனால் பார்க்க முடியாது என்று தெரிந்திருந்தும் முகிலன் இருளில் இன்னும் சற்றுப் பதுங்கினான்.

அருமைராஜின் நடவடிக்கைகள் வெகு துரிதமாயின. ஒரு பாய்ச்சலில் விளக்கை அணைத்தான். அந்த அறையே கும்மிருட்டில் ஆழ்ந்தது.

முகிலன் பதறினான். முகிலன் பார்த்துக் கொண் டிருக்கும் போதே அந்த ஜன்னலை கனமான திரை மூடியது.

என்ன நடக்கிறது என்று புரிந்ததும் முகிலன் அதிர்ந் தான். இருக்கும் இடத்தை விட்டும் அசைய முடியாமல், அருமைராஜின் நடவடிக்கைகளையும் கவனிக்க இய லாமல் முகிலன் பதறிக் கொண்டு காத்திருந்தான்.

எட்டு நிமிடங்கள் நரகமாக நீண்டன.

சர் சர் என்று வாகனங்கள் அந்த தெருவில் நுழையும் ஒலி கேட்டு முகிலன் நிமிர்ந்தான்.

மோகனாவின் குடியிருப்பு இருந்த கட்டிடத்தின் முன்னால் இரண்டு கார்கள். அந்தக் கட்டிடத்தின் பக்கவாட்டில் இரண்டு கார்கள். பின்புறமிருந்த கிரானைட் தொழிற்சாலைக்குள் நான்கு கார்கள் என்று வெளிச்ச மடித்து நிறுத்தத்திற்கு வந்தன.

கார்களிலிருந்து ஆயுதம் ஏந்தியவர்கள் சடசடவென்று இறங்கினர்.

முகிலன் தன் இடத்திலிருந்து எழுந்தான்.



இனி ரகசியமில்லை. அருமைராஜை காவலர்கள் சுற்றி வளைத்து விட்டனர். ஆனால் அருமைராஜை சுற்றி வளைத்திருக்கிறார்களா அவன் சற்று முன் வந்து போன கட்டடத்தையா?

முகிலன் கீழே குதித்து மரக்கிளை பிடித்து தழைத்து இறங்கினான். அதிகாரி ஒருவர் அவனை அடையாளம் கண்டு சல்யூட் அடித்தார்.

''அவனிடம் ஆயுதம் இருக்கிறதா என்று தெரியாது. எனவே கவனமாக இருங்கள்...'' முகிலன் பரபரப்பாக சொன்னான்.

ஆனால் அவர்கள் பயந்தபடி எந்தத் துப்பாக்கியும் எதிர்கொள்ளவில்லை. எந்தத் தோட்டாவும் ஒலிக்க வில்லை.

மாடியேறி ஒருத்தருக்கொருத்தர் பாதுகாப்பாக நின்று கொண்டு...

அந்தக் கதவை எட்டி உதைத்துத் திறந்து துப்பாக்கி களோடு நுழைந்தார்கள்.

மறைவிடத்திலிருந்து எந்தத் துப்பாக்கியும் இரும வில்லை. எந்த ஆயுதமும் உறுமவில்லை.

முகிலன் ஒவ்வொரு விளக்காகப் போட்டான்.

அவர்கள் அங்குலம் அங்குலமாக நெருங்கினார்கள்.

'பட்சி பறந்து விட்டது' என்றான் முகிலன், சற்று வருத்தத்துடன். ஆனால் மோகனா இருப்பாள்... அவ ளிடமிருந்து உபயோகமான தகவல் கிடைக்கலாம்...

இன்னும் நெருங்கி வந்து படுக்கையறைக் கதவை உதைத்தார்கள்.

அந்த வேகத்தில் கதவு அகலமாகத் திறந்து சுவரில் மோதித் திரும்பியது.

அந்த கணநேரத்தில் பார்த்த காட்சி முகிலனின் நெஞ்சுக் கூட்டை அதிரடித்தது.

இந்த முறை நிதானமாகத் திறந்து எல்லா விளக்கு களையும் போட்ட போது -

மோகனா மெத்தையில் பாதியும் தரையில் பாதியுமாக சரிந்து கிடந்தாள். அவளுடைய கழுத்து இயலாத கோணத் தில் திரும்பியிருந்தது. வாயோரத்திலும், மூக்கிலிருந்தும் ரத்தக் கோடுகள் நேர்செங்குத்தாக இறங்கிக் கொண் டிருந்தன.

அபாரமான பலம் பிரயோகிக்கப்பட்டு அவள் கழுத்து திருகிக் கிடந்தது.

''கடவுளே!'' என்றான், முகிலன்.

அவசரமாகப் பாய்ந்து அவள் மணிக்கட்டைத் தொட் டான். மூக்குகளில் விரல் வைத்துப் பார்த்தான். இதயத் தில் காதை வைத்துப் பார்த்தான்.

எல்லாத் துடிப்புகளும் நின்றிருந்தன. ஓய்ந்திருந்தன.

அதற்கப்புறம் எல்லாமே சடங்குகளாகத்தான் நடந்தன.

முகிலன் போன் செய்து ரத்தினத்திடம் தகவல்களை விறைப்பான குரலில் சொன்னான்.

''நாளைக் காலையில் எனக்கு விவரமான ரிப்போர்ட் கொடு'' என்றார், ரத்தினம். உணர்ச்சிகளற்ற குரலில்.



# 6

''ஏய், இன்னும் அதையேவா நினைத்துக் கொண் டிருக்கிறாய்?''

வீணாவின் கை அவன் தோளில் விழுந்து அழுத்தியது.

முகிலன் மேஜைமீது தலைகவிழ்ந்து உட்கார்ந்திருந் தான். தலையை நிமிர்த்தினான். தோளில் விழுந்த தன் கையின் கையை அழுத்திக் கொடுத்தான்.

''மனசு ஆறவே இல்லை வீணா...'' என்றான் குரலில் வருத்தம் தெறித்தது. ''ஆமைராஜ் எப்பேர்ப்பட்ட கிரி மினல். அவனுடைய ஒளிவிடத்தை கண்டுபிடிக்க முடிய வில்லை. எந்த விதத்திலும் அவனை நெருங்க முடிய வில்லை. அவனால் எத்தனை உயிர்கள் அழிந்திருக் கின்றன. எத்தனை சொத்துக்கள் நாசமாகியிருக்கின்றன. அப்பேர்ப்பட்டவனை இப்படி கண்ணெதிரே கையிடுக்கு வழியே நழுவ விடலாமா?''

''நடந்த தப்பிற்கு நீ என்ன செய்வாய்?''

''இல்லை, வீணா.. துரோகத்தை ஏன் வேடிக்கைப் பார்த்துக் கொண்டிருக்கிறேன்? துணிந்து அதிரடியாக என்னால் ஏன் எதுவும் செய்ய முடியவில்லை?''

''துரோகமா? என்ன சொல்கிறாய்?''

வீணா அவனுக்கு எதிரில் மேஜையில் அமர்ந்து கொண்டாள்.

''அருமைராஜ் மோகனாவைத் தேடி அந்த வீட்டிற்குள் நுழைந்த போது அவன் அலட்சியமாக இருந்தான். யாரும் தன்னை கண்காணிக்கக் கூடும் என்ற பயமே சற்றும் இல்லாமல்தான் அவன் நடந்து கொண்டான். நான் அங்கே பதுங்கியிருப்பது அவனுக்குத் தெரிவதற்கு வாய்ப்பே இல்லை. அவன் என் பார்வைக்குள் வந்தவுடன் நான் என்ன செய்திருக்க வேண்டும்? என் துப்பாக்கி விசையை இழுத்திருந்தால் போதும். அவ்வளவு க்ளோஸ் ரேஞ்ஜில் இருந்தான். அவனைக் காயப்படுத்தியிருக்கலாம். நெஞ்சிலேயே சுட்டு வீழ்த்தியிருக்கலாம். அதையெல் லாம் செய்யாமல் எப்படி தலைவருக்கு போன் செய்தேன். அருமைராஜைக் கண்டுபிடித்து விட்டு பரபரப்பாக அவருக்கு ரிப்போர்ட் செய்தேன். சுட்டு விட்டேன் சார் என்று சொல்லாமல் சுடட்டுமா என்று கேட்டேன். அங்கே தான் தப்பு நடந்து விட்டது. சுடாதே என்று தடுத்து விட்டார். அவனை உயிரோடு பிடிப்பதற்கு ஆட்களை அனுப்பி வைக்கிறேன்'' என்றார்.

''ஆனால் ஆட்கள் வருவதற்கு முன்பாகவே அருமை ராஜிற்குத் தகவல் போய்விட்டது. நான் ரத்தினத்திடம் பேசிய சற்று நேரத்திற்கெல்லாம் மோகனாவின் வீட்டு போன் ஒலித்தது. போனில் பேசி முடித்ததும் அருமை ராஜின் நடவடிக்கை மாறிவிட்டது. விளக்கை அணைத்து, திரைபோட்டு இருட்டில் தப்பித்து விட்டான். அந்தத் தகவலை அவனுக்கு யார் கொடுத்தது.

''எனக்கு தெரிந்த விவரத்தை நான் ரத்தினத்திடம் மட்டும் தான் சொன்னேன். அப்படியிருக்க, அவரைத் தவிர அவனுக்கு வேறு யார் போன் செய்து உஷாராக்கியி ருக்க முடியும்? அவன் தப்பிப்பதற்கு நேரம் கொடுத்து



விட்டுத் தான் நம் ஆட்கள் வந்து சூழ்ந்து கொண்டார்கள். அவனைப் பற்றிய தகவல்கள் எதையும் மேற்கொண்டு சேகரிக்க முடியாமல் மோகனாவையும் தீர்த்து விட்டுப் போய்விட்டான்.''

''ரத்தினம் பச்சை துரோகம் செய்து விட்டார். எனக்கு... நம் தேசத்திற்கு.. பாரதத்தின் கோடானு கோடி மக் களுக்கு!''

''அவர் தான் போன் செய்தார் என்று உன்னால் நிரூபிக்க முடியுமா முகில்?''

''அவரைத் தவிர வேறு யாருக்கும் வாய்ப்பு இல்லை, வீணா. நிரூபிப்பதற்கு என்ன வசதி இருக்கிறது? நிரூபணம் இருந்தால் நேரே நான் போய் அவரைத் தீர்த்து விட்டு ஜெயிலுக்கும் சந்தோஷமாகப் போவேன். நிரூபணம் இல்லை என்பதால் தானே அந்த பச்சை துரோகத்தை சகித்துக் கொண்டு செயலற்று உட்கார்ந் திருக்கிறேன்.

முகிலனின் உதடுகள் இயலாமையில் எழுந்த கோபத்தில் நடுங்கின.

''முகில், ரத்தினம் செய்தது மாபெரும் தவறு. கோவை யில் மார்க்கெட் வெடிக்கப்பட்ட போது அதில் ஐநூறு பேருக்கு மேல் ஒரே சமயத்தில் செத்துப் போனார்கள். ரயில் வெடிக்கப்பட்டபோது இருநூறு பேருக்கு மேல் இறந்தார்கள். இவ்வளவு உயிர்களுக்கு ஆபத்தாக இருந்த ஒருத்தனைக் கூசாமல் தப்பிக்க விடுவது படு அயோக் கியத்தனம். உயிரோடு வேண்டும். சுடாதே என்று அவர் சொன்னது உயிரோடு அவன் தப்பிக்க வேண்டும் என்பதற்காகத் தானே?'' வீணாவின் குரலிலும் கோபம் சேர்ந்திருந்தது.

அருமைராஜ் என்ன செய்தான் முகில்? தன் ஒளிவிடத்தை விட்டு மறைவிடத்தை விட்டு வெளியே வந்தான் என்றால் எப்பேர்ப்பட்ட ரிஸ்க் எடுத்து அந்த மோகனாவைப் பார்க்க வந்தான்? அப்படியென்றால் அந்த மோகனா அவனுக்கு எவ்வளவு முக்கியமானவளாய் இருந்திருக்க வேண்டும். ஆனால் அவனுக்கு ஆபத்து வரும் என்ற சந்தேகம் வந்தவுடனேயே எப்பேர்ப்பட்ட கல் நெஞ்சு அவனுக்கு. நாளைக்கு ஆபத்து என்றால் இந்த ரத்தினத்தின் குடலைப் பிடுங்கி வெளியே எறியவும் அவன் தயங்கமாட்டான் என்று அவருக்கு ஏன் புரியவில்லை. அவனை வெளியே விடுவதால் இன்னும் எத்தனை நூறு உயிர்களை அவன் பலி வாங்கப் போகிறான் என்று அவருக்குத் தெரியாதா? தெரிந்தும் அவருக்குக் கிடைக்கப்போகும் சில லட்சங்களுக்காக அத்தனை பேர் உயிரையும் அடமானம் வைத்து விட்டாரே.. ரொம்ப கேவலமான விஷயம் இது.. மன்னிக்க முடியாத குற்றம் இது.. இப்பேர்ப்பட்ட ஒருத்தர் உபதலைவர் போன்ற உயர்ந்த பதவியில் உட்கார்ந்திருந்தால், தீவிரவாதத்தை எந்த ஜன்மத்திலும் நம்மால் ஒழிக்க முடியாது...''

வீணாவின் ஆவேசம் முகிலன் முகத்தில் ஒரு ஆறுதல் கொண்டு வந்தது.

''இப்போது என்ன செய்யட்டும், வீணா?''

''ரத்தினம் உபதலைவர் தானே?'' அவருக்கும் மேலே ஒருத்தர் இருக்கிறார் இல்லையா?''

''ஆமாம்...''

''உன் சந்தேகத்தை அவரிடம் சொல்...''



''ஒரு அதிகாரியைப் பற்றி இன்னொரு அதிகாரியிடம் புகார் சொல்வதை பொதுவாக அவர்கள் ரசிப்பதில்லை. வீணா...''

''இருக்கலாம்.. யார் ரசிக்கிறார்கள் யார் ரசிக்கவில்லை என்று பார்த்துக் கொண்டிருக்க முடியாது, முகில். பெரியவரிடம் சொல்லி எச்சரிக்கை செய்ய வேண்டியது உன் கடமை. இனிமேலாவது முக்கியமான தகவல்கள் ரத்தினம் மூலம் லீக் ஆகாமல் அவர் பார்த்துக் கொள்ள முடியும்..''

''நம்பர் ஏ விடம் பேசச் சொல்கிறாய்?''

''தயங்காமல்..'' என்றாள், வீணா. ''அப்போது தான் உன் மனசில் ஒரு சமாதானம் வரும்... அந்த சமாதானம் வரவில்லையென்றால் உன்னால் இனிமேல் வேலையில் சின்ஸியராக இருக்க முடியாது. நாம் என்ன செய்தாலும் வீணாகிவிடும் என்ற கவலையினால் ஒரு அலட்சியம் வந்துவிடும்...''

வீணாச் சொல்லச் சொல்ல முகிலனின் முகத்தில் ஒரு தெளிவு வந்தது.

அவளைப் பார்த்த பார்வையில் ஒரு பெருமிதம் இருந்தது.

''வீணா... உன்னிடமிருந்து நான் நிறைய கற்றுக் கொள்ள வேண்டியிருக்கிறது.. நீ தெளிவாக யோசிக்கிறாய். தீர்மானமான முடிவுகளை எடுக்கிறாய்.. உனக்கு அண்ணனாக இருப்பதே எனக்கு பெருமையாக இருக்கிறது.''

''ச்சீ!''

வீணா கை நீட்டி அவன் தலைமுடியைக் கலைத்தாள்.

அந்தக் கையை அப்படியே பற்றி இழுத்து அவள் புன்னகையில் இதழ்களைப் பதித்தான், முகிலன்.

# 7

தலைவரின் அறைக்குள் நுழைந்ததும் முகிலன் அதிர்ந்து நின்றான்.

தன் வழக்கமான நாற்காலியில் நம்பர் ஏ அமர்ந்திருந்தார். அவன் சற்றும் எதிர்பாராதவிதமாக உபதலைவர் ரத்தினம் பக்கத்து நாற்காலியில் அமர்ந்திருந்தார்.

''வா, முகில்...'' தலைவரின் குரல் கணீரென்று அந்த அறையில் எதிரொலித்தது. ''ஆமைராஜ மேட்டரைப் பற்றி என்னிடம் பேச வேண்டும் என்று நேரம் கேட்டிருந்தாயே... அதனால்தான் ரத்தினத்தையும் வரச் சொன்னேன்.. உட்கார்.''

முகிலன் கணநேரம் தான் தயங்கினான். அவன் சொல்லப் போவது எல்லாமே உண்மை. யாருக்காக அஞ்ச வேண்டும்? எதற்காகத் தயங்க வேண்டும்?

முகிலன் தலைவரின் இருக்கைக்கு நேரெதிர் இருக்கையில் அமர்ந்தான்.

''அருமைராஜ் தப்பித்ததில் எனக்கு சிலர் மீது நிறைய வருத்தங்கள் உண்டு சார்'' என்று எடுத்தவுடன் குற்றம் சாட்டும் தொனியில் ஆரம்பித்தான்.



''யார் மீது வருத்தம்?'' நம்பர் ஏ அதிராமல் கேட்டார்.

''நம் சர்வீஸில் உள்ளவர்கள் மீது'' - முகிலன் அடிப் பார்வையால் ரத்தினத்தை நோட்டமிட்டுக் கொண்டே பேசினான்.

''எப்படி? விளக்கமாய்ச் சொல்.''

''அருமைராஜை நாம் பிடிப்பதற்காக வலைவீசியிருந்தது அவனுக்கு தெரியாது, சார். தெரிந்திருந்தால் அவன் மோகனா வீட்டிற்கு வந்திருக்க மாட்டான். அவன் அங்கு வந்த பிறகு, அவனை பற்றிய தகவலை நான் மேலிடத்திற்கு தந்தேன். அவனை நம் ஆட்கள் சூழ்ந்து மடக்கப் போகிறார்கள் என்ற விவரம் உடனே அவனுக்கு சொல்லப்பட்டு விட்டது. நாம் போகும் முன் அவன் தப்பித்து விட்டான்...''

''எப்படி ரீச் ஆக முடியும்?'' நீ பேசுவது எனக்கு புரியவில்லையே!''

''நான் உங்களிடம் சற்று தனியே பேச வேண்டும் சார், முகிலன் தைரியத்தை வரவழைத்துக் கொண்டு சொன்னான்.''

நம்பர் ஏ, ரத்தினம் இருவர் முகத்திலும் துல்லியமான அதிர்ச்சி.

''அருமைராஜ் பற்றிய எல்லா பிராஜக்டுகளிலும் மிஸ்டர் ரத்தினம் ஈடுபட்டிருக்கிறார் என்பதால்தான் அவரையும் உடன் வைத்துக் கொண்டு உன்னை வேலை செய்யச் சொன்னேன்...''

''உண்மை தான், சார். ஆனால் ஒரு விஷயம் உங்களிடம் நான் தனிமையில் சொல்ல விரும்புகிறேன்.''

தலைவர் ஆட்சேபிக்க வாய் திறந்த போது, ரத்தினம் தன் இருக்கையிலிருந்து எழுந்தார்.

''பரவாயில்லை. என் முன்னிலையில் பேச முடியாமல் அவன் தர்மசங்கடமாக உணரும் போது வற்புறுத்த வேண்டாம்... முகிலன் எது செய்தாலும் இந்த நாட்டின் நலனை மனதில் வைத்துக் கொண்டு தான் செய்வான். அவன் பேரில் எனக்கு முழு நம்பிக்கை இருக்கிறது...''

ரத்தினம் மெல்லிய புன்னகையுடன் சொன்னார். வெளியேறினார்.

என்ன ஒரு அற்புத நாடகம்! முகிலன் பேரில் தனக்குப் பூரண நம்பிக்கை இருப்பதாகத் தெரிவிப்பதன் மூலம் பரஸ்பரம் அவர் பேரில் அவனும் நம்பிக்கை வைத்திருக்க வேண்டும் என்ற எதிர்பார்ப்பு அவர் வார்த்தைகளில் புதைந்திருப்பதாக அவனுக்கு தோன்றியது.

அவர் வெளியேறி கதவு மூடிக் கொண்டதும், முகிலன் தலைவரைப் பார்த்துத் திரும்பினான்.

''அருமைராஜை நான் பார்த்ததும் உடனே அதை உபதலைவருக்குத் தான் தெரிவித்தேன். அதுவும் அவருடைய பிரத்யேக போனில்.''

''அப்படித்தானே ஏற்பாடு?''

''ஆமாம் சார்... அவர் அதை உடனே உங்களுக்குத் தெரிவித்தாரா?''

''எதற்கு? எந்த முடிவாயிருந்தாலும் எடுப்பதற்கு அவருக்கே உரிமை இருந்தது. ஒவ்வொரு அடியெடுத்து வைக்கும் போதும் அவர் என்னிடம் தெரிவித்துக் கொண் டிருக்க வேண்டும் என்றால் அதற்கு அந்த பதவி எதற்கு? நேரடியாக நானே கவனித்துக் கொண்டிருப்பேனே...''



''ஆக, அவர் உங்களிடம் தெரிவிக்கவில்லை. சில ஆபீஸர்களுக்கு வேளச்சேரி வீட்டை உடனடியாக சூழ்ந்து கொள்ளச் சொல்லி உத்தரவு கொடுத்திருப்பார். அவர்களுக்கும் அது அருமைராஜை மடக்குவதற்காகத் தான் என்று கடைசி நிமிடத்தில் தெரிவித்தால் போதும்...''

''அப்படித்தான் செய்திருப்பார்...''

''அவர் தொடர்பு கொண்ட அதிகாரிகளில் யாருக் காவது வேளச்சேரி முகவரியைக் கேள்விப்பட்டதுமே அது மோகனாவின் இருப்பிடமாயிற்றே என்று புரிந்து போயிருக்கலாம். அதாவது அந்த அதிகாரி அருமை ராஜின் கைக்கூலியாக இருக்கும் பட்சத்தில் அந்த போனுக்கு உடனே தொடர்பு கொண்டு அருமைராஜை எச்சரித்திருக்கலாம்.. அப்படியில்லையென்றால்...''

முகிலன் தயங்கி நிறுத்தினான்.

''அப்படியில்லையென்றால்? சொல்ல வந்ததை தயங்காமல் சொல், முகிலன்...''

''உபதலைவரிடம் நான் தகவல் கொடுத்து சில நொடிகளுக்குள் மோகனா வீட்டில் போன் ஒலித்தது, சார். போனில் நடந்த உரையாடல் என்ன என்று எனக்குத் தெரியாது. ஆனால் அந்த போன் அருமைராஜிற்குத்தான் வந்தது. மறுமுனையில் இருந்தவருடன் பேச அருமை ராஜ் எந்த தயக்கமும் காட்டவில்லை. அவனுக்கு நம் பிக்கையுள்ள ஒரு நபர் தான் மறுமுனையில் இருந்திருக்க வேண்டும். நாம் அவனை மடக்கப் போகிறோம் என்ற தகவல் தான் அந்த போன் வழியே அவனுக்கு எச்சரிக் கப்பட்டது என்பதில் எனக்கு எந்த சந்தேகமும் இல்லை

சார்... அவனுடைய ஆட்களில் யாராவது தொடர்பு கொண்டு தகவல் கொடுத்திருக்க வேண்டும். அவனுடைய ஆள் என்று நான் குறிப்பிடும் அந்த நபர் இங்கேயே நம் ரகசிய சர்வீஸிலேயே ஒரு பொறுப்பான பதவியில் இருப்பவராய் இருக்கக்கூடும் என்று தான் எனக்கு அழுத்தமான சந்தேகம் வருகிறது சார்.''

''நீ உபதலைவரை சந்தேகப்படுகிறாயா?''

அவன் சுற்றி வளைத்துச் சொன்னதை உறுதிப்படுத்துவது போல் நேரடியான கேள்வி தலைவரிடமிருந்து வீசப்பட்டது. ஆனால் முகிலன் பதிலுடன் தயாராயிருந்தான்.

''உபதலைவர் சந்தேகத்திற்கு அப்பாற்பட்டவர் என்று எனக்குத் தோன்றவில்லை சார்...''

''அந்த வார்த்தைகளில் அதிர்வு அடங்கும் வரை நம்பர் ஏ எதுவும் பேசாமல் பொறுமையாக அவனையே பார்த்தார்.''

''நாளைக்கு நீ என்னை கூட சந்தேகப்படுவாயா முகில்?''

அவன் பிரமித்துப் பார்த்தான்.

''உபதலைவர், ரத்தினத்தின் ரெக்கார்டுகளில் ஒரு கரும்புள்ளி கூடக் கிடையாது. அவரை காக்காயோ, குருவியோ, இந்த பதவியில் கொண்டு வந்து போடவில்லை. இரவு பகல் பாராமல் அவர் உழைத்த உழைப்பிற்குக் கிடைத்த பரிசு தான் இந்த பதவி, சொல்லப் போனால் இன்னும் எட்டு மாதத்தில் நான் ரிடையர்



ஆனதும் இந்த நாற்காலியில் அமரப் போகிறவர் ரத்தினம் தான். அவருக்கு அதற்கான தகுதி முழுமையாக இருக்கிறது. ஆனாலும்.. ஆனாலும் நீ பொறுப்பில்லாமல் இன்னொருத்தர் பேரில் குற்றம் சாட்டுபவன் இல்லை. உன் உணர்வுகளை நான் மதிக்கிறேன். ஆனால், இது குடும்பம் இல்லை. உணர்வு பூர்வமான சந்தேகங்களுக்கு இங்கு மதிப்பில்லை. நிரூபணம் வேண்டும். யார் பேரில் குற்றம் சுமத்தினாலும் அதற்கு ஒரு நிரூபணம் வேண்டும்... நீ தொடர்ந்து அவரைக் கண்காணி... அவ்வப்போது எனக்கு ரிப்போர்ட் கொடு.. நானும் கவனமாய் இருக்கிறேன்... அவருக்கு எதிராக நம்மிடம் உறுதியான ஆதாரம் கிடைத்ததும், உடனடியாக ஆக்ஷன் எடுப்போம்...''

''தேங்க்யூ சார்...''

''நான் தான் உனக்கு நன்றி சொல்ல வேண்டும்... எது எப்படிப் போனால் என்ன என்று விட்டேற்றியாக இல்லாமல் நீ பொறுப்பாய் இருப்பதற்கு.. உன்னை நினைத்து நான் பெருமைபடுகிறேன்.''

முகிலன் நெகிழ்ச்சியோடு நம்பர் ஏ வை நிமிர்ந்து பார்த்தான்.

இன்னும் எட்டுமாதத்தில் இவர் ரிடையர் ஆனதும், ரகசிய சர்வீஸ் ஒரு நேர்மையான தலைவரை இழந்து விடுமே என்று கவலைப்பட்டான்.

''ஆல் தி பெஸ்ட்'' என்று அவர் கைகுலுக்கி விடைகொடுத்தபோது பெருமிதமாய் உணர்ந்தான்.

* * *

அவன் வெளியே வந்த அதே நொடியிலா ரத்தினம் தன் அறையிலிருந்து வெளிப்பட வேண்டும்?

மரியாதை அவனை நிற்கச் சொன்னது.

''தனியே பேசி விட்டாயா?'' ரத்தினத்தின் குரலில் மெலிதான கோபம் இருநத்து.

முகிலன் வியர்த்தான்.

''என்ன செய்கிறோம் என்பதைத் தெரிந்து செய், முகில் அது தான் உனக்கு நல்லது...''

''ரத்தினம் உதடுகளை அதிகம் திறக்காமல் சொன்னார்.''

எச்சரிக்கையா? வெளிப்படையான மிரட்டலா?

எதுவாய் இருந்தாலும் முகிலன் எதிர்கொள்ளத் தயாராய் இருந்தான்.

''யெஸ் சார்'' என்று விறைப்பாகச் சொல்லிவிட்டு வாசல் நோக்கி நகர்ந்தான்.

# 8

முகிலன் கண்களில் தண்ணீரை வாரி வாரி தெளித்துக் கொண்டான். உறக்கத்தைத் துரத்தினான்.

''முகில்...'' வீணா ஒரு கோப்பை தேனீருடன் வந்து நின்றாள். ''எதற்காக இவ்வளவு பாடுபடுகிறாய்?''

முகிலன் சரக்கென்று திரும்பினான்.

''வீணா.. என் சந்தேகம் அர்த்தமற்றது இல்லை... ரத்தினம் உபதலைவராகப் பதவி உயர்வு பெற்று



இருண்டு வருடம் ஆகிறது. இந்த இரண்டு வருடத்தில் நிகழ்ந்த முக்கியமான சம்பவங்களை எல்லாம் பட்டியல் போட்டிருக்கிறேன்... ரகசிய சர்வீஸின் வேலைகளில் முக்கியமாய் நடந்த நான்கு விஷயங்கள் தோல்வியில் முடிந்திருக்கின்றன. அந்த நான்கிலும் ரத்தினம் தான் முக்கியப் பொறுப்பில் இருந்திருந்திருக்கிறார்.''

''உண்மையாகவா?'' - வீணாவின் குரலில் வியப்பு.

''ஆமாம், வீணா... அந்த நான்கு காரியங்களிலும் ஈடுபட்டிருந்த மற்றவர்களுடன் நான் தனித்தனியே பேசப் போகிறேன்...'' நிச்சயம் ஆதாரங்கள் கிடைக்கும் என்று எனக்கு நம்பிக்கை இருக்கிறது...''

''இவ்வளவு உயிரைக் கொடுப்பதற்கு பேசாமல் உன்னாலேயே உபதலைவராக்கி விடலாம்...''

''எனக்கு பதவி ஆசை இல்லை, வீணா... ஆனால் துரோகிகளை ஒழித்தால் போதும்...''

''ரத்தினத்திற்கு எதிராக இப்போது ஆதாரங்கள் இருக்கின்றன, தானே?''

''இல்லை, வீணா ''முகிலன் குரலில் ஏமாற்றம்'' ஒன்று என்றும் இரண்டு என்று மறைமுகமாக சுட்டிக் காட்டுகின்றன... ஆனால் நேரடி ஆதாரம் இல்லை.. நான் விடப்போவதில்லை... எப்படியாவது சேகரித்து விடு வேன்...''

முகிலன் தேநீரை உறிஞ்சிக் கொண்டிருந்த போது, அம்மா தன் அறையிலிருந்து வெளிப்பட்டாள்.

''இரண்டு பேரும் இன்னுமா தூங்காமல் கொட்டம் அடித்துக் கொண்டிருக்கிறீர்கள்?''

''இல்லைம்மா.. வந்து...''

''முகில் நீ சொல்வது நியாயமா, சொல்.. உனக்குத் தான் ஆபீஸ் வேலை முக்கியம்.. வீணாவை ஏன் வதைக்கிறாய்? கல்யாணம் ஆக வேண்டிய பெண்..இப்படி ராத்தூக்கம் கெட்டுப் போனால் கண்ணுக்கு கீழே கருவளையம் வந்து விடும்...''

''நான் அவளைக் கூப்பிடவில்லை... போய்த் தூங்கு, தூங்கு என்று தான் ரொம்ப நேரமாக சொல்லிக் கொண்டிருக்கிறேன்'' என்று முகிலன் அப்பாவி போல் முகத்தை வைத்துக் கொண்டு சொன்னான்.

வீணா கையைச் சுழற்றி அவன் முதுகில் தொம் என்று அடித்து, ''ராஸ்க்கல்.. நாளையிலிருந்து, டீ கொண்டு வா, காபி கொண்டு வா என்று தரவாங்கட்டையைப் பிடித்துக் கெஞ்சினாலும் உனக்கு கிடைக்காது...'' என்று போலிக் கோபத்துடன் சொல்லிவிட்டு சரக்கென்று திருப்பி படுக்கைக்கு நடந்தாள்.

அம்மா முகிலனை நெருங்கி வந்தாள்.

''டேய்... எப்பொழுது பார்த்தாலும் வேலை வேலை என்று ஆபீசையே நினைத்துக் கொண்டிருக்கிறாயே.. உன் தங்கைக்குக் கல்யாண வயசாகிவிட்டது ஞாபகம் இருக்கிறதா இல்லையா?''

''இப்படி உட்காரும்மா...'' முகிலன் நாற்காலியைத் திருப்பிப் போட்டான். ராத்தூக்கம் கலைந்து அம்மா தெளிவுடன் அவனைப் பார்த்தாள்.

''உனக்கு ஜெயசூர்யாவை ஞாபகம் இருக்காம்மா?''

''நம்ம ஜெயசூர்யாவா? உன்னோட காலேஜில் படித்தானே!'' அம்மா குரலில் சந்தோஷ வியப்பு. ''தங்கமான பையனாயிற்றே!''



''அந்தத் தங்கமான பையனுக்கு உன் தங்கமானப் பெண்ணைப் பிடித்திருக்கிறது.''

''நிஜமாகவா சொல்கிறாய்?'' அம்மா முகமெங்கும் பூரிப்பு. ''நீ வீணாவுக்கு மாப்பிள்ளை பார்த்து விட்டாயா? சொல்லாமலேயே வைத்திருந்தாயே படவா...''

''இன்னும் ஆறுமாதம் போகட்டும் என்று வீணா சொன்னாள் அம்மா...''

''ஜெயசூர்யா பற்றி வீணாவிடமும் சொல்லி விட்டாயா?''

''சுற்றி வளைத்துப் பேசியிருக்கிறேன்.. அவளுக்கு அவன் பேரில் ஒரு பிரியம் இருக்கிறது. பட்டென்று தேங்காய் உடைத்தால் போல் நேரடியாக இன்னும் கேட்கவில்லை...''

''கேட்டு விடு, முகில்.. வீணாவின் கல்யாணத்தைத் தள்ளிப் போடுவது நல்லதில்லை... இன்னும் ஆறு மாசத்திற்குள் பண்ணவில்லையென்றால் அடுத்த நான்கு வருஷத்திற்கு அவளுக்குக் கல்யாண ராசி இல்லை என்று ஜோசியர் சொல்லியிருக்கிறார்.. வா, நாளைக்கே நானும், நீயும் சூர்யாவீட்டிற்குப் போய் பேசிவிட்டு வருவோம்...''

''சூர்யா ஊரில் இல்லைம்மா.. ஞாயிற்றுக் கிழமை போவோம்...''

''அதற்கு மேலும் தள்ளிப் போடாதே.. உன்னால் வரமுடியாவிட்டால் நான் மட்டும் போய் வருகிறேன்...''

''கட்டாயமாக ஞாயிற்றுக்கிழமை போகலாம்'' - முகிலன் அம்மாவிற்கு சத்தியம் செய்து கொடுப்பது போன்ற குரலில் சொன்னான்.

அம்மா நம்பிக்கையுடன் சற்று சந்தோஷத்துடன் எழுந்தாள்.

# 9

ஞாயிற்றுக் கிழமை.

அம்மா புடவை மாற்றிக் கொண்டு தயாராகிவிட்டாள். ஆனால் முகிலனைக் காணவில்லை.

''உன் அண்ணனுக்குக் கொஞ்சமாவது பொறுப்பு இருக்கிறதா? ஜெயசூர்யா வீட்டிற்குப் போகலாம், நான்கு மணிக்கெல்லாம் வந்துவிடுகிறேன் என்று சொல்லி விட்டு தானே போனான்? மணி ஐந்தாகப்போகிறது. இன்னும் ஆளையே காணோம்.. அப்படியென்ன ஞாயிற்றுக் கிழமையானாலும் தலைபோகிற சமாச்சாரம் என்று ஆபீஸ் போவுது?''

''அண்ணனை ஒன்றும் சொல்லாதேம்மா, வந்து விடுவான்.. ஆபீஸில் என்ன வேலையோ, என்ன பிரச்சனையோ?''

வீணா வாசலில் பார்த்துக் கொண்டே சொன்னாள்.

''அவன் செல் நம்பருக்கு போன் பண்ணிக் கேளேன்'' - அம்மா படபடத்தாள்.

''சரிம்மா...'' வீணா அம்மாவை சமாதானப்படுத்துவதற்காக முகிலனின் நம்பரை டயல் செய்தாள்.



எதிர்முனையில் அந்த போன் ஒலிக்காது என்று அவளுக்குத் தெரியும்.. முகிலன் செல்போனை அணைத்து வைத்திருப்பான்... என்னவோ தகிடுதத்தம் பண்ணி உபதலைவர் ரத்தினத்தின் அறைக்கான சாவிக்கு ஒரு டூப்ளிகேட் செய்திருந்தான். ஞாயிற்றுக்கிழமை பகலில் தான் அவர் அலுவலகத்திற்கு வரமாட்டார் என்ற துணிச்சலில் அவர் அறைக்குள்ளேயே நுழைந்து ஆராய்வதற்காக அவசரமாகப் புறப்பட்டுப் போனான். அங்கே இருக்கும் போது செல்போன் ஒலித்து அவனைக் காட்டி கொடுத்து விடக்கூடாது என்பதற்காக அதை அணைத்து வைத்திருப்பான் என்று அவளுக்குத் தெரியும்.

முகில் நீ இப்போது என்ன செய்து கொண்டிருக்கிறாய்?

* * *

முகிலன் சருமத்தோடு ஒட்டியிருக்கும் கையுறைகளை அணிந்திருந்தான். அவனுடைய கை ரேகை எந்த இடத்திலும் பதிந்து விடக்கூடாது என்பதில் கவனமாக இருந்தான்.

ரத்தினத்தின் அறை அவன் எதிர்பார்ப்பதை விட பாதுகாப்புக் குறைவாகவே இருந்தது.

புத்தகங்கள், கோப்புகள், சின்னச் சின்னக் குறிப்புகள் எல்லாமே ஒற்றைச் சாவியால் திறக்கும் அறைகளிலேயே கிடைத்தன.

முகிலன் தன்னிடமிருந்த மினி கேமிராவில் அவசியம் என்று தோன்றிய பகுதிகளைப் பதிவு செய்து கொண்டான்.

ரத்தினத்தின் மேஜை இழுப்பறைகளில் கடைசி இழுப் பறையில் அவனுக்குப் பொக்கிஷம் கிடைத்தது.

இரண்டு தடிமனான அட்டைகளுக்கு நடுவில் சில தாள்கள் வைக்கப்பட்டிருந்தன.

மேலாகப் பார்த்தால், அந்தத் தாள்கள் எல்லாமே வெற்றுத் தாள்களாக வெறுமையானவையாகத்தான் தெரிந்தன.

வெற்றுத் தாள்களுக்கு இரத்தினம் இவ்வளவு முக்கியத்துவம் கொடுக்க மாட்டார்.

முகிலன் ஒவ்வொரு தாளாக கவனமாக எடுத்தான். மேஜை விளக்கின் அடர்த்தியான ஒளிக்குக் கீழே வைத்து மெல்லப் புரட்டிப் பார்த்தான். கிட்டத்தட்ட நூற்றி எண்பது டிகிரி திருப்பியதும், அந்தக் காகிதத்தில் வரிவரி யாக நிழல் விழுந்தது.

ஒரு பொண்ணை முனையால் எழுதப்பட்ட எழுத் துக்கள் மேடு பள்ளமாகப் பதிவானது போல் தெரிந்தன.

முகிலனுக்குப் புரிந்தது.

அவசரமாக ஒரு சேதியைக் குறிக்கும் போது, எழுத் துக்களின் அழுத்தம் அடுத்த தாளிலும் அடையாளமாக விழுந்து விடுமே, அந்த மாதிரியான தாள் இது. இதற்கு முந்தின தாளில் எழுதப்பட்ட எழுத்துக்களின் பதிவு இது. பென்சில் முனையைத் துருவிப் போடலாம். அல்லது வேறு வர்ணத்தில் நயமான தூள்களைத் தூவலாம். அப்படிப் போட்டு ஊதினால், எழுத்துக்களின் பள்ளங் களில் மட்டும் வர்ணம் படிந்து போய் இன்னும் தெளிவாக விளங்கும்.



ஆவலை அடக்க முடியாமல் ஒரு தாளை மட்டும் மேஜை மீது வைத்து பென்சிலின் கருப்பு முனையை பிளேடால் சுரண்டி அதில் தூவினான். எழுத்துக்கள் உயிர் பெற்றன.

MARCH 7

11:30

SUGUNA

முகிலன் நிமிர்ந்தான். சுருணா என்பவர் ரகசிய சர்வீஸில் முக்கியப் பொறுப்பில் இருந்தவள். அவள் ஆபீஸ் ரகசியங்களை வெளியே லீக் செய்கிறார்களோ என்று முகிலன் தான் முதலில் சந்தேகம் எழுப்பினான். அவளைக் கையும் களவுமாகப் பிடிக்கத் திட்டமிட்டிருந் தான்.

மார்ச் ஏழாம் தேதி இரவு பதினொன்றரை மணிக்கு அவளுடைய குடியிருப்பில் அவளை சந்தித்து ஒரு ரகசியத்தை வாங்கிப் போக எதிரி நாட்டு ஒற்றன் வரு கிறான் என்ற தகவல் கிடைத்தது. அவர்கள் இருவரையும் மடக்க ரகசிய சர்வீஸ் திட்டமிட்டிருந்தது.

ஆனால் இரவு பதினோரு மணிக்கு சுருணா தற் கொலை செய்து கொண்டாள்.

முகிலனால் அப்போதும் எதுவும் நிரூபிக்க முடிய வில்லை.

ஆனால் இதோ இந்தத் தாள் ஒரு முக்கிய தடயம்.

சுகுணாவோ அல்லது வேறு யாரோ எச்சரிக்கப்பட் டிருக்கிறார்கள் என்பதற்கான சான்று.

இதைப்போல எல்லாத் தாள்களிலும் ஏதாவது ஆதாரம் கிடைக்கும்.

மறுநாள் தலைவரையும் உடன் அழைத்துக் கொண்டு இந்த அறைக்குள் பிரவேசிக்க வேண்டும். ரத்தினத்தைத் தோலுரித்துக் காட்ட வேண்டும்.

முகிலன் அந்தத் தாளைத் தன் கேமிராவில் படம் எடுத்து பதிவு செய்தான்.

அடுத்தடுத்த தாள்களில் பென்சில் பொடி தூவி ஒவ்வொரு தகவலையும் கேமிராப்பதிவு செய்து கொண்டான்.

பின், கவனமாக அந்தத் தாள்களை எடுத்துப் போய் வாஷ்பேஸினில் முனை பிடித்துத் தட்டினான்.

கருப்புத் துகள்கள் விழுந்தன. ஒட்டிக் கொண்டிருந்த ஒன்றிரண்டு தூளையும் ஊசி எடுத்து தண்ணீர் விட்டுக் கரைத்தான்.

அந்தத் தாள்களைப் பழையபடி எடுத்த இடத்திலேயே வைத்தான்.

ரத்தினத்திற்கு எதிரான தடயங்கள் கிடைத்து விட்ட திருப்தியுடன் அவன் முகம் பிரகாசித்தது. அவன் அந்த அறையில் நுழைந்தது, ஆராய்ந்தது எதுவுமே வெளிப் படையாகத் தெரியவில்லையே என்று மறுபடி பார்த்து தெளிவு செய்து கொண்டான்.

அவன் வந்து போனதற்கான தடயம் எதுவும் இல்லை என்று நிச்சயம் செய்து கொண்டதும், முகிலன் மெல்ல அந்த அறையிலிருந்து வெளிப்பட்டான்.



தலைவருக்கு போன் செய்து மறுநாள் ஆதாரங்களைக் காட்டுவதாக வாக்குக் கொடுத்தான்.

* * *

'என்ன கண்றாவி ஆபீஸாடா அது? ஞாயிற்றுக் கிழமை கூட நிம்மதியாக விடாத ஒரு ஆபீஸ் உனக்கு வேண்டாம்.. பேசாமல் ராஜினாமா பண்ணி விட்டு பெட்டிக் கடை வை'' - அம்மா பொரிந்தாள்.

சொன்ன நேரத்தில் வந்து சேரவில்லை என்ற கடுப்பு அவளுக்கு.

''இதோம்மா.. இரண்டே நிமிஷம்...'' தன் அறைக்குள் பாய்ந்து நுழைந்த முகிலன் அங்கிருந்தே வீணாவைக் கூப்பிட்டான்.

''வீணா.. இந்த கேமிராவை பத்திரப்படுத்து.. ரத்தினத்திற்கு எதிரான முக்கியமான சில ஆதாரங்கள் கிடைத்திருக்கின்றன'' - முகிலனின் குரலில் பரபரப்பு இருந்தது.

அவசரமாக உடைமாற்றிக் கொண்டு வீணாவின் நெற்றியில் ஒரு முத்தம் பதித்தான்.

''ஸாரி டியர் உன் கல்யாணத்திற்காகப் பேசப்போகும் போது கூட ஆபீஸைப் பற்றிப் புலம்பிக் கொண்டிருக்கிறேன், பார்..''

''ஏய்.. நீ என்ன ரொம்ப சம்பிரதாயமாகப் பேசுகிறாய்?''

''ஜெயசூர்யா உனக்கு ஓ.கே. தானே வீணா?''

''உன் சாய்ஸ் எப்போதும் தப்பாக இருக்காது, முகில்'' சொல்லும்போது வீணாவின் கன்னங்கள் மெலிதாக சிவந்தன.

முகிலன் அதை ரசித்து அவள் கன்னத்தில் தட்டி விட்டு வெளியறைக்கு வந்தான்.

''அம்மா நான் ரெடி...''

''ரெடி என்று அறிவிப்பு கொடுத்தால் போதுமா? அந்தப் பழக்கூடையை எடுத்துக் கொள்...'' - அம்மா கண்ணாடியில் பார்த்து தன் தலைமுடியை சரி செய்து கொண்டாள்.

''வீணாக் கண்ணு... நானும் உங்கண்ணனும் போய் விட்டு வருகிறோம். ஆறு மாசம், எட்டு மாசம் என்றெல் லாம் கல்யாணத்தைத் தள்ளி வைக்காமல் சீக்கிரமே ஒரு முகூர்த்த தேதி பார்த்து விடுகிறோம், சரியா?''

''ஆறு மாசம் கழித்தே ஒரு நாள் பாரும்மா.'' என்றாள் வீணா, ''அதுவரைக் கொஞ்சம் அவனோடு ஜாலியாக சுற்றிக் கொண்டிருப்பேன்!''

''கழுதை.. அம்மாவிடம் பேசுகிற பேச்சா இது?'' என்று அவள் தலையில் செல்லமாகக் குட்டிவிட்டு அம்மா மாருதியில் ஏறி அமர்ந்தாள்.

முகிலன் புன்னகையுடன் கையசைத்து விட்டு காரைக் கிளப்பினான்.

ரத்தினத்தின் அறையில் அவன் பார்த்த குறிப்பேட்டுத் தாள்களைப் பற்றி மனம் அசைபோட்டது.

முகிலனுக்கு திடீரென்று ஒரு வெளிச்சம் கிடைத்தாற் போல் இருந்தது. வீடு திரும்பியதும் இதை வீணாவிடம் விவாதிக்க வேண்டும்!



# 10

அம்மா ரொம்ப சந்தோஷமாய் இருந்தாள்.

''முகில், ஜெயசூர்யா உன்னை விடக் கூட நல்ல பையனாகத் தெரிகிறானடா...''

முகிலன் மாருதியை செலுத்திக் கொண்டே அம்மாவைப் பார்த்து புன்னகைத்தான்.

''தெரியும் அம்மா.. என்றைக்குமே பிள்ளையை விட மாப்பிள்ளை உசத்தி தான்...''

ஜெயசூர்யாவின் வீட்டில் எல்லோருக்குமே இந்த சம்பந்தத்தில் பெருமகிழ்ச்சி. அந்த சந்தோஷம் ஜெயசூர் யாவை மட்டுமல்ல முகிலனையும் தொற்றிக் கொண் டிருந்தது.

''முகில், தேங்க்ஸ்டா.. வீணா எனக்குக் கிடைப்பாளா என்று நான் ஏங்கியக் காலம் உண்டு. நீயாக வந்து சம்மதம் சொன்னதும் ஐ'ம் ஸோ ஹேப்பி..'' என்று ஜெயசூர்யா முகிலனை தனியே அழைத்துப் போய் அணைத்துக் கொண்டது முகிலனுக்கு இன்னும் ரீங்கரித்துக் கொண் டிருந்தது.

ஜெயசூர்யாவைப் போலவே வீணாவும் தன் பிரி யத்தை வெகு ரகசியமாக வைத்திருக்கிறாள் என்று முகிலனுக்குப் புரிந்திருந்தது.

கல்யாணத்தை எப்படியெல்லாம் சிறப்பாக நடத்த வேண்டும் என்று அம்மாவுடன் பேசிக்கொண்டே வந்ததில், திடீரென்று தான் அந்த லாரியை கவனித்தான்.

குறுகலான சாலை. அதை அகலப்படுத்த இடதுபுறம் தோண்டிக் குழியெடுத்திருந்தார்கள். சாலையின் இடது விளிம்பை ஒட்டி முகிலன் தன் மாருதியை செலுத்திக் கொண்டிருந்தான்.. எதிரே கண்மூடித்தனமான வேகத்தில் அந்த லாரி வந்தது... அந்தக் குறுகலான பாதை இருட்டு காரணமாக அபாயகரமானதாக விளங்கியது. லாரி அவசியம் வேகத்தைக் குறைத்திருக்க வேண்டும். அல்லது இடது பாதியில் பயணம் சென்றிருக்க வேண்டும். இரண்டு செய்யாமல் சாலையின் வலது பாதியில் எதிரே அது ராட்சத வேகத்தில் வருவது கண்டு முகிலன் அதிர்ந்தான்.

மாருதியை எவ்வளவு முடியுமோ அவ்வளவு ஒடுக்கி இடது விளிம்பருகே நிறுத்தினான். விளக்குகளைப் போட்டுக் காட்டினான்.

லாரி நினைத்திருந்தால் வேகம் குறைத்து ஒதுங்கிப் போயிருக்கலாம். செய்யவில்லை. ஆவேசமாக முகிலனின் காரைக் குறி வைத்தது போல் பாய்ந்து வந்தது.

அம்மா மிரண்டாள். முகிலனின் கையை ஆர்வத்துடன் பற்றிக் கொண்டாள்.

லாரி ஒதுங்கிப் போகாது என்பது தெளிவாகத் தெரிந்திருந்தால் அம்மாவுடன் முகிலன் காரிலிருந்து இறங்கி ஒதுங்கியாவது நின்றிருக்கலாம். பரபரப்பாக விளக்கை அணைத்து அணைத்துப் போட்டான்.

லாரி வெறி வந்த சிறுத்தை போல் மாருதியின் மீது பாய்ந்தது. மோதித் தூக்கி எறிந்தது.



மாருதி அந்தரத்தில் இரண்டு குட்டிக்கரணம் போட்டு பாதையிலிருந்து வீசப்பட்டது. பெரிய மரத்தின் கனத்த உடலின் மீது ஒரு வேகத்துடன் மோதி நசுங்கிக் கீழே சரிந்தது.

லாரி ஒரே ஒரு கணம் நின்று, காரிலிருந்தவர்கள் தப்பிக்கவில்லையே என்று நிச்சயம் செய்து கொண்டது போல் சீறிப் புறப்பட்டது. மறுபடி நிற்காமல் விரைந்தது.

## 11

வெள்ளைத் துணி விலக்கப்பட்டு அந்த முகங்கள் காட்டப்பட்டன.

வீணாவின் அடிவயிற்றில் நெருப்புப் பந்து வெடித்தாற் போலிருந்தது.

''அம்மா!'' என்று அலறினாள். ''முகில்!'' என்று கதறினாள்.

முகம் சிதைந்து, எலும்புகள் நொறுங்கி, மீட்க முடியாதக் கட்டத்திற்குத் தள்ளப்பட்டு விட்ட இரண்டு பேரையும் பார்த்த போது நெஞ்சு துடித்தது.

''நீ தான் வீணாவாம்மா?'' - அவளை நெருங்கி அன்புடன் விசாரித்தவரைத் திரும்பிப் பார்த்தாள்.

முகிலனின் தலைவர் நம்பர் ஏ.

அவரைப் பார்த்ததும் அவள் அழுகை அதிகமானது. அந்த அழுகையினூடே ஆத்திரமும் வெடித்தது.

''பார்த்தீர்களா, சார், என் அண்ணின் நிலைமையை? நேர்மையாக இருந்ததற்கு இது தான் உங்கள் பரிசா?''

நம்பர் ஏ தர்மசங்கடத்துடன் கால் மாற்றி நின்றார்.

''இது விபத்தில்லை, சார்... திட்டமிட்ட சதி.. என் அண்ணனோடு சேர்த்து என் அப்பாவி அம்மாவையும் கொலை செய்துவிட்டார்கள்...''

நம்பர் ஏ அவள் தோளில் தட்டி சமாதானம் செய்தார்.

''சத்தமாகப் பேசாதேம்மா. கொலை கொலை என்றால், யார் கொலை செய்தார்கள் என்கிறாய்?''

''துரோகிகள்.. சீக்ரெட் சர்வீஸில் இருக்கும் ரத்தினம் போன்ற துரோகிகள்...''

''ஆதாரம் இல்லாமல் யார் மீதும் குற்றம் சாட்டக் கூடாதும்மா...''

''ஆதாரம் இருக்கிறது சார்...''

''ஷ்ஷ்... கத்தாதே'' நீ ஒன்று செய்.. ஆதாரங்களுடன் என்னை ஆபீஸில் வந்து பார்.. முகிலன் எங்கள் ஆபீஸில் இருந்த ஒரு புதையல். அவனை இழந்ததற்கு ஒரு சதி காரணமாக இருந்தால் அந்த சதி செய்தவர்களை நாம் சும்மா விடப் போவதில்லை.''

நம்பர் ஏ உறுதியாகச் சொன்னார். அப்புறம் இன்னும் குரலை இறக்கிக் கொண்டார்.

''அப்புறம், இன்னொரு விஷயம்.. நீ ரத்தினத்திடம் கோபம் எதுவும் காட்டாதே! உனக்கு விஷயம் தெரியும்



என்று காட்டிக் கொள்ளாதே! அப்புறம் உண்மையிலேயே அவர் பேரில் தவறு இருந்தால் உஷாராகி விடுவார்...''

வீணா கண்ணீருடன் தலை அசைத்தாள்.

## 12

கனவு வீணாவை திடுக்கிட்டு எழுப்பி உட்கார்த்தியது.

உடல் முழுவதும் வியர்த்திருந்தது. உடைகள் நனைந்திருந்தன. படுக்கை விளக்கை போட்டுக் கொண்டு உட்கார்ந்தாள்.

ச்சே, என்ன ஒரு பயங்கரக் கனவு!

கூரையிலிருந்து முகிலன் தலைகீழாகத் தொங்க விடப்பட்டிருந்தான், அவன் தலை பூமியிலிருந்து நான்கடி உயரத்தில் ஊசலாடியது பூமியில் அவனுக்கு நேர் கீழே விறகுகள் குவிக்கப்பட்டு பற்ற வைக்கப்பட்டிருந்தது. குபுகுபுவென்ற புகையும், திமிறி நாக்கு நீட்டும் தீயுமாக அவன் உடலை நெருப்பு பற்றிக் கொள்ள விழைந்தது.

அம்மாவை ஒரு தூணில் கட்டிப் போட்டிருந்தார்கள். முகத்தை கறுப்புத் துணியால் மூடியிருந்த ஒருவன் அம்மாவின் கையை மளுக் என்று விறகு உடைப்பது போல் உடைத்து எடுத்து வந்தான். விறகுகளோடு விறகாக செருகினான்.

அம்மா அலறிய அலறலோடு வீணாவின் அலறலும் சேர்ந்து விழிப்பு தந்து விட்டது.

வீணா தண்ணீரை வாரி எடுத்துக் குடித்தாள்.

அவளும், முகிலனும், அம்மாவும் சேர்ந்து எடுத்துக் கொண்ட புகைப்படம் மேஜை மீது வீற்றிருந்தது.

அதைப் பார்க்கப் பார்க்க துக்கம் உள்ளுக்குள் குமுறியது.

''முகில்.. உனக்கு ஒரு விஷயம் தெரியுமா? ரொம்ப நாட்களாக நான் உன்னிடம் கேட்டுக் கொண்டிருப் பேனே, என்னையும் உன் துறையில் வேலைக்கு சேர்த்துக்கொள் என்று. ஒவ்வொரு தடவையும் நீ ஏதாவது சொல்லித் தட்டிக் கழிப்பாயே.. இப்போது நான் ரகசிய சர்வீஸில் சேர்ந்து விட்டேன் என்பது உனக்குத் தெரி யுமா? ஆச்சரியமாயிருக்கிறதா? நம்பர் ஏ தான் என்னை வரச் சொல்லியிருந்தார். நீ ரத்தினத்தின் அறையிலிருந்து கேமிராவில் என்னென்னவோ படம் பிடித்து வந்திருந் தாயே..அத்தனை ஆதாரங்களையும் உடனே நம்பர் ஏ விடம் காட்ட எனக்கு இஷ்டமில்லை. அந்த ஆதாரங் களையும் ரத்தினம் ப்பூ என்று ஊதிக் கலைத்து விட்டால்? சில ஆதாரங்கள் உள்ளன என்று மட்டும் தான் சொன்னேன். ஒன்றிரண்டு டிஜிட்டல் போட்டோக்களை மட்டும் காட்டினேன்... ஆபீஸில் உன்னுடைய அறையை எனக்கு தரச் சொல்லிக் கேட்டிருக்கிறேன். நீ ஏற்கெனவே சேர்த்து வைத்திருக்கும் ஆதாரங்களின் அடிப்படையில் நான் ஆராயப் போகிறேன். அழுத்தம் திருத்தமான ஆதாரங்களை சேகரிக்கப் போகிறேன். துரோகிகளுக்கு தண்டனை வாங்கித் தரப் போகிறேன்.. உன்னை நம்பி



தான் முகில் நான் இந்தக் காரியத்தில் இறங்குகிறேன்... நீ என்னுடன் இரு... எனக்கு எல்லா உதவிகளும் செய்...''

பேசி முடித்த போது கண்கள் ஈரமாகி இருந்தன.

வீணா அந்த புகைப்படத்தை எடுத்து அண்ணனுக் கும், அம்மாவிற்கும் முத்தமிட்டாள்.

விளக்கை அணைத்து விட்டு படுத்துக்கொண்டாள்.

# 13

அருமைராஜ் கண்ணாடிக்கு எதிரில் நின்றான்.

அவன் வாய்க்குள் அடக்கிக் கொண்டிருந்த ரப்பர் துண்டங்களை எடுத்தான். இத்தனை நேரம் அகன்றிருந்த தாடை இயல்பான நிலைக்குத் திரும்பியது. காதோரம் கைவைத்து தலையில் அணிந்திருந்த விக்கை விலக்கி னான். அரை அங்குல உயரத்திற்கு வெட்டப்பட்டிருந்த கிராப்தலை சகஜமானது. கண்களுக்குள் அணிந்திருந்த காண்டாக்ட் லென்ஸ் விட்டாகளை கவனமாக வெளியே எடுத்தான். கருவிழிகள் பழைய நிறம் பெற்றன.

அருமைராஜ் குளியலுக்குத் தயாரானான்.

அவனிடம் இருந்த சட்ட விரோதமான பணம் சென்ற விடமெல்லாம் அவனுக்கு வசதிகளை வாரிக் கொண்டு வந்து கொட்டியது. அரசியல் தொடர்புகள் அவசியமான நேரங்களில் செல்வாக்கு பெற்றுத் தந்தது. சீக்ரெட்

சர்வீஸில் உள்ளே இருந்தவர்களுடான தொடர்பு அவனுக்கு எதிரான நடவடிக்கைகளை முன்கூட்டி சொல்லி எச்சரித்தது. அவனை நெருப்பு போல் துரத்திய யாரோ ஒரு முகிலனை சில ஆயிரங்கள் பெற்றுக் கொண்ட லாரி டிரைவர் மூலம் உலகிருந்தே விலக்க முடிந்தது.

ஆனாலும் அருமைராஜிற்கு அவன் வாழ்க்கை முறை பற்றி பூரண திருப்தி இல்லை. அவன் விரும்பிய பெண்களுடன் சுதந்திரமாக கடற்கரையில் படுத்திருக்க முடியவில்லை. நீச்சல் குளத்தில் நீச்சலடிக்க முடியவில்லை. ஆயிரம் பேருடன் உட்கார்ந்து தியேட்டரில் சினிமா பார்க்க முடியவில்லை.

தியேட்டரா, நீச்சல் குளமா, பீச்சா எல்லாமே அவனுக்கு என்று பிரத்யேகமாக அமைத்துக் கொள்ள முடிந்ததே தவிர திறந்தவெளியில் பிரவேசிக்கும் உரிமையை அவனே அவனுக்கு நிராகரிக்க வேண்டியிருந்தது.

ஒவ்வொரு நாளும் வெவ்வேறு கோலம். ஒவ்வொரு நாளும் வெவ்வேறு இடம். ஒவ்வொரு நாளும் வெவ்வேறு சூழ்நிலை.

அருமைராஜிற்கு சற்றே சலிப்பாக இருந்தது. ஆனால் இதிலிருந்து பின்வாங்குவது என்பது இனி இயலாது என்று அவனுக்குப் புரிந்திருந்தது. அந்த ஆற்றாமை சமூகத்தின் மீது பெரும் கோபமாக கொதித்துக் கொண்டிருந்தது. எரிமலை ததும்புவது போல் அவ்வப்போது அவனுடைய உணர்ச்சிகள் ததும்பி வெளியே வீழ்ந்த போது அழிந்தவர்களைப் பார்த்து ஒரு மாய வெற்றியை மனம் கொண்டாடியது.

அவனுடைய உதட்டு அசைவுக்காக காத்திருக்கும் மனிதர்கள் இருந்த அதே சமூகத்தில் எப்பாடு பட்டாவது



அவனை மடக்கி சிறைப்பிடிக்க வேண்டும் என்ற துடிப்புடனும் பலர் இருப்பதை அவன் உணர்ந்திருந்தான். அவர்களை எதிர்கொண்டு அழித்த போது சற்று ஆனந்தம் கொண்டான்.

ஆனால் கடந்த சில நாட்களாக அவன் உடல் ஏங்கியது. அவனுக்கு மிகப் பிரியமாயிருந்த மோகனாவை அவனே கொலை செய்து விட்டு வரும் நிலைமையை அவன் ரசிக்கவில்லை. காசுக்கு வருபவர்கள் ஆயிரம் பேர் இருந்தாலும் மோகனாவுடன் அவனுக்கு இருந்த காதல் நெருக்கத்திற்கு இணையாக இன்னொரு நெருக்கம் கிடைக்கவில்லை.

அவன் உடல் காம சுகத்திற்காக ஏங்கியது. அவனுக்கு விருப்பமான, அவன் தேர்ந்தெடுக்கும் ஒரு பெண்ணால் மட்டுமே அவனை முழுமையாக திருப்திப் படுத்த முடியும் என்று தோன்றியது. இனி மோகனா இல்லை. வேறு யாரோ ஒருத்தி தான்.

யார் அவள்? எப்போது அவளை சந்திக்கப் போகிறான்? எங்கே? எப்படி அவளை வெற்றி கொள்ளப் போகிறான்?

அருமைராஜ் துடிப்போடு அந்த விளையாட்டிற்காக ஏக்கத்துடன் காத்திருந்தான்.

## 14

கடற்காற்று சிலுசிலுவென்று வீசியது.

நிலா பெரும் வட்டமாக கடலில் நனைந்து எழுந்து கொண்டிருந்தது.

மணலை அளந்து கொண்டிருந்த வீணாவின் மெல்லிய விரல்களின் மீது ஜெயசூர்யாவின் விரல்கள் பதிந்தன. அழுத்திக் கொடுத்தன. வீணா வெறுமையாக நிமிர்ந்து பார்த்தாள்.

''வேண்டாம், வீணா..'' என்றான், ஜெயசூர்யா. பார்வையால் கெஞ்சி.

வீணா வறண்ட புன்னகை காட்டினாள். ''என்ன வேண்டாம்?''

''நீ எதற்குப் பிடிவாதமாக தனியே இருக்க வேண்டும்? முகிலனும், உன் அம்மாவும் கடைசி கடைசியாக என்ன ஆசைப்பட்டார்கள்? நீயும், நானும் ஒன்றாக வாழ வேண்டும் என்று. உன்னை என்னிடமும், என்னை உன்னிடமும் ஒப்படைக்க வேண்டும் என்று தான் முகிலன் விரும்பினான். இன்றைக்கு அவன் இல்லாவிட் டால் என்ன? அந்த விருப்பம் மாறியாகிவிட்டது.

''இல்லை, சூர்யா எனக்கு உடனடியாக இப்போது கல்யாணம் வேண்டாம்...''

''ஏன்?''

''நான் முகிலனுக்கு செய்து முடிக்க வேண்டிய சில காரி யங்கள் பாக்கி இருக்கின்றன. அவை முடியும் வரை நான் கல்யாணம் செய்து கொள்ளாமல் இருப்பது தான் நல்லது.''

''சரி, கல்யாணம் வேண்டாம்.. ஆனால் முகிலனுக்கே ஒரு ஆபத்து வந்த நிலையில், நீ எதற்கு தன்னந்தனியாக குடித்தனம் செய்ய வேண்டும்? உன்னை என் வீட்டிற்கே அழைத்து வரச் சொல்லி என் அம்மா சொன்னாள்.''



வீணா ஜெயசூர்யாவின் கையை அழுத்திக் கொடுத் தாள்.

''உங்களைப் போல ரொம்ப நல்லவர்கள் சிலர் இருப்பதால் தான் இந்த உலகம் திக்கித் திணறாமல் சுழன்று கொண்டிருக்கிறது, சூர்யா. ஆனால், என்னால் இப்போது வர முடியாது... அண்ணன் இருந்த அதே ரகசிய சர்வீஸில் நான் இப்போது சேர்ந்திருக்கிறேன். கம்ப்யூட்டர் துறையில் அவர்களுக்கு நிறைய உதவி செய்வதாக ஏற்பாடு. ஒரு மின்சாரக் கம்பி மீது நான் நடந்து கொண் டிருக்கிறேன். தனியாக நடப்பது தான் நியாயம். என் னுடன் சேர்த்து உங்களையெல்லாம் இழுத்து கொள்வது சரியில்லை. சூர்யா.. என்னை மறந்து விட்டு நீங்கள் ஏன் இன்னொரு பெண்ணை கல்யாணம் செய்து கொள்ளக் கூடாது?''

ஜெயசூர்யா மின்னும் விழிகளால் அவளைப் பார்த் தான்.

''முட்டாள் - உன்னுடைய உணர்ச்சிகளைப் புரிந்து கொள்ள முடியாத ஜடம் இல்லை நான். இன்றைக்கில்லா விட்டால் இன்னொரு நாள், அன்றைக்கில்லாவிட்டால் இன்னொரு நாள். அன்றைக்கில்லாவிட்டால் வேறொரு நாள். என்றைக்காக இருந்தாலும் நீ வரும் வரை காத் திருக்கும் பொறுமை எனக்கு உண்டு...''

அவன் குரல் அழுத்தமாக வந்தது.

வீணா நெகிழ்ந்து அவன் தோளில் தலையை சாய்த்துக் கொண்டாள்.

''உனக்கு எப்போது வேண்டுமானாலும், எந்த உதவி தேவையாக இருந்தாலும் தயங்காமல் இந்த முட்டாளிடம்

கேள் வீணா, என் முகிலனுக்காக நான் சந்தோஷமாக செய்வேன்...''

''தேங்க்யூ சூர்யா...'' வீணா ஜெயசூர்யாவின் கன்னத்தில் தன் இதழ்களைப் பதித்து நன்றி சொன்னாள்.

## 15

அலுமினிய சட்டங்கள் பொருத்திய அந்த இரட்டைக் கதவைத் திறக்கையில் வீணா தன் நெஞ்சு விம்முவதை உணர்ந்தாள்.

இது தான் இத்தனை நாள் முகிலனின் அலுவலக அறையாக இருந்திருக்கிறது. வீணாவின் கோரிக்கையை ஏற்று அவளுக்கு அந்த அறையை ஒதுக்கித் தர நம்பர் ஏ சம்மதித்து விட்டார். ஆனால் உபதலைவர் ரத்தினம் அவளுடன் சேர்ந்து அந்த அறைக்குள் நுழைந்து, அவளுக்கு அங்கிருக்கும் உபகரணங்களை விளக்குவார் என்றும் சொல்லியிருந்தார்.

வீணாவுக்கு அந்த ஒரு அம்சம் தான் உறுத்தலாக இருந்தது. ஆனாலும் வேறு ஒரு பெண் இருந்த காலி இடத்தை நிரப்பத்தான் அவளை நியமித்திருந்தார்களே தவிர, முகிலன் இருந்த இடத்திற்கு இல்லை. எனவே முகிலனுக்குக் கிடைத்த சகல உரிமைகளும் தனக்கு வேண்டும் என்று அவர் எதிர்பார்க்க முடியாது என்பதும் புரிந்திருந்தது.



அவளோடு சேர்ந்து நுழைந்த ரத்தினம் நேரே ஏ.சி.யை ஆன் செய்தார்.

''இது தான் முகிலனின் மேஜை'' என்றார். அந்த மேஜை மீது வீட்டில் இருப்பது போலவே சுவாசம், அம்மாவும் முகிலனோடு சேர்ந்து எடுத்துக் கொண்ட போட்டோ அந்த மேஜை மீது வீற்றிருந்தது.

''முகிலனுக்கு உங்கள் இருவர் மீதும் எக்கச்சக்க பாசம் இல்லை?'' - ரத்தினம் சாதாரணமான குரலில் தான் கேட்டார். ஆனாலும் வீணாவை அது உறுத்தியது. அவளுடைய தனிப்பட்ட உணர்ச்சிகளை அலுவலகத்தில் வெளிக்காட்டுவது நியாயமில்லை எனத் தோன்றியது மௌனமாக தலை அசைத்தாள்.

அந்த அறையில் இரண்டு கம்ப்யூட்டர்கள் இருந்தன.

''முகிலனுக்கென்று தனி பாஸ்வேர்ட் இருந்தது. இப்போது உனக்கு என்று ஒரு பிரத்யேக பாஸ்வேர்ட் பதிவு செய்வோம்...''

ரத்தினம் கம்ப்யூட்டரை ஆன் செய்தார். சில பொத்தான்களைத் தட்டினார். திரையில் ஒரு மின் ஜன்னல் திறந்தது. எண 27 என்று மினுக்கியது.

''ஆப்பரேட்டர் நம்பர் 27, இனி உன் எண்ணை 27 என்று குறிப்பிட்டு விட்டுத்தான் கம்ப்யூட்டரை நீ இயக்க முடியும்.. இங்கே உன் பாஸ்போர்ட்டை 123456 என்று இப்போதைக்கு நான் குறிக்கிறேன். அப்புறம் நீ இந்த பாஸ்வேர்டை மாற்றி விடு...''

''யெஸ் சார்...''

அவளுடைய மேஜை இழுப்பறைகளைத் திறந்தார்.

சில உபயோகமற்ற காகிதங்கள் கிடைத்தனவே தவிர உருப்படியாக எதுவும் கிடைக்கவில்லை. புத்தகங் களுக்குள் திறந்து பார்த்தார். அலமாரித் தட்டுகளுக்கு அடியில் ஏதாவது ரகசியமாக ஒட்டவைக்கப்பட்டிருக் கிறதா என்று பார்த்தார்.

வீணாவிற்கே ஆச்சரியமாயிருந்தது. முகிலன் இப்படி பெரும்பாலான இழுப்பறைகளைத் துடைத்தா வைத்திருப் பான்? ஒருவேளை இந்த அறையை அவளுக்குத் திறந்து விடும்முன் இங்கிருந்த முக்கியமான விவரங்களை ரத்தினம் முன்கூட்டியே அகற்றி விட்டாரா? இப்போது ஒன்றும் அறியாதவர் போல் ஒவ்வொன்றாகத் திறந்து பார்த்து நாடகமாடுகிறாரா?

முகிலனின் மேஜை மீது ஒரு குறிப்போடு இருந்தது. சில தாள்கள் எழுதுவதற்காகக் கிழிக்கப்பட்டிருந்தன. பயன்படுத்தாத தாள்கள் தான் அதிகம் இருந்தன.

''உனக்கு வேறொன்று அனுப்புகிறேன்...'' என்றார்.

''ஏன் சார்? இதையே நான் பயன்படுத்தலாமே?''

''இல்லை, வீணா... ரகசிய சர்வீஸ் ஒவ்வொரு மட் டத்தில் இருப்பவர்களுக்கு ஒவ்வொரு விதமான குறிப் பேடு தரப்பட்டிருக்கிறது. நம்பர் ஏ பயன்படுத்துவது ஒன்று. நான் பயன்படுத்துவது வே.றொன்று. முகிலன் பயன்படுத்தியது என்று நீ இதில் எந்த வகையையும் பயன்படுத்த முடியாது...''

குறிப்பேட்டை திறந்த காட்டினார். ஒவ்வொரு தாளிலும் கீழே இரண்டு சிகப்புக் கோடுகள் இணையாக அச்சாகியிருந்தன.

''நம்பர் ஏ வின் குறிப்பேட்டில் இது நீல நிறத்தில் இருக் கும் என்னுடையது பச்சை. உனக்கு அனுப்பப் போவது ஆரஞ்சு...''



''யெஸ் சார்.. ஆனால் அண்ணன் பயன்படுத்திய குறிப்பேட்டிலிருந்து அவன் ஞாபகமாக ஒரே ஒரு தாளை நான் எடுத்துக் கொள்ளலாமா?''

அவன் அனுமதிக்கும் முன் மேலாக இருந்த தாளை மட்டும் அந்தக் குறிப்பேட்டில் இருந்த வீணா பிடுங்கி எடுத்தாள்.

ரத்தினம் மென்மையானதொரு புன்னகையுடன் தலையசைத்தார். எல்லோருடைய இண்டர்காம் எண் களையும் நினைவுபடுத்திக் கொள். என் செல் நம்பர் உன்னிடம் இருக்கிறதா?''

''இருக்கிறது சார்...''

''உன் அண்ணன் கொஞ்சம் அவசரக்காரன்.. நீ அவசரப்படாதே.. அவசரம் ஆபத்தில் கொண்டு விட்டு விடும்...''

நட்பான எச்சரிக்கையா, மிரட்டலான எச்சரிக்கையா? அவர் குரலிலிருந்து புரிந்து கொள்ள முடியவில்லை.

வீணா புன்னகையுடன் 'யெஸ் சார்' என்று அந்த உரையாடலுக்கு ஒரு முற்றுப்புள்ளி வைத்தாள்.

## 16

அருமைராஜ் ஜிம்மில் உடற்பயிற்சி செய்து கொண் டிருந்த போது, அவனுடைய செல் போன் ஒலித்தது.

இந்த போன் நம்பர் வெகு பிரத்யேகமான சிலருக்குத் தான் தெரியும். அருமைராஜ் போன் இயக்கினான். கூப்பிடுபவரின் எண்ணை பார்த்ததும் அவன் ரத்தம் வேகம் எடுத்தது. ரகசிய சர்வீஸிலிருந்த போன்.

''யெஸ்?'' என்றான்.

''ராஜ்... முகிலனைக் கொலை செய்த லாரி டிரைவரை போலீஸ் பிடித்து விட்டது...''

''அப்படியா?''

''அவனை அடித்து உதைத்ததில் அவன் உன் பெயரை சொல்லிவிட்டான்...''

''என்னவென்று?''

''அருமைராஜைக் கைப்பற்ற முகிலன் திட்டமிட்டார். அதனால் அவரையே அருமைராஜ் தீர்த்துக்கட்டச் சொல்லி விட்டார் என்று வெளிப்படையாக சொல்லிவிட்டான்.''

''ஹோ ஹோ.. ஹோ.. ஹோ...''

''எதற்கு சிரிக்கிறாய், ராஜ்?''

''என் பெயரை அவன் சொன்னதில் தப்பு எதுவும் இல்லை. உண்மையைத்தானே சொன்னான்? என் பெயரைத் தான் அவனால் சொல்ல முடியுமே தவிர என் இருப்பிடம் எங்கே என்று அவனுக்குத் தெரியாது.. போலீஸால் என்னை நெருங்க முடியாது.. எனக்கு எதிராக வேலை செய்ய நினைப்பவர்கள் எல்லோருக்கும் இது ஒரு எச்சரிக்கை யாக இருந்து விட்டுப் போகட்டும்.. எனக்கு சந்தோஷம்தான்!''

''ராஜ்.. ரகசிய சர்வீஸிலிருந்து தகவல்கள் உனக்கு லீக் ஆகிறது என்பது தான் முகிலன் எடுத்துக் கொண்ட பிரச்சனை. இப்போது அவன் இல்லையே தவிர அவன் தங்கை வீணா அதே அடிப்படையை ஆராய்ந்து கொண் டிருக்கிறாள்...''



''வீணா! பெயர் நன்றாக இருக்கிறதே.. வயது என்ன?''

''ராஜ்.. அவளை விட்டு விடு.. சின்னப் பெண்...''

''வயது என்ன?''

''இருபத்தியொன்று, இருபத்தியிரண்டு இருக்கும்...''

''குட்.. வேலையில் இருக்கிறாளா?''

''ஆம். இங்கேயே ரகசிய சர்வீசில்...''

''முளைக்கப் போவது முள்செடி என்றால் அதை முளை யிலேயே கிள்ளி விடுவது தான் எனக்கும் நல்லது.. உங் களுக்கும் நல்லது.. பொறுப்பை என்னிடம் விடுங்கள்...''

அருமைராஜ் தொடர்பைத் துண்டித்தான்.

தூரத்தில் தனியே நிற்கும் மான் குட்டியைப் பார்த்து விட்ட சிறுத்தைக்கு ஏற்படும் ரசாயன மாற்றம் அவனுள் நிகழ்ந்தது.

வீணா.. வீ... ணா...

சொல்லிப் பார்த்த போது அவன் உதடுகளில் ஒரு குரூரப் புன்னகை வளர்ந்தது.

## 17

வீணா சற்று நேரமாகவே அந்த வினோத உணர்வை அனுபவித்துக் கொண்டிருந்தாள். யாரோ ரகசியமாக அவளைக் கண்காணிப்பது போன்ற உள்ளுணர்வு.

வீட்டில் தன் அறையில் தனியே இருந்தாள்.

அப்படியே யாராவது பார்த்தாலும், திறந்திருக்கும் ஜன்னல் திரையின் சிறிய பிறவினூடே என்ன பார்த்து விட முடியும்.

வீணாவிற்கு பொறுக்க முடியவில்லை.

தனக்கு வரக்கூடிய ஆபத்து பற்றி எந்த உணர்வுகளும் இல்லாமல் பால்கனிக் கதவைத் திறந்து, விளக்கை போட்டாள்.

பால்கனிக்குள் நுழைந்தாள். கைப்பிடி சுவரைப் பிடித்து நின்றாள். பார்வை இருட்டில் நாலா பக்கமும் எறிந்தாள்.

அவளைத் தொடரும் பார்வை எங்கிருந்து உற்பத்தி யாகிறது?

அந்த மறைவானக் கட்டிடத்திலிருந்தா? அந்த சந்தின் இருட்டு மூலையிலிருந்தா? அந்த எதிர் பால்கனியி லிருந்து அல்லது இருளில் கலந்து விட்ட ஏதோ ஒரு மொட்டை மாடியிலிருந்தா?

புரியவில்லை.

தோள்களைக் குலுக்கினாள்.

விளக்கை அணைத்து விட்டுத் திரும்பினாள்.

* * *

அந்தத் தெருவில் ஏற்கெனவே நிறுத்தியிருந்த ஒரு மினி லாரியை ஒட்டி அதன் பின்னால் நின்றிருந்த டாடா சபாரியில் ஏற்றப்பட்ட கண்ணாடிகளுக்குப் பின்னே அருமைராஜ் இருந்தான்.

கைக்கு அடக்கமான மினி பைனாக்குலர்களை அருமை ராஜ் தன் கண்களிலிருந்து தழைத்தான்.



"அந்த பெண்ணா?" அவனுக்கு பின் இருக்கையில் உட்கார்ந்திருந்த உயரமானவன் மிருதுவான குரலில் கேட்டான்.

அருமைராஜ் பதில் சொல்லவில்லை.

"அந்தப் பெண்ணைப் பார்த்தால் எந்தப் பாதுகாப்பும் இல்லாமல் தனியே இருப்பவள் போல் தெரிகிறாள். அவளைத் தீர்த்துக் கட்டுவது சுலபம். ஷாக் அடித்து செத்துப் போனது போல் செட்டப் செய்து விடுகிறேன்."

பின்னால் இருந்தவன் பேசிக் கொண்டே போக, அருமைராஜ் தன் கையை சற்றே உயர்த்தினான். பார்த் தான்.

வீணா பால்கனி கதவை சாத்திக் கொண்டிருந்தாள்.

அருமைராஜ் தன் உடலெங்கும் மின்சாரம் பாய்ந்தது போல் ஒரு உணர்வை அனுபவித்தான்.

சாதாரண டியூப் லைட் வெளிச்சத்தில் என்ன ஒரு அற்புதமான அழகுடன் வந்து நின்றாள்.

வீணாவை நெருக்கத்தில் பார்க்க வேண்டும். அவ ளுடைய ஒளிரும் சருமத்தை முகர்ந்து பார்க்க வேண்டும். அவளுடைய தளிர் உடலில் விரல்களை ஒட்டிப் பார்க்க வேண்டும்.

அருமைராஜ் இருக்கையில் உட்கார முடியாமல் அவஸ்தைப் பட்டான். நினைத்தால் இப்போதே அவனால் அந்த வீட்டிற்குள் அடித்து நுழைய முடியும். அல்லது உட்கார்ந்த இடத்திலிருந்து ஏவினால் அந்தப் பெண்ணை அள்ளித் தூக்கி வர ஆள் இருக்கிறது. ஆனால் வீணா அப்படி கையாளப்பட வேண்டியவள் அல்ல.

அவள் ஒரு பூ. மெல்ல வருடி. வலிக்காமல் முகர்ந்து பார்க்க வேண்டிய பூ. கண்களில் கண்ணீர் ததும்ப, கைகளையும், கால்களையும் கட்டிப் போட்டு அவள் மீது வாரி விழுந்து பிறாண்டுவது உண்மையான சுகம் இல்லை.

அவள் கண்களில் மயக்கம் வேண்டும். சின்ன எதிர்ப்பு இருக்கட்டும். பரவாயில்லை. ஆனால் கண்ணீர் கூடாது. அவனைக் கடிக்கட்டும், காயப்படுத்தட்டும். ஆனால் அது காமத்தினால் இருக்க வேண்டும், அச்சத்தினால் இருக்கக் கூடாது.

அவள் வளைந்து கொடுக்க மறுத்தால், தான் வலிமையை அவன் பிரயோகிக்க வேண்டும்!

அருமைராஜ் தனக்குள் தீ ஒன்று தகதகவென்று எரிய ஆரம்பித்ததை உணர்ந்தான்.

இனி காத்திருப்பதும் சுகம் தான்!

''அந்தப் பெண் மீது தூசு, துரும்பு கூடப் படக்கூடாது. தப்பித் தவறிக் கூட அவள் என்னைப் பற்றி பயந்து விடக் கூடாது. தள்ளி நின்று கணகாணிக்கலாம்.. தினம் எனக்கு ரிப்போர்ட் தரலாம்.. அவ்வளவு தான்.. புரிகிறதா?''

அருமைராஜிற்கு மிகத் திடீர் மனமாற்றத்தைக் கேள்வி கேட்கும் தைரியம் யாருக்கும் கிடையாது.

'''புரிகிறது'' என்று பணிந்த குரலில் சொன்னான், உயரமாயிருந்தவன்.

* **

அருமைராஜ் கனமான மெத்தையில் படுத்திருந்தான். உறக்கம் வராமல் எத்தனை நேரம் விட்டத்தை வெறிப்பது?



வீணா அவனுள் சுடர் நெருப்பாக சதிராடிக் கொண்டிருந்தாள்.

அவனால் காத்திருக்க முடியும் என்று தோன்றவில்லை.

செல்போனை எடுத்து எண்களைத் தட்டினான்.

மறுமுனை எடுக்கப்பட்டது.

''ஸாரி, இந்த நேரத்தில் போன் பண்ணி உங்கள் தூக்கத்தைக் கெடுப்பதற்கு...'' மன்னிப்புக் கோரும் குரலில் சொன்னான்.

''சொல், ராஜ்...''

''வீணாவைப் பார்த்தேன்...''

''ஐயோ!''

''பயப்படாதீர்கள். அவளை ஒன்றும் செய்யவில்லை...'' சின்னதாகப் புன்னகைத்தாள். ''அவள் எனக்கு வேண்டும்.''

''என்னது!''

''வீணா.. எனக்கு... வேண்டும்...''

''ராஜ்.. அவளை எனக்குத் தெரியும்.. இணங்குபவள் இல்லை.. இழுத்துப் போ... அனுபவி...''

''கசங்காமல் அவள் எனக்கு வேண்டும்.. நாளை மாலை மறுபடி பேசுகிறேன்...''

தொடர்பைத் துண்டித்தான்.

உள் மனதில் ஒரு அபாயமணி ஒலித்தது.

வேண்டாம், அருமைராஜ்! யாருக்காகவும் வளைந்து கொடுக்காதே! உன் போக்கை மாற்றிக் கொள்ளாதே!''

ச்சீ, சும்மா இரு என்று உள் மனதை அதட்டி விட்டு அருமைராஜ் திரும்பிப் படுத்தான்.

## 18

வீணா கம்ப்யூட்டரில் விவரங்களை செலுத்திக் கொண்டிருந்த போது, அவள் மேஜையில் இருந்த நீல விளக்கு எரிந்தது.

தலைவரிடமிருந்து அழைப்பு.

வீணா கம்ப்யூட்டரை நிறுத்தி விட்டு எழுந்தாள்.

நம்பர் ஏவின் அறைக் கதவைக் குட்டி விட்டு நுழைந் தாள்.

நம்பர் ஏ மென்று கொண்டிருந்த சூயிங்கத்தை வாயோரம் தள்ளிக் கொண்டு புன்னகைத்தார்.

''உட்கார்...''

''உட்கார்ந்தாள்...''

''வீணா முகிலன் காரை மோதியதே லாரி, அந்த டிரைவரைப் பிடித்து விட்டார்கள் என்பது தெரியுமா?''

''கேள்விப்பட்டேன், சார்.. அருமைராஜின் ஏற்பாடு என்று வாக்குமூலம் கொடுத்திருக்கிறானாமே!''

''அந்த அருமைராஜின் குரலைக் கேட்க உனக்கு விருப்பமா?''



நம்பர் ஏ மெல்லிய குரலில் கேட்டார்.

வீணா நிமிர்ந்து உட்கார்ந்தாள்.

''என்ன சொல்கிறீர்கள், சார்?''

''நம்பர் ஏ தன்னிடமிருந்த ரிமோட் மூலம் அந்த அறைக்கதவை தாளிட்டார். மேஜை இழுப்பறை திறந்து கைக்கு அடக்கமான ஒரு மினி டேப்ரிக்கார்டரை வெளியே எடுத்து மேஜை மீது வைத்தார்.

இயக்கினார்.

சின்ன 'ஸ்ஸ்'ஸிற்குப் பிறகு, குரல்கள் ஒலிக்கத் துவங்கின.

''யெஸ்?''

''ராஜ்.. முகிலனைக் கொலை செய்த லாரி டிரைவரை போலீஸ் பிடித்து விட்டது...''

''..........''

''வீணா! பெயர் நன்றாக இருக்கிறதே.. வயது என்ன?''

''ராஜ்.. அவளை விட்டு விடு.. சின்னப் பெண்...''

''முளைக்கப் போவது முள்செடி என்றால் அதை முளையிலேயே கிள்ளி விடுவது தான் எனக்கும் நல்லது.. உங்களுக்கும் நல்லது.. பொறுப்பை என்னிடம் விடுங் கள்...''

''..........''

''என்னது!''

''வீணா எனக்கு வேண்டும்...''

''ராஜ்.... அவளை எனக்குத் தெரியும். இணங்குபவள் இல்லை இழுத்துப் போ.. அனுபவி...''

''கசங்காமல் அவள் எனக்கு வேண்டும். நாளை மாலை மறுபடி பேசுகிறேன்...''

உரையாடல் நின்று டேப் மீண்டும் ஸ்ஸ் என்று பாம்புச் சீறலாய் சீறியது. நம்பர் ஏ டேப்பை நிறுத்தினார்.

வீணா அவரை நிமிர்ந்து பார்த்தா.

''ஒரு குரல் அருமைராஜுடையது'' என்றாா்.

''புரிகிறது. அந்த இன்னொரு குரலும் எனக்குப் பரிச்சயமான குரல் போல் தான் தெரிகிறது.. ஆனால், ஒரு ஒரு துணியால் மூடிக்கொண்டே அல்லது வேறு வழி யிலோ வேண்டுமென்றே தன் குரலை அவர் மாற்றிக் கொண்டிருப்பதாகத் தோன்றுகிறது என்றாள், வீணா. நெற்றி சுருங்க....

''யூ ஆர் கரெக்ட்... அருமைராஜுடன் பேசியவர் வேண்டுமென்றே அடையாளம் காணக்கூடாது என்று குரலை மாற்றிக் கொண்டிருக்கிறார்... நமக்கு தெரிந்த வரின் குரல் தான் என்பதும் சரியான யூகம் தான்...''

நம்பர் ஏ புன்னகைத்தார்.

''இந்த உரையாடலை நான் எப்படிப் பதிவு செய்தேன் என்று கேட்கவில்லையே?'' நம்பர் ஏ மேஜை இழுப்பறை திறந்து ஒரு செல்லுலார் போனை எடுத்து மேஜை மீது வைத்தார்.

''இது உபதலைவர் ரத்தினம் பயன்படுத்துகிறாரே ஒரு செல் போன்.. அதன் நிழல்..''

''அப்படியென்றால்?''

''இது ஸ்பெஷலாகத் தயாரிக்கப்பட்ட போன், உப தலைவர் தன் போனை இயக்கும் போதெல்லாம் இந்த



போனதும் அதே சமயத்தில் இயங்கும். அவர் போன் பண்ணினாலும் சரி, அவருக்கு போன் வந்தாலும் சரி, இந்த போன் அந்த உரையாடலை முழுமையாகத் தானும் ஒலிபரப்பும், அப்படியே டேப்பில் பதிவு செய்யலாம்...''

''இது... இது...''

''முகிலனுக்கு உபதலைவர் மீது சந்தேகம் வலுத்த வுடன், அவருடைய செல்போனுக்கு ஒரு நிழல் போனை நான் தருவித்தேன்.. அந்த போன் இயங்கும் போது போனும் இணையாக இயங்க ஆரம்பித்ததில் இத்தனை நாட்களாக நாம் காத்திருந்த ஆதாரங்கள் அவருக்கெதிராகக் கிடைக்கின்றன. அவற்றை விட முக்கியமான அருமை ராஜின் பார்வை உன் மீது விழுந்து விட்டதை உன்னை கூப்பிட்டு எச்சரிக்க வேண்டுமென்று தோன்றியது...''

''தேங்க்ஸ், சார்....'' வீணா தன் நெற்றி, கழுத்துப் பகுதிகளில் வியர்வையை ஒற்றி எடுத்தாள்.

''இப்போது நான் என்ன செய்ய வேண்டும், சார்?''

''யாருடைய பார்வையிலும் விழாத அருமைராஜ்... யாருடைய வலையிலும் சிக்காத அருமைராஜ் உன் அழகு வலையில் சிக்கியிருக்கிறான். உனக்கு இரண்டு விதமான வாய்ப்புக்கள் இருக்கின்றன என்று எச்சரிக்கை கிடைத்ததே என்று கவனமாக உடனடியாக இந்த ஊரை விட்டே தப்பித்துப் போய், வடநாட்டில் எங்காவது நிம்மதியாக வாழ்வது...''

''இன்னொன்று?''

''இன்னொன்று...'' நம்பர் ஏ பார்வையைத் தழைத்துக் கொண்டார். ''என் மகளைப் போல நினைக்கும் உன் னிடம் சொல்லத் தயக்கமாக இருக்கிறது, வீணா...''

''பரவாயில்லை, சொல்லுங்கள், சார்...''

''இதற்காக நீ உன்னை விட்டுக் கொடுக்க வேண்டும்... இந்தியாவிற்காக, நம் தேசத்திற்காக நீ கொஞ்சம் வளைந்து கொடுக்க வேண்டும்...''

''எப்படி சார்?''

''யாராலும் நெருங்க முடியாத அருமைராஜிற்கு நெருக்கமாகப் போக உனக்கு வாய்ப்பு கிடைக்கிறது. அதைப் பயன்படுத்தி அவனை நெருங்க வேண்டும். துப்பாக்கிகளால் மடக்க முடியாத அவனை உன் அழகால் மடக்க வேண்டும். அவன் மட்டும் நமக்கு உயிருடன் கிடைத்து விட்டால் இந்தியாவில் தீவிரவாதத்தின் ஒரு ஆணி வேரையே நாம் அசைத்து விடலாம்.. ஆனால் அதற்காக உன்னை இழுக்கச் சொல்ல எனக்கு என்ன உரிமை இருக்கிறது?''

அவர் பேசப் பேச வீணா அவர் முகத்தை உன்னிப் பாகப் பார்த்துக் கொண்டிருந்தாள். பின் அவள் முகம் இறுக்கத்தை விடுத்தது. மெல்ல ஒரு புன்னகை மலர்ந்தது.

''என் அண்ணன் உயிரையே கொடுத்தான். நான் இந்த அற்ப உடலைக் கொடுக்க மாட்டேனா, சார்?''

நம்பர் ஏ அவளை திடுக்கிடலுடன் பார்த்தார்.

''பல நூறு உயிர்களை அழித்தவனை மடக்குவதற்கு எனக்கு ஒரு வாய்ப்பு கிடைத்தால், என்னை சந்தோஷ மாகத் தருவேன் சார்.''

''ரியல்லி?''

''சத்தியமாக...''



''அப்படியானால், இதை ஸ்மூத்தாக வழுக்கிக் கொண்டே போவது போல் நாம் திட்டமிட வேண்டும்... எனக்கு கொஞ்சம் நேரம் கொடு.. யோசித்து விட்டுக் கூப்பிடுகிறேன்.ஆனால் இந்த விஷயம் நம் இருவரைத் தவிர...''

''ஒரு காக்கா, குருவிக்குக் கூட சொல்ல மாட்டேன்...''

வீணா அழுத்தமாகச் சொல்லிவிட்டு எழுந்தாள்.

நம்பர் ஏ அவளை பெருமிதத்தோடு பார்த்தார்.

## 19

''ஏய்!''- ஜெயசூர்யாவின் குரலில் காதல் இருந்தது. கருணை இருந்தது. ''எதற்காக என்னை அவசரமாக வரச் சொன்னாய்? வரச் சொல்லி விட்டு நீ பாட்டுக்கு உட்கார்ந்து கண்ணீர் விட்டுக் கொண்டேயிருக்கிறாய்?''

ஜெயசூர்யா வீணாவின் வீட்டு சோபாவில் அமர்ந் திருந்தான். வீணாவின் போக்கு புரிபடாத குழப்பம் அவன் கண்களில் இருந்தது.

வீணா தன் இடத்திலிருந்து எழுந்தாள். சட்டென மண்டியிட்டு அமர்ந்து ஜெயசூர்யாவின் மடியில் முகம் புதைத்தாள். விம்மினாள்.

ஜெயசூர்யா அவள் முதுகை ஆதரவாக வருடிக் கொடுத்தான். அவள் விசும்பல் அடங்கி நிமிர்ந்தாள்.

கண்ணோரத்தில் வழிந்த கண்ணீரை சுண்டித் துடைத்தாள்.

''சூர்யா.. என்னை மன்னிப்பீர்களா?''

''மன்னிப்பா? எதற்கு?''

''ஏன் எதற்கு என்று கேட்காதீர்கள், சூர்யா. நான் செய்யப்போகும் காரியங்களுக்கு உங்களிடம் முன்கூட்டி ஒரு பாவ மன்னிப்பு கேட்பதாக இருக்கட்டும்...''

''நீ சொல்வது எனக்குப் புரியவில்லை.''

''புரிய வேண்டாம்.. டூ யூ லவ் மீ?''

''என்ன இது, வீணா? உன்னை என் உயிராக நினைத்திருக்கிறேன்...''

''சாக்கடையை மிதித்துவிட்டால், காலை வெட்டி விடுகிறோமா, சூர்யா? அதைப் போல நினைத்து என்னை மன்னிப்பீர்களா?''

''வீணா.. நீ எந்தப் பாவமும் செய்யாதவள்.. செய்யத் தெரியாதவள்.. உனக்கு எதற்கு மன்னிப்பு?''

''சூர்யா.. ப்ளீஸ்.. என்னை எதுவும் விளக்கம் கேட்கா தீர்கள்.. நான் செய்யப் போவது புனித காரியமா, பாவ காரியமா என்று எனக்கே தெரியவில்லை... ஆனால் என்ன செய்தாலும் அது உங்களுக்கு செய்யும் துரோகம் என்று எனக்குத் தோன்றுகிறது. ஏன் எதற்கு என்று மறுபடி மறுபடி கேட்காமல் என்னை மன்னித்துவிட்டதாக சொல் லுங்கள். உங்கள் மன்னிப்பு இருந்தால் தான் என்னால் நிம்மதியாக....'' வீணா சற்றுத் தயங்கி விட்டு, ''வாழ முடியும்'' என்று வாக்கியத்தை முடித்தாள்.

ஜெயசூர்யா அவளை சற்று திடுக்கிடலுடன் பார்த் தான். ஆனால் அவள் உணர்ச்சிக் கொந்தளிப்பில்



இருக்கும் போதே மேலும் மேலும் கேள்விகள் கேட்டு அவளைக் காயப்படுத்த அவனுக்கு விருப்பம் இல்லை.

குனிந்து அவள் பின் கழுத்தில் முத்தமிட்டான்.

''நீ எந்தக் காரியம் பண்ணினாலும், உன்னை என்னால் வெறுக்க முடியாது, வீணா. நீ கொலையே செய்து விட்டு வந்தாலும் என் மன்னிப்பு நிச்சயம் உண்டு...''

மன்னிப்பு என்ற வார்த்தையை இஷ்டமில்லாமல் அவளை சமாதானம் செய்வதற்குப் பயன்படுத்தினான்.

வீணா கண்ணீருடன் நிமிர்ந்தாள். கண்ணீருடன் புன்னகைத்தாள். கண்ணீருடன் அவனை முத்தமிட்டாள்.

## 20

வீணா நாற்காலியில் நிமிர்ந்து உட்கார்ந்திருந்தாள். பார்வையை நம்பர் ஏ விடமிருந்து ரத்தினத்திற்கு, ரத்தினத்திடமிருந்து நம்பர் ஏ விற்கும் மாற்றி மாற்றி அனுப்பினாள்.

காலையிலேயே நம்பர் ஏ அவளைக் கூப்பிட்டு தன் திட்டத்தை சொல்லி விட்டார்.

''உன்னிடம் ஒரு முக்கியமான ரகசியக் கடிதத்தைக் கொடுக்கலாம் என்று நான் சிபாரிசு செய்யப் போகிறேன். அந்தக் கடிதத்தை உன்னிடமிருந்து ரகசிய சர்வீஸைச் சேர்ந்த ஒருத்தன் வந்து வாங்கிப் போவான் என்று ஏற்பாடு

நடக்கும்... நீ அவனுக்காக எங்கே, எப்போது காத்திருக்க வேண்டும் என்பதையெல்லாம் ரத்தினத்தையும் வைத்துக் கொண்டு நான் விவரமாக சொல்வேன்... ரத்தினம் என்ன செய்வார்? இந்தத் தகவலை அருமைராஜிற்குத் தெரி விப்பார்... அருமைராஜ் என்ன செய்வான்? நீ காத்திருக்கும் இடத்திலிருந்து உன்னைக் கடத்திப் போவான்.. அவ்வளவு சிம்ப்புளாக நீ அருமைராஜிடம் போய் சேர்ந்து விட முடியும்.. பயமாயிருக்கிறதா, வீணா?''

''ரொம்ப த்ரில்லிங்காக இருக்கிறது, சார்... அருமை ராஜை சந்திக்கப் போகும் அந்த விநாடிக்காக நான் இப்போதிலிருந்தே ஏங்கிக் கொண்டிருக்கிறேன்...'' வீணா சின்னக் குழந்தை போல் குரலில் ஒரு துள்ளலுடன் அவரிடம் சொல்லியிருந்தாள்.

இப்போது திட்டத்தின் முதல் கட்டம் நெருங்கி விட்டது.

''வீணாவிடம் அந்த டாக்குமெண்ட்டைக் கொடுத்து அனுப்பலாம் என்று நினைத்திருக்கிறேன்'' என்று ஆரம்பித்தார் நம்பர் ஏ.

ரத்தினம் தன் கண்களில் ஆச்சரியம் காட்டினார்.

''வீணா நம் ஆபீஸிற்குப் புதுசு.. அவளிடம் இவ்வளவு பெரிய பொறுப்பை ஒப்படைக்கலாமா?''

''அவள் புதிது என்பது தான் நமக்கு சாதகம்.. அவளை யாரும் சந்தேகப் படமாட்டார்கள்.. அந்த ரெஸ்ட்டாரண் டில் அவள் காத்திருக்கப் போவது அதிக பட்சம் பதி னைந்து நிமிடங்கள் தான்.. அதற்குள் கடிதத்தை வாங்கிப் போக ஆள் வந்து விடும்...'' நம்பர் ஏ பிடிவாதமாக சொன்னார்.



''நீங்கள் உறுதியாக இருந்தால் எனக்கு ஆட்சேபம் இல்லை, சார்..'' என்றார், ரத்தினம், தணிந்த குரலில்.

''வீணா, நீ காத்திரு... உன்னிடம் கடிதம் வாங்கிப் போக வருபவன் உன்னை நெருங்கி, ''முத்து நவரத்தினம்'' என்பான். நீ பதிலுக்கு ''பொன் வெள்ளி சிலம்பு'' என்று சொல், அவன் மறுபடியும், ''நித்யகல்யாணி'' என்று சொன்னால் அவன் தான் நம் ஆள் என்று புரிந்து கொள்.. அவனிடம் இந்தக் கடிதத்தை ஒப்படை... ரெஸ்ட்டா ரண்ட்டில் இருக்கும் நேரம் ஏற்கெனவே பழக்கமுள்ள வளாகக் காட்டிக் கொள்...''

''யெஸ் சார்..'' ஜேம்ஸ் பாண்ட் படத்தில் நடிக்க விருப்பது போல் ரொம்ப பரபரப்பாக இருக்கிறது சார்...''

''ஆல் தி பெஸ்ட்...''

நம்பர் ஏ கை குலுக்கினார்.

வெளியே வந்ததும், ரத்தினம் அவளைப் பார்த்து, ''ஒரு நிமிஷம் என் ரூமுக்கு வந்து விட்டுப் போ...'' என்றார்.

அறைக்குள் நுழைந்ததும், ''உன்னை நம்பி மிகப் பெரிய பொறுப்பு கொடுக்கப்பட்டிருக்கிறது. கவனமாக நடந்து கொள் என்றார்.

''யெஸ் சார்'' என்றாள், வீணா, சற்று விறைப்பாக.

## 21

ரெஸ்ட்டாரண்ட்டின் ஒரு சுவர் முழுவதும் கண் ணாடி பதிக்கப்பட்டிருந்தது.

வீணா தன் பிம்பத்தைப் பார்த்து ரசித்தாள். வழக்கத்திற்கு மாறாக அவள் அணிந்திருந்த சொற்ப மேக்கப்பே அவள் சரும நிறத்தை இன்னும் பிரகாசப்படுத்தியிருந்தது.

கண்களுக்கு இட்டிருந்த மை கண்விளிம்பைப் பெரிதாக்கி, விழிகளுக்குக் கூடுதல் ஒளி சேர்த்திருந்தது.

கூந்தலை ஒரு சிறு பந்தாக்கிக் கொண்டையிட்டிருந்தாள். அதில் அலங்காரமாக முத்துப் பதித்த சில கொண்டை யூசிகளை செருகியிருந்தாள். காதுகளில் இருந்ததும் சாதாரண முத்துக்கள் இல்லை என்று அவளுக்குத் தெரியும். அவை சிறப்பாகத் தயாரிக்கப்பட்ட மினி மைக்குகள், அவள் அணிந்திருந்த வாட்ச்சில் ஒரு பொத்தனை அழுத்தியதும் அந்த ஒலி வாங்கிகள் செயல்படத் துவங்கிவிடும்.

மறுமுனையில் அவளுடன் யார் பேசினாலும், அந்த உரையாடல் டேப்ரிக்காரிடரில் பதிவாகும்.

வீணா கொண்டையூசிகளில் ஒன்றை எடுத்து கையில் வைத்துப் புரட்டினாள். பார்த்தால் சட்டென்று சாதாரணக் கொண்டையூசியாகத்தான் தெரியும். அதற்குள் ஒரு எலக்ட்ரானிக் மைக் பொருந்தியிருப்பது தெரிவதற்கான சாத்தியமே இல்லை.

மேஜை மீது நிழல் விழுந்தது.

நிமிர்ந்தாள்.

எதிரே ஒரு இளைஞன் நின்றிருந்தான்.

நீல ஜீன்ஸ் பாண்ட். நீல ஜீன்ஸ் சட்டை க்ளோஸாக வெட்டப்பட்ட தாடி, வட்டமான கண்ணாடிகள்.

இளைஞன் புன்னகைத்தான்.



''முத்து நவரத்தினம்'' என்றான்.

''உட்காருங்கள்'' என்று எதிர் நாற்காலியில் வீணா காட்டினாள்.

அவன் உட்காரவில்லை.

''முத்து நவரத்தினம்'' என்றான் மறுபடியும்.

''பொன், வெள்ளி, சிலம்பு என்றாள், வீணா புன்னகை மாறாமல்.

''இங்கே வேண்டாம்'' என்றான், வந்தவன். ''வெளியே நம் கார் காத்திருக்கிறது. அங்கே வா...''

அவன் தன்னுடைய சங்கேத வார்த்தையைப் பயன்படுத்தாதலால், வீணா எழுந்திருக்கவில்லை.

''பொன், வெள்ளி, சிலம்பு'' என்று இன்னொரு முறை சென்னாள்.

அவன் தோள்களைக் குலுக்கினான். ''நித்ய கல்யாணி... காருக்கு வா... நம்பர் 9192'' என்று சொல்லிவிட்டு அவன் திரும்பி வந்தான்.

வீணா தன் ஹேண்ட் பேகை எடுத்துக் கொண்டாள். கொண்டையூசியைக் கூந்தலில் சொருகிக் கொண்டாள். சாப்பிட்ட காபிக்கு சற்றுக் கூடுதலாகவே பணம் வைத்துவிட்டு எழுந்தாள்.

* * *

9192 மூன்று புறம் கறுப்புக் கண்ணாடி அணிந்திருந்த ஒரு ஹோண்டா சிட்டி.

அதன் பின்கதவு உள்ளேயிருந்து திறந்த பிடிக்கப்பட ஏறி அமர்ந்தாள். வாட்ச் பொத்தானை அழுத்தினாள்.

உள்ளம் படபடவென அடித்துக் கொண்டது.

அவளை ஹோட்டலில் வந்து சந்தித்தவன் டிரைவர் இருக்கையில் அமர்ந்திருந்தான்.

காரில் வேறு யாரும் இல்லை.

''டாக்குமெண்ட் கொண்டு வந்திருக்கிறாயா?''

''எடுத்து வந்திருக்கிறேன்... இந்தா...''

''உன்னிடமே இருக்கட்டும். உனக்குக் கொடுக்க வேண்டிய ஒரு அயிட்டம் இருக்கிறது. அதைக் கொடுத்து விட்டு இதை வாங்கிக் கொள்கிறேன்...''

கார் மெல்ல நகர ஆரம்பித்தது.

வீணா முகத்தில் கலவரத்தைக் காண்பித்தாள்.

''இப்படியில்லையே ஏற்பாடு?'' என்றாள், ''கார் ஏன் ஓடுகிறது?''

''உரிய இடத்திற்கு உன்னை அழைத்துப் போவதற் காக...''

''வண்டியை நிறுத்து. டாக்குமெண்ட்டைக் கொடுத்துவிட்டு நான் இறங்குகிறேன்...''

''ஷ்ஷ்.. பாட்டை அனுபவி.. ஏ.ஸி.யை அனுபவி...''

வண்டி வேகம் எடுத்தது.

வீணா கண்களை மூடிக் கொண்டு சாய்ந்தாள்.

அவள் எதிர்பார்த்தபடியே கடத்திப்படுகிறாள்.

அடுத்தது அருமைராஜுடனான சந்திப்பா?

* * *

அருமைராஜ தன் உடல் முழுவதும் உயர் ரக பாடிஸ்ப்ரேயை பிய்ச்சிக் கொண்டான்.



பெண்களுக்கு மிகவும் கிளர்ச்சியூட்டும் வாசம் என்று விளம்பரங்கள் வலியுறுத்தின.

காட்டன் டீ ஷர்ட்டை தலைவழியே நுழைத்த போது இண்டர்காம் ஒலித்தது.

''யெஸ்...''

''கொண்டு வந்து விட்டோம், சார்...''

அருமைராஜின் ரத்தம் வேகம் எடுத்தது.

''முரண்டு பிடித்தாளா?''

''இல்லை சார். முதலில் ஆட்சேபித்தாள். அப்புறம் வேறு வழியில்லை என்று புரிந்து கொண்டது போல் சமாதானமாக, வந்தாள்.

''என் அறையில் உட்கார வை...''

* * *

வீணா அந்த அறைக்குள் நுழையும் முன் நிறுத்தப் பட்டாள்.

நீல நிற ஜீன்ஸ்களில் இருந்து ஒரு பெண் வீணாவை நெருங்கினாள்.

''உங்களிடம் ஆயுதம் ஏதாவது இருக்கிறதா?'' என்றாள்.

''வாட் நான்சென்ஸ்.. நான் கடிதம் கொடுத்து விட்டுப் போக வந்தேன்.. அவ்வளவுதான்...''

''என்னை மன்னியுங்கள்..நீங்கள் தலைவரை சந்திக் கும் முன் ஆயுதங்கள் இருக்கிறதா என்று பார்க்க வேண் டியது என் கடமை..''

அந்தப் பெண் தன் சாதுர்யமான கைகளை வீணாவின் உடல் எங்கும் ஓட்டினாள்.

''கடிதத்தை மட்டும் எடுத்துக் கொண்டு ஹேண்ட் பேகை இங்கேயே ஒப்படைத்து விட்டுப் போங்கள். நீங்கள் திரும்பி வரும் போது பிக் அப் பண்ணிக் கொள்ள லாம்.''

வீணாவின் அனுமதிக்காகவெல்லாம் காத்திருப்பவள் போல் தெரியவில்லை.

வீணா ஹேண்ட் பேக் திறந்தாள். உள்ளேயிருந்து நம்பர் ஏ கொடுத்தனுப்பிய வெள்ளை உறையை எடுத்துக் கொண்டாள். பையை அந்தப் பெண்ணிடம் கொடுத்தாள்.

அறைக் கதவு திறக்கப்பட்டு உள்ளே அனுமதிக்கப்பட் டாள்.

கதவு அவள் முதுகில் சாத்தியது.

இனி அவள் என்ன முயன்றாலும் அந்தக் கதவைத் திறக்க முடியாது. கதவுக்கு உள்புறம் தாழ்ப்பாளோ, கைப் பிடியோ இல்லை.

வீணா அந்த அறையை பார்வையால் ஸ்கேன் செய்தாள்.

கூரை முழுவதும் கண்ணாடி பொருத்தப்பட்டிருந்தது. அவள் பிம்பம் தலைகீழாகத் தொங்கியது.

அறைக்குள் குளிர்காற்று சத்தமில்லாமல் நிரம்பிக் கொண்டிருந்தது.

அறை மிகப் பெரிதாய் இருந்தது. மிகுந்த ரசனையுடன் அமைக்கப்பட்டிருந்தது. சுவர்களில் கோட்டுச் சித்திரங் கள் அலங்காரமான கடிகாரத்தில் பெண்டுலமாக தன் வாலை ஆட்டிக் கொண்டிருக்கும் உலோகக் குரங்கு. கனமான மெத் மெத் என்ற சோபாக்கள் கண்ணாடி



டீப்பாய். உயரம் குறைவான சிறிய ஃப்ரிட்ஜ். ஸோனி டெலிவிஷன். டி.வி.டி. ப்ளேயர். மியூசிக் சிஸ்டம்.''

மாபெரும் இரட்டைக் கட்டில். மிக நேர்த்தியான படுக்கை விரிப்பு.

வீணா தன்னை மீண்டும் கவனித்துக் கொண்டாள்.

அவள் உடலின் அபாரமான வளைவுகளை ஒட்டித் தழுவியிருந்த பிரிண்டட் சில்க். பூக்கள் அச்சிட்ட ரவிக் கையில் முன்புறமும், முதுகுப் புறமும் தாராள வெட்டு கழுத்தில் முத்துமணி மாலை.

புடவை இமையில் தழைந்து இருந்தது. இடுப்பில் சரேலென்ற வளைவை எடுப்பாகக் காட்டியது.

வீணா மெல்ல நடந்து சோபாவில் சென்று அமர்ந்தாள்.

ரிமோட் எடுத்து டெலிவிஷனை இயக்கினாள்.

கார்ட்டூன் ஓடியது. டாம்பூனையை ஜெர்ரி எலி டபாய்த்துக் கொண்டிருந்தது.

கதவு திறக்கும் ஒலி கட்டில் இருந்த பக்கம் இன் னொரு கதவு இருப்பதே அப்போதுதான் தெரிந்தது. அந்தக் கதவை திறந்து அவன் உள்ளே நுழைந்தான்.

அருமைராஜ்!

முகிலன் அவளிடம் சில புகைப்படங்களில் ஏற் கெனவே அருமைராஜின் வெவ்வேறு தோற்றங்களை காட்டியிருக்கிறான்.

இப்போது அறைக்குள் நுழைந்த அருமைராஜ் முற் றிலும் மாறுபட்ட தோற்றத்தில் இருந்தான்.

உடம்பை இறுக்கிப் பிடித்த டீ ஷர்ட்டை மீறி அவ னுடைய உறுதியான மார்புகள் தெரிந்தன. முழங்கால்

வரை அணிந்திருந்த அறை சாராய் திண்ணென்ற தொடைகளை பறை சாற்றியது. தலையை மூடியிருந்த வட்டத் தொப்பியில் எம்ப்ராய்டரி வேலை தெரிந்தது. மீசை துறுதுறுவென்றிருந்தது. எப்பொழுதோ ஏற்பட்ட வெட்டுக் காயம் வலது கன்னத்தில் ஒரு தழும்பாகப் பதிந்திருந்தது.

''ஹாய் பேபி...'' உற்சாகமாக கையசைத்துக் கொண்டே அவன் நுழைந்தான்.

வீணா பரபரப்பாக எழுந்தாள். முகத்தில் மெல்லிய கலவரம்.

''நான்.. நான் பேபி இல்லை...''

''தெரியும்.. உன் பெயர் வீணா.. முத்து நவரத்தினம்.. பொன் வெள்ளிச் சிவப்பு.. நித்ய கல்யாணி..''

பேசிக் கொண்டே அருமைராஜ் வீணாவை மிக சமீபித்தான்.

அவனிடமிருந்து ஒரு சுகந்த வாசம் எழும்பியது.

வீணா வாயை லேசாகப் பிளந்தபடி நின்றாள்.

''நான் யார் தெரியுமா?'' அவன் சிரித்தபடி கேட்டான்.

''தெரியும்.. தெரியாது...'' என்றாள் வீணா, குரலில் பயத்தை விலக்காமல்.

''தெரியுமா? தெரியாதா?''

''நீங்கள்.. நீங்கள் அருமைராஜின் ஆள் என்று தெரியும்.. ஆனால் என்னை டாக்குமெண்ட் ஒப்படைக்க ரகசிய சர்வீஸில் அனுப்பியவர்கள் உங்களைப் பற்றிச் சொல்லவில்லை என்பதால் இதில் குறுக்கே நீங்கள் எப்படி வந்தீர்கள் என்பது தெரியாது...''



அருமைராஜ் வாய்விட்டு உறக்கச் சிரித்தான்.

''நான் அருமைராஜின் ஆள் என்பதை எப்படிக் கண்டுபிடித்தாய்?''

''அறைக்குள் நுழையும் முன் என்னிடம் ஆயுதம் இருக்கிறதா என்று சோதித்த பெண் தலைவரைப் பார்க்கும்போது ஆயுதம் கூடாது என்று சொன்னாள், தலைவர் என்று குறிப்பிட்டது, என்னை ரெஸ்ட்டாரண்ட்டிலிருந்து காரில் அழைத்து வந்தது இவற்றை வைத்து அருமைராஜின் இடத்திற்கு வந்திருக்கலாமோ என்று ஒரு சந்தேகம்...''

''அது தான் பயமா?''

''பயம் இல்லை.. படபடப்பு.. அருமைராஜை சந்திக்க வேண்டும் என்று ரொம்ப நாள் ஆசை. அதற்கான வாய்ப்பு கிடைக்குமோ என்ற படபடப்பு.

அருமைராஜின் முகத்தில் ஒரு ஆனந்த வியப்பு.

''அருமைராஜை சந்திக்க வேண்டுமா? எதற்கு?''

''கொஞ்சம் பாராட்டுவதற்கு. கொஞ்சம் திட்டுவதற்கு...''

''இந்த பதில் அருமைராஜை இன்னும் உற்சாகப்படுத்தியது.''

''எதற்குப் பாராட்டு? எதற்குத் திட்டு?''

''நான் உட்காரலாமா? என் கால்கள் நடுங்குகின்றன.''

''ப்ளீஸ்...'' அருமைராஜ் உரிமையுடன் அவள் தோள்களில் பிடித்து அமுத்தினான்.

வீணா சற்றே நெளிந்து அவன் பிடியிலிருந்து விடுபட்டு சோபாவில் அமர்ந்தாள். அவர்களுடைய பேச்சு

உரையாடலும் இந்நேரம் பதிலாகிக் கொண்டிருக்கும் என்று எண்ணம் வேறு படபடப்பைக் கொடுத்தது.

''பாராட்டை அருமைராஜிடம் சொல்கிறேன். திட்டை மட்டும் உங்களிடம் சொல்கிறேன்..'' வீணா கைக் குட்டை எடுத்து தன் முகத்தின் பகுதிகளை ஒற்றி எடுத்தாள்.

''எனக்கு என் அம்மாவை ரொம்ப ரொம்பப் பிடிக்கும். அந்த அம்மா விபத்தில் செத்துப் போனாள். அதற்குக் காரணம் அருமைராஜ என்று சொன்னார்கள். அதனால் அவர் மீது எனக்குக் கோபம்...''

''ஓ.. ஸாரி.. பாராட்டு எதற்கு? என்னிடமே சொல்ல லாம்.''

வீணா கண்களைப் படபடத்து விட்டு தலையைக் குனிந்து கொண்டாள்.

''அதே விபத்தின் மூலம் என் அண்ணனிடமிருந்து எனக்கு விடுதலை வாங்கித் தந்ததற்காக...''

அருமைராஜின் முகத்தில் இருந்த புன்னகை சட்டென விலகியது.

''என்ன சொல்கிறாய், வீணா?''

''எனக்கும் என் அண்ணனுக்கும் ஒத்துப்போனதே இல்லை.. அம்மா மனசு நோகக் கூடாதே என்று ரொம்ப ஒற்றுமையாக இருப்பது போல் இருவரும் நாடகமாடி கொண்டிருந்தோம்..''

''ஒத்துப் போகாதா? ஏன் ஒத்துப் போகாது?''

''முகிலனுக்கு நான் ரொம்ப அழகு என்று எண்ணம். அதனால் என்னைப் பொத்திப் பொத்திப் பாதுகாக்க



வேண்டும் என்று நினைத்தான். எனக்கோ சுதந்திரமாக இருக்க ஆசை. ஆண்களுடன் சரிசமமாகப் பேச வேண்டும், சேர்ந்து ஊர் சுற்ற வேண்டும், கை கோர்த்துக் கொண்டு பீச்சில் நடக்க வேண்டும், இணைந்து சினிமா போக வேண்டும் என்று எனக்கு என்னென்னவோ கனவுகள்.. ஒன்றைக் கூட முகிலன் அனுமதித்ததில்லை. வீட்டில் அவன் வைத்தது தான் சட்டம் என்பதால் அம்மாவும் அவன் பக்கம் சேர்ந்து கொள்வாள். அவன் இருந்தவரை என்னை வேலைக்குக் கூடப் போகக்கூடாது என்று கட்டுப்படுத்தி வைத்திருந்தான். அதனால் தான் அவன் செத்ததும் கெஞ்சிக் கூத்தாடி அதே ரகசிய சர்வீஸில் வேலைக்கு சேர்ந்துவிட்டேன்...''

''அப்படியென்ன ரகசிய சர்வீஸில் ஆசை?''

''எனக்கு இந்த த்ரில்லிங்கான வேலைகள் எல்லாம் பிடிக்கும். இந்த துறையில் இருப்பவர்களுடைய புத்திசாலித்தனத்தை ரசிப்பேன். தைரியத்தை வியப் பேன்.. முகிலனைப் போல நிறைய புத்திசாலி இளை ஞர்கள் இருப்பார்கள் என்று கனவு கண்டு வந்து சேர்ந்தேன்.. ஆனால் பொசுக்கென்று ஏமாற்றமாகி விட்டது.''

''என்ன ஏமாற்றம்?''

''நம்பர் ஏ என்று ஒரு கிழம்.. அதற்கடுத்த நிலையில் ரத்தினம் என்ற இன்னொரு கிழம்.. மிஸஸ் மாத்யூ என்று இன்னும் ஒரு பெண் கிழம்.. வாழ்க்கையே வெறுத்து விட்டது. டாக்குமெண்ட் கொடுக்க முடியுமா என்று என்னைக் கேட்டபோது, அதனால் தான் உடனே சம் மதித்தேன். டாக்குமெண்ட்டை வாங்கிப் போக யாராவது இளைஞன் வந்தால் அவனோடு ஒரு நட்பை

ஆரம்பிக்கலாமே என்று ஆசை கடைசியில் அது என்னை இங்கே கொண்டு வந்து விட்டது..."

"நீயோ ரகசிய சர்வீஸைச் சேர்ந்த உளவுக்காரி.. நானோ அருமைராஜின் ஆள் என்கிறாய்.. அப்புறம் எப்படி என்னிடம் போய் இத்தனை உள் விவகாரங்களை டிஸ்கஸ் பண்ணுகிறாய்?"

"உண்மையைச் சொல்லட்டுமா?"

"ம்ம்..."

"எனக்கு என் அண்ணனின் மீது வெறுப்பு, நாட்டுப் பற்று அது இது என்று பேசிக் கொண்டு வாழ்க்கையை ரசிக்க விரும்புகிறேன். சிகப்பு சிக்னலை மீற வேண்டும். ஒரு வழிப்பாதையில் வண்டியை செலுத்த வேண்டும் என்று சட்டங்களை மீறுவதில் ஒரு த்ரில் இருப்பதாய் நினைப்பவள்.... தர்மருக்கு வாழ்க்கைப்படுவதில் என்ன சுவாரஸ்யம்? துரியோதனுக்கு வாழ்க்கைப்பட்டால், வாழ்க்கை தினம் தினம் பரபரப்பாக இருக்கும். சுவாரஸ்ய மாக இருக்கும் என்று நினைப்பவள் நான்..."

"இன்னும் என் கேள்விக்கான பதில் வரவில்லை..."

"சொல்கிறேன்... என் அண்ணன் ஒரு முறை அருமைராஜின் ஒரு போட்டோவைக் காட்டியிருக்கிறான். பார்த்தவுடனேயே எனக்கு அவரைப் பிடித்துப் போனது... அவரை சந்திக்க வேண்டும் என்று அன்றிலிருந்து ஒரே ஆசை. நான் ரகசிய சர்வீஸின் உளவுக்காரி என்று தெரிந்து விட்டால் அருமைராஜ் என்னை சந்திப்பாரோ மாட்டாரோ என்று பயம். நான் அவர் பக்கம் தான் என்று புரிந்தால் ஒரு வேளை பெரிய மனது பண்ணி என்னை சந்திக்கலாமே என்று தான்..."



"சந்தித்தால் என்ன செய்வாய்?"

"அதை உங்களிடம் சொல்ல முடியாது."

"பரவாயில்லை, சொல்..."

"ஸாரி.. அது பர்ஸனல் மேட்டர்.. மற்றவர்களிடம் சொல்ல முடியாது."

"அருமைராஜை சந்திக்க இஷ்டமா?"

"ஆம்.... ஆம்..... ஆம்..."

"கண்களை மூடித் திற...!"

திறந்தாள்.

அருமைராஜ் தன் தொப்பியை நீக்கியிருந்தான்.

"இப்போது அடையாளம் தெரிகிறதா?"

"நீங்கள்.... நீங்கள்.. அருமைராஜ்!"

"அருமைராஜ தான்!" அவன் புன்னகை பெரிதானது.

வீணா கைகளைத் தட்டி எழுந்தாள். கன்னங்களைத் தன் உள்ளங்கையால் அழுத்திக் கொண்டாள்.

"ஹையோ! நிஜமாகவா?"

"வேண்டுமானால் என்னைக் கிள்ளிப் பார்..."

அருமைராஜ் கையை நீட்ட சட்டென அதைப் பற்றி அதில் தன் உதடுகளைப் பதித்தாள் வீணா.

அவளை சரேலென அருகில் இழுத்தான், அருமை ராஜ்.

இழுத்து நெஞ்சுடன் அணைத்து அவளுடைய சிலீர் என்ற இடையில் தன் கையைப் பதித்தான்.

ஓணான் தீண்டியது போல் இருந்தது. ஆனால் வீணா முகம் சுளிக்காமல் புன்னகைத்தாள்.

''டாக்குமெண்ட்...'' என்று அந்த கவரை நீட்டினாள்.

அருமைராஜ் அந்த கவரை வாங்கி அப்படியே மேஜை மீது எறிந்தான்.

''நீ தான் இப்போது என் டாக்குமெண்ட்...'' என்று கட்டிலுக்கு இழுத்தான்.

''ஒரு நிமிஷம்..'' வீணா தன் உடலை பின்னுக்கு இழுத்துக் கொண்டாள்.

''என்ன...?'' அருமைராஜின் குரலில் அவசரம் இருந்தது.

''எத்தனை எத்தனை நாட்களாகக் காத்திருக்கிறேன், உங்களை சந்திக்க வேண்டும் என்று.. உங்களிடம் பேசுவதற்கு நூறு விஷயங்கள் இருக்கிறது...''

''நூறுக்கெல்லாம் நேரமில்லை.. ஒன்றிரண்டு பேசு.''

''இதுவரை எத்தனை வன்முறை செயல்களுக்கு நீங்கள் பின்னணியில் இருந்திருப்பீர்கள், அருமைராஜ்?''

''இதென்ன வணக்கம் தமிழகமா?'' அருமைராஜ் சிரித்தான். ''ஆனால் நீ கேட்டு நான் மறுக்கப் போவதில்லை. என்னென்ன சந்தேகமோ, கேள்...''

அருமைராஜ் சோபாவில் அவளை ஒட்டி சாய்ந்து உட்கார்ந்திருந்தான். விரல்களை அவள் உடலெங்கும் ஒட்டலானான்.

வீணா உள்ளுக்குள் குறுகினாள். சுருங்கினாள். கூசினாள். ஆனாலும் அவன் விரல்களைத் தடுக்காமல் அனுமதித்தபடி ஒவ்வொன்றாகக் கேட்டாள்.

அருமைராஜ் எந்தத் தயக்கமும் இல்லாமல் பதில்களை அள்ளி வீசினான்.



''ரயிலைக் கவிழ்த்திருக்கிறேன். கட்டிடத்தைக் கவிழ்த்திருக்கிறேன்.. ஆனால் நானே கவிழ்ந்தேன் என்றால், அது உன்னிடம் தான்..'' என்று இளிப்புடன் சொன்னான்.

''தப்பித்து போக நிறைய வழிகள் வைத்திருக்கிறீர்களா, அருமைராஜ்?''

''இப்போது கமர்ஷியல் பிரேக்...'' என்று சிரித்தான், அருமைராஜ், ''வா...''

வீணாவை இழுத்து எழுப்பினான்.

''இந்தத் தோடுகள் அழகாக இருக்கிறதே...'' என்று அவளுடைய முத்துத் தோடுகளை விரலால் சுண்டினான். ''அட கொண்டையூசிகளில் கூட முத்து!''

வீணா பதில் எதுவும் சொல்லாமல் புன்னகைத்துக் கொண்டே அவன் இழுத்த இழுப்பிற்கு நகர்ந்தாள்.

அருமைராஜ் அவள் கழற்றிய தோடுகளை காலடியில் போட்டான்.

''என்ன செய்கிறீர்கள்?'' வீணா பதறினாள்.

''இந்த மாதிரி மலிவான நகை அணிய வேண்டிய காதுகளா இவை? உனக்கு வைரத் தோடுகள் நான் தருகிறேன்... இது வேண்டாம்...''

அருமைராஜ் இரண்டு தோடுகளையும் சட்டென்று நசுக்கி மிதித்தான்.

''என்ன பார்க்கிறாய் வீணா? இரண்டு மைக்கும் உடைந்து விட்டதே என்றா?''

அருமைராஜ் புன்னகையைப் பெரிதாக்கினான்.

# 22

வீணா மிரட்சியுடன் அருமைராஜைப் பார்த்தாள்.

''பயந்து விட்டாயா? - அருமைராஜ் சிரித்தான். ''என்னை முட்டாள் என்று நீ நினைத்து விட்டாய், பார்.. அது மட்டும் தான் எனக்கு உறுத்தலாக இருக்கிறது...''

''இல்லை.. நான்.. வந்து.. நம்பர் ஏ...''

''ஷ்ஷ்...'' அருமைராஜ் அவள் உதடுகளில் விரல் வைத்து அமைதியாக்கினான்.

''இத்தனை நேரம் நீ என்னை பேட்டி எடுத்தாயே.. இப்போது உன்னிடம் நான் சில கேள்விகள் கேட்கட்டுமா?''

வீணா இரண்டு கைகளையும், முழங்கால்களுக்கு நடுவில் கொடுத்து இறுக்கிக் கொண்டாள். ''ம்'' என்றாள்.

''எனக்கு ஒவ்வொரு முறையும் ரகசிய சர்வீஸிலிருந்து முன்கூட்டி தகவல் கொடுத்து எச்சரிப்பது யார் என்பது உனக்குத் தெரியுமா?''

காதுகளில் இருக்கும் மைக்குகளைத் தான் உடைத்தானே தவிர கொண்டையூசியில் ஒரு மைக் இருப்பது இவனுக்குத் தெரியுமா, தெரியாதா? வீணா குழம்பினாள்.

''யூகம் தான் செய்திருக்கிறேன்...''

''யார்?''



''ரத்தினம் என்று என் அண்ணன் சந்தேகித்தான்.. ஆனால்...''

''ஆனால்?''

''ரத்தினம் உன்னுடைய கையாள் இல்லை...''

''பின்னே?''

''நம்பர் ஏ.. ரகசிய சர்வீஸின் தலைவராக இருக்கிறாரே நம்பர் ஏ. அவர் தான் உண்மையான துரோகி..''

''எப்படிச் சொல்கிறாய்?''

''நம்பர் ஏ விடமிருந்து தான் உனக்கு தகவல்கள் வருகின்றன என்று ரத்தினம் கண்டுபிடித்தார். ஆதாரங்களாக இருக்கட்டும் என்றும் அவருடைய லெட்டர் பேடிலிருந்து சில தாள்களைக் கிழித்து தன் மேஜை இழுப்பறையில் பத்திரப்படுத்தியிருந்தார். ரத்தினம் மீது சந்தேகம் கொண்ட அவர் அறைக்குள் போய் ஆராய்ந்த முகிலன் கண்ணில் அந்தத் தாள்கள் பட்டிருக்கின்றன. அவனுக்கிருந்த அவசரத்தில் அவை ரத்தினத்தால் பயன்படுத்தப்பட்ட தாள்கள் என்று அவன் அவர் மீது சந்தேகத்தை வளர்த்துக் கொண்டான்...''

''அவன் சந்தேகம் சரியாக இருக்கலாமே...''

''இல்லை.. அந்தத் தாள்களை அவர் பயன்படுத்தியிருந்தால் பத்திரப்படுத்த வேண்டிய அவசியம் என்ன? ஒரு தீக்குச்சியை உரசினால் அந்த தாள்கள் சாம்பலாகியிருக்குமே.. முகிலன் எடுத்து வந்த டிஜிட்டல் போட்டோக்களை மறுபடி மறுபடி போட்டு பார்த்தபோது தான் கவனித்தேன். அந்தத் தாள்களின் கீழ்ப்பகுதியில் இரண்டு நீலக் கோடுகள் இணையாக அச்சிடப்பட்டிருந்ததை.. அந்த லெட்டர் பேட் நம்பர் ஏ பயன்படுத்துவது...''

''நம்பர் ஏவின் லெட்டர் பேட் ஒன்றை ரத்தினம் பயன்படுத்தியிருக்கலாமே!''

கையெழுத்து! சில ஆங்கில எழுத்துக்களை நம்பர் ஏ எழுதும் ஸ்டைலே தனி...''

''முகிலன் என்னைப் பார்த்ததும் தகவல் கொடுத்தது நம்பர் ஏ.விற்கு இல்லை.. ரத்தினத்திற்குத்தான்.. எனக்கு உடனே தகவல் வந்தது வேறு யாரிடமிருந்து இருக்க முடியும்?''

''அப்படித்தான் முகிலனும் நினைத்தான். ஆனால் நம்பர் ஏ தன் சாமர்த்தியத்தைத் தன்னை அறியாமல் தானே காட்டிக் கொடுத்துவிட்டார். தெரியுமா? ரத்தினத் தின் செல்போனை இணையாக ஒட்டுக் கேட்கும் கருவி ஒன்றை பேசினார்... முகிலன் ரத்தினத்திற்குக் கொடுத்த ஒவ்வொரு தகவலும் அதே நேரத்தில் நம்பர் ஏ.வின் மேஜையிலும் ஒலிபரப்பாகிக் கொண்டிருந்தது... அவர் உடனே உங்களுக்கு தகவல் கொடுத்து விட்டார்...''

''வெல்.. நீ காதுத் தோடுகளில் மைக்கை மறைத்து எடுத்து வருவது கூட எனக்கு முன் கூட்டியே தெரிந்து விட்டது.''

''என்னை சந்திக்க வேண்டும் என்று நம்பர் ஏ.விடம் நீங்கள் பேசிய போன் உரையாடலை அவரே பதிவு செய்து வைத்திருந்தார். ஆனால் குரலை மாற்றிக் கொண்டு பேசியிருந்தார். பரிச்சயமான குரல் என்று எனக்கு தோன்றியதும், அது ரத்தினத்தின் குரல் என்று என்னை நம்ப வைக்கப் பார்த்தார். நம்பினாற் போல நானும் நடித்தேன். ஒரு டாக்குமெண்ட் கொடுப்பது போல நாடக மாடி என்னை உங்கள் இருப்பிடத்திற்கு நீங்கள் கேட்டுக் கொண்டபடி நம்பர் ஏ அனுப்பி வைக்க ஏற்பாடு செய்தார்.



ஆனால் அவருக்கு தெரியாது நானும் ரத்தினமும் மைக் பதித்த தோடுகளை பயன்படுத்த முடிவு செய்தது...''

''தெரியும்.. ரத்தினத்தின் அறையில் விடும் ஒவ் வொரு மூச்சு சத்தமும் நம்பர் ஏவின் அறையில் கேட்கும்...'' அருமைராஜ் சிரித்தான்.

ஆனால் என் முட்டாள் அருமைராஜே. ரத்தினம் இந்த முறை சற்று கவனமாக நடந்து கொண்டார். ரகசிய சர்வீஸ் ஆபீஸில் பதிவாகும் இந்த உரையாடல் அதே சமயம் இணையாக என் வீட்டிலும் பதிவாக ஏற்பாடு செய்திருக் கிறார். அதனால் உன்னால் இந்த முறை தப்பிக்க முடி யாது.

வீணா மனதில் நினைத்துக் கொண்டாளே தவிர வாய்விட்டு சொல்லவில்லை.

''எஸ்...'' அருமைராஜ் தன் உடலைத் தளர்த்தி சோம்பல் முறித்தான். ''இப்போது என்ன செய்யலாம்?''

''ஐ லைக் யூ...'' என்று உதட்டோரப் புன்னகை காட்டினாள், வீணா. ''அத்தனை எதிர்ப்புகளையும் சமாளித்து நீங்கள் ஒவ்வொரு முறையும் உங்கள் சாதுர்யத்தைக் காட்டித் தப்பிப்பதை நான் ரசிக்கிறேன்...''

''வெறும் ரசனையோடு நிறுத்திவிடப் போகிறாயா? அதற்குப் பரிசு உண்டா?'' அருமைராஜ் கண்ணடித்துக் கேட்டான்.

வீணா அவனை கண்களுக்குள் ஆழமாகப் பார்த்தாள்.

''நான் ஒரு பரிசு தந்தால் எனக்கென்ன பரிசு திருப்பித் தருவீர்கள்?''

''உனக்கு என்ன வேண்டும்?''

"ஒரு சத்தியம். உங்களிடமிருந்து ஒரு சத்தியம்..."

"என் சத்தியங்களை யாரும் மதிப்பதில்லை..."

"நான் மதிக்கிறேன், அருமைராஜ்.. நீங்கள் மதியுங்கள்..." வீணா கெஞ்சுவது போன்ற குரலில் சொன்னாள்.

"என்ன சத்தியம் வேண்டும்?"

"நீங்கள் நினைத்த நேரம் நினைத்த இடத்திற்கு என்னை வரவழைக்கலாம்.. என்னுடைய வாழ்நாள் முழுவதும், உங்களுக்கு சலித்துப் போகும் வரை உங்களுடையவளாக இருக்க நான் தயார்.. இது தான் நான் தரும் பரிசு. பதிலுக்கு இந்த நிமிடத்திலிருந்து அப்பாவி மக்களை எக்காரணம் கொண்டும் கொல்வதில்லை என்று நீங்கள் வாக்கு கொடுக்க வேண்டும். வன்முறையை முற்றிலும் திருப்புவதாக சத்தியம் செய்து கொடுக்க வேண்டும்..."

அருமைராஜின் முகத்திலிருந்த புன்னகை நழுவியது.

"புலி வாலைப் பிடித்த பின் விட முடியாது, வீணா, விட்டால் புலி அடித்துத் தின்றுவிடும்."

"இந்த ஊரை விட்டுப் போய் விடுவோம்.. இந்த நாட்டை விட்டே போய் விடுவோம்.. எங்காவது கண்காணாத தேசத்தில், யாரும் வராத ஒரு மூலையில் வாழ்க்கையைத் தொடர்வோம்..."

"நடக்காத காரியம்.. வேண்டுமானால் இப்படி வைத்துக் கொள்ளலாம்..."

"எப்படி?"

"மாதத்திற்கு பத்து நாள்.. பத்தே நாள் மட்டும் நான் என் தீவிரவாதத்தை சுத்தமாக விட்டு விடுகிறேன்..."



வீணா சற்று நேரம் பதில் சொல்லாமல் அவனையே பார்த்துக் கொண்டிருந்தாள்.

பின் மெல்லப் புன்னகைத்தாள். "தேங்க்யூ" என்றாள்.

"எதற்கு நன்றி?"

"எனக்கு நம்பிக்கை கொடுத்ததற்கு.. மாதத்தில் பத்து நாள் என்று ஆரம்பித்தாலும், அதை இருபதாக்கி, முப்பதாக்கி விட முடியும் என்ற நம்பிக்கை எனக்கு இருக்கிறது..."

"எதற்காக இந்த அன்னை தெரஸா வேலையெல்லாம்?"

"மோகனா சந்தோஷமாயிருந்தாள். என்னை சந்தோஷமாக வைத்துக் கொண்டாள். எங்கள் உறவு பலமாக இருந்தது... நீ என்னை சந்தோஷமாகப் பார்த்துக் கொள்.. உன்னை சந்தோஷமாக வைத்துக் கொள்வது என் பொறுப்பு..."

"நீங்கள் தீவிரவாதத்தை விடுவது தான் எனக்கு சந்தோஷம்."

"சரி, இதை மேலும் மேலும் விவாதம் பண்ணிக் கொண்டே போக வேண்டாம்... விடு..."

அருமைராஜ் அவள் தோள்களில் கைவைத்தான். கட்டை விரல்கள் அப்படியே நழுவி அவள் கழுத்தின் பக்கவாட்டை வருடின. மற்ற விரல்கள் அவன் பின் கழுத்தைத் தடவின. ரசிப்பது போல, வீணா கண்களை மூடிக் கொண்டாள்.

அருமைராஜ் அவள் இடுப்பைப் பிடித்து அப்படியே கட்டிலில் சரித்தான்.

''ஒரு நிமிஷம்..'' வீணா நெளிந்தாள். ''இந்தக் கொண்டை அசௌகர்யமாக இருக்கிறது. அவிழ்த்து விடுகிறேன்.''

கொண்டையிலிருந்து ஒவ்வொரு ஊசியாக எடுத்தாள். சுமார் நான்கங்குல நீளத்திற்கு பளபளவென்று ஒளிரும் வெள்ளிப்பூச்சுடன் ஒரு பெரிய முகத்தை தலையாக கொண்ட அந்த ஊசிகளை ஒன்றின் பக்கத்தில் மற்றது என்ற மேஜையில் வரிசையாக வைத்தாள்.

இன்னும் ஒரே ஒரு குண்டூசி இருந்தது.

பொறுமையில்லாமல் அருமைராஜ் அவள் உடலில் தன் விரல்களை ஓட் விட்டுக் கொண்டேயிருந்தான்.

வீணா தன் கூந்தலிலிருந்து கடைசி கொண்டை யூசியை எடுத்தாள். அதன் முத்தைப் பற்றிப் பிடித்து அதன் கூர்முனையை அவன் நெற்றியில் தொட்டாள், மெல்ல நகர்த்தினாள், அவன் மூக்கு விளிம்பில் மெல்ல நகர்த்தி இறக்கி அவன் உதடுகளைத் தொட்டாள்.

அந்த சிலீர் முனையின் குறுகுறுப்பை அருமைராஜ் ரசித்துக் கொண்டிருந்த போது, அவன் சற்றும் எதிர்பாராத நேரத்தில் கொண்டை ஊசியை அழுத்தமாகப் பற்றி அவன் உதட்டில் அழுத்தினாள்.

அதன் கூர்முனை சரக்கென்று அருமைராஜின் உதட்டில் துளைத்து நுழைந்தது. ரத்த முத்து ஒன்று வெளிப்பட்டது. சுரீர் வலியில் அவன் சிலிர்த்து எழுந்திருக்க, ''ஸாரி...'' என்று சொல்லிக் கொண்டே இரண்டாவது முறையும் அதே கொண்டையூசி மூலம் அவன் கீழ் உதட்டை அவள் குத்தினாள்.



அருமைராஜ் ஆத்திரம் பொறுக்க முடியாமல் ஒரு தன்னிச்சை செயலாக அவளைப் பிடித்து அப்படியே பின்னால் தள்ளினான்.

கூரைக் கண்ணாடியில் தன் உதடுகளைப் பார்த்துக் கொண்டு பதறி எழுந்தான்.

''வலிக்கிறதா?'' என்றாள் வீணா, சின்னதாக சிரித்து.

''என்னடி பண்ணினாய்? இதென்ன விளையாட்டு?''

''பயப்படாதே அருமைராஜ். குத்தியவுடன் சுரீர் என்று வலித்திருக்குமே தவிர, இன்னும் முப்பது நாற்பது விநாடிகளுக்குள் வலி நின்று விடும்.. சொல்லப்போனால் வலி சுத்தமாக இருக்காது. இருந்தாலும் உன்னால் உணர முடியாது...''

அருமைராஜ் புழு போல் நெளிந்து தொண்டையைப் பற்றிக் கொண்டான்.

''மூச்சு திணறுகிற மாதிரி இருக்கிறதா, அருமைராஜ்.. அடங்கிவிடும்.. மூச்சே அடங்கி விடும்.. கொண்டை ஊசியின் முனையிலிருந்து உன் ரத்தக் குழாயில் இன்ஜக்ட் பண்ணப்பட்டிருப்பது மிக சக்தி வாய்ந்த ஆர்ஸனிக் விஷம்...''

அருமைராஜின் இமைகள் பிளந்து விழிகள் தெறித்து விடுவது போல் பெரிது பெரிதாகி அவளைப் பார்த்தன.

''தீவிரவாதிகள் சயனைடு சாப்பிட்டு இறப்பது வழக்கமாக நடக்கும் செயல்தானே? குட் பை!''

அந்தக் கொண்டையூசியை சட்டென்று அவன் கழுத்தில் செருகி நிறுத்தி விட்டு வீணா எழுந்தாள்.

''நாட்டுக்காக உழைத்த என் அண்ணனையும், எந்தப் பாவமும் அறியாத என் அம்மாவையும் இரக்கமில்

லாமல் கொலை செய்து விட்டு, என்னிடம் கூசாமல் பரிசு கேட்டாயே.. இதுதான் நான் தரும் பரிசு!''

அருமைராஜ் அடங்கினான்.

வீணா அவனுடைய செல்போனை எடுத்து ரத்தினத்தின் எண்களைத் தட்டினாள்.

அவருடன் பேசி முடித்தபின், அருமைராஜின் சக்தி வாய்ந்த ரிவால்வரை அவனுடைய சட்டைக்குள்ளிருந்து எடுத்தாள். அவன் அந்த அறைக்குள் நுழையப் பயன்படுத்திய மறைவான கதவைத் திறந்து துப்பாக்கியுடன் வெளியே பிரவேசித்தாள்.

## 23

ஆஸ்பத்திரிக் கட்டிலில் வீணா படுக்க வைக்கப்பட்டிருந்தாள்.

ஆடுசதையில் ஆபரேஷன் செய்து தோட்டாவை வெளியே எடுத்தார்கள்.

அருமைராஜின் அறையிலிருந்து அவள் வெளிப்பட்டதும், அவனுடைய ஆட்கள் விபரீதத்தை உணர்ந்து அவளை சூழ்ந்து கொல்லப் பார்க்க இரு தரப்பிலிருந்தும் துப்பாக்கிகள் வெடித்தன. வீணாவை தோட்டாக்கள் இரண்டு இடத்தில் தாக்கின.

ஒரு தோட்டா அவள் முகத்தை நெருக்கமாக உரசிச் சென்றதில் கன்னத்து சதை தீய்ந்திருந்தது. இரண்டாவது



தோட்டா அவள் புடவையைத் துளைத்து காலுக்குள் நுழைந்துவிட்டது. அவளை எதிர்த்த மூன்று பேரும் ஆம்புலன்ஸில் தான் கொண்டு வரப்பட்டிருந்தார்கள்.

* * *

வீணா மெல்ல இமைகளைத் திறந்தது.

''ஏய்.. என்னை இது ஜான்சி ராணி மாதிரி குதிரை எறி சண்டையெல்லாம் போட்டு விட்டு வந்திருக்கிறாய்?'' என்று அவள் வயிற்றை மெல்ல அழுத்தி அன்புடன் புன்னகைத்தான் ஜெயசூர்யா.

வீணா உலர்ந்த உதடுகளால் புன்னகைத்தாள்.

வலது புறம் நிழலாடியது. பார்வையைத் திருப்பினாள். ரத்தினம்!

''எக்ஸலண்ட் ஜாப், வீணா - '' என்றார், கண்களில் கருணை வழிய, ''உன் அண்ணனை அவசரப்பட வேண்டாம் என்று நான் எச்சரித்தும்,அவன் பதட்டமாக நடந்து கொண்டான். நீ புத்திசாலித்தனமாக நடந்து கொண்டாய்...''

''தே..ங்..க்..யூ...'' சார்.. எல்லாம் நீங்கள் கொடுத்த தைரியம் தான்...''

''அருமைராஜின் வாக்குமூலம் அருமையாகப் பதிவு ஆகியிருக்கிறது.. ஆனால் நம்பர் ஏ வைத்தான் நம்மால் கைது செய்ய முடியாது...''

ஏன் என்பது போல் நெற்றியைச் சுருக்கிப் பார்த்தாள், வீணா.

''அருமைராஜ் செத்ததும் அவன் ஆட்கள் மடக்கப்பட்டதும், நம்பர் ஏ பதறிவிட்டார். இனி தப்பிக்க வழியில்லை என்பதால் தன் சர்வீஸ் துப்பாக்கியை எடுத்து...''

''ஓ காட்!''

''துப்பாக்கிச் சத்தம் கேட்டு அவர் அறைக் கதவைத் திறந்த போது நெற்றியில் சுட்டுக் கொண்டு மேஜை மீது கவிழ்ந்து கிடந்தார். அருமைராஜின் ஆட்கள் அப்ரூவல் களாகி விட்டார்கள்...''

''எனக்கு எத்தனை வருஷம் ஜெயில், சார்?'' - வீணா உலர்ந்த உதடுகளை ஒரு புன்னகைக்காக வளைத்தாள்.

''அருமைராஜ் போன்ற தீவிரவாதியை ஒழித்ததற்கு உனக்கு மன்னிப்பளித்து பாராட்டு விழா நடத்தினாலும் நடத்துவார்கள்...'' என்று சிரித்தார் ரத்தினம்.

''ஜெயிலுக்குப் போனாலும், போகவில்லையென் றாலும் ரகசிய சர்வீஸில் உனக்கு எப்போதும் இடம் உண்டு...''

''தேங்க்யூ சார்..'' என்றவள் ஜெயசூர்யாவின் பக்கம் திரும்பினாள். ரத்தினம் அவர்களை விடுத்து வெளியேறி னார்.

''சூர்யா...''

''ம்.''

''நான் உன்னைக் கூப்பிட்டு ஒரு பாவ மன்னிப்பு கேட்டேனே, ஞாபகம் இருக்கிறதா?''

''நன்றாக...''

''அந்த மன்னிப்பிற்கு அவசியமில்லாமல் போய் விட்டது... வாபஸ் கொடுத்து விடு...''

சொல்லிவிட்டு அவள் சிரிக்க, ஜெயசூர்யாவும் ஆனந்த மாக அந்த சிரிப்பில் கலந்து கொண்டான்.

# தேசத் துரோகி

துவங்கும் முன்...

காலை ஆறு மணி.

சூரியன் தூரத்து அடிவானத்தில் மஞ்சள் வட்டமாய் எழுந்து கொண்டிருந்தான். மேகங்கள் குன்றுகளில் இளைப்பாறின. வண்டிச் சக்கரங்கள் மண் பாதையில் புழுதி எழுப்பின. வயல்களில் பெண்கள் குனியத் துவங்கினர்.

மின்சார ரயில் தடதட தட்தடதட என்று ஒரே சீரான சப்தத்தில் விரைந்து கொண்டிருந்தது. பர்த்களில் தூங் கியவர்கள் கலைந்து எழுந்து பாத்ரூம்களில் கியூ நின் றார்கள். ஏற்கனவே எழுந்தவர்கள் முந்தைய ஸ்டேஷனில் வாங்கிய செய்தித்தாள்களில் கோர்ப்பச்சேவை விவாதித் தார்கள்.

இந்திரஜித் ஜன்னலோர இருக்கையில் உட்கார்ந்திருந் தான். ஜன்னல் கண்ணாடி இறக்கப்பட்டிருக்க, அதில் தலை சாய்த்து மந்தமான தூக்கத்தில் இருந்தான். இமை

களைக் கசக்கித் திறந்து ஜன்னலுக்கு வெளியே சூரியனைப் பார்த்தான். மரங்களை, அவற்றின் பச்சைக் கிளைகளைப் பார்த்தான். அவன் தலை சிலிர்த்தது. கண்களை அழுத்தமாய்ச் சிமிட்டினான். முகத்தில் பதற்றம் தொற்றியது. யாரோ அவனை உலுக்கி நிமிர்த்தியது போல் எழுந்தான்.

''நோ!'' என்று அலறினான். அலறல் விபரீதமாயிருந்தது. ரயில் பெட்டியில் இருந்த பலமுகங்களைத் திரும்பிப் பார்க்க வைத்தது. இவனுக்கென்ன பைத்தியமா என்பது போன்ற பார்வைகளை அவமதித்து அவன் பரபரப்பாக இருக்கையில் ஏறினான். அபாயச் சங்கிலி என்று போட்டிருந்த சங்கிலியைப் பற்றி இழுத்தான்.

இன்ஜின் கூ ஊ ஊ ஊ என்று ஊளையிட்டது. பாங்ங் என்று சப்தமிட்டது. பிரேக்குகள் பிரயோகிக்கப்பட்டு, ரயில் வண்டி நிறுத்தத்திற்கு வந்தது.

இந்திரஜித் தலையை இரு கைகளாலும் பிடித்துக் கொண்டு உட்கார்ந்தான். அவனைச் சுற்றிலும் பிரயாணிகள்.

ஏன்? ஏன்? ஏன் சங்கிலியைப் பிடித்து இழுத்தாய்? எதையாவது வெளியே போட்டு விட்டியா? தங்கச் சங்கிலியா, வாட்ச்சா, பர்ஸா, எதைக் கை தவற விட்டாய்?

இந்திரஜித் மெல்லத் தலையை நிமிர்த்தினான்.

''நம் எல்லோரையும் காப்பாற்ற'' என்றான்.

''என்னது?!''

வெள்ளை உடுப்பணிந்த ரயில்வே கார்டு அவன் முகவாயைக் கோபத்துடன் நிமிர்த்தினார். ''ஏன் நிறுத்தினாய், ரயிலை?''

''இன்னும் ஐந்து நிமிஷத்தில் இந்த ரயில் கவிழ்ந்திருக்கும்.''



''என்ன உளறுகிறாய்?''

''உளறவில்லை. சூரியனைப் பார்த்தபோது, அந்த வெளிச்சத்தில் எனக்கு அந்தக் காட்சி தெளிவாகத் தெரிந்தது.''

''எந்தக் காட்சி?''

''விடிகாலை வெளிச்சத்தில் ரயில் ஒன்று திடீரென்று காரணமில்லாமல் தண்டவாளங்களிலிருந்து இறங்கி அப்படியே குடை சாய்கிறது. எங்கு பார்த்தாலும் ஒரே கூச்சல்... குழப்பம்...''

''உனக்கென்ன பைத்தியமா?'' குரல்களில் கோபம் கூடின.

''உனக்கு ஏதோ பிரமை என்பதற்காக ரயிலையே நிறுத்துவதா?''

''ஸாரி... எனக்கு பயமாயிருந்தது... எதற்கும் டிரைவரிடம் கவனமாகப் பார்த்து ஓட்டச் சொல்லுங்கள்...''

''நீ வா என்னுடன். அபராதம் கட்ட வேண்டியிருக்கும்...''

இந்திரஜித் அவனுடைய பெட்டியைத் தூக்கிக் கொண்டு, அத்தனை பிரயாணிகளின் பார்வைகளையும் முதுகில் தாங்கி இறங்கினான்.

அந்த ரயிலில் அவனுடன் பிரயாணம் செய்தவர்கள் அத்தனை பேரும் அவனைப் பற்றி அன்றைக்கே மறுபடி நினைத்துப் பார்க்க வேண்டிய சூழ்நிலை வந்தது. ஒலி பரப்பான, ஒளிபரப்பான டெலக்ஸ்னா அன்றைய காலை செய்திகளில் முக்கியமான செய்தி.

ஆந்திராவில் இன்று காலை ஆறு மணிக்கு ரயில் கவிழ்ந்தது.

# 1

அந்த அறையில் அமைதி தொங்கியது. சுவர்கள் இளம் பச்சையில் வர்ணம் தாங்கின. மெல்லிய நீல விளக்கு ஒன்று இதமாக ஒளிர்ந்தது.

உயர்ந்த முதுகு கொண்ட குஷன் நாற்காலியில் இந்திரஜித் அமர்ந்திருந்தான். நிறைய வியர்த்திருந்தான். கண்களில் மெல்லிய பயம் இருந்தது. நாவை உதடு களுக்கு வெளியே செலுத்தி ஈரப்படுத்திக் கொண்டான்.

அவனுக்கு எதிரே உயரமாய் நின்றிருந்த டாக்டர் செரியனுக்கு நாற்பத்தைந்து வயதிருக்கும். முன் கறுக்க வில்லை. மெல்லிய பிரேம் கண்ணாடிகள் அடர்த்தியான மீசை. முகவாயில் குழி. இன்றைய கதாநாயகர்களுக்கு எந்த விதத்திலும் குறைவில்லாத தோற்றம். உதடுகள் ரோஸ் நிறமாயிருந்தன. (இயற்கையிலேவா, அல்லது லிப்ஸ்டிக் பூசுவாரா?) மிருதுவான புன்னகை.

''இந்திரஜித்... ஏன் இவ்வளவு நெர்வஸாக இருக் கிறீர்கள்?''

''ஓ... ஒன்றுமில்லை...''

''நான் சைக்கிக் அண்ட் மிஸ்டிக்ஸ் பற்றி ஆராய்ந்து வருபவன். நானூறு வருடங்களுக்கு முன்பே இராக் - அமெரிக்கப் போரைப் பற்றிக் கூட எழுதி வைத்த நோஸ்ட்ரடாமுஸ் பற்றி பிரமிப்புடன் படித்தவன். இன்றைக்கும் உலகில் அங்கங்கே சிதறிக் கிடக்கும் இந்த அபார சக்தி மனிதர்களைப் பற்றி வியந்து கொண்டிருப் பவன். தமிழ்நாட்டிலேயே இப்படி ஒரு அபூர்வ சக்தி



கொண்டவர் இருக்கிறார் என்று நியூஸ் பேப்பர்கள் மூலம் அறிந்தபோது, மிகவும் சந்தோஷப்பட்டேன்... என் ஆராய்ச்சி களுக்கு உங்களை அதற்காகத்தான் கூப்பிட்டேன்...'' டாக்டர் செரியனின் குரலில் அந்தரங்கமானதொரு அன்பு கலந்திருந்தது.

இந்திரஜித் சற்று தடுமாற்றத்துடன் புன்னகைத்தான்.

''உங்களுக்கு எவ்வளவு வயதாகிறது, இந்தர்?''

''முப்பத்தியொன்று...''

''என்ன செய்கிறீர்கள்?''

''பிஸினஸ். மெட்ராஸில் வீடியோ வாடகை லைப்ரரி வைத்திருக்கிறேன்.''

''குடும்பம்?''

''அம்மா, அப்பா கிடையாது. போன வருடம் கல்யாணம். இன்னும் குழந்தை இல்லை...''

''எப்போது உங்களிடம் இந்த சூப்பர்பவர் இருப்பதை முதன் முதலில் உணர்ந்தீர்கள்?''

''சூப்பர்பவர் என்ற பெரிய வார்த்தையெல்லாம் போட்டு பயமுறுத்தாதீர்கள், டாக்டர்...'' இந்திரஜித் நெளிந்தான். ''எனக்கு பத்து வயதிருக்கும் போது ராத்திரி கனவில் ஒரு காட்சி வந்தது. சுவரையெல்லாம் இடித்துக் கொண்டு ஒரு லாரி வீட்டிற்குள் மோதி மூக்கை நீட்டி நிற்பது போல் கனவு. பயந்து போய் அம்மாவை எழுப்பி னேன். தூங்குடா பேசாமல் என்று மிரட்டினாள் அம்மா. எனக்குத் தூக்கம் வரவில்லை. எழுந்து பாத்ரூமிற்குப் போயிருந்தேன். டம்மால் என்று ஒரு சப்தம். கட்டிடமே அப்படியே ஆடியது. தடதடவென்று நொறுங்கி விழுந்தது. கதவு சரிந்து வாஷ் பேஸினால் தடுக்கப்பட்டு,

கீழே இருந்த இடைவெளியில் ஒடுங்கிக் கொண்டேன். இரண்டு மணி நேரங்கள் கழித்து என்னை தீயணைப்புப் படையினர் மீட்டார்கள். ஓர் இரும்பு லாரி பிரேக் பிடிக்காமல் எங்கள் வீட்டில் மோதி நுழைந்திருந்தது. அந்த அதிர்ச்சியில் கூரை விழுந்து கட்டிலோடு என் அம்மாவும், அப்பாவும் கோவிந்தா...''

''த்சு த்சு...''

''என் கனவைப் பற்றி நான் சொன்னபோது யாரும் நம்பத் தயாராயில்லை. எனக்கே பிரமிப்பாக இருந்தது. அப்புறம் மாமா வீடு. அங்கே ஸ்கூல் படிப்பு முடியும் வரை. அப்பறம் பிரிந்து வந்து விட்டேன். நானே ஒரு பிரைவேட் கம்பெனியில் வேலை செய்து அந்த சம்பளத்தில் காலேஜ் போனேன். படித்தேன். காலேஜிலும் ஒருமுறை எனக்கு விபரீதக் காட்சி ஒன்று தோன்றியது. காலேஜடே, ஆடிட்டோரியத்தில் டிராமா, மூன்றாவது வரிசையில் உட்கார்ந்து பார்த்துக் கொண்டிருந்தேன். விளக்கெல்லாம் அணைந்து ஓரிரு விநாடிகள் இருட்டாயிருந்த போது மேலே தொங்கிய பெரிய பல்பு வெடித்துச் சிதறியது போல் எனக்கு ஒரு காட்சி தோன்றியது. நான் பதறி எழுந்து வார்ன் பண்ணுவதற்குள் இசை நிகழ்ச்சி ஆரம்பித்து விட்டது. நான் கத்தியது யார் காதிலும் விழவில்லை. ஆனால் எந்தவித அசம்பாவிதமும் இல்லாமல் அன்றைய நிகழ்ச்சி முடிந்தது. நல்லவேளை நான் எதுவும் சொல்லி அசிங்கப்படுத்தாமல் போனேனே என்று சந்தோஷப்பட்டுக் கொண்டேன். ஹாஸ்டலுக்குத் திரும்பினால் அங்கே பெரிய அதிர்ச்சி, ஹாஸ்டல் கேம்ப்பஸில் இருந்த எலக்ட்ரிக்கல் டிரான்ஸ்ஃபார்மர் வெடித்து ரிசப்ஷன் ஹாலே விழுந்திருந்தது. வார்டன் க்ளோஸ்...''



இந்திரஜித் சொல்வதையெல்லாம் டாக்டர் செரியன் டேப்பில் பதிவு செய்து கொண்டிருந்தார்.

''ஏதாவது பேட்டர்ன் இருக்கிறதா உங்களுக்கு வரும் காட்சிகளில்?''

''எனக்குப் புரியவில்லை, டாக்டர்...''

''முதல் முறை கனவு வந்தது என்றீர்கள். இரண்டாவது தடவை இருட்டில் காட்சி தோன்றியது என்றீர்கள்... சமீபத்தில் சூரிய வெளிச்சத்தில்தான் ரயில் கவிழ்வது போன்ற காட்சி வந்தது... இதில் ஒற்றுமை இல்லை. ஆனால் உங்களுக்கு அந்தக் காட்சி தோன்றுவதற்கு முன்பே உடம்பில் ஏதாவது மாற்றம்? அந்தக் காட்சி வரப் போகிறது என்ற முன்னறிவிப்பு?''

''யெஸ்...'' இந்திரஜித் கண்களை மூடிக் கொண்டான். ''ஒரு பத்து விநாடிகளுக்கு என் உடம்பில் திடீரென்று மின்சாரம் பாய்ந்தது போன்ற துடிப்பு இருக்கும். மண்டையில் ஏகப்பட்ட ரத்தம் சேர்ந்து விட்டது போல் சூடாகி விடும். கண்களுக்குள் சிகப்பு பூகம்பமாய் ஏதுவோ வெடிக்கும். மூன்று அல்லது நான்கு சந்தர்ப்பங்களில் எனக்குத் தோன்றிய காட்சி உடனே மறந்து விட்டது. அப்புறம் தான், எந்தக் காட்சி தோன்றுகிறதோ அதை மறந்து விடக்கூடாது என்பதில் மிக கவனமாய் இருக்கிறேன்...''

''உங்கள் மனைவியிடம் இதைப்பற்றி சொல்லியிருக்கிறீர்களா?''

''சொல்லியிருக்கிறேன். ஆனால் அந்த சந்தர்ப்பங்களில் அவள் சற்று பயந்து என்னிடமிருந்து விலகி விடுவாள்...''

''ஏன் என்று யோசித்திருக்கிறீர்களா?''

''ம்... எனக்குத் தோன்றும் காட்சிகள் முக்கால்வாசி ஏதாவது அழிவதைப் பற்றியே இருக்கின்றன. ஆக்கப்பூர்வ மாய் எதுவுமே தோன்றுவதில்லை என்பது அவள் குறை...''

''உங்களுக்கு அடுத்த முறை இதைப்போல 'காட்சி' தோன்றும்போது முழு விவரத்தையும் எனக்காக குறித்து வைப்பீர்களா, இந்திரஜித்? எந்த தேதி, எத்தனை மணிக்கு, எந்த சூழ்நிலையில், யாரைப் பற்றி - எல்லா விவரங்களும் எனக்கு வேண்டும்...''

''தருகிறேன், டாக்டர்...''

அதை ஒரு வாய்ப்பாகப் பயன்படுத்தி, இந்திரஜித் எழுந்து விட்டான்.

''தேங்க்யூ டாக்டர்...''

டாக்டர் செரியனுக்கு மனநிலைகள் தெரியும். அதற்கு மேல் அவனை வற்புறுத்துவதில் அர்த்தமில்லை என்று தோன்றியது. இரண்டு கைகளையும் அகல விரித்து, ''நான் அல்லவா உங்களுக்கு நன்றி சொல்ல வேண்டும்!'' என்றார் புன்னகையோடு.

## 2

இன்ஸ்பெக்டர் பால்ராஜ் பூவாளியை சரித்தார். கம்பிகளாக தண்ணீர் வெளிப்பட்டது. பச்சைச் செடியின் தளிர் இலைகளை நனைத்தது. சற்று விலகி அந்தச் செடியைத் தாங்கிய தொட்டியையும் நனைத்தது.



சற்று தள்ளி நின்று மரியாதையாக பார்த்துக் கொண் டிருந்த கான்ஸ்டபிளைப் பார்வையாலேயே அருகில் கூப்பிட்டார். பூவாளியை அவரிடம் கொடுத்தார்.

''ஸ்டேஷனுக்கு வெளியே இருக்கும் செடிகளுக்கும் ஊற்று.''

''யெஸ் சார்...''

''என்னவோ ஷூட்டிங் ஆர்டர் கொடுத்துவிட்டது போல் இதற்கு ஏன்யா இவ்வளவு விறைப்பாக யெஸ் சார் சொல்கிறாய்?''

பால்ராஜின் பார்வை தடைபட்டது. ஸ்டேஷனுக்கு வெளியே வந்து நின்ற ஆட்டோவிலிருந்து அவன் வெகு அவசரமாக இறங்கினான். மீட்டருக்கு காசு கொடுக்கும் போது பர்ஸைத் தவற விட்டு, கீழே போட்டு, பொறுக்கி எடுத்து, பணத்தைக் கசக்கிக் கொடுத்ததில் அவன் பதட்டம் தெரிந்தது.

பால்ராஜ் அவனை எதிர்கொண்டார்.

''என்ன வேண்டும்?''

அவரைப் பார்த்ததும் அவன் இரண்டு படியிறங்கிப் பின் வாங்கினான். கண்களில் பயம். திடுக்கிடல்.

பால்ராஜ் புன்னகைத்தார். அவன் பயம் விலகட்டும் என்பது போன்ற புன்னகை. அவன் தயங்கிவிட்டு உள்ளே வந்தான்.

பால்ராஜ் தன் மேஜையை அடைந்து எதிர் நாற் காலியை அவனுக்குக் காட்டினார்.

அவன் உட்காருவதற்கு முன் தன் உள்ளங்கை வியர்வையை சட்டையில் துடைத்து விட்டு நீட்டினான்.

''என் பெயர் இந்திரஜித்...''

''சொல்லுங்கள் இந்திரஜித்...''

''இன்றைக்கு ராத்திரி ஒரு கொலை நடக்கப் போகிறது. நீங்கள் அதைத் தடுக்க வேண்டும்..'' அவன் குரல் நடுங்கியது.

''கொலையா! யாரை யார் கொலை செய்யப் போகிறார் கள்?''

''நீல மிடி அணிந்த பெண்ணை சிகப்புக் கட்டம் போட்ட சட்டைக்காரன்...''

''வாட்?''

''இன்ஸ்பெக்டர். முதலில் என்னை சரியாக அறிமுகப் படுத்திக் கொள்கிறேன். என்னைப் பற்றி நீங்கள் சமீபத் தில் பத்திரிகைகளில் படித்திருப்பீர்கள். எனக்கு எக்ஸ்ட்ரா பவர் ஒன்று இருக்கிறது என்று நம்புகிறார்கள்..''

''ஓ, அந்த இந்திரஜித்தா? ரயில்வே ஆக்ஸிடண்ட்?''

''யெஸ், சார்... அரை மணி நேரத்திற்கு முன்னால் வீட்டில் உட்கார்ந்து பேப்பர் படித்துக் கொண்டிருந்தேன். என் ஒய்ஃப் டம்ளரில் காபி கொண்டு வந்து வைத்தாள். எடுத்துக் குடிக்கலாம் என்று வாயருகில் கொண்டு போன போது, மின்னல் மாதிரி எனக்கு அந்தக் காட்சி தோன்றியது.''

''கொஞ்சம் இருட்டான ஒரு சந்து. உயரமான சில கட்டிடங்களின் பின் வாசல்கள் போல் இருபுறமும் தெரிந்தன. அந்த சந்தில் நீலநிற மிடி போட்ட ஒரு இளம் பெண். தலைமுடியை குதிரைவால் போல் ரப்பர் பேண்ட் போட்டு கட்டியிருக்கிறாள். வெள்ளை பனியன். அதில் மார்பில் COME EASY என்று எழுதியிருக்கிறது. அவள் ரொம்ப சந்தோஷமாய் சிரித்துக் கொண்டு ஒரு ஆணுடன் கை கோர்த்து நடந்து வருகிறாள்.



''அந்த ஆணுக்கு முப்பது வயதுக்குள் இருக்கும். உயர மாய் இருக்கிறான். கண்களில் கூலிங்கிளாஸ். முகத்தை மறைப்பது போல் ட்ரிம் செய்யப்பட்ட தாடி, வாயில் ஒரு சிகரெட். அவள் அவன் கையை ஆசையோடு கோர்த்துக் கொண்டு அடிமை மாதிரி வருகிறாளே தவிர, அவனிடம் கொஞ்சம் அலட்சியம் இருக்கிறது. இருவரும் அந்த சந்து முனையில் இருக்கும் ஒரு குறுகலான கேட்டை நெருங்கு கிறார்கள். அந்த கேட்டின் மீது 'அனுமதியின்றி உள்ளே வரக்கூடாது' என்று வெள்ளைப் பெயிண்டில் எழுதப் பட்டிருக்கிறது.

''அவன் பேண்ட் பாக்கெட்டிலிருந்து ஒரு சாவி எடுக் கிறான். கேட்டில் தொங்கும் பூட்டைத் திறக்கிறான். இருவரும் உள்ளே நுழைகிறார்கள். கேமிரா போல என் பார்வை அவர்களைத் தொடர்கிறது. அவன் முகத்தைப் பார்த்து அந்தப் பெண் வெட்கமாகச் சிரிக்கிறாள். அவர்கள் இருவரும் எதை எதிர்பார்த்து அந்த இருட்டு இடத்திற்கு வந்திருக்கிறார்கள் என்பதை அவர்கள் கண்களில் என் னால் பிடிக்க முடிகிறது.

''கதவு திறந்து உள்ளே நுழைந்ததும் அவன் கதவைச் சாத்துகிறான். அந்தப் பெண் மிகுந்த காமத்துடன் அவன் இரு தோள்களிலும் கைகளைப் போடுகிறாள். இழுத்து அணைத்துக் கொள்கிறாள். ஆனால் அவன் முகத்தில் காமம் இல்லை. அவளைச் சடாரென்று தள்ளுகிறான். கீழே விழுந்த அவள் மிரண்டு போய்ப் பார்க்கிறாள். அவன் பின் பாக்கெட்டிலிருந்து ஒரு மடக்குக் கத்தியை எடுக் கிறான். பட்டனைத் தொட்டதும் கத்தி பிரிகிறது. சரக் என்று அவள் கழுத்தில் சீவுகிறான். ரத்தம்.. ஒரே ரத்தம்...

இந்திரஜித்தின் உடல் பால்ராஜின் மேஜை மேல் இருந்த காகிதம் போல் நடுங்கியது. அவன் கழுத்தே

சீவப்பட்டு விட்டதோ என்று சந்தேகிக்கும்படி கழுத்தை வேறு பிடித்துக் கொண்டான்.

சினிமாவின் க்ளைமாக்ஸ் காட்சியில் லயித்தவர் போல் பால்ராஜ் நாற்காலி நுனியில் உட்கார்ந்திருந்தார்.

''அப்புறம்?''

''அவ்வளவுதான் தெரிந்தது. இல்லை. ஒன்றைச் சொல்ல விட்டுவிட்டேன். கொலை நடந்த ரூமில் ஒரு தேதி காலண்டர் இருந்தது. முருகன் படம் போட்டது. அதில் இருந்த தேதி இன்றைய தேதி. இருட்டாயிருந்த தால் இன்று ராத்திரி தான் அந்தக் கொலை நடக்கப் போகிறது என்று எனக்குத் தோன்றியது. உங்களிடம் முன் கூட்டியே சொன்னால் நீங்கள் ஏதாவது நடவடிக்கை எடுத்து அந்தக் கொலையைத் தடுக்கலாமே.''

பால்ராஜ் சற்று ரிலாக்ஸ் ஆனார். நாற்காலியில் பின்னே நகர்ந்து உட்கார்ந்து கொண்டார்.

''மெட்ராஸில் நீங்கள் சொல்லுகிற மாதிரி எத்தனை சந்துகள் இருக்கின்றன தெரியுமா! குறிப்பிட்டுச் சொல் லும்படியாய் ஏரியா பற்றி ஏதாவது அடையாளம் தெரிந்ததா?''

''இல்லை'' என்றான், இந்திரஜித் ஏமாற்றத்துடன்.

''அந்தப் பெண்ணை இதற்கு முன் எங்காவது பார்த் திருக்கிறீர்களா?''

''ஊம்ஹூம்.''

''அந்த ஆளை?''

''இல்லையே. ஆனா இனிமேல் பார்த்தால் அடை யாளம் சொல்ல முடியும்.''



''பொதுவாக இதைப் போன்ற அனாமத்து கனவுகளை சீரியஸாக எடுத்துக் கொண்டு எந்த நடவடிக்கையும் எடுக்க முடியாது. இருந்தாலும் உங்களை கமிஷனரிடம் அழைத்துப் போகிறேன்.''

''சார். ஒரு கொலை நடந்த பிறகு அது எப்படி நடந்தது, என்ன ஏது என்று ஆராய்ந்து கொண்டிருப்பதைவிட, கொலை நடப்பதற்கு முன்பு தடுத்தால் அது நல்லதில் லையா?''

''உங்களுடைய கவலையை, அக்கறையை பாராட்டு கிறேன். ஆனால் உத்தரவு கொடுக்க வேண்டியவர் கமிஷனர்தான்.

★ ★ ★

''எங்கே அந்த ஆள்?'' என்றார் கமிஷனர். குரலில் மெலிதான எரிச்சலைக் காட்டி.

''வெளியே உட்கார வைத்திருக்கிறேன், சார்'' பால்ராஜ் விறைப்பாக பதில் சொன்னார்.

''இன்றைக்கு ஜனாதிபதி மெட்ராஸ் வருகிறார் என்று தெரியுமா, தெரியாதா?''

''தெரியும், சார்.''

''செக்யூரிட்டி அரேஞ்ஜ் மெண்ட்ஸில் நான் பிஸியாய் இருப்பேனா, மாட்டேனா?''

''இருப்பீர்கள், சார்...''

''அப்புறம் ஏன்யா கனவு கண்ட ஆளையெல்லாம் என்னிடம் இழுத்து வருகிறீர்கள்? ஸ்டேஷனோடு டிஸ் போஸ் பண்ணி அனுப்ப வேண்டியதுதானே? மெட்ராஸில் இருக்கும் அத்தனை போலீஸும் இன்னும் இரண்டு நாட்களுக்கு பிஸி. அதுவரை எந்தக் கனவும் காண

வேண்டாம் என்று அந்த ஆளிடம் சொல்லித் துரத்தி விடுங்கள்...''

''யெஸ், சார்'' என்று சல்யூட் அடித்தார், பால்ராஜ்.

## 3

ஜனாதிபதியின் கார்ப் பட்டாளத்திற்கு போக்குவரத்து அங்கங்கே மாற்றி அமைக்கப்பட்டிருந்தது. மெதுவாக சீர்ப்பட்டுக் கொண்டிருந்தது.

டீசல் புகையால் எப்போதும் நிரம்பியிருக்கும் அந்த தெரு வெறிச்சோடியிருந்தது. இருபுறமும் மக்கள் அலை மோதுவார்கள் என்று எதிர்பார்த்தோ என்னவோ வேலிகளாக கட்டப்பட்டிருந்தன உருட்டுக் கட்டைகள்.

மணி பத்தைத் தாண்டியிருந்தது. இருள் சேர்ந்திருந்தது.

அவன் அந்தத் தெருவிற்குள் நுழைந்தான், நடையில் உறுதி இருந்தது. உயரமாய் இருந்தான். கண்களை மறைத்துக் கறுப்புக் கண்ணாடி. முகத்தில் செதுக்கப்பட்ட தாடி, ஜீன்ஸில் பட்டையாய் சாயம் போயிருந்தது. நடுமத்தியில் இருந்த கட்டிடத்தின் வாசலில் சற்று தயங்கி விட்டு உள்ளே நுழைந்தான். அது ஒரு பிரைவேட் நர்ஸிங் ஹோம். அதன் முகப்பில் இருந்த பொதுத் தொலைபேசியில் காசு போட்டான். பேசினான்.

''இன்னும் ஐந்து நிமிடத்தில் பஸ் ஸ்டாண்டிற்கு வந்து விடு...

உன்னை பிக்அப் செய்து கொள்கிறேன். மறக்காமல் நான் வாங்கிக் கொடுத்த டிரஸ்ஸைப் பாட்டுக் கொண்டு வா...''



பஸ் ஸ்டாண்டில் அவள் ஆவலுடன் காத்திருந்தாள். தலைமுடியைக் குதிரை வால் போல் கட்டியிருந்தாள் நீலநிற மிடி, வெள்ளை பனியன், பனியனில் COME EASY என்ற வார்த்தைகள்.

அவனுடைய ஹீரோ ஹோண்டாவைப் பார்த்ததும் பாய்ந்து வந்தாள். அவன் வண்டியை பிளாட்ஃபாரத்தில் ஏற்றி ஓரமாக நிறுத்திப் பூட்டினான்.

''நாம் நடக்கப் போகிறோம்'' என்றான்.

''ஏன்?''

''சும்மா ஜாலிக்காகத் தான்.''

அவள் சந்தோஷமாகச் சிரித்தாள். அவனுடைய கையைத் தன் உடம்பில் அழுந்துகிற மாதிரி இறுக்கிக் கொண்டாள்.

''எங்கே போகிறோம்?'' - அவள்.

''சொர்க்கத்திற்கு'' - அவன்.

நீளம் நீளமாக நடந்தான். அவனுடன் வேகம் பரிபாலிக்க, அவள் சற்றுத் திணறினாள்.

அரை கிலோ மீட்டர் நடந்ததும் முக்கிய கடை வீதி இருந்தது.

கடைகள் எல்லாம் மூடப்பட்டு விட்டன. இரண்டு தெரு விளக்குகள் கண்களை இடுக்கிக் கொண்டு வெளிச்சம் கசிந்தன.

உயரமான கட்டிடங்களின் பின்புறம் இருந்த சந்திற்குள் அவன் அவளை இழுத்துக் கொண்டு நுழைந்தான்.

''சொர்க்கத்திற்கு என்று சொல்லி விட்டு, இந்த இருட்டு சந்திற்கு வந்திருக்கிறோம். சொர்க்கம் இங்கேயோ இருக்கிறது?'' அவனுடைய சட்டையைப் பற்றி அவள் மெலிதாகச் சுண்டினாள்.

''இன்னும் சற்று தூரத்தில்'' என்றான் அவன். கண்களைச் சிமிட்டி.

## 4

விடிகாலை ஐந்து மணிக்கு போன் அலறியபோது பால்ராஜ் தலையணைக்கடியில் போலீஸ் ரிவால்வரைத் தேடினார். அருமையான கனவைக் கலைத்த இந்த டெலிபோனை சுட்டு விட்டால் என்ன?

துப்பாக்கி கிடைக்கவில்லை. ரோஸ்லின் தூக்கம் கலைந்து ஆத்திரத்துடன் எழுந்தாள். டெலிபோன் ரிசீவரைக் கோபத்துடன் எடுத்து 'ஹலோ' என்று குரைத்தாள், பால்ராஜின் மார்பில் விசிறி எறிந்தாள்.

''டிபார்ட்மெண்ட்டிலிருந்து தான்'' என்றாள்.

''சார் 707 பேசுகிறேன், சார்.''

''சொல்லுய்யா.''

''ஒரு மர்டர் சார்.''

''ராத்திரி இரண்டு மணிக்குத் தானேய்யா நான் வீட்டுக்கே வந்தேன்! போலீஸில் வேறு ஆளே இல்லையா?''

''கமிஷனர் உங்களுடன் பேச வேண்டுமாம் சார்.''

பால்ராஜ் கட்டிலில் விறைப்புடன் எழுந்து உட்கார்ந்தார்.

''பால்ராஜ், குட்மார்னிங்.''

''குட்மார்னிங் சார்...''

''சந்திரபோஸ் லைனில் ஒரு மர்டர்.. நீங்கள் வர வேண்டுமென்று நினைக்கிறேன்...''



''இதோ பத்து நிமிடத்தில் சார்..''

இன்ஸ்பெக்டர் பால்ராஜ் பெட்ஷீட்டை உதறியிருந்தார்.

வாசலில் ஜீப் வந்து பிரேக் அடிக்கும் சப்தம் கேட்டது.

* * *

ஜீப் தெரு முனையிலேயே நின்று விட்டது. இன்ஸ்பெக்டர் பால்ராஜ் இறங்கினார். இரண்டு கான்ஸ்டபிள்கள் ஏற்கெனவே அங்கே நின்றிருந்தார்கள்.

''இந்த சந்திற்குள் சார்'' கான்ஸ்டபிள் வழி நடத்தினார்.

சந்திற்குள் நுழைந்தார். மூன்றாவது கேட் குறுகலாயிருந்தது. கேட்டின் மீது 'அனுமதியின்றி உள்ளே வரக்கூடாது' என்று வெள்ளைப் பெயிண்டில் எழுதப் பட்டிருந்தது.

பால்ராஜிற்கு திடுக் என்றது. முந்தின நாள் ஸ்டேஷனிற்கு வந்திருந்த இந்திரஜித் என்ற இளைஞன் சந்து, குறுகலான கேட், அனுமதியின்றி உள்ளே வரக்கூடாது எல்லாம் சொல்லவில்லை?

''பிணம் ஒரு பெண்ணா?''

''ஆமாம், சார்'' என்றார் கான்ஸ்டபிள்.

''நீல மிடி? வெள்ளை பனியன்?''

''உங்களுக்கு எப்படி சார் தெரியும்? போனில் சொன்னார்களா?''

''பனியனின் என்ன எழுதியிருந்தது?''

''COME EASY என்று சார்.''

பால்ராஜ் நின்று விட்டார். பகுத்தறிவு என்று சொல்லப் படுவதையெல்லாம் மீறி இந்திரஜித்தைப் போன்றவர்களின் சிறப்பறிவு செயல்பட முடியுமா என்ன?

''உள்ளே வாருங்கள் சார்...''

அந்தப் பெண் சுவரோரம் சரிந்து கிடந்தாள். ரத்தம் அவள் பனியனையெல்லாம் நனைத்து கீழே சேர்ந்திருந் தது. கழுத்தில் ஆழமான வெட்டின் காரணமாக, தலை யின் பாரம் பின்னோக்கி இழுத்திருக்க, ரத்தம், ரத்தம், எங்கும் ரத்தம்.

பால்ராஜின் உடல் அவரை அறியாமலேயே மெலிதாக நடுங்கியது.

போலீஸ் போட்டோகிராபர் வெவ்வேறு கோணங் களில் ஃப்ளாஷ் ஃப்ளாஷ் என்று மின்னல்களை இறைத்துக் கொண்டிருக்க, தடயவியல் நிபுணர்கள் கதவருகே மிக மெலிதாக மணலில் கோலம் போட்டது போன்ற ஷூவின் அடையாளத்தைக் குறி வைத்துக் குனிந்திருக்க, பால்ராஜ் மெலிந்த குரலில் ''கொலைகாரன் உயரமானவன். தாடி வைத்திருக்க வேண்டும்'' என்றார்.

அந்தக் காட்சியிலிருந்து விலகி ஜீப்புக்குள் நடந்தார். ஜீப் அருகே நின்றிருந்த கமிஷனர் ஆகாயத்தின் ஆரம்ப ஆரஞ்சைப் பார்த்துக் கொண்டு, காற்றை சிகரெட் புகை யால் காயப்படுத்திக் கொண்டிருந்தார்.

பால்ராஜின் பூட்ஸ்களின் சப்தம் கேட்டுத் திரும்பினார்.

''பால்ராஜ், எனிதிங் ஸ்ட்ரைக்கிங்?''

''ஆமாம் சார். நேற்று உங்கள் ஆபீஸிற்கு இந்திரஜித் என்று ஒருத்தனை அழைத்து வந்திருந்தேனே. ஈ.எஸ்.பி. பவர் இருப்பவன்.''

''அவனுக்கென்ன பால்ராஜ்?''

''அவன் காலையிலேயே சொல்லி விட்டான். ராத்திரி இப்படி ஒரு கொலை நடக்கப் போகிறது என்று சந்து,



அந்தப் பெண்ணின் உடை அவள் கழுத்தில் கத்தி வெட்டு எல்லாம் அப்படியே இருக்கிறது சார்.''

''அவனை அரெஸ்ட் பண்ணுங்கள்.''

''சார்!'' பால்ராஜ் திடுக்கிட்டார். ''அவன் தனிமனிதன் சார். கொலை நடக்கப் போகிறது என்று முன் கூட்டியே தெரிவித்தானே தவிர, அதைத் தடுப்பதென்றால் நம்மால் தான் முடிந்திருக்கும்.''

''என்ன பால்ராஜ். விளையாட்டுத் தனமாகப் பேசு கிறீர்கள்! மெட்ராஸில் எத்தனை சந்துகள், நீல மிடி போட்டு எத்தனைப் பெண்கள். அத்தனை பேரையும் நம்மால் கண்காணிக்க முடியுமா? அதுவும் ஜனாதிபதி வந்திருக்கும் ஒரு நாளில்!''

''பரவாயில்லை சார், ஆனால் இந்தக் கேஸில் அவ னுடைய உதவி இருந்தால் சுலபமாக கொலையாளியைக் கண்டு பிடிக்கலாம் என்று எனக்குத் தோன்றுகிறது.. வித் யுவர் பர்மிஷன்.''

''நோ, பால்ராஜ் ஒரு கொலையைப் போலீஸால் கண்டு பிடிக்க முடியாமல் எவனோ ஒரு மந்திரவாதியை நாடுவது நன்றாகவா இருக்கிறது. நாளைக்கு பேப்பரில் எல்லாம் நம்மை கார்ட்டூன் வரைய ஆரம்பித்து விடுவார்கள். இந்திரஜித் உங்களை வந்து பார்த்திருக்கா விட்டால் இந்தக் கொலையை எப்படி துப்பறிவீர்களோ, அப்படியே துப்பறியுங்கள். அவனாக வந்து ஏதாவது க்ளூ கொடுத் தால் சரி. அவனுக்கும் இந்தக் கொலைக்கும் சம்பந்த முண்டா என்று மட்டும் ரகசியமாகக் கண்டு பிடியுங்கள்.''

''யெஸ் சார்'' என்றார், பால்ராஜ் சற்றே ஏமாற்றத்துடன்.

## 5

தசரதன் காதுகளில் மாட்டியிருந்த இயர் போன்களை எடுத்தான். எஸ்.பி.பி. ரம்பம்பம் ஆரம்பம் என்று எட்டு ஓம்களில் ஹெட்போன்களில் சங்கீதித்துக் கொண்டிருக்க, கையை நீட்டி டெலிபோனை இழுத்தான். ரிசீவரை எடுத்ததும் அதன் கதறல் ஓய்ந்தது.

'ஹலோ.'

''முடித்து விட்டாயா? என்றது மறுமுனைக் குரல். அந்தக் குரலைக் கேட்டதும் அவன் உடல் விறைத்தது. மேஜைமேல் போட்டிருந்த கால்கள் தானாகக் கீழே இறங்கின. கதிர்வேலுடன் ஒவ்வொரு முறை பேசும் போதும் ஏற்படும் உதறல்.

''முடித்து விட்டேன், கதிர்.''

''வழியில் யாராவது தென்பட்டார்களா?''

''இல்லை.''

''ரேவதியால் ஏதும் பிரச்னை?''

''எதுவும் இல்லை.''

''நல்லது. வண்டியை என்ன பண்ணினாய்?''

நம்பர் பிளேட்களைக் கழற்றி விட்டு, கூவத்தில் உருட்டி விட்டு விட்டேன்.''

''நல்லது'' கதிர்வேல் நல்லது என்று ஆமோதித்தால் தான் நெஞ்சில் கொஞ்சமாவது துணிச்சல் ஊறெடுக் கிறது.

''தாடி?'' என்றது கதிர்வேலின் குரல்.



''ஷேவ் செய்து விட்டேன்.''

''ரேவதியின் போன் நம்பர்?''

''என் டைரியில் அல்லது வேறு புத்தகத்தில் எங்குமே குறித்து வைக்கவில்லை.''

''இன்றைக்கு உனக்கு பத்து மணிக்கு அப்பாயிண்ட் மெண்ட் இருக்கிறது.''

''இரவா?''

''நாம் பகலில் எப்போது வேலை செய்திருக்கிறோம், சொல்?''

''எங்கே?''

''தேவி தியேட்டர் கார் பார்க்கிங். கார் நம்பர் டி.எம்.எல். 4031.''

''வெள்ளைத் தலையா?''

''ஆமாம் சுபராத்திரி சுகராத்திரி என்று சொல். நாளைக் காலை மறுபடி போன் செய்கிறேன்.''

தொடர்பு அறுந்தது. தசரதன் கால்களை மறுபடி மேஜை மீது தூக்கிப் போட்டுக் கொண்டான். ஸ்டீரியோ வின் சின்னஞ்சிறு ஒலிபெருக்கிகளைக் காதில் அணிந்து கொண்டான்.

## 6

இன்ஸ்பெக்டர் பால்ராஜ் சிகரெட்டை ஆஷ்ட்ரேயில் நசுக்கினார். எதிரே உட்கார்ந்திருந்த இளைஞனைப் பார்த்தார்.

''உங்கள் பெயர்?''

''சிவநேசன். அம்பிகா கிளாத் ஸ்டோரில் சேல்ஸ் அஸிஸ்டென்ட்டாய் இருக்கிறேன், சார்.''

சிவநேசன் குள்ளமாய் இருந்தான். இருபத்து ஆரம்ப வயது. சற்றே கறுத்த முகத்தில் அங்கங்கே பருக் குறிகள். கையில் சுருட்டி வைத்திருந்த செய்தித் தாளை மேஜை மீது பரப்பினான். மூன்றாம் பக்கத்தின் வலது கீழ்க் கோடியைத் தட்டினான்.

''இந்தப் பெண்ணைப் பற்றித் தெரிந்தால் போலீஸிடம் சொல்லும்படி நியூஸ் வந்திருந்தது. சார்.''

''ஆமாம், நேற்றைக்கு முன் தினம் ராத்திரி இந்தப் பெண் கொலை செய்யப்பட்டு விட்டாள். அவளிடம் பர்ஸோ, வேறெந்த பொருளோ இல்லை. அவள் யார் என்றே எங்களுக்குப் புரியவில்லை.''

''இந்தப் பெண் எங்கள் துணிக்கடைக்கு வந்திருந்தாள், சார்.''

''அப்படியா?'' பால்ராஜ் நிமிர்ந்து உட்கார்ந்தார்.

''அவளும், அவளுடன் உயரமாய் ஒரு ஆளும் வந்தார்கள். ரெடிமேட் செக்ஷனில் நான் இருந்தேன். அங்கே தான் வந்தார்கள். நிறைய ட்ரெஸ்களைப் புரட்டிப் பார்த்தார்கள். கடைசியில் நீல நிறத்தில் ஒரு மீடியும், வெள்ளைக் கலரில் ஒரு பனியனும் வாங்கினார்கள். பேப்பரில் பார்க்கிறேன். செத்துப் போன போது அந்த ட்ரெஸ்ஸில் தான் அவள் இருந்திருக்கிறாள்!''

''என்றைக்கு கடைக்கு வந்தார்கள், சிவநேசன்?''

''கொலை செய்யப்பட்டதற்கு முந்தின நாள்.''

''அவர்கள் பேசியபோது ஏதாவது விவரம் கிடைத்திருக்குமே?''



''அவளை அவன் ரேவதி எ ''u கூப்பிட்டான். கூலிங் கிளாஸை அவன் கடைசி வரை கழற்றவேயில்லை. அவர்கள் இருவரும் லவ்வில் இருந்தது போல எனக்குத் தோன்றியது. அவனை விட அவள் தான் கிறக்கமாயிருந்தாள். 'என்னை ஹாஸ்டலில் டிராப் பண்ணுவீர்களா' என்று கேட்டாள். அவன் மாட்டேன் என்றான். ஹாஸ்டல் பக்கம் வருவேன் என்று எதிர்பார்க்காதே என்றான். அதில் அவளுக்குக் கொஞ்சம் ஏமாற்றமாயிருந்தது. துணியை வாங்கிக் கொண்டு கேஷ் கவுண்ட்டரில் பணம் கொடுத்து விட்டுப் புறப்பட்டார்கள். இருவரும் ஒரு ஹீரோ ஹோண்டாவில் புறப்பட்டுப் போனது ஷோகேஸிற்கு வெளியே தெரிந்தது.''

''கேட்கக் கூடாது இருந்தாலும் கேட்கிறேன். வண்டி நம்பரைப் பார்த்தாயா?''

''இல்லை, சார். அரக்குக் கலர் பைக்.''

''எனிவே, உன் அட்ரஸை இதில் குறித்துக் கொடுத்து விட்டுப் போ. அவசியமென்றால் உன்னைத் தொடர்பு கொள்ள.''

அவன் போன பிறகு பால்ராஜ் ஒரு பேப்பர் எடுத்து விவரங்களைக் குறித்தார்.

பெயர்: ரேவதி?

இருப்பிடம்: ஹாஸ்டல் (காலேஜ்? அல்லது லேடீஸ் ஹாஸ்டல்?)

அவன்: ஹீரோ ஹோண்டா. அரக்கு நிறம்.

புதிய சுறுசுறுப்போடு எழுந்தார்.

* * *

மாலை வெயில் உயரமான கட்டிடங்களால் வடிகட்டப்பட்டு அந்த சாலையில் மஞ்சளடித்திருந்தது.

பால்ராஜ் ஜீப்பிலிருந்து இறங்கினார். கைக்குட்டையால், நெற்றியை, பின் கழுத்தை, காதோரங்களைத் துடைத்து வியர்வையை ஒற்றி எடுத்தார். போர்டைப் படித்தார்.

''ஜவஹர் லேடீஸ் ஹாஸ்டல்.''

நுழைந்தார்.

நெட் கட்டி ஷட்டில் காக் விளையாடிக் கொண்டிருந்த ஆறு பெண்கள் திரும்பிப் பார்த்தார்கள்.

ஹாஸ்டலுக்குள் இருக்கும் தைரியத்தில், அல்லது விளையாட்டின் பொருட்டு அவர்கள் ஷார்ட்ஸ், பனியன் அணிந்திருக்க, வியர்வையில் பளபளத்த அவர்களின் கழுத்து, கால்கள் - இவை பால்ராஜை ஒரு கணம் தடுமாற வைத்தன.

பால்ராஜ் விரலைக் கொக்கியாக்கி ஒரு பெண்ணை அருகே கூப்பிட்டார். அவள் மற்ற பெண்களை சற்றே தயக்கத்துடன் பார்வையிட்டு விட்டு, தைரியத்தில்தான் சற்றும் குறைந்தவள் இல்லை என்பது போல நெஞ்சை நிமிர்த்திக் கொண்டு கான்வாஸ் ஷூக்கள் சிமெண்ட் தரையில் சப்திக்க நடந்து வந்தாள்.

''நீங்கள் இந்த ஹாஸ்டலில் இருக்கிறீர்களா, மிஸ்?''

''யூ ஆர் ராங்.''

''ஓ, நீங்கள் இங்கே தங்கியில்லையா?''

''இங்கே தான் தங்கியிருக்கிறேன். ராங் என்று சொன்னது என்னை நீங்கள் மிஸ் என்று கூப்பிட்டதை, நான் மிஸஸ் பாண்டுரங்கன்.''

மற்ற பெண்கள் அவளுடைய துணிச்சலை அல்லது ஹாஸ்யத்தை ரசித்து க்ளுக் என்றனர்.



பால்ராஜ் அடிவயிற்றில் கிளம்பிய எரிச்சலை அடக்கிக் கொண்டார்.

''ஒரு மர்டர் விஷயமாக நான் இன்வெஸ்டிகேட் பண்ணிக் கொண்டிருக்கிறேன். உங்கள் ஹாஸ்டலில் தங்கியுள்ளவர்களைப் பற்றி விசாரிக்க வந்தேன்.''

மர்டர் என்றதும் அந்த மிஸஸ் பாண்டுரங்கன் முகத்தில் சிலீர் பயம்.

''இந்த ஹாஸ்டலில் எவ்வளவு பேர் தங்கியிருக்கிறீர்கள்?''

''நாற்பத்தெட்டு, சார்.''

''காலேஜ் பெண்களா, அல்லது.''

''அப்படியில்லை. இது ஜெனரல் லேடீஸ் ஹாஸ்டல். ஒன்றிரண்டு காலேஜ் பெண்களும் இருக்கிறார்கள். வேலைக்குப் போகும் பெண்களும் இருக்கிறார்கள்.''

''ரேவதி என்றொரு பெண் இங்கு இருந்தாளா?''

''மூன்று ரேவதிகள் இருக்கிறார்கள், சார்.''

''இப்போது நான் அந்த மூன்று ரேவதியையும் பார்க்க வேண்டும்.''

மிஸஸ் பாண்டுரங்கன் குலுங்கக் குலுங்க நடந்து ஹாஸ்டலுக்குள் அழைத்துப் போனாள். நின்று போயிருந்த கடிகாரத்தின் கீழ் மேஜை போட்டு உட்கார்ந்திருந்த பெண்மணியை வார்டன் என்று அறிமுகம் செய்து வைத்தாள்.

''காலையிலிருந்து ஒவ்வொரு லேடீஸ் ஹாஸ்டலாக அலைந்து கொண்டிருக்கிறேன்'' என்றார், பால்ராஜ். தொப்பியால் மார்புக்குள் விசிறிக் கொண்டு.

''மூன்று ரேவதிகளில் இரண்டு பேர் இருக்கிறார்கள், சார். ஒருத்தி இரண்டு நாட்களுக்கு முன்பு கிளம்பிப் போனவள் இன்னும் வரவில்லை'' என்றாள் வார்டன், தன் கொண்டையூசியை எடுத்து நகத்தில் நெர்வஸாக வளைத்துக் கொண்டு.

''என்னது. காணவில்லையா! போலீஸிற்குச் சொன்னீர களா?''

''காணவில்லை என்று நான் சொல்லவில்லையே, இன்ஸ்பெக்டர் திரும்பி வரவில்லை என்று தானே சொன்னேன்!''

''ஒரு இளம் பெண் திரும்பி வரவில்லை என்றால் கவலைப்பட வேண்டாமா, நீங்கள்?''

''கவலைப்பட்டிருப்பேன், வேறு பெண்ணாயிருந்தால் இந்த ரேவதி விஷயத்தில் கவலைப்படுவது முட்டாள் தனம். இந்த மாதிரி எத்தனையோ தடவை கிளம்பிப் போயிருக்கிறாள். இரண்டு மூன்று நாள், சில சமயம் ஒரு வாரம் கழித்துக் கூடத் திரும்பி வந்திருக்கிறாள். முதலி லேயே சொல்லியிருக்கிறாள், அவளைப் பற்றி கவலைப் பட வேண்டாம் என்று.''

''ஐ ஸீ. அவள் எங்கே வேலை செய்கிறாள்?''

''கொச்சையாகச் சொல்வதென்றால்.. படுக்கையில்'' என்றாள் மிஸஸ் பாண்டு ரங்கன்.

''வாட்!''

''அவள் கால்கேர்ளாக இருக்கிறாள் என்று இவர்களுக் கெல்லாம் சந்தேகம்...'' என்றாள் வார்டன், சமாதானம் செய்யும் குரலில்.

''ரெக்கார்ட்ஸில் என்ன கொடுத்திருக்கிறாள்?''



''ஒரு ஹாஸ்பிடலில் ரிசப்ஷனிஸ்ட்டாக இருப்பதாக சொல்லியிருந்தாள்.

வாரத்துக்கு ஐந்து, ஆறு நாளுக்கு நைட் ஷிஃப்ட் என்று போய் விடுவாள். அவள் அந்த வேலையில் இல்லை என்பதை ஒரு நாள் எதேச்சையாகக் கண்டு பிடித்தோம். அவள் ரூமில் குழாயை மூடாமல் போய் விட்டாள். போன் பண்ணிக் கூப்பிட்டு சாவி கேட்கலாம் என்று பார்த்தால், அந்த ஆஸ்பத்திரியில் ரேவதி என்ற பெயரில் ரிசப்ஷனிஸ்ட் யாரும் இல்லை என்றார்கள். அப்புறம் அவளைக் கேட்டதற்கு, ஆமாம், இல்லை ஸோ, வாட்? உங்களுக்கு வாடகை கரெக்டாக வந்து விடும். நான் எங்கே வேலை பார்த்தால் உங்களுக்கென்ன என்றாள். அப்படி ஒன்றும் இது கன்னி மேரிகள் வாழும் இடமில்லை. கண்டிப்பாக இருக்க அதனால் கண்டும், காணாமலும் இருந்து விட்டோம்.''

''அவளுடைய போட்டோ ஏதாவது இருக்கிறதா?'' என்றார் பால்ராஜ்.

''ஆறு மாதத்திற்கு முன்னால் இந்த ஹாஸ்டலிற்கு வந்து சேர்ந்தாள். ஆனால் மற்றவர்களுடன் அவள் அதிகம் பழகுவது இல்லை. யாருடனும் நட்பு கிடையாது அவள் போட்டோ எதுவும் இங்கே கிடையாது.''

''உங்களிடம் போட்டோ இருந்தால் நல்லதாயிற்றே என்று பார்த்தேன். என்னிடம் போட்டோ இருக்கிறது. ஆனால் பார்த்தால் உங்களுக்கு அதிர்ச்சியாக இருக்கலாம்'' பெரிய பீடிகையுடன் பால்ராஜ் தன் பாக்கெட்டிலிருந்து அந்த பிரவுன் நிற கவரை எடுத்தார்.

போலீஸ் போட்டோகிராபர் எடுத்த அந்த போட்டோவைக் காண்பித்தார். வார்டன் தன் மார்பை அழுத்திக் கொண்டாள்.

''ஹம்மாவ்!'' என்றாள். இவள் தான் என்று தலையை ஆட்டினாள். அத்தனை ரத்தத்தையும் நேரில் பார்த்திருந் தால் இன்னும் எப்படி உதறியிருக்கும் இவள் உடம்பு!

மிஸஸ் பாண்டுரங்கன் நாவால் உதடுகளை ஈரப் படுத்திக் கொண்டாள்.

''அவள் வாழ்ந்த ரகசிய வாழ்க்கைக்கு இந்த மாதிரி ஒரு முடிவுதான் அவளுக்கு வரும் என்று எனக்கு என் றைக்கோ தெரியும்'' என்றாள்.

''ரேவதியின் ரூமை நான் பார்க்க வேண்டுமே.''

''ஓ ஷ்யூர்.''

முதல் மாடியில் காரிடாரின் கோடியில் கடைசியாக இருந்தது ரேவதியின் ரூம்.

சதுரமான சின்ன அறை. இரண்டு நாளில் திறந்த ஜன்னல் வழியே கீழே சேர்ந்திருந்த தூசி மட்டும் அசுத் தம். மற்றபடி அறை துல்லியமாக இருந்தது. கட்டிலில் படுக்கை விரிப்பு நான்கு மூலைகளிலும் ஒரே சீராகத் தொங்கியது. கோடளவு கசங்கல் கூட இல்லை. அலமாரி யில் துணிகள் ஒழுங்காக அடுக்கப்பட்டிருந்தன. பெரும் பாலும் மாடர்ன் உடைகள்.

அவற்றைப் புரட்டிப் பார்த்ததில் வெள்ளை பூச்சி யுருண்டைகள்தான் கிடைத்தன.

சிறு மேஜை, அதன் இழுப்பறையைத் திறந்ததும், இடது ஓரத்தில் படுக்க வைக்கப்பட்ட மூன்று பேனாக்கள்.

பால்பாயிண்ட் பேனாக்கள். நீலம், கறுப்பு, சிகப்பு, மூன்றும் STAEDTLER என்று இங்கிலாந்து கம்பெனி யால் தயாரிக்கப்பட்ட பேனாக்கள். கடிதங்கள் எழுதும் ஒரு லெட்டர் பேட். அதில் ஏற்கனவே சில தாள்கள் கிழிக்கப்



பட்டிருந்தன. இருந்த தாள்கள் எல்லாம் வெறுமையாக இருந்தன. பால்ராஜ் மிகவும் நம்பிக்கையுடன் தேடினார். ஆனால் கடிதங்கள் எதுவும் கிடைக்கவில்லை. ஒரு நபருக்கு வரும் கடிதங்களை வைத்து தான், அந்த நபரின் தொடர்புகளை அறிய முடியுமென்றால், ரேவதியின் தொடர்புகளைக் கண்டு பிடிப்பது இயலாது.

''ரேவதிக்கு லெட்டரே வராதா?''

''இது வரை வந்ததில்லை.''

''போன்கள்?''

''போன் வரும். அவ்வப்போது.''

''யாரிடமிருந்து?''

''ஒரு ஆண் குரல். யார் என்று எனக்கு விவரமெல்லாம் தெரியாது. கடைசியாய் அவள் கிளம்பிப் போன போது ராத்திரி பத்து மணிக்கு மேல் இருக்கும். அப்போது கூட அவள் போன் வந்ததும் தான் கிளம்பினாள்.''

''அவளைத் தேடி யாராவது வந்திருக்கிறார்களா?''

''இல்லை. எங்களுக்கெல்லாம் ஆச்சரியமாயிருக்கும் - இவளுக்கு மட்டும் எப்படி எந்த காண்டாக்ட்டுமே இல்லை என்று!''

பால்ராஜ் அந்த அறையை இன்னும் நுணுக்கமாக ஆராய்ந்து விட்டு, ஏமாற்றத்துடன் நிமிர்ந்தார்.

''இந்த ரூமை நான் ஸீல் வைக்கப் போகிறேன். என் பர்மிஷன் இல்லாமல் யாரையும் உள்ளே விடாதீர்கள். அந்த ரேவதியே உயிரோடு வந்தால் கூட....''

அவர்கள் ஒரு ஈடுபாட்டோடு, மெலிதான த்ரில்லோடு தலையசைத்தனர். ரேவதி பயன்படுத்திய பேனாக்கள், லெட்டர் பேட் இவற்றை கை படாமல் பொறுக்கிக்

கொண்டார் பால்ராஜ். அந்த ஹாஸ்டலில் தமிழ்ப் பேப்பர்கள் வாங்குபவர்கள் இருந்திருந்தால் சிவநேசனைப் போல அவர்களாகவே போலீஸைத் தேடி வந்திருக்கக் கூடும் என்று நினைத்துக் கொண்டார்.

## 7

இரவு மணி பத்து.

சென்னை அண்ணாசாலையின் போக்குவரத்து, நேரத்தின் காரணமாக பாதிக்கப்பட்டிருக்கவில்லை. கிட்டத்தட்ட பதினைந்து நிமிட இடைவெளியில் படம் முடிந்து கலைந்து மூன்று தியேட்டர் ஜனங்களில் இன்னும் எஞ்சிருந்த சிலர் தங்கள் ஸ்கூட்டர்களையும், கார்களையும் போக்குவரத்தினூடே வெளியே கொண்டு வரும் வேலையிலிருந்தனர். இரவுக் காட்சிக்கு வாகனங் களுடன் வந்திருந்தவர்கள் பார்க்கிங்ஸ் ஏரியாவை அடைந்து விடுவதில் குறியாயிருந்தனர்.

தசரதன் சுரங்கப் பாதையிலிருந்து வெளிப்பட்டான்.

ஸோடியம் விளக்கொளியில் பஸ்களுக்காகக் காத்திருக் கும் பயணிகளை கவனித்தான். தேவி தியேட்டர் காம்ப் ளெக்ஸிற்குள் நுழைந்தான். எதிர்ப்பட்ட வாகனங்கள் தங்கள் உச்சபட்ச பாட்டரி சக்தியில் ஹாரன் ஒலிகளை எழுப்பிக் கொண்டிருந்தன.

கார் பார்க்கிங் ஏரியாவில் வெற்றிலை சிவப்பேறிய உதடுகளும், எண்ணெய் பார்க்காத பரட்டைத் தலையு மாய் இருந்த பெண், இடுப்பில் குழந்தையுடன், அவனைக் கடந்து போகையில் 'தேவி - ஐம்பது ரூபா



நூறு ரூபா.. ஐம்பது ரூபா நூறு ரூபா...' என்று கறுப்புச் சந்தை ரேட்டை ரகசியமாகச் சொல்லி அழைப்பு விடுத்தாள். ஆங்கிலப் படம். கதாநாயகியின் கவர்ச்சியை நம்பி டிஸ்ட்ரிப்யூட்டர் வாங்கிய படம்.

அவன் கார் பார்க்கிங்கை அடைந்தான். நெரிசலான சைக்கிள்களைத் தவிர்த்து டி.எம்.எல். 4031 நின்றிருந்த இடத்தைக் கண்டு பிடித்தான். காரின் கதவுகள் பூட்டப் படவில்லை. பின் கதவைத் திறந்து அமர்ந்தான். உள் விளக்கு எரிந்தது. ஏற்கெனவே பின் இருக்கையில் எதிர்க் கதவோரம் ஒரு ஆள் ஒண்டி உட்கார்ந்திருந்தான். மெலிந்த தேகம். நீளமான குறுக்குக் கோடுகள் வரைந்த முழுக்கை சட்டையை இன் பண்ணியிருந்தான். கன்ன மும், கழுத்தும் கிள்ளிவிட்ட சிகப்பில் இருந்தன. இங்கி லாந்து அல்லது அமெரிக்காவைச் சேர்ந்தவனாயிருக்க வேண்டும். இவனிடம் போய் தமிழில் சங்கேத வார்த்தை களைச் சொன்னால் புரியுமா?

"சுபராத்திரி... சுகராத்திரி" என்றான்.

மெலிந்த தேகன் கை நீட்டி கைப்பற்றி குலுக்கினான். "மாலை வணக்கம், நண்பரே" என்றான். தூய தமிழில். ஆங்கிலத்தில் எழுதி நெட்டுரு பண்ணியிருப்பானோ என்று தோன்றியது.

தசரதன் தன் சட்டைப் பையிலிருந்து ஒரு சிறு அட் டையை எடுத்து நீட்டினான். எதிராளி அவன் சட்டையி லிருந்து இன்னொரு அட்டையை எடுத்தான். இரண்டு அட்டைகளையும் ஒன்றுடன் ஒன்று ஒட்டி வைத்துப் பார்த்தான். ஒரு முழுக் கையொப்பம் தடையில்லாமல் தெரிந்தது. திருப்தியடைந்தவனாக அவன் குனிந்து காலடியில் இருந்த பெட்டியை எடுத்தான். அதை எடுக்க

அவன் பிரயத்தனப்பட்டதில் அதன் பாரம் புரிந்தது பெட்டியை உயர்த்தி அவன் நீட்ட, தசரதன் அதை அலட்சியமாக வாங்கிக் கொண்டான்.

''குட் நைட்'' என்றான்.

''மொத்தம் பதினைந்து லட்சம்.''

''எண்ணிப் பார்த்துக் கொள்கிறேன்.''

கனத்த பெட்டியுடன் தியேட்டரில் நடந்தால் நிச்சயம் புருவங்கள் தூக்கப்படும் என்று தோன்றியது.

''என்னை தியேட்டருக்கு வெளியே ஆட்டோ ஸ்டாண்டில் விட்டுவிடு'' என்றான்.

கார் புறப்பட்டு போக்குவரத்தை இன்னும் நெரிசலாக்க, தியேட்டரை விட்டு வெளியேறியது.

## 8

பால்ராஜ் இரவுத் தூக்கத்தைத் தொலைத்திருந்தார். அவருடைய மேஜையில் ரேவதியின் லெட்டர் பேட் இருந்தது. பழைய டெக்னிக்தான். ஆனால் அது இப்போது கை கொடுத்திருந்தது.

கடைசியாக எழுதப்பட்ட கடிதத்தின் வரிகளின் அழுத்தம் அதற்கடுத்த தாளில் படிந்திருக்கும் என்பதால் லெட்டர் பேடின் முதல் தாளின் மெலிதான நீல நிற பவுடரைத் தூவியிருந்தார். பேப்பரைக் கவிழ்த்து திருப்பியபோது, எழுத்துக்கள் பதிந்த இடங்களில் மட்டும் பவுடர் அமிழ்ந்து போய், மிச்சமெல்லாம் உதிர்ந்து விட்டது. இப்போது எழுத்துக்களை ஓரளவு தெளிவுடன் படிக்க முடிந்தது.



டியர் தசரதன்,

நீங்கள் கேட்ட விவரங்கள் இணைத்துள்ளேன்.

எப்போது நாம் சந்திப்பது?

உங்கள் போன் நம்பரை எனக்குத் தந்தால் என்ன?

உங்களிடமிருந்து போனை எதிர்பார்க்கிறேன்.

கடல் கடலாய்க் காதலுடன்,

ரேவதி.

தசரதன்.

அதுதான் அவன் பெயரா?

உயரமாயிருப்பான். தாடி டிரிம்மாக. ஹீரோ ஹோண்டா.

ஆர்.டி.ஓ. ஆபீஸிற்கு போன் செய்து விட்டார். ஹீரோ ஹோண்டா தசரதன் என்ற பெயரில் யார் யாரிடம் இருக்கிறது?

போன் அடித்தது.

எடுத்து ''ஹலோ'' என்றார்.

''ராத்திரி ஸ்டேஷனிலேயே படுக்கையா?'' என்றது ரோஸ்லினின் சீற்றமான குரல்.

கை தன்னையறியாமலேயே சிகரெட்டை ஆஷ்ட்ரேயில் இட்டது.

''நோ, நோ...'' என்றார். ''இன்னும் ஒரு மணி நேரத்தில் புறப்பட்டு வந்து விடுவேன்...''

''பத்து மணிக்கு மேல் வந்து பெல் அடித்தால் நான் திறக்க மாட்டேன் என்று ஏற்கெனவே சொல்லியிருக்கிறேன்...''

''ரோஸ்லின், இதைக் கேள். இன்றைக்கு இங்கே...'' வாக்கியத்தைப் பாதியில் நிறுத்தினார். காரணம் எதிர் முனை வைக்கப்பட்டு விட்டது.

ரோஸ்லின்! அவருடைய காக்கி உடுப்பின் அவஸ்தைகளைப் புரிந்து கொள்ளாமல் சாதாரண குமாஸ்தாவின் மனைவி போல சதா அவளுடன் அவர் இருக்க வேண்டும் என்று எதிர் பார்த்துக் கொண்டு...

பால்ராஜ் இன்னொரு சிகரெட்டை உதடுகளில் பொருத்தியபோது, மறுபடி, டெலிபோன் மணி அடித்தது.

எடுத்தார்.

''ரோஸ்லின், இதோ பார், லேட்டாக வரவேண்டும் என்று எனக்கு ஆசையில்லை. ஆனால்...''

''சார்'' என்றது மறுமுனைக் குரல் குழப்பமாக.

'ச்சே' ரோஸ்லின் இல்லை.

''யெஸ்?''

''சார், நான் சேப்பாக்கத்திலிருந்து பேசுகிறேன்...''

''யாரய்யா?''

''707 சார்... இங்கே இரும்புப் பாலத்தருகே, கூவத்தில் ஒரு ஹீரோ ஹோண்டா கிடக்கிறது சார்...''

''ஈஸ் இட்?''

பால்ராஜ் துள்ளி எழுந்தார். ஜிப்பைத் திறந்தது போல் கேஸின் விவரங்கள் பளீர் பளீர் என்று தெரியப் போகின்றன.

* * *

மாநகரப் போக்குவரத்துக் கழகத்தின் பழுது பார்க்கும் வண்டியின் உதவியுடன் அந்த மோட்டார் சைக்கிள் கூவத்தில் அழுக்குப் பிடியிலிருந்து மேலே இழுக்கப் பட்டது. பிரகாசமான மின் வெளிச்சத்தில் பால்ராஜிக்கு ஏமாற்றம்.



''நல்லாத் தேடிப் பார்த்தீர்களாய்யா? நம்பர் பிளேட் இல்லையா?''

''இல்லை, ஸார்...''

''பரவாயில்லை. இன்ஜின் நம்பரை வைத்து ஓனரைக் கண்டு பிடித்து விடலாம். என்ன, சற்று அதிக நேரமாகும்!''

ஹீரோ ஹோண்டா ஒரு வண்டியில் ஏற்றப்பட்டு ஃபாரன்ஸிக் லேபிற்குப் பயணமானது.

''யோவ், 707. நீ கூட இருந்து ரிப்போர்ட் வாங்கி வந்து விடு... நான் வீட்டிற்குக் கிளம்புகிறேன்...''

''யெஸ் சார்...'' கான்ஸ்டபிள் அவர் முதுகில் சிரித்தது அவருக்குத் தெரியாது.

* * *

மறுநாள் காலை விவரங்கள் வந்து விட்டன.

கூவத்தில் கண்டெடுக்கப்பட்ட ஹீரோ ஹோண்டாவின் சொந்தக்காரன் பெயர் மாரிமுத்து. ஒரு பத்திரிகை ஆபீசின் கிளார்க். தியேட்டரில் பார்க் பண்ணியிருந்த வண்டி ஆறு மாதத்திற்கு முன்னால் காணாமல் போய் போலீஸ் கம்ப்ளெயிண்ட் கொடுத்து, வண்டியைக் கண்டு பிடிக்க முடியாததால், இன்சூரன்ஸிலிருந்தே பணம் வாங்கியாகி விட்டது.

தொலைந்து போன வண்டியை வைத்துக் கொண்டு தசரதனை கண்டு பிடிக்க முடியும் என்ற நம்பிக்கை பால்ராஜிக்கு சத்தியமாய் இல்லை. திறந்தது போல் தெரிந்த ஜிப் மறுபடி மூடி விட்டதா?

தசரதனை ஓரளவு கனவிலாவது பார்த்த இந்திரஜித்தின் உதவியைக் கேட்கக் கூடாது என்ற போலீஸ் வைராக்கியத்தை உடைத்தெறிந்தால் என்ன?

கேஸிற்குத் தேவை தீர்வு. வறட்டு ஜம்பம் இல்லை என்று தோன்றியது.

## 9

அடையாறு சாஸ்திரி நகரில் பிரதான சாலையில் இருந்தது அந்தக் கடை.

'இந்தர் வீடியோ, ஆடியோ.'

கண்ணாடிக் கதவில் அன்றைக்கு ரிலீஸான அர்ஜுன் படத்தின் தெலுங்கு டப்பிங் போஸ்டர்.

பால்ராஜ் கதவைத் திறந்து நுழைந்தார். இரண்டு ஸ்டூல்களில் நிற்க வைக்கப்பட்டிருந்த பெரிய ஸ்பீக்கர்களில் இருநூற்று நாற்பது வாட்களில் அடி ராக்கம்மா, கையைத் தட்டு என்று எஸ்.பி.பி. குழுவினர் இரைந்து கொண்டிருந்தனர்.

காஸெட்களை அலமாரியில் செங்குத்தாக அடுக்கிக் கொண்டிருந்த பையன் போலீஸ் உடுப்பைப் பார்த்ததும் அரண்டு போய் இறங்கினான்.

''வா.. வாங்க சார்... உ.... உக்காருங்க சார்..''

ஸ்டூலை துணியால் தூசு தட்டினான்.

பால்ராஜ் உட்கார்ந்தார். ''புளு பிலிமெல்லாம் வாடகைக்குக் கொடுக்கிறீர்களா, இங்கே?''

''சா... சார்... இல்லை.. சார்... இங்கிலீஷ் படத்தில் அப்படி ஏதாவது தெரியாமல்...''

அவன் பதட்டத்தை சற்றே ரசித்து விட்டு, ''இந்திரஜித் எங்கே?''



''முதலாளி வெளியே போயிருக்கிறார் சார்...''

''எங்கே?''

''வீட்டிற்கு சார் - சாப்பாட்டு டைம் என்பதால்...''

''வீடு எங்கே இருக்கிறது?''

''இங்கே பக்கத்தில்தான் சார்... போய்க் கூட்டி வரவா?''

''வேண்டாம். அட்ரஸ் கொடு. நானே போகிறேன்...''

''எண்பத்தெட்டு 'G', மெயின் ரோடு, ஜீவா நகர்...''

எண்பத்தெட்டு ஒரு மூன்று மாடி பிளாட் சிஸ்டம். அதில் 'G' முதல் மாடியில் கிழக்கு மூலையில் இருந்தது. நீளமான காரிடாரில் நடந்து, அந்தக் கதவைத் தட்டினார்.

சோற்றுக் கையோடு திறந்த இந்திரஜித்தின் முகம் பால்ராஜைப் பார்த்ததும் பிரகாசமானது.

''வெல்கம், இன்ஸ்பெக்டர்... வெல்கம்... வெல்கம்...''

சிறிய ஹால். இரண்டு சோபாக்கள். மூலையில் பர்தா போட்ட டெலிவிஷன். எலக்ட்ரானிக் கடிகாரம். நீ நிற ஃப்ரிட்ஜ். இரண்டு ஃபேன்கள். வட்டமான டைனிங் மேஜை.

''இது என் ஒய்ஃப் மாலினி.''

மாலினி மெலிதான உடம்புடன், ஆரோக்கியக் குறைவாக, சற்று கலங்கிய விழிகளுடன் கைகளைக் கூப்பினாள்.

''லன்ச்சை இதோ முடிக்கப் போகிறேன், இன்ஸ்பெக்டர், லைக் டு ஜாயின் மீ?''

''நோ, நோ'' என்றார் பால்ராஜ். சைகையால் மறுத்துக் கொண்டே. ''நீங்கள் சாப்பிட்டு விட்டு வாருங்கள். நான் காத்திருக்கிறேன்...''

சோபாவில் உட்கார்ந்தார். டீபாயில் இருந்த புத்தகங்களைப் புரட்டினார். குமுதத்திலிருந்து கீழே தத்திப் பறந்தது ரோஸ் நிறத்தாள் ஒன்று.

ஸாரி என்று முணுமுணுத்துவிட்டு அதைப் பொறுக்கினார்.

நீலநிறத்தில் பார்டர் இடப்பட்ட அந்தத் தாளில் அச்சாகியிருந்த சிவப்பு நிற வார்த்தைகளைப் படித்தார்.

தோல்விகள் நமது வெற்றிகள்.

காயங்கள் நமது பரிசுகள்.

தலை குனியோம், அடி பணியோம்.

நாடு நமது. தடுப்பவர் ஏது?

- இ.மு.கூ.

இ.மு.கூ. என்றால்? இதுவரை அவர் கேள்விப்படாத பெயராக இருந்தது.

சாப்பாட்டு மேஜையிலிருந்து இந்திரஜித் திரும்பினான்.

''இன்ஸ்பெக்டர், புத்தகத்திற்குள் அந்த நோட்டீஸ் கிடந்தது. ஆனால் இந்த நிமிடம் வரை அர்த்தம் புரியவில்லை... யார் வெளியிட்ட நோட்டீஸ்? அதற்கென்ன அர்த்தம் இன்ஸ்பெக்டர்?''

''எனக்கும் புரியவில்லை'' என்றார் பால்ராஜ். அதை மடித்து தன் பாக்கெட்டில் வைத்துக் கொண்டார்.

இந்திரஜித் வாஷ் பேஸினில் கை கழுவிவிட்டு வந்து அவர் எதிரே அமர்ந்தான்.

''எனக்கு ரொம்ப சந்தோஷமாயிருக்கிறது. உங்களைப் பார்க்க... என்னதான் மனம் விட்டு உங்களிடம் வந்து பேசியிருந்தாலும், நான் சொன்னபடியே ஒரு கொலை



நடந்திருந்தாலும், என்னைப் பற்றியோ, நான் கொடுத்த முன் எச்சரிக்கை பற்றியோ ஒரு பேப்பரில்கூட செய்தி வரவில்லை என்றபோது மிகவும் வருந்தினேன். பப்ளிசிடி எனக்குத் தேவையில்லை. ஆனால் போலீஸின் கவனக் குறைவு பற்றி மக்கள் அறிந்து கொள்ள வேண்டும் என்று நினைத்தேன்.''

''தெரிந்து என்ன ஆகப் போகிறது? பொதுமக்கள் போலீஸைப் பற்றி மட்டமாக நினைப்பதால் என்ன லாபம்?'' இன்ஸ்பெக்டர் பால்ராஜ் புன்னகையுடன் கேட்டார். ''நான் இப்போது வந்தது எதற்காகத் தெரியுமா?''

''சொல்லுங்கள் இன்ஸ்பெக்டர்.''

''கொலைகாரனை சீக்கிரம் கண்டு பிடித்து விடுவோம் என்று நினைக்கிறேன். அவனுடைய பெயர் தசரதன் என்று கண்டு பிடித்து விட்டோம்.''

''தசரதன்!'' இந்திரஜித் முணுமுணுத்தான். கண்களை மூடிக் கொண்டு ஆழமாக யோசிப்பது போல் இருந்தது.'' அந்தப் பெயரை எங்கேயோ கேள்விப்பட்டிருக்கினே, இன்ஸ்பெக்டர்.''

''அவனுக்கும், ரேவதி என்ற அந்தப் பெண்ணுக்கும் காதலைத் தவிர வேறு தொடர்புகூட இருந்திருக்கிறது.''

''அப்படியா?''

''ஆமாம். அவனுக்கு எழுதிய கடிதம் ஒன்றில் நீங்கள் கேட்ட விவரமெல்லாம் இணைத்திருக்கிறேன் என்று எழுந்திருந்தாள்.''

''கடிதம் உங்களிடம் கிடைத்ததா, இன்ஸ்பெக்டர்?''

''கடிதம் கிடைக்கவில்லை. ஆனால் அதன் வாசகங்கள் கிடைத்து விட்டன. விவரங்கள் என்றால் என்ன அர்த்தம்?''

''காதலித்தார்கள் என்கிறீர்கள். ரிஜிஸ்டர் கல்யாணம் செய்து கொள்ளக் கூடத் திட்டம் போட்டிருக்கலாம். அப்ளிகேஷன் எழுத அவனைப் பற்றிய விவரங்கள் தந்திருக்கலாம்.''

''முற்றிலுமாக இல்லை என்று ஒதுக்கிவிட முடியாது தான். இந்திரஜித் ஆனால் அந்த வாசகங்களைப் பார்த்தபோது, எனக்கு அப்படித் தோன்றவில்லை.''

''போலீஸ் கண்கள்!'' என்று இந்திரஜித் சிரித்தான். தசரதனைப் பற்றி வேறென்ன கண்டு பிடித்தீர்கள், இன்ஸ்பெக்டர்?''

''திருட்டு மோட்டார் சைக்கிளில் அவனை அழைத்துக் கொண்டு ஊர் சுற்றியிருக்கிறான். வண்டியைக் கண்டு பிடித்து விட்டோம். லேபில் வித்தியாசமாக எதையும் கண்டு பிடிக்க முடியவில்லை என்று சொல்லிவிட்டார்கள். ஆனால் கூவத்தில் வண்டியை உருட்டி விடுவது என்பது சுலபமான வேலை இல்லை. யாருக்கும் தெரியாமல் ரகசியமாக செய்து விட முடியாது. பேல்பூரி, பானிபூரி வியாபாரம் முடிந்து வீட்டிற்குத் திரும்பிக் கொண்டிருந்த ஒரு வண்டிக்காரன் அவனைப் பார்த்திருக்கிறான். ஹீரோ ஹோண்டாவோடு கூவம் கரையில் என்ன செய்கிறான் என்று யோசித்திருக்கிறான். அப்போது அவன் ஒன்றுக்கு இருப்பதைப் போல பாவ்லா செய்ததும் நம்பி கடந்து விட்டான். இருந்தாலும் சற்று தூரம் போய் விட்டு திரும்பிப் பார்த்தபோது, வண்டி இல்லை. ஆள் மட்டும் வேகமாக எதிர்த் திசையில் நடந்து போவதை கவனித்திருக்கிறான். ஒரு ஆட்டோவில் ஏறுவதைக் கூடப் பார்த்து விட்டான். அன்றைக்கு அந்த நேரத்தில் அங்கேயிருந்த ஆட்டோக்கள் எடுத்தது என்று விசாரித்துக் கொண்டிருக்கிறோம்...''



''வெரிகுட், இன்ஸ்பெக்டர்... ஆனால் இத்தனைக் கஷ்டமான வேட்டையையே நீங்கள் தவிர்த்திருக்கலாம். அந்தக் கொலை நடப்பதற்கு முன்னாலேயே தடுத்திருந்தால்...''

''பழைய குப்பையை மறந்து விடுவோம் இந்திரஜித். போலீஸ் தசரதனை எப்படியும் கண்டு பிடித்து விடும்... ஆனால் அதற்கு முன்னால் உங்களிடம் பேசிவிட்டுப் போகலாம் என்று வந்தேன். தசரதனைப் பற்றி புதிதாக ஏதாவது விவரம் கிடைக்குமா என்ற நப்பாசை...''

''சொன்னால் சிரிக்க மாட்டீர்களே, இன்ஸ்பெக்டர்?''

''என்ன?''

''இன்று விடிகாலையில் எனக்கொரு காட்சி தோன்றியது. சிலுவைகள் நட்டு வைத்த ஒரு கல்லறை. அதன் வழியே தான் நடந்து போகிறேன். அந்த புதைகாடின் கல்லறைகளுக்கு நடுவில் அங்கங்கே சின்னச் சின்ன செடிகள், புற்கள், காலடியில் நசுங்கும் மலர்கள். எல்லாவற்றையும் தாண்டி நடக்கிறேன். பூமியே சற்று சரிந்து இறங்குகிறது. அந்தச் சரிவில் நானும் இறங்குகிறேன். சரிவின் முடிவில் நிறைய மரங்கள் அடர்ந்திருக்கின்றன. அந்த மரங்களின் உச்சிகள் இருட்டாய்த் தெரிகின்றன. ஒரு சிறு கல்லில் என் கால் இடறுகிறது. உருண்டு உருண்டு நான் போகிறேன். மரத்தின் உச்சியில் மோதுகிறேன். கிளைகளை விலக்கிக் கொண்டு விழுகிறேன். அந்த மரத்தடியில் ஏற்கனவே ஒரு பிணம் கிடக்கிறது...''

''பிணமா!''

''சொன்னேனே இன்ஸ்பெக்டர். எனக்கு என்னவோ இதைப் போன்ற மோசமான கனவுகள் தான் அதிகம் வருகின்றன. அது ஒரு ஆண் பிணம். மார்பின் குறுக்கே

கத்தியால் கிழித்தது போல் ரத்தக் கோடு உறைந்திருக் கிறது. அந்த முகத்தை - இன்னும் சொல்லப் போனால் அந்தக் கண்களை நான் இதற்கு முன்பே பார்த்திருக் கிறேன் என்று மட்டும் எனக்குப் புரிகிறது. யார்? யார் அது? யோசிப்பதற்குள் காட்சி கலைந்து விட்டது. காட்சி தோன்றியதும் உங்களிடம் வந்து சொல்லலாமா என்று நினைத்தேன். கொலை நடப்பதைப்பற்றிச் சொன்ன போதே நீங்கள் அதிகம் கவலைப்படவில்லை. கொலை செய்யப்பட்டு முடிந்த ஒரு பிணத்தைப் பற்றி என்ன அக்கறை காட்டுவீர்கள்?''

''சிலுவைக் குறிகள் இருந்ததென்றா சொன்னீர்கள்?''

''ஒரு பெரிய சர்ச்சின் பின்னணி கூட தெரிந்ததாக ஞாபகம்'' என்றான் இந்திரஜித்.

''நான் தசரதனைப் பற்றிக் கேட்டேன். நீங்கள் வேறு ஏதோ சொல்கிறீர்கள்.''

''தசரதனை அப்புறம் நான் பார்க்கவேயில்லையே, இன்ஸ்பெக்டர் ஒன் மினிட்.'' இந்திரஜித் கண்களை மூடிக் கொண்டு ஆழமாக யோசித்தான். ''எனக்கு இப்போது புரிகிறது. செத்துக் கிடந்த பிணத்தை எங்கேயோ பார்த்த தாகச் சொன்னேனே... அது வேறு யாருமில்லை. தசரதன் தான்.''

''வாட்!''

''ஆனால் முதல் தடவை பார்த்தபோது அவனுக்கு தாடி இருந்தது. இப்போது இல்லை. அந்தக் கண்களை மட்டும் மறக்க முடியாது...''

''முதல் தடவை பார்த்தபோது அவன் கூலிங் கிளாஸ் தானே அணிந்திருந்தான். கண்களை எப்போது பார்த்தீர் கள்?''



''அந்தப் பெண்ணை உள்ளே அழைத்துப் போய்க் கதவைச் சாத்தியபோது, அவனிடம் கண்ணாடி இல்லை. சொல்லப் போனால், அவன் கண்களில் காமம் தெரிந்தது என்றுகூட நான் சொன்னதாக ஞாபகம்.''

''கல்லறைகள் இருந்த இடத்தை மறுபடி ஞாபகப் படுத்திப் பாருங்கள். இந்திரஜித் எந்த ஏரியா என்று ஏதாவது புலனாகிறதா?''

''பின்னணியில் சர்ச். வேறு ஒன்றும் பதிவாகவில்லை. இன்ஸ்பெக்டர்.''

''தேங்க்யூ.''

''என்ன செய்யப் போகிறீர்கள். இன்ஸ்பெக்டர்?''

''மெட்ராஸில் இருக்கும் அத்தனை இடுகாடுகளையும் கவனிக்கச் சொல்லப் போகிறேன்.''

''இந்த தடவையாவது ஒரு கொலையைத் தடுத்தால் எனக்கு சந்தோஷமாயிருக்கும். இன்ஸ்பெக்டர்.''

''அவசரம் என்றால் உங்களைத் தொடர்பு கொள்ள, நீங்கள் எங்கே இருப்பீர்கள், இந்திரஜித்?''

''கடையில் ஐந்தரை மணி வரை. அப்புறம் ஏழு மணி வரை வீடு. அப்புறம் மறுபடி கடையில் பத்து மணி வரை, கடைக்கு போன் கிடையாது. வீட்டிற்கு வேண்டுமானால் போன் செய்யுங்கள்.''

''உங்கள் உதவி எங்களுக்கு மறுபடியும் தேவைப் படும்,'' என்று எழுந்தார் பால்ராஜ்.

* * *

''ஓ.கே.'' என்றார் கமிஷனர். எல்லா இடுகாடுகளை யும் இரண்டு நாட்களுக்கு வாட்ச் பண்ணுவதற்கு உத்

தரவு தருகிறேன். ஆனால் இரண்டு நாட்கள். இரண்டே நாட்கள்தான்.''

''தேங்க்யூ.. சார்'' என்றது பால்ராஜின் பணிவான குரல்.

## 10

தசரதன் கட்டிலில் அந்தப் பெட்டியைத் திறந்தான். அதிலிருந்த கரன்ஸிக் கட்டுக்களை எடுத்துப் பரப்பினான். எல்லாம் பழகிய நோட்டுகள். மொத்தம் பதினைந்து லட்சம். சொன்னபடி இருந்தது.

பணம் எங்கிருந்து வருகிறது என்பது அவனுக்கு சரியாகப் புரியவில்லை. அமெரிக்காவா, இங்கிலாந்தா அல்லது ரஷ்யாவா, சீனாவா - எந்த நாடு இத்தனை பணத்துக்கு ஏற்பாடு செய்கிறது என்று அவன் சிலமுறை யோசித்திருக்கிறான். பதில் கிடைக்கவில்லை. ஆனால் அந்த பணத்தை எதற்காக செலவு செய்ய வேண்டும். எப்படிச் செலவு செய்ய வேண்டும் என்று மட்டும் அவனுக்கு குழப்பமில்லை.

அவ்வப்போது உத்தரவு வந்து விடும் - கதிர்வேலிடமிருந்து. பணத்தையெல்லாம் மறுபடி அடுக்கி பெட்டியில் அடைத்தான். ஸ்டூலில் ஏறினான். பரணில் இருந்த பழைய டி.வி. அட்டைப் பெட்டியை சற்று சாய்த்து இந்தப் பெட்டியை அதனுள் செருகினான். உள்ளே தள்ளினான். பதினைந்து லட்சம் பணம் இப்படி அலட்சியமாக பரணில் ஏறிக்கப்பட்டிருக்கும் என்று யாருக்கும் சந்தேகம் வரப் போவதில்லை.



ஸ்டூலிலிருந்து அவன் கீழே இறங்கும்போதே போன் மணி ஒலித்தது. பாய்ந்து எடுத்தான்.

''நான் தான்'' என்றது மறுமுனை. கதிர்வேல்!'' பணம் சரியாக இருக்கிறதா?''

''காசு சுத்தமாக...''

''இன்றைய ஹிண்டு பேப்பரை எடு.''

எடுத்தான்.

''இரண்டாவது பக்கம் வரி விளம்பரம் வந்திருக்கிறதா?''

''ஆமாம்.''

''அதில் ஒன்று. மூன்று, ஐந்து, ஏழு நான்கு காலம்களிலும் ஆறாவது விளம்பரங்களைக் கத்திரித்து எடு. உனக்கு ஒரு முகவரி கிடைக்கும். இரண்டு வருட வாடகைக்கு எடு.''

''சரி.''

''நாளைக்கு இதே நேரம் மறுபடி போன் பண்ணுவேன்.'' உன்னைப் போலீஸ் தேடிக் கொண்டிருக்கும். ஜாக்கிரதை! ''தொடர்பு அறுந்தது.''

ஹிண்டு பேப்பரிலிருந்து சேகரித்த வார்த்தைகளைக் கோர்த்ததும்...

நம்பர் 47, பீமண்ணத் தோட்டத் தெரு,

வேளச்சேரி, சென்னை.

என்ற முகவரி கிடைத்தது.

தசரதன் முகவரியை மனப்பாடம் செய்தான். அந்தப் பேப்பர்த் துண்டங்களைப் பொறுக்கி பற்ற வைத்து சாம்பலாக்கினான்.

கட்டிலுக்கடியிலிருந்த தோல் உரிந்து போன ஒரு சூட்கேஸை வெளியே இழுத்தான். திறந்தான். துணிகளையெல்லாம் கலைத்து அடியிலிருந்து ஒரு பிளாஸ்டிக் டப்பாவை எடுத்தான். அதனுள் இருந்த இரண்டு ரப்பர் துண்டுகளை எடுத்து பற்களின் பக்கவாட்டில் அடக்கிக் கொண்டான். முகத்தின் அமைப்பு சதுரமானது. கம்பளிப் புழுக்களைப் போல் இருந்த இரண்டு புருவங்களை எடுத்து தன் புருவங்களின் மீது ஒட்டிக் கொண்டான். தலைமுடியை அழுத்த வாரி, அதன் மீது ஒரு டோப் பாவைப் பொருத்தினான். கன்னத்தில் அரக்கு நிற மெழுகுப் பென்சிலால் ஒரு கோடு இழுத்தான். காயம் பட்ட தழும்பு போன்ற தோற்றத்தைத் தந்தது அது.

ஸ்டூலில் ஏறி, பதுக்கி வைத்த இடத்திலிருந்து இருபதாயிரம் ரூபாயைப் பொறுக்கிக் கொண்டான்.

வேளச்சேரியில் பச்சை நிற மாநகரப் பஸ்ஸிலிருந்து உதிர்ந்த அவனை கவனித்தது இளநீர் விற்கும் பெண் தான். அவளை நெருங்கினான் பத்து ரூபாய் கொடுத்து இளநீர் வாங்கி, வெட்டி ஸ்டரா இல்லாமல் அதன் வட்ட வாயில் உதடுகளைப் பொருத்தி அப்படியே கவிழ்த்துக் கொண்டான். நடந்தான்.

தோல் பதனிடும் தொழிற்சாலை ஒன்றைத் தாண்டியதும், பச்சை மரங்கள் அடர்ந்த தோப்பு ஒன்று கண்ணில் பட்டது.

பீமண்ணத் தோட்டம் என்ற பெயர்ப் பலகை பச்சைச் செடிகளாலேயே செதுக்கப்பட்டிருந்த சிமெண்ட் பலகை.

பீமண்ணத் தோட்டத் தெரு என்று அம்புக் குறியிட்டிருந்தது. தசரதன் மரங்கள் அடர்ந்த அந்தத் தெருவில் நுழைந்தான். நகர்ப்புறத்தின் தூசையும், குப்பையும் உதறி விட்டுத் தனியான தெரு சொர்க்க புரியில் நுழைந்தாற் போலிருந்தது அந்தத் தெரு.



சற்று தூரம் நடந்ததும் சிறு பாலம் ஒன்று வந்தது. மழைநீர் தேங்கி ஓடுவதற்காக அமைக்கப்பட்ட கால்வாய் ஒன்றின் மீது கட்டப்பட்ட அந்த பத்தடி பாலத்தைக் கடந்ததும் இருபுறமும் உள்ளடங்கிய வீடுகள் தென் பட்டன. முதல் கதவின் மீதிலிருந்த எண்ணைப் படித் தான். தசரதன்.

நான்கு.

நாற்பத்தேழு வர இன்னும் இரண்டு ஃபர்லாங் நடக்க வேண்டி இருந்தது.

அது ஒரு தனிமைக் கட்டிடம். காம்பவுண்டு சுவர் கல்லால் எழுதப்பட்டிருந்தது. வீட்டு வாசலில் இரண்டு கார்கள் நின்றிருந்தன. ஒரு மோட்டார் சைக்கிள் நின் றிருந்தது. வீட்டிற்குள்ளிருந்து பேச்சுக்குரல் சுவர்களில் எதிரொலித்து வந்தது.

தசரதன் கேட்டைத் தள்ளித் திறந்தான். வீட்டின் வாசலில் உடனே ஒரு வழுக்கைத் தலை எட்டிப் பார்த் தது. எட்டிப் பார்த்தவருக்கு ஐம்பதிலிருந்து அறுபதுக்குள் வயது. அகலமான நெற்றியில் வகிடெடுத்ததுபோல் திருசூர்ணம்.

தசரதன் இரு கைகளையும் கூப்பி வணக்கம் சொன்னான்.

''இங்கே வீடு காலியாயிருக்கிறது என்று.''

''உங்களுக்கு யார் தகவல் தந்தது?''

''நண்பர் ஒருத்தர்.''

''உள்ளே வாருங்கள். இவர்களும் வீடு பார்க்கத்தான் வந்திருக்கிறார்கள்...''

உள்ளே ஏற்கெனவே நின்றிருந்த நான்கு மனிதர்களும் அவனைத் திரும்பிப் பார்த்தார்கள். தசரதன் வலது

கழுத்தை வெட்டினான் நிமிர்ந்தான். வெட்டினான். நிமிர்ந் தான். கழுத்தில் இருந்த ஒரு குறிப்பிட்ட நரம்பை அப்படி செயல்படுத்த அவன் பழகியிருந்ததால் பார்ப்பவர்கள் அது அவனுடைய இயற்கையான பிரச்னை என்று நினைக்கக்கூடும்.

''என்னுடைய கனவு இந்த வீடு. இதைப் பார்த்துப் பார்த்து நான் கட்டியிருக்கிறேன். குடி வருபவர்கள் யாராயிருந்தாலும் அதே பொறுப்புடன் பார்த்துக் கொள்ள வேண்டும் என்று சொல்லிக் கொண்டிருந்தேன்'' என்றார் பெரியவர்.

''வீட்டை நான் சுற்றிப் பார்க்கலாமா?'' தசரதன் குரலை மாற்றியிருந்தான். பெரிய ஹால். அதன் வலது புறம் டைனிங் ரூம். அதை ஒட்டி விசாலமான கிச்சன். ஹாலின் இடம் புறம் பெரிய பெட்ரூம், அட்டாச்ட், பாத்ரூம். ஹாலின் மையத்திலிருந்து புறப்படும் மாடிப்படிகள்.

மாடியில் மூன்று அறைகள். எல்லாமே சுத்தமாக வர்ணமடிக்கப்பட்டு, நவீனப் பொலிவோடு தெரிந்தன.

இறங்கி வந்தான். ''வீடு எனக்குப் பிடித்திருக்கிறது. என்ன வாடகை?''

''வாடகை தான் ரொம்ப அதிகம் சொல்கிறார்.'' என்றார் வீடு பார்க்க வந்தார். ''இந்த இடத்திற்கு மூவாயிரம் ரூபாய் கேட்கிறார்.''

''தனி வீடு. தாராளமாகத் தரலாம்'' என்றான் தசரதன்.

பெரியவர் முகம் பிரகாசமானது.

''இரண்டாயிரமே அதிகம் என்கிறார்கள் இவர்கள்.''

''இது மட்டும் மெட்ராஸின் உள்ளே அமைந்து இருந் தால், ஏழாயிரம் எட்டாயிரம் வரைக்கும் கூட வசூலாகும்.



வேளச்சேரி என்பதால் தான் மூவாயிரத்துக்குத் தருகிறார் என்று நினைக்கிறேன்.''

தசரதனை மற்றவர்கள் சற்று வெறுப்பும், சற்று கோப மும் கலந்து பார்த்தார்கள். ''மூவாயிரம் தரலாமென்றால் நீங்களே எடுத்துக் கொள்ளுங்கள்'' என்றார் ஒருத்தர். விசிட்டிங் கார்டை பெரியவரிடம் நீட்டி, ''இரண்டாயிரத் துக்குத் தருவதானால் எனக்குத் தெரிவியுங்கள்'' என்று வெளியே நடக்க மற்றவர்களும் நடந்தார்கள்.

''எனக்கு இந்த வீட்டை ரொம்பப் பிடித்திருக்கிறது.''

''உங்களுக்குக் கல்யாணமாகி விட்டதா?''

''வீடு எனக்கு இல்லை. என் தம்பிக்கு'' என்றான் தசரதன். சிரித்துக் கொண்டே ''காலேஜில் படிக்கிறான். அவனும் அம்மாவும் வந்து இருக்கப் போகிறார்கள். பெரிய படிப்பு நகரத்தில் இருந்தால் நிறைய டிஸ்டர்பன்ஸ். அவனால் படிக்க முடியவில்லை. என் அண்ணன் அமெரிக் காவில் இருக்கிறார். படிப்புக்கு என்று மாதம் பத்தாயிரம் ரூபாய் அனுப்பி விடுவார். அதில் இந்த வீட்டிற்கு மூவாயிரம் செலவு செய்வது தப்பே இல்லை.''

''மூன்று மாத அட்வான்ஸ்.''

''ஆறு மாத அட்வான்ஸாகவே தருகிறேன்'' என்றான் தசரதன். ''ஏன் என்றால் நாளைக்கு நீங்கள் மனசு மாறி விடக் கூடாது பாருங்கள்.''

பெரியவர் முகத்தில் ஆயிரம் வாட் விளக்கொளி தெரிந்தது.

பணத்தை எண்ணி வாங்கிக் கொண்டார். ''நான் இன்றைக்கு ராத்திரியே பெங்களூர் போகிறேன். மாதா மாதம் வாடகையை டிராஃப்ட்டாக அங்கே அனுப்பி வைத்து விடுங்கள்'' என்று அட்ரஸைக் குறித்துத் தந்தார்.

''உங்கள் பெயரைச் சொல்லவில்லையே?''

''ரகுவரன். இந்தியன் ஆயில் கார்ப்பரேஷனில் வேலை பார்க்கிறேன்'' தசரதன் கைகளைக் கூப்பி மிகுந்த மரியாதையோடு வணக்கம் சொன்னான். அவர் காட்டிய அக்ரிமெண்டில் ரகுவரன் என்று கையெழுத்திட்டான். சாவியை வாங்கிக் கொண்டான். புறப்பட்டான்.

## 11

''இன்றோடு மூன்று நாட்களாகி விட்டன'' என்றார் பால்ராஜ். தேநீரை உறிஞ்சியபடி, ''நீங்கள் கொடுத்த வர்ணனையுடன் மூன்று இடுகாடுகள் இருக்கின்றன. மூன்றையும் ராத்திரி பகலாக தேவு பார்த்தாயிற்று. யாரும் அந்தப் பக்கமே வரவில்லை.''

இந்திரஜித் பதசு என்றான். ''எனக்குத் தோன்றிய காட்சிதான் தப்பா? அல்லது வேறு ஏதாவது ஊரில் இதே போல் இடுகாடு இருக்குமோ? ஏனென்றால் முதல் தடவை எனக்கு ரயில் கவிழுவது போல் காட்சி வந்த போது, எங்கேயோ ஆந்திராவில் தானே கவிழ்ந்தது.

நிமிர்த்தி வைக்கப்பட்ட காஸெட்களை அலமாரித் தட்டில் சரிப்படுத்திக் கொண்டே பேசினான்.

''வேறு வழியில்லை, இந்திரஜித். இன்னும் ஒரு நாள் பார்த்து விட்டு, போலீஸையெல்லாம் விலக்கிக் கொள்ள வேண்டியது தான். அதற்கு நடுவில் உங்களுக்குத் தசரதன் பற்றி ஏதாவது கூடுதலாகத் தகவல் தோன்றியதா என்று விசாரித்துப் போகத்தான் வந்தேன்.''



''இல்லை ஒன்றுமில்லை. எது இருந்தாலும் நானே காண்டாக்ட் பண்ணுகிறேன், இன்ஸ்பெக்டர்.''

சொல்லிவிட்டு கீழேயிருந்து ஒரு காஸெட்டை எடுக்கக் குனிந்தவன் 'ஹம்மாவ்!' என்று குரல் கொடுத்தான். அப்படியே நாற்காலியில் தளர்ந்து உட்கார்ந்தான்.

''என்ன இந்திரஜித்?'' பால்ராஜ பதற்றத்துடன் கேட்டார்.

கையை உயர்த்தி ஒன்றுமில்லை என்பது போல் அடக்கினான். கண்களை மூடிக் கொண்டான். அவன் நெற்றியில் நரம்பு ஒன்று துடித்தது. தவித்தது. முகத்தில் வியர்த்தது.

கண்களை மெல்லத் திறந்தான்.

''இன்ஸ்பெக்டர். நல்லவேளை நீங்களே இங்கே இருக்கிறீர்கள்.'' அவன் குரலில் பதட்டம்.''

''ஏன், இந்திரஜித்?''

''எனக்கு இப்போது ஒரு காட்சி வந்தது. இன்ஸ்பெக்டர், சந்தன நிறத்துணியில் சிகப்புப் பூக்கள் எம்ப்ராய்டர் செய்த ஒரு நைட்டியை அணிந்த பெண் ஒருத்தி ஸ்டூல் ஒன்றில் ஏறுகிறாள் பியூஸ் ஆகிவிட்ட ஒரு பல்பைக் கழற்றுகிறாள். புது பல்பை மாட்டும்போது மின்சாரம் அவளைத் தாக்கு கிறது. மின்னல் போல் அவள் உடலில் ஒரு துளி தூக்கி யெறியப்படுகிறாள். கீழே மண்டை மோதி, பிளந்து ரத்தம் உறைந்து ஓ, காட் கொடுமையான காட்சி.''

பால்ராஜ் இந்திரஜித்தையே கவலையுடன் கவனித் தார். ''மெட்ராஸிலா, வெளியூரிலா?''

''தெரியாது. ஆனால் அந்த ரூமில் ஒரு சிலுவை சுவரில் தொங்குகிறது. மூன்று மெழுகு வர்த்திகள் எரிகின்றன. அவற்றில் ஒரு மெழுகுவர்த்தியின் ஸ்டாண்ட் உடைந் திருக்கிறது.''

''என்ன!'' பால்ராஜ் திடுக்கிடலுடன் எழுந்தார்.

''ஏன் இன்ஸ்பெக்டர்?''

''என் வீட்டு அறையை நீங்கள் வர்ணித்தது போல் இருந்தது. வீட்டில் என் ஒய்ஃப் தனியாக இருக்கிறாள்.''

''இன்ஸ்பெக்டர் ஓடுங்கள்... உங்கள் மனைவியைக் காப்பாற்றுங்கள்.''

* * *

''ஜீப் பிரேக் அடித்த சத்தம் அந்தத் தெருவையே அதிரடித்தது.

பால்ராஜ் ஜீப்பிலிருந்து குதித்து இறங்கினார்.

கதவைத் தடதடவென்று தட்டினார்.

''வந்து விட்டேன்!'' என்று குரல் வந்தது. ரோஸ்லினின் குரல்.

கதவைத் திறந்தாள்.

''என்ன ஆயிற்று உங்களுக்கு? காலிங் பெல் இருக்கும் போது கதவை ஏன் இப்படி தடதடவென்று தட்டுகிறீர்கள்?''

ரோஸ்லின் கத்திரிப் பூ நிறத்தில் புடவை அணிந்திருந்தாள்.

அறையின் மையத்தில் ஸ்டூல் போட்டிருந்தது. மின் விளக்குக்கு நேர் கீழே.

பால்ராஜ் வேகமாக அந்த ஸ்டூலை நெருங்கினார்.

''இது ஏன் இங்கே வந்தது?''

''இந்த பல்பு பியூஸாகி விட்டது. கழற்றி விட்டு புதுசைப் போடலாம் என்று ஸ்டூல் போட்டேன்.''

''ஜீஸஸ்!''



இந்த சின்ன விஷயத்திற்கு பால்ராஜ் எதற்கு அவ்வளவு பதறுகிறார் என்று ரோஸ்லினுக்குப் புரியவில்லை என்பதை அவள் முகத்துக் குழப்பம் சொன்னது.

பால்ராஜ் பூட்ஸ் கால்களுடன் ஸ்டூலில் ஏறினார்.

''டெஸ்ட்டரை எடு...''

ஏன்? என்னாயிற்று உங்களுக்கு?''

''எடு என்றால் எடு.''

டெஸ்ட்டரை வைத்துத் தொட்டபோது, பல்பின் தொப்பியில் மின்சாரம் ஒழுகிக் கொண்டிருந்தது.

''மை குட்னஸ்!'' பால்ராஜ் கீழே குதித்தார். மெயின் ஆஃப் பண்ணு, எலக்ட்ரீஷியனைக் கூப்பிடு.''

ஐந்து நிமிடத்தில் எலக்ட்ரீஷியன் வந்து விட்டான். உபகரணங்களை வைத்து சோதித்து விட்டு, ''இரண்டு ஒயர்களும் ஷார்ட் ஆகியிருக்கிறது. தொட்டிருந்தால் ஆளைத் தூக்கி எறிந்திருக்கும்'' என்றான்.

''நேற்று வரை நன்றாகத்தானே இருந்தது?''

''அது தெரியாது. எலியோ, குருவியோ கடித்திருக்கும். அல்லது கொத்தியிருக்கும். ஒயர் அறுந்து ஒன்றுடன் ஒன்று தொட்டுக் கொண்டிருக்கிறது.''

''இதற்காகத் தான் கதவை ஓங்கி ஓங்கித் தட்டினேன்'' என்றார் பால்ராஜ்.

''உங்களுக்கு எப்படித் தெரியும்? நீங்கள் தான் ஒயரைக் கட் பண்ணி வைத்துவிட்டுப் போனீர்களா?''

''நல்ல பெண்டாட்டி நீ! என்னையே சந்தேகப் படுகிறாய் சார்!'' பால்ராஜ் கண்களை மூடி சிலுவையிட்டுக் கொண்டார். இந்திரஜித்!'' என்றார். ''அவன் தான்

சொன்னான். உங்கள் வீட்டில் ஷாக் அடிக்கப் போகிறது என்று. ஆனால் அவன் சொன்ன டிரஸ் தான்...'' பால்ராஜ் இந்திரஜித் காட்சியாகக் கண்டதைப் பற்றி விவரமாகக் கூறினார்.

''நிஜமாகவா'' ரோஸ்லினின் புருவங்கள் நெற்றியின் மையம் வரை உயர்ந்தன. ''உண்மையைச் சொன்னால், நான் குளித்துவிட்டு அந்த நைட்டியைத் தான் போட்டுக் கொள்வதாக இருந்தேன்!''

பால்ராஜ் நாற்காலியில் பொத்தென்று உட்கார்ந்தார். படபடப்பு தீர புஸ் புஸ் என்று பெருமூச்சு விட்டார்.

இந்திரஜித்திற்கு அவ்வளவு சக்தியிருந்ததென்றால், நமக்கு அப்பொழுது குழந்தை பிறக்குமென்று கேட்போமே.''

''அவன் என்ன ஜோஸியக்காரனா? குழந்தை என்றதும் அவன் கண்களை மூடி நம்மைப் பற்றிக் காட்சி காணத் தொடங்கி விட்டால் அவ்வளவுதான்'' என்று பால்ராஜ் கட்டிலைக் காட்டிச் சிரித்தார்.

''ச்சீய்'' என்று ரோஸ்லின் அழகாக வெட்கப்பட்டாள்.

## 12

அடர்த்தியான இரவின் இருளைக் கிழித்துக் கொண்டு அந்தக் கார் சாலையில் வந்தது. கரப்பானின் இரண்டு மீசைகள் போல விளக்கு வெளிச்சங்களால் இருளைத் தொட்டுப் பார்த்து மேடு, பள்ளங்களை உணர்ந்து கார் நகர்ந்து வருவது போல் தோன்றியது தசரதனுக்கு.



காரின் ஸ்டீரியோ நத்திங் பட் விண்டை ஸ்டீரியோ ஸ்பீக்கர்களில் வழிய விட்டுக் கொண்டிருந்தது.

தசரதன் விரல்களால் ஸ்டியரிங்கில் தாளமிட்டுக் கொண்டே ஓட்டினான். கார் ஒரு வளைவில் திரும்பியது.

தசரதன் விறைப்பானான். கதிர்வேலுக்கு இசையைப் பிடிக்குமா, பிடிக்காதா என்று தெரியாது. ஆனால் காரியத்தைத் தவிர வேறெதிலும் கவனம் சிதறுவது அவனுக்கு நிச்சயம் பிடிக்காது என்பது தெரியும்.

கார் கடைசி கட்டிடத்தின் அருகே வந்ததும் பிரேக் அடித்தான். இறங்கினான்.

கேட்டருகில் நின்றிருந்த இளைஞன் தசரதனைப் பார்த்ததும் புன்னகைத்தான் உள்ளே அனுமதித்தான்.

அது ஒரு சிறிய வீடு. ஹாலில் ஒரே ஒரு ஜீரோ வாட் விளக்கு எரிந்தது. நான்கு நாற்காலிகள் வட்டமாகப் போடப் பட்டிருந்தன. மூன்றில் ஆட்கள் உட்கார்ந்திருந்தார்கள். பரஸ்பரம் ஒருவருக்கொருவர் புன்னகை சிந்தி முடித்ததும், அறிமுகங்கள் ஆரம்பமாயின. எழுந்தனர்.

''நான் பார்த்திபன்'' - 5'.9'' 65 கிலோ. 36 மார்பு.

''நான் சரத்குமார்'' - 6' 72 கிலோ. 35 மார்பு.

''நான் சம்பத்ராஜ்'' - 5'6'' 58 கிலோ. 34 மார்பு.

நான்கு பேரும் வலது கைகளை ஒன்றாய்ச் சேர்த்து உயர்த்தினர். ''இளைஞர் முன்னேற்றக் கூட்டமைப்பின் வெற்றிக்கு என்று குரல் உயர்த்தாமல் கோஷமிட்டனர்.

நாற்காலிகளை மீண்டும் ஆக்ரமித்தனர்.

''கதிர்வேலிடமிருந்து செய்தி வந்தது இன்றைக்கு இங்கே சந்திக்கச் சொல்லி'' என்றான் பார்த்திபன். ''என்

னிடம் கொடுத்திருந்த பொறுப்பின் படி, நான் கர்நாடகாவி லிருந்து சக்தி வாய்ந்த வெடிகுண்டுகள் வாங்கி வந்து விட்டேன்.''

''வெரிகுட்'' என்றான் தசரதன்.

''ஐந்நூறு மீட்டர் தூரத்திற்குள் எங்கிருந்தும் ஆப்ப ரேட் செய்யும்படியான எலக்ட்ரானிக் ரிமோட் போர்டை நான் தயார் செய்து எடுத்து வந்திருக்கிறேன்'' என்றான் சரத்குமார்.

''சூப்பர் ட்ரில்லிங் மெஷினை நான் கொண்டு வந்திருக் கிறேன்'' என்றான் சம்பத்ராஜ்.

''வெரிகுட்'' தசரதன் எழுந்தான். ''எனக்குக் குறிப்புகள் மூலம் சொல்லப்பட்ட வீட்டை நான் வாடகைக்குப் பிடித்து விட்டேன். இனி நாம் நால்வரும் சேர்ந்து ஒரு ஆன் தி ஸ்பாட் சர்வே செய்ய வேண்டியது தான் பாக்கி. நான் கார் கொண்டு வந்திருக்கிறேன்.''

மற்ற மூவரும் எழுந்தனர். வாசலில் காவல் இருந்த இளைஞன் புன்னகையுடன் வழி அனுப்பினான்.

கார் இந்த முறை பிரேக் அடித்தது வேளச்சேரியின் பிரதான சாலையிலிருந்து விலகிப் பிரிந்த மண் தெருவில்.

''அதோ மொட்டை மாடியில் விளக்கு எரிகிறது. அது தான் நான் பார்த்திருக்கும் வீடு.''

''வீட்டில் யாராவது இருக்கிறார்களா, என்ன?''

''இல்லை. நான்தான் விளக்கைப் போட்டே வைத் தேன்.''

''இந்த ஸ்பாட்டிலிருந்து ஐந்நூறு மீட்டருக்குள் தான் இருக்கும், அந்த வீடு.''



''இங்கே இல்லை. இன்னும் மெயின் ரோடிற்கு நாம் போக வேண்டும்'' அங்கிருந்து அவர்கள் மெல்ல குழு வாக நகர்ந்தார்கள். புதிதாகப் போடப்பட்டு வரும் சாலையை நெருங்கினார்கள். பாதி சாலையில் ஜல்லியும், தாரும் பரப்பப்பட்டு விட்டது. இன்னொரு பாதிக்கு மறுநாளே போடப்பட்டு விடும் சாத்தியம் தெரிந்தது.

ஆட்கள் வேலை செய்கிறார்கள் என்ற சிவப்பு அறி விப்புப் பலகை தெருவின் குறுக்கே நிறுத்தப்பட்டிருந்தது. சாலையின் ஓரத்தில் வரிசையாக தார் டிரம்கள். ஆட்கள். ஆனால் வேலையில் இல்லை. காவலுக்குக் கூட யாரும் இல்லை.

''இந்த இடம் தான் தோதாகத் தோன்றுகிறது'' என்றான், தசரதன். சாலையின் ஒரு ஓரத்தைத் தொட்டுக் காட்டி.

தார் சாலையின் இருபுறமும் கெட்டித்த களி மண் நிலம்.

''இங்கே'' என்று ஒரு இடத்தைத் தொட்டுக் காட்டி னான். தசரதன். சாலையைக் கடந்து மறுபுறம் போய் இன்னொரு இடத்தையும் குறியிட்டான். ''இங்கேயும்'' என்றான்.

''யாரும் வந்து விட மாட்டார்களே...''

''ராத்திரி பன்னிரண்டு மணிக்கு மேல் இந்தப் பக்கம் யார் வரப் போகிறார்கள்? வந்தாலும், ரோடு ரிப்பேர் நடப்பதாகத் தான் நினைத்துக் கொள்வார்கள்.''

''என் ட்ரில்லிங் மெஷினை எடுத்து வரட்டுமா?'' சம்பத்ராஜ் கேட்டான்.

''இன்றைக்கு நேரம் நமக்கு சாதகமாக இருக்கிறது. நாம் விட்டு விட்டுப் போகும் அடையாளங்களையும் புது தார்

ரோடு போட்டு மூடி விடப் போகிறார்கள் ஸோ.. ஆரம்பிப்போம்.''

## 13

பால்ராஜ் வாயில் பிரஷ்ஷுடன் தினத்தந்தியின் கொட்டை எழுத்துக்களை 'ஜெயலலிதா பகிரங்கக் கண்டனம்' என்று மனதிற்குள் படித்துக் கொண்டிருந்த அழைப்பு மணி கூப்பிட்டது.

பால்காரன் கூட வந்து போய் விட்டானே. வேலைக்காரி அதற்குள்ளா வந்து விட்டாள்?

யோசனையுடன் சென்று கதவைத் திறந்தவர் திகைத்தார். வெளியே இந்திரஜித் நின்றிருந்தான்.

''குட்மார்னிங் இன்ஸ்பெக்டர்'' அவன் குரலில் உற்சாகத்தை விட பதட்டம் அதிகம் இருந்தது.

பால்ராஜ் அவனை சைகையாலேயே நாற்காலியில் உட்காரச் சொல்லிவிட்டு, வாஷ் பேஸினுக்குப் போனார். ஐந்து நிமிடத்தில் இரண்டு கப்களில் காபியுடன் வந்து அமர்ந்தார்.

''நானே போட்டது. என் ஒய்ஃப் இன்னும் எழுந்திருக்கவில்லை'' இந்திரஜித் அதை ரசிக்கும் மூடில் இருந்ததாகத் தெரியவில்லை.

''இவ்வளவு காலையில் வந்து உங்களை டிஸ்டர்ப் பண்ணுவதற்கு ஸாரி. ஆனால் உங்களிடம் தான் முதலில் சொல்ல வேண்டும் என்று எனக்குத் தோன்றியது.''

''என்ன?'' என்றார், பால்ராஜ் நெற்றியைச் சுருக்கி.



''ஒரு மணி நேரத்திற்கு முன்னால், பாத்ரூமில் உட்கார்ந்திருந்தபோது எனக்கு ஒரு காட்சி. ஒரு ஐந்து நட்சத்திர ஹோட்டல். அதன் ஐந்தாவது மாடி திடீரென்று வெடித்துச் சரிந்து விழுவது போல் தோன்றியது.''

''ஐயையோ.''

''ஹோட்டலின் பெயர் கூட படித்தேன், இன்ஸ்பெக்டர்.''

''ஆனால் இந்திரஜித், கமிஷனருக்கு சற்று ஏமாற்றம். தசரதன் என்பவனுடைய பிணம் கிடைக்கும் என்று நீங்கள் சொல்லி இத்தனை நாட்களாகி விட்டது. அவனைக் கண்டு பிடிக்கவே முடியவில்லை.''

''ஸாரி எனக்கே ஏன் என்று இன்னும் விளங்காத ஒரு காட்சி அது. ஆனால் ஹோட்டலின் ஒரு பகுதி வெடித்துச் சரிவதைப் பார்த்த பிறகும் சொல்லாமல் இருக்க என் மனம் இடம் தரவில்லை.''

''ஹோட்டலின் பெயர் என்ன?''

இந்திரஜித் சொன்னான்.

பால்ராஜ் நான்கு போன்கள் செய்தார்.

''ஐந்து நிமிடம், நான் டிரஸ்ஸில் வந்து விடுகிறேன்'' என்றார்.

கதீட்ரல் சாலையில் இருந்த அந்த ஐந்து நட்சத்திர ஹோட்டலின் முகப்பில் ஜீப் நின்றது. பால்ராஜ் முதலில் இறங்கினார். ரிசப்ஷனில் கலந்து விட்டு ஹோட்டல் மேனேஜரின் அறைக்குள் நுழைந்தார்.

''ஐ'ம் பால்ராஜ்.''

''குட் மார்னிங் இன்ஸ்பெக்டர்.''

''இந்த ஹோட்டலின் ஐந்தாவது மாடியில் ஒரு வெடிகுண்டு இருப்பதாக எங்களுக்குத் தகவல் வந்துள்ளது.''

''ஐயையோ.''

''அதனால் அதிகக் கலவரம் இல்லாமல் ஐந்தாவது மாடியில் தங்கியிருப்பவர்களை யெல்லாம் காலி பண்ணச் சொல்லுங்கள். எங்கள் டிபார்ட்மெண்ட்டிலிருந்து எக்ஸ்பார்ட் வந்திருக்கிறார்கள். வெடிகுண்டை மோப்ப சக்தியால் கண்டு பிடிக்கும் நாய்கள் வந்துள்ளன.''

கிட்டத்தட்ட நாற்பது நிமிடம் செலவானது. ஐந்தாவது மாடியில் ஆறு சூட்கள் இருந்தன. ஆறிலும் இருந்த வி.ஐ.பி.க்களுக்கு அதிக அதிர்ச்சியில்லாமல் தகவல் தெரிவிக்கப்பட்டு, அவர்களுடைய ஒத்துழைப்புடன் போலீஸ் சோதனையிட்டது. எந்த அறையிலும் வெடிகுண்டு இல்லை என்று தீர்மானம் ஆனதும், காரிடாரில் மோப்பம் பிடித்து வந்தன நாய்கள். திடீரென்று கால்களை உயர்த்தி சுவரைப் பிறாண்டியது ஒரு நாய்.

அதற்கு சற்று உயரத்தில் ஒரு மின்சார போர்டு சுவரோடு ஸ்க்ரூ செய்யப்பட்டு காரிடாருக்கான விளக்குகளின் சுவிட்ச்கள் இருந்தன. பால்ராஜ் நிபுணர்களைக் கூப்பிட்டார்.

ஹா! என்ற ஒலி அனைவரின் வாயிலும் எழுந்தது.

சுவரில் மின்சார ஒயர்கள் செல்வதற்காக செதுக்கப் பட்டிருந்த பள்ளத்தில் பேப்பர் வெயிட் அளவிற்கு உருட்டையாய் ஒரு சக்தி வாய்ந்த டைம்பாம் பொருத்தப்பட்டிருந்தது. யாரும் கவனிக்காதிருந்தால் காலை பத்து மணிக்கு அது வெடித்திருக்கும்.

பால்ராஜ் இந்திரஜித்தின் கையைப் பற்றி உணர்ச்சியுடன் குலுக்கினார். ''எத்தனை உயிர்களைக் காப்பாற்றி விட்டீர்கள்!''



''போலீஸிற்கு யாரிடமிருந்தோ போனில் மிரட்டல் வந்தது. அதன் பேரில் வந்து வெடிகுண்டைக் கண்டு பிடித்தார்கள் என்றே நியூஸ் பேப்பர்களுக்குத் தகவல் கொடுங்கள். இன்ஸ்பெக்டர், அநாவசியமாக என் பெயரைப் பிரபலப்படுத்தாதீர்கள். கமிஷனருக்கு அது பிடிப்பதில்லை.

இந்திரஜித்தின் முகத்தில் கூச்சம்.

''சரி'' என்றார் இன்ஸ்பெக்டர் பால்ராஜ்.

ஹோட்டல் மேனேஜருக்கும், அந்த மாடியில் தங்கியிருந்தவர்களுக்கும், அவர்களுடைய ஒத்துழைப்பிற்காக நன்றி சொல்லிவிட்டுக் கிளம்பினார்.

இந்திரஜித்தை அவனுடைய வீட்டருகே இறக்கி விடும்போது ''இனிமேல் இதைப் போன்ற செய்திகள், காட்சிகள் உங்களுக்குத் தோன்றினால் தயங்காமல் என்னை காண்டாக்ட் பண்ணுங்கள், இந்திரஜித்.''

''நிச்சயமாக, இன்ஸ்பெக்டர்.''

* * *

பால்ராஜ் அன்றைக்கு சந்தோஷ நாளாக உணர்ந்தார். முற்றிலும் பசை போட்டு ஒட்டப்பட்ட கேஸ் என்று நினைத்திருந்ததில் அடுத்த விரிசல் ஸ்டேஷன் போனதும் கிடைத்தது.

தடயவியல் துறையிலிருந்து போன்.

''சார், கூவத்திலிருந்து ஒரு பைக் கண்டெடுத்தீர்களே. அதில் ஒரு புதிய தகவல் வேண்டுமா?''

''சொல்லுங்க சார், சொல்லுங்கள்.''

''ஹெட்லைட்டில் கிளார் அடிக்கக் கூடாது என்பதற்காக வட்டமாக கறுப்புப் பெயிண்ட் அடிக்கப்பட்டிருந்தது.

அதை பெயர்த்து எடுத்தபோது உள்ளே கறுப்பாக வட்டமாக ஸ்டிக்கர். அதில் 'அம்மன் சர்வீஸ் சென்டர்' என்று ஆட்டோமொபைல் ஒர்க்ஷாப்பின் பெயர் இருக் கிறது.''

''வெரிகுட்.

* * *

''ஆமாம், சார். நாங்கள் தான் சர்வீஸ் செய்தோம்'' என்றார் ஒர்க்ஷாப் முதலாளி, ஸ்பானரால் தலையைச் சொறிந்து கொண்டே.

''தசரதன் என்று பெயர் கொடுத்திருந்தான். ஒரு முறை பன்க்சர் ஆனபோது வீட்டிலேயே வண்டியை விட்டு விட்டு வந்தான். கடையிலிருந்து தான் பையனை அனுப்பி வீலைச் சுற்றி வந்தோம். வீடு இருக்கும் இடம் கூட பையனுக்குத் தெரியும். இதோ இன்னும் அரை மணியில் வந்து விடுவான். வந்ததும், உங்களுடன் அனுப்பி விடுகிறேன்.''

பால்ராஜ் டென்ஷனோடு சிகரெட்டை எடுத்துப் பற்ற வைத்தார்.

## 14

தசரதன் ரிசீவரை அலட்சியமாக எடுத்தான்.

''ஹலோ'' என்றான்.

''குட்மார்னிங்'' கதிர்வேலின் குரல்.

விறைப்பானான். ''குட்மார்னிங், கதிர்.''



''நமக்கு எவ்வளவு பெரிய அஸைன்மெண்ட் இருக் கிறது! நீ என்னவென்றால் பொறுப்பில்லாமல் நடந்து கொள்கிறாய்!''

''கதிர்!''

''மோட்டார் சைக்கிளில் அம்மன் சர்வீஸ் சென்டர் என்று ஸ்டிக்கரை எடுக்காமலேயே கூவத்தில் உருட்டி யிருக்கிறாய். போலீஸ் மோப்பம் பிடித்து எந்த வினாடியும் உன்னைத் தேடி வந்து விடும். இன்னும் ஐந்து நிமிடத் திற்குள் உன் இடத்தைக் காலி பண்ணு. அதற்கு முன் நம் இயக்கத்தைப் பற்றி ஏதாவது மறைமுகமாகக் குறிப்பு இருந்தால் கூட அதை அழித்து விடு...''

''கதிர், எனக்கு ஆச்சரியமாய் இருக்கிறது. போலீஸ் இவ்வளவு தூரம் கண்டு பிடித்து விட முடியுமா என்ன?''

''ஆச்சரியத்தைத் தூக்கி குப்பையில் எறி. செயின்ட் பீட்டர்ஸ் சிமெட்ரி தெரியுமில்லையா?''

''ஆமா.''

''அங்கே அல்போன்ஸ் சமாதிக்கருகில் இருக்கும் மரத்தடியில் நம் ஆட்கள் இருப்பார்கள். நம்மைப் பற்றி தகவல் சொல்லக்கூடிய எல்லா தடயங்களையும் அள்ளிக் கொள். அவர்களிடம் கொடுத்து விடு. நீ வேறிடத்தில் தங்குவதற்கு ஏற்பாடு செய்திருக்கிறேன். அவர்கள் அழைத்துப் போவார்கள். உனக்கு இன்னும் ஐந்தே நிமிடம்.''

தொடர்பு அறுந்தது.

தசரதன் பரபரப்பாக எழுந்தான்.

இன்ஸ்பெக்டர் பால்ராஜ் ஜீப்பை முந்தின தெருவி லேயே நிறுத்தச் சொன்னார். இறங்கிக் கொண்டார்.

''தெருவில கடைசி வீடு சார். அப்படியே மூணாவது தெரு வழியாவும் போயிரலாம், சார்'' என்றான் கிரீஸ் அழுக்குடன் இருந்த பையன்.

பால்ராஜ் தசரதனின் வீட்டிலிருந்து இணைப்பு இருக்கக் கூடிய எல்லா சாலை வழிகளையும் அடைத்து போலீஸைக் காவல் இருக்க உத்தரவுகள் கொடுத்தார். மெக்கானிக் பையனுடன் அந்தத் தெருவிற்குள் நுழைந்தார்.

தசரதன் வீட்டிலிருந்து கார் ஒன்று சீறி வேகமாகப் புறப்படுவதைப் பார்த்ததும் பால்ராஜ் உஷாரானார். துப்பாக்கியை எடுத்தார். அதற்குள் கார் அவரை மின்னல் நொடியில் கடந்தது. காருக்குள்ளிருந்து ஒரு கரம் நீண்டது துப்பாக்கியுடன்!

டிஷ்யூங்!

பால்ராஜ் பையனை அழுத்திக் கொண்டு கீழே குப்புற விழுந்தார். நிமிர்வதற்குள் கார் கடந்து போயிருந்தது.

பால்ராஜ் எழுந்தார். ஓடினார். பையன் வேறு திசையில் இன்னும் பயம் தீராமல் பின்னங்கால் பிடறியில் அடிபட ஓடினான்.

பால்ராஜ் ஜீப்பில் பாய்ந்து ஏறியதும், ஜீப் புறப்பட்டது. காரை துரத்திற்று. சினிமாக்களில் வருவது போல குறுக்கே யாரும் ஏணியுடன் வரவில்லை. பழவண்டி எதையும் தூக்கி எறியவில்லை. கோழிகள் அடை காக்கும் கூடைகள் பறக்கவில்லை. ஆனால் போக்குவரத்தின் எழுதப்பட்ட, எழுதப்படாத அத்தனை விதிகளும் மீறப்பட்டன.

கார்...

ஜீப்...

கார்...



ஜீப்...

பால்ராஜ் வயர்லஸில் சரமாரியாக உத்தரவுகள் உரைத்தார். அவர்கள் கண்கள் கிரிக்கெட் பந்துகள் அளவிற்கு விரிந்தன. காரணம் - எதிரே குறுக்கில் நிறுத்தப்பட்டிருந்த ரோடு என்ஜின்.

சாலையைப் புதுப்பித்துக் கொண்டிருக்கிறார்களா என்ன என்று யோசித்து முடிப்பதற்குள்.

க்ரீய்ஞ்ச்ச்ச்...

என்று பெரிய எழுத்துக்களில் கார் பிரேக் அடித்து, அப்படியே கிழக்கிலிருந்து தெற்கு திசை மாறி கதவால் ரோடு இன்ஜினை போய் ஆக்ரோஷத்தோடு மோத...

தசரதன் எப்போது வெளியே குதித்தான்?

அவன் எழுந்து ஓடுவதைப் பார்த்தார். உயிரோடு பிடிக்க விரும்பினார். துப்பாக்கியைத் தவிர்த்தார். பிரேக் அடிந்த ஜீப்பிலிருந்து குதித்து இறங்கி, அவன் பின்னாடியே ஓடினார்.

முன்னூறு அடி தூரத்தில் சர்ச் தெரிந்தது. அதன் உயரமான கோபுரத்தின் நிழல் படுத்திருந்த பூமி இடுகாட்டு பூமி செங்குத்தாய் பூமியில் நிற்கும் சிலுவைகள்.

பால்ராஜின் மூளைக்குள் ஒரு ஃபிளாஷ். இந்திரஜித் சொன்ன இடுகாடு இதுதானா?

தசரதன் வெகு அலட்சியமாக இடுகாட்டின் காம்பவுண்டைத் தாண்டினான். கல்லறைகளுக்கு நடுவில் ஓட ஆரம்பித்தான். சரிந்த இறங்கும் பூமி.

பால்ராஜ் வானத்தில் சுட்டார்.

ஙிண்.

ஒரு கல்லறையின் பின் தசரதன் காணாமல் போயிருந்தான். பால்ராஜுடன் இப்போது மேலும் மூன்று கான்ஸ்டபிள்கள் சேர்ந்து விட்டனர். மார்புயரத்திற்கு நிமிர்த்திய ரைஃபிள்கள். பால்ராஜின் கையில் ரிவால்வர். ஒரு பெரிய வட்டமாக பிரிந்து மையத்தை நோக்கி ஒவ்வொருவரும் நெருங்கிக் கொண்டே வந்தனர்.

இடுகாடு சரிந்து முடியும் இடம். சின்ன மரமொன்றில் உச்சி, அடுத்த மட்ட நிலத்தின் ஆழத்திலிருந்து தெரிந்தது. பால்ராஜ் குனிந்து உட்கார்ந்து அதன் கிளைகளை விலக்கினார்.

மரத்தடியில் அவன் கிடந்தான்.

தசரதன்.

எல்லாக் கேள்விகளுக்கும் விடையளிக்கப் போகிறவன் என்று பால்ராஜ் பெரிதும் நம்பி எதிர்பார்த்திருந்த தசரதன்.

கண்கள் திறந்து வெறித்துக் கொண்டிருக்க,

மார்பின் குறுக்கே நீளமான கத்திக்கோடு. தொண்டையில் துப்பாக்கி குண்டு பாய்ந்து ரத்த ஓட்டை.

பால்ராஜ் மிகுந்த ஏமாற்றத்துடன் பிணத்தருகே மண்டியிட்டார்.

## 15

''அவனுடைய கார்? அதில் ஏதாவது கிடைத்ததா?'' என்றான், இந்திரஜித். அவனுடைய வீட்டு ஹாலில் நாற்காலியில் குத்துக்காலிட்டு அமர்ந்து கைகளில் முகத்தைத் தாங்கியிருந்தான்.



தலையை இடதும் வலதுமாக அசைத்தார், பால்ராஜ். ''காரும் முன்பொரு முறை திருடப்பட்ட கார். நம்பர் பிளேட்கள் மாற்றப்பட்டுள்ளன. காரில் எந்தவிதத் தடயமும் கிடைக்கவில்லை. அவன் தங்கியிருந்த வீட்டையும் அலட்சிப் பார்த்து விட்டோம். அவனுக்கு வீட்டை வாடகைக்குக் கொடுத்தவரை உலுக்கி உலுக்கி விசாரித்து விட்டோம். எங்கும் உபயோகமான தகவல் கிடைக்கவில்லை. அவன் ஏன் ரேவதியைக் கொன்றான்? அவள் அவனுக்கு என்னென்ன விவரங்கள் கொடுத்தாள்? இது சாதாரணக் காழ்ப்பில் ஒருத்தியை ஒருத்தன் கொன்றகதையா அல்லது பின்னணியில் வேறு ரகசியம் ஒளிந்திருக்கிறதா என்று எத்தனைக் கேள்விகள்! ஒவ்வொன்றாய் அலசிக் கொண்டிருக்கிறோம்.''

''தமிழ்நாடு போலீஸின் திறமை அசாத்தியமானது என்று எனக்குத் தெரியும்.''

''ஒருத்தரை ஒருத்தர் முதுகு சொறிந்து கொள்வதில் என்ன இந்திரஜித்? நான் வந்தது உங்களிடம் ஒரு உதவி கேட்டு.''

''என்னிடமா! நான் என்ன செய்ய முடியும் இன்ஸ்பெக்டர்?''

''இறந்து போன தசரதனின் உடம்பிலிருந்து உடையைக் கொண்டு வந்திருக்கிறேன். இதை வைத்து உங்களால் அவனைப் பற்றி வேறு ஏதாவது விவரங்கள் தர முடியுமா என்று பாருங்களேன். இந்திரஜித் சிரித்தான்.

''இது என்ன கணவனே கண்கண்ட தெய்வம் படமா? எனக்கு மாயக் கண்ணாடியில் எல்லா விவரங்களும் தெரிய?''

ஆனால் சிரித்த மறுகணமே, அதைக் குறைத்தான். பால்ராஜிடமிருந்து அந்த உடையை வாங்கித் தொட்டான். கண்களை மூடிக் கொண்டான். மூன்று முழு நிமிடங் களுக்குப் பிறகு திறந்தான்.

''இல்லை இன்ஸ்பெக்டர் முழுத் தோல்வி, எனக்கு எந்த விவரமும் கிடைக்கவில்லை.''

''தட்ஸ் ஆல் ரைட்'' பால்ராஜ் எழுந்தார்.

* * *

அன்றைக்கிரவு எட்டு மணிக்கு பால்ராஜின் ஜீப்பில் ஒரு கமறல். கமிஷனரின் குரல் அலை வரிசைகளில் கரகரத்து வந்தது.

''பால்ராஜ், நீங்கள் உடனே வரமுடியுமா? இங்கே இந்திர ஜித் வந்திருக்கிறார். அவர் சொல்வது எதுவும் எனக்குப் புரியவில்லை.''

''யெஸ் சார்.''

பால்ராஜ் போனபோது இந்திரஜித் நாற்காலியில் நிலையில்லாமல் உட்கார்ந்திருந்தான்.

''உங்களைக் காண்டாக்ட் செய்யத்தான் பலமுறை முயற்சி செய்தேன். ஆனால் முடியவில்லை. அதனால் தான் நேரே கமிஷனர் ஆபீஸிற்கே வந்து விட்டேன். இன்றைக்கு ஒரு பயங்கரமான காட்சி சார்.''

''என்ன?''



வளைவு வளைவான பெரிய பாலத்தில் பஸ் ஒன்று போய்க் கொண்டிருக்கும்போது, பாலமே வெடிக்கிறது. சிதறுகிறது. பஸ் கீழே சேற்றில் குப்புற விழுந்து எழுபது பயணிகள் அங்கேயே அவுட்.''

''சேற்றிலா?''

''ஆமாம். பாலத்தின் அடியில் தெளிவான தண்ணீர் ஓடவில்லை. அழுக்காக, கலங்கிய தண்ணீர்.''

கூவத்தைச் சொல்கிறாரோ?'' என்றார் கமிஷனர்.

''அப்படித்தான் இருக்கும். பஸ் என்ன கலர்?''

''பச்சைக்கலர் மாநகர பஸ் தான்.''

''சந்தேகமே இல்லை. மெட்ராஸ் தான். இவர் சொல்கிற வர்ணனையைப் பார்த்தால் அது இரும்புப் பாலமாக இருக்கும் என்று தோன்றுகிறது.''

''இல்லை சிமெண்ட் பாலம்'' என்றான் இந்திரஜித்.

பால்ராஜ் சிரித்தார். ''கான்கிரிட் பாலம் தான் நான் சொல்வதும், ஆனால் அதற்கு இரும்புப் பாலம் என்று பெயர். பாலத்தினடியில் ஏதாவது குண்டு ஒளித்து வைக்கப்பட்டிருக்கலாமோ?''

''கம்மான், லெட்ஸ் கோ'' என்றார் கமிஷனர்.

* * *

இரும்புப் பாலத்தின் இருபுறமும் போக்குவரத்து தடை செய்யப்பட்டு விட்டது. போலீஸின் சக்தி வாய்ந்த விளக்குகளின் வெளிச்சத்தில் இரும்புப் பாலம் ஒவ் வொரு சதுர அங்குலமாக அலசப்பட்டது.

''நான் ஒரு முறை நடந்து பார்க்கலாமா?'' என்றான் இந்திரஜித்.

''ஏன்?''

''என்னை ஏதோ ஒரு சக்தி நடக்கச் சொல்கிற மாதிரி இருக்கிறது.''

இந்திரஜித் பாலத்தின் இந்த முனையிலிருந்து அந்த முனை நோக்கி நடந்தான்.

டக்... டக்... டக்...

இரண்டாவது பகுதிக்குள் நுழைந்ததும் நின்றான். தரையில் உதைத்தான். கீழே குண்டூசியைப் போட்டவன் போல் குனிந்து தேடிக் கொண்டே குறுக்கில் நடந்தான். ஒரு குறிப்பிட்ட இடத்தில் நின்றான். முகத்தில் உணர்ச்சிகள் கூத்தாடின.

''இன்ஸ்பெக்டர்!'' என்று கூவினான்.

பால்ராஜ் ஓடி வந்தார்.

''இன்ஸ்பெக்டர், இங்கிருந்து பார்த்தாலே எனக்குத் தெரிகிறது.''

அவன் காட்டிய இடத்தில் பாலத்தின் கான்க்ரீட் சாலைதான் அவர் கண்களுக்குத் தெரிந்தது.

''என்ன இங்கே?''

''எனக்கு கான்க்ரீட்டைத் தாண்டி பாலத்தின் அடி பாகம் தெரிகிறது. இன்ஸ்பெக்டர். அங்கே சிகப்புத் துணியில் ஏதோ பொட்டலம் போல இரும்புக் கம்பியால் பாலத்தின் அடியில் ஓடும் கான்க்ரீட் கம்பத்தோடு கட்டப்பட்டிருக்கிறது.''



பால்ராஜ் பாம்ஸ்க்வாடைக் கூப்பிட்டார். இந்திரஜித் குறிப்பிட்டுச் சொன்ன இடத்தைக் காட்டி, அதற்கடியில் சோதிக்கச் சொன்னார். இடுப்பில் கயிறு கட்டி அந்தரத்தில் இறங்கிய போலீஸ் ஊழியர் ஐந்து நிமிடங்களில் கைக் குட்டையை உயர்த்தி தலைக்கு மேல் ஆட்டினார்.

''என்ன!''

''ஒரு சிகப்புத் துணிப் பொட்டலம் மிக ரகசியமாக இங்கே பதுக்கப்பட்டிருக்கிறது, சார்.''

நிபுணர்கள் இறங்கினார்கள். அந்தக் குறிப்பிட்ட இடத்தைக் கண்டு பிடித்தார்கள். துணி மூட்டையை பத்திரமாக, கவனமாக கழற்றினார்கள். வெளியே எடுத்து வந்து சோதித்தபோது, இரவு பதினோரு மணிக்கு வெடிக்கக் கூடிய டைம் பாம் ஒன்று அதில் ஒளிக்கப்பட்டிருந்தது. தெரிந்தது.

கமிஷனர் யானையின் தும்பிக்கையிலிருந்து வெளிப்படுவது போல் பெருமூச்சு விட்டார். இந்திரஜித்தை அருகே இழுத்து அணைத்துக் கொண்டார். போட்டோகிராபர்களும், பத்திரிகையாளர்களும் போக்குவரத்து நிறுத்தப்பட்டவுடனேயே மோப்பம் பிடித்து வந்திருந்தார்கள். கமிஷனரையும், இந்திரஜித்தையும் சூழ்ந்து கொண்டார்கள்.

## 16

அறையில் மெலிதான மெழுகுவர்த்தி வெளிச்சம்.

மூன்று பேரும் குனிந்து நின்று தசரதனுக்கு அஞ்சலி செலுத்தியாயிற்று மௌனமாக உட்கார்ந்திருந்தார்கள்.

பார்த்திபன் தொண்டையை செருமிக் கொண்டான். ''நாள் நெருங்கி விட்டது. இந்த சமயத்தில் நாம் தசரதனை இழந்தது கொடுமை.''

''போலீஸில் அவன் எப்படியும் மாட்டி விடுவான் என்ற அபாயத்தின் காரணமாகத் தான் அவனைத் தீர்த்துக் கட்ட வேண்டியிருந்தது என்று கதிர்வேல் சொன்னாரே'' என்றான் சம்பத்ராஜ்.

''நமக்குள் யாரும் உயிரோடு போலீஸில் மாட்டக் கூடாது என்பது தான் நம்முடைய கொள்கை. அவர்களிடம் மாட்டி, சித்திரவதை தாங்க முடியாமல் நம் இயக்கத்தைப் பற்றிய உண்மைகளை வெளியே லீக் செய்து விடுவோமோ என்பது கதிர்வேலின் பயம் என்றான் பேச்சில் இறுதியாகக் கலந்து கொண்ட சரத்குமார்.

''இன்றைக்குத் தேதி இருபத்தேழு. முப்பதாம் தேதி இரவு நம் காரியம் முடிகிறது. மறுநாள் நம் கூடாரங்களை நாம் காலி செய்கிறோம்.''

''ரைட்டோ'' பார்த்திபன் எழுந்தான். ''தசரதனிடமிருந்த தடயங்களையும் அவன் கொண்டு வந்து சேர்த்து விட்டான். இனி அவன் பக்கத்திலிருந்து நமக்கு எந்த ஆபத்தும் வரப்போவதில்லை. அதே போல் நம் பக்கத்திலிருந்து எந்த மேட்டரும் லீக் ஆகாமல் நாம் பார்த்துக் கொள்ள வேண்டும்.''

மூவரும் கைகளைக் கோர்த்தனர். உயர்த்தினர்.

''இளைஞர் முன்னேற்றக் கூட்டமைப்பின் வெற்றிக்கு'' என்று உணர்ச்சிகரமாய் குரல் எழுப்பினர்.



# 17

தேதி இருபத்தெட்டு.

இன்னும் இரண்டு நாட்களில் பிரதமர். தன் கட்சியின் சிறப்பு மாநாட்டில் கலந்து கொள்ள சென்னை வருகிறார் என்ற செய்தியின் காரணமாக நகர் எங்கும் பரபரப்பு. ஜீப்களில் போலீஸ் சுற்றிச் சுற்றி வந்து சாலையோரம் ஐந்து பேருக்கு மேல் கூடியவர்களைக் காக்காய் விரட்டினார்கள். கம்பெனிகள் தங்கள் செல்லில் ராட்சஸ அலங்கார வளைவுகள் நிறுவ சாலையில் பந்தல் கம்பங்களைக் கொண்டு வந்து இறக்கினார்கள். ராத்திரி ஷிப்டுகளில் கட்சிக் கொடிகள் மானாவாரியாக தைக்கப்பட்டன. கட்சிக் கொடியில் இடம் பெறும் வர்ணங்களில் விற்ற அத்தனை காகிதங்களும் விற்றுத் தீர்ந்து விட்டன.

கமிஷனர் அலுவலகத்தில் கூட்டம்.

போலீஸின் முக்கிய தலைகளின் மாநாடு. பாதுகாப்பு ஏற்பாடுகள் குறித்து மறுபடி மறுபடி விவாதங்கள். விசாரணைகள் - ஆலோசனைகள்.

தேதி இருபத்தொன்பது.

கடைசி நிமிட கெடுபிடிகள். மீண்டும் ஆலோசனைகள். பிரதமர் வந்து இறங்குவது போல் ஒத்திகைகள்.

போலீஸ், பிரதமர் எந்தவித சிராய்ப்பும் இல்லாமல் தில்லிக்குத் திருப்பியனுப்ப முடியும் என்று உறுதியாக நம்பியது.

அதே தேதி இருபத்தொன்பது.

இளைஞர் முன்னேற்றக் கூட்டமைப்பின் வெற்றியை ஊர்ஜிதப்படுத்தி விட்ட சந்தோஷம் அந்த மூவர் மத்தியில்.

நுரை பொங்கி உடைபட்ட ஷாம்பேன்கள் அதற்கு சாட்சியம் சொல்லின.

## 18

தேதி முப்பது.

கமிஷனர் அலுவலகம். கமிஷனர் பேசினார்.

''இன்று மாலை நான்கு மணிக்கு மீனம்பாக்கம் விமான நிலையத்தில் வந்து இறங்குகிறார். அங்கே ஒரு சின்ன பிரெஸ் மீட். அதில் பாஸ் கொடுக்கப்பட்ட பத்திரிகை யாளர்களை மட்டும் அனுமதிக்கிறோம். அதன் பிறகு அங்கிருந்து புல்லட் ப்ரூஃப் காரில் ஏறி ராஜ்பவனுக்கு வருகிறார். வழியெங்கும் டைட் செக்யூரிட்டி. ராஜ்பவ னில் கவர்னர். முதல் அமைச்சருடன் அரைமணி நேரம். ஆறு மணிக்கு வேளச்சேரியில் குழந்தைகள் காப்பகத்தின் வெள்ளி விழாவில் கலந்து கொண்டு பேசுகிறார். ஏழரை மணிக்கு அங்கிருந்து புறப்பட்டு மீண்டும் கவர்னர் மாளிகை. அங்கே டின்னர். பின் மீனம்பாக்கம். அங்கிருந்து ஒன்பது மணிக்கு சார்ட்டட் பிளேனில் டில்லி. வழியில் எந்த மாற்றமும் இல்லை. புரிகிறதா?''



அத்தனை போலீஸ் தலைகளும் ஆடின. பால்ராஜின் தலை சற்று அதிகமாகவே ஆமோதித்தது.

* * *

''இன்றைக்கு மாலை பிரதம மந்திரி வேளச்சேரிக்கு வருகிறார். இதைவிட அருமையான இன்னொரு சந்தர்ப் பம் நமக்கு அமையப்போவதில்லை. இன்றைக்கே நம் லட்சியம் நிறைவேற அத்தனை முயற்சிகளும் நாம் மேற்கொள்ளப் போகிறோம். பார்த்திபன், நீ தான் அந்த வீட்டின் மொட்டை மாடியில் இருந்து கவனிக்கப் போகிறாய். பிரதமரின் கார் பீமண்ணத் தோட்டத் தெரு வழியாகத் தான் வரும். கார் நாம் குறி வைத்திருக்கும் இடத்தைக் கடக்கும்போது நீ ரிமோட்டை இயக்குகிறாய். தெருவிற்கடியில் புதைந்திருக்கும் சக்தி வாய்ந்த வெடி குண்டு வெடிக்கும். அப்புறம் அவரை யாரும் காப்பாற்ற முடியாது.''

''அப்படி அவர் அந்த வெடிகுண்டில் தப்பித்து விட் டால் மாடியின் இன்னொரு ஜன்னலிலிருந்து சம்பத்ராஜ் ஒரு வெடிகுண்டைத் தூக்கி அவர் காரின் மீது போடு= வான்.''

''இளைஞர் முன்னேற்றக் கூட்டமைப்பின் வெற்றிக்கு.''

''பாடுபடுவோம்.''

''தலைவர் கதிர்வேலின் லட்சியங்களை...''

''நிறைவேற்றுவோம்.''

* * *

பிரதம மந்திரியின் விமானம் குறித்த நேரத்திற்கு வந்து இறங்கியது. பத்திரிகையாளர் சந்திப்பில் பாபர் மசூதி

இடிக்கப்பட மாட்டாது. மண்டல கமிஷன் பரிந்துரைகள் பரிசீலிக்கப்படும். தமிழ் நாட்டுக்கு காவிரி நீர் நிச்சயம் உண்டு. வன்முறையை எந்தக் காலகட்டத்திலும் இந்த அரசு அனுமதிக்காது. டெலிவிஷன் வானொலி நிலையம் இரண்டிற்கும் முழு சுதந்திரம் விரைவில் அளிக்கப்படும். அடகு வைத்த தங்கத்தை மீட்க இந்தியா கௌரவமாக மற்ற நாடுகளிடம் எப்படி கடன் வாங்கத் திட்டமிட்டிருக்கிறது என்ற விவரம் மக்களவையில் வெளியிடப்படும் என்று எத்தனையோ கற்பூரங்கள் பிரதமரால் அணைக்கப்பட்டன.

அதன் பின் குண்டு துளைக்காத காரில் திட்டமிட்ட பாதையில் மிகுந்த பாதுகாப்புடன் கவர்னர் மாளிகை.

அங்கே முதலமைச்சருடன் சந்திப்பு.

அதன்பின் வேளச்சேரி விழா.

எல்லாமே அட்டவணைப்படி நடந்து கொண்டிருந்ததில், கமிஷனருக்கு மிகுந்த சந்தோஷம்.

விழா மேடையில் பிரதமர் பேசுவதை கவனமாக அவர் கேட்டுக் கொண்டிருக்க அப்போது தான்...

மேடைக்கருகே நின்று கொண்டிருந்த கமிஷனரை நோக்கி பால்ராஜ் வேகமாக வந்தார். கவர்னர் குனிந்து தன் காதை பால்ராஜின் வாயருகே கொண்டு போனார். பால்ராஜ் சொன்னதைக் கேட்டு கமிஷனரின் முகம் மாறியது. நெற்றி சுருங்கியது. புருவங்கள் முடிச்சிட்டன. அருகிலிருந்த இன்னொரு போலீஸ் அதிகாரியைக் கூப்பிட்டார். தன்னிடத்தில் நிறுத்தி பொறுப்பை ஒப்படைத்து விட்டு பால்ராஜுடன் வேகமாக நடந்தார்.



கூட்டத்தின் விளிம்பிலிருந்து சற்றே விலகி நின்றிருந்த பால்ராஜின் ஜீப் அருகே அவர்கள் விரைந்தனர். ஜீப்பின் முன் இருக்கையில் கையூன்றி பதட்டத்துடன் நின்று கொண்டிருந்தான் இந்திரஜித்.

''என்ன இந்திரஜித்?''

''சார் நான் பதறிக் கொண்டு ஓடி வந்திருக்கிறேன். அரை மணி நேரம் முன்பு எனக்கு ஒரு காட்சி வந்தது. குண்டு துளைக்காத காரில் பிரதமர் போய்க் கொண்டிருக்கையில் சாலைக்கடியிலிருந்து ஒரு வெடிகுண்டு வெடித்து கரையே தூக்கி எறிகிறது.''

''என்னது!'' கமிஷனர் திடுக்கிட்டார்.

''நான் வேளச்சேரிக்கு வந்ததில்லை. அதனால் எந்த சாலை எனக்குக் குறிப்பிட்டுச் சொல்லத் தெரியவில்லை.''

''பால்ராஜ், இப்போது என்ன செய்வது!''

''இங்கிருந்து டைரக்டாக ஹெலிகாப்டரில் அழைத்துப் போய் விடலாமா சார்?''

''பேத்தாதீர்கள். பால்ராஜ், இங்கே ஹெலிகாப்டர் இறங்க தோதாக மைதானம் இல்லை.''

''சார், என்னால் ஒரு உதவி செய்ய முடியும்.''

''என்ன?''

''எந்த சாலையில் குண்டுகள் வைக்கப்பட்டிருக்கிறது என்று சொன்னால் அந்த சாலைக்குள் நுழையும் போதே சொல்ல முடியும் என்று தோன்றுகிறது.''

''அப்படியா!''

''ஆமாம் சார், அதனால் பிரதமரின் கார் கிளம்பும்போது, கூடவே நானும் வந்தால், எந்த சாலையில் நுழையக் கூடாது என்று சொல்லிக் கொண்டே வர முடியும். ஆனால் பிரதமரும் உடன் இருந்தால்தான் இது சாத்தியம் என்று தோன்றுகிறது.''

''தட் இஸ் ஃபென்டாஸ்டிக்'' என்றார் கமிஷனர். படபடவென்ற குரலில் உத்தரவுகள் பிறப்பித்தார்.

''பால்ராஜ், பிரதமரின் காரிலேயே நீங்களும் இந்திர ஜித்தும் ஏறிக் கொள்ளுங்கள். பைலட் ஜீப் என்பது முன்னால் போகாமல் பிரதமரின் காருடனேயே வரட்டும்.''

கமிஷனர் விரைந்து மேடைக்கு மறுபடியும் போனார். பிரதமரின் பாதுகாவலர்களில் முதன்மையானவரை அழைத்தார். அவர் காதுகளில் ரகசியமாகப் பேசினார்.

கூட்டம் திடீரெனக் கைதட்டியது.

''வ-ண-க்-க-ம்'' என்று பிரதமர் தன் இருக்கையில் வந்து அமர, அவரருகில் குனிந்த பாதுகாவலர் ரகசியமாக ஏதோ சொல்ல, பிரதமர் மிக மெலிதாக தலையசைத்து அதை ஆமோதித்தார்.

நன்றியுரை முடிந்து பிரதமர் மேடையிலிருந்து படிகளில் இறங்கினார். இருபுறமும் அணிவகுத்து நின்ற மக்கள் கூட்டத்தை அலை மோதவிடாமல், தடுத்து நின்ற போலீஸார் வழி வகுத்துக் கொடுக்க, பாதுகாவலரும், பிரதமரும், விரைந்து நடந்தனர். திறந்து பிடிக்கப்பட்ட காரில் ஏறின.

இந்திரஜித் சற்று தள்ளி நின்றான். கமிஷனர் தானே அவனது உடம்பில் கையால் அங்கங்கே தட்டி சோதித்



தார். எந்த ஆயுதத்தையும் அவன் மறைத்து வைக்க வில்லை என்பதை உறுதி செய்து கொண்டு அவனையும் காருக்குள் அனுமதித்தார். ''பிரதமர் காரில் ஏறுவதால் இந்த சோதனை'' என்றார்.

டிரைவர், பால்ராஜ். ஜன்னலோரம் இந்திரஜித்.

பின் இருக்கையில் பர்ஸனல் அஸிஸ்டென்ட் ஒருபுறம், துப்பாக்கி ஏந்திய பாதுகாவலர் மறுபுறம் சூழ பிரதமர்.

கார் புறப்பட்டது. காரின் பக்கத்திலேயே போலீஸின் பைலட் ஜீப் திறந்த ஜீப்பில் துப்பாக்கிகளோடு நின்று பயணம் செய்யும் காவலர்கள் இரண்டு வாகனங்கள் தள்ளி, தயார் நிலையில் ஆம்புலன்ஸ்.

இந்திரஜித்தின் முகத்தில் தான் பரபரப்பு அதிகமா யிருந்தது. ஒயர்லஸ் மூலம் போக்குவரத்து போலீஸிற்கு மாற்று உத்தரவுகளைப் பிறப்பித்துக் கொண்டிருந்தார்.

பால்ராஜ் இடதுபுறம் இடுப்பில், ரிவால்வரை உடன் எடுக்க வசதியாக, ஹோல்டரின் பட்டனைத் திறந்து வைத்துக் கொண்டார்.

## 19

அவர்கள் தயாராயிருந்தார்கள்.

பார்த்திபன்.

சம்பத்ராஜ்.

* * *

'இந்த ரைட் வேண்டாம். நேரே போங்கள்'' என்றான் இந்திரஜித்.

வலது புறம் பிரியும் சாலையைத் தவிர்த்து பிரதமர் வண்டி விரைந்தது.

''லெஃப்ட் இடதுபுறம் திரும்பியவுடன் வலது புறம் திரும்புங்கள்.''

அதிக நடமாட்டமில்லாத சாலைகள். பிரதமரின் கார் திடீரென அந்த கேட்பாரற்ற சாலைகளில் நுழைந்ததால் பரபரப்பான மக்கள்.

கார் விரைந்தது.

பீமண்ணத் தோட்டம் என்ற போர்டு எதிரே தெரிந்தது.

இந்திரஜித் கண்களை அழுந்த மூடி தலையை உதறிக் கொண்டான். ''பீமண்ணத் தோட்டம் தான். இதன் அருகே தான் எங்கேயோ குண்டு புதைக்கப்பட்டிருக்கிறது. வலது புறம் திரும்புங்கள்.''

எந்தத் தெருவை அவன் தவிர்க்கச் சொல்கிறானோ, அங்கெல்லாம் வெடிகுண்டு இருக்கக்கூடிய சாத்தியம் இருப்பதால் போலீஸார் அந்த தெருக்களை உடனே அடைத்து விடுவார்கள் என்று பால்ராஜ் பிரதமருக்கு விளக்கம் கொடுத்துக் கொண்டிருந்தார்.

''இதோ இந்த சாலையில் திரும்புங்கள்.''

பீமண்ணத் தோட்டத் தெருவில், புதிதாக போடப்பட்ட தார் ராஸ்ததிவல் கார் நுழைந்தது.

* * *



மொட்டை மாடியில் நின்று பார்த்துக் கொண்டிருந்த பார்த்திபன் விறைப்பானான். ரிமோட் இயந்திரத்தைத் தயாராய் எடுத்து வைத்துக் கொண்டான்.

முதல் மாடியின் ஜன்னலருகே, திரைக்குப் பின் நின்றிருந்த சம்பத்ராஜ் தன் கையில் மாற்று வெடிகுண்டை தயாராய் வைத்துக் கொண்டான். பைனாக்குலரில் காரின் முன்னேற்றத்தைப் பார்த்துக் கொண்டிருந்தபோது அவனுடைய பின்னந்தலையில் ஒரு மணல் பை இறங்கியது.

* * *

பிரதமரின் கார் நேரே அந்தக் குறிப்பிட்ட இடத்தை நெருங்கி விட்டது. இந்திரஜித் டென்ஷனாயிருந்தான்.

* * *

பார்த்திபன் ரிமோட்டை இயக்கினான்.

டமால் - என்று எந்த வெடியும் வெடிக்கவில்லை. பார்த்திபன் தவித்தான். மீண்டும் ரிமோட்டை இயக்கினான்.

எங்கே எங்கே தப்பு நடந்தது?

கார் அந்த இடத்தைக் கடந்து விட்டது! இனி சம்பத்ராஜ் தான் வெடிகுண்டு எறிய வேண்டும்.

பின்னால் சலசலப்பு கேட்டு திரும்பியபோது,

ஆயுதமேந்திய போலீஸார்.

முதல் மாடியில் சம்பத்ராஜ் இரு கைகளும் பின்புறம் கட்டப்பட்டு, போலீஸின் துப்பாக்கி முனையை கிலியுடன் முறைத்தான்.

* * *

கார் நேர் பாதையில் விரைந்தது.

இந்திரஜித் நெளிந்தான்.

''உங்கள் புண்ணியத்தால் இதுவரை வெடி குண்டில்லாத பாதையில் வந்து விட்டோம்'' என்றார் பால்ராஜ்.

இந்திரஜித் குனிந்து அந்த வீட்டைப் பார்த்தான். அதன் மொட்டை மாடியில் போலீஸார் பிடியில் பார்த்திபன் சிக்குவதைப் பார்த்தான். அவன் விழிகளில் அதிர்ச்சி தென்பட்டது.

சரேலெனத் திரும்பினான். இன்ஸ்பெக்டரின் இடுப்பிலிருந்து ரிவால்வரை உருவினான். இருக்கையிலேயே திரும்பினான். ரிவால்வரை பிரதமரின் முகத்துக்கு நேரே குறி வைத்தான்.

''வண்டியை நிறுத்துங்கள்.''

வண்டி நிற்கவில்லை.

''ஏன்? என்றார் பால்ராஜ் புன்னகையுடன். உன் இளைஞர் முன்னேற்றக் கூட்டமைப்பின் தோல்வியைக் கொண்டாடவா?''

இந்திரஜித் விசையை இழுத்தான்.

''அதில் தோட்டாக்கள் இல்லை'' என்றார், பால்ராஜ்.

பிரதமரின் பாதுகாவலர் தன் துப்பாக்கியை அவன் நெற்றிப் பொட்டில் வைத்தார். பிரதமர் புன்னகைத்தார்.

''மிகத் துல்லியமாகப் போட்ட நீண்ட காலத் திட்டம் புஸ்ஸாகி விட்டதே என்று பார்க்கிறாயா, இந்திரஜித்? பெண்டாட்டியுடன் வந்து செட்டிலாகி உனக்கென்று ஒரு அடையாளத்தை மெட்ராஸில் ஏற்படுத்திக் கொண்டாய். உங்கள் இயக்கம் தமிழ்நாட்டின் எல்லா மூலை முடுக்குகளிலும் ஊடுருவி வேரூன்றிக் கொண்டது. பெண்களும் இதில் ஈடுபடுத்தப்பட்டார்கள்.'' பால்ராஜின் குரல் அவனைச் சீண்டியது தொடர்ந்தது.



''ரேவதி என்ற பெண் கால்கேர்ளாக செயல்பட்டாள். பல பெரிய மனிதர்களுடன் தொடர்பு வைத்துக் கொள்ள முடிந்தது அவளால். அவள் மூலம் உங்கள் இயக்கத்திற்குத் தேவையான பல விவரங்களை சேகரிக்க முடிந்தது. ஆனால் தசரதனின் பேரில் ஈடுபாடு அதிகமானது. காதல் உருவானவுடன் அதை தலைமையிடம் ஆபத்தாக கருதியது. உணர்ச்சிகளுக்கு அடிமையாகிறவர்களை இயக்கத்தில் வைத்துக் கொள்வது நல்லதல்ல என்று முடிவெடுக்கப்பட்டது. தசரதன் கையாலேயே அவளைத் தீர்த்துக்கட்ட முடிவெடுக்கப்பட்டது.

''இந்த சமயத்தில் நீ ஒருபுறம் ஸ்பெஷல் பவர்ஸ் இருக்கும் மனிதனாக உன்னைக் காட்டிக் கொள்ள ஆரம்பித்தாய். ரயில் கவிழும் என்றாய். அதே நேரத்தில் ஆந்திராவில் உங்கள் இயக்கத்து ஆட்கள் ரயிலைக் கவிழ்ப்பார்கள் என்ற நம்பிக்கையுடன். தசரதன் எந்த உடை அணிவான், ரேவதியை எந்த உடை அணிந்து வரச் சொல்லுவான் என்ற எல்லா விவரமும் உன்னிடம் முன்பே இருந்ததால், அதை வைத்து அந்தக் கொலை நடப்பதை முன் கூட்டியே பார்த்தது போல் விளக்கமாகச் சொன்னாய்.

''தசரதன் மாட்ட மாட்டான் என்பது உங்கள் கூட்டத்தின் நம்பிக்கை. ஆனால் அவன் விட்டிருந்த மிகச் சின்னத் தடயங்களை வைத்து நாங்கள் அவனை நெருங்கி விட்டோம்.

''உங்கள் இயக்கத்திற்கு திட்டங்களை நிறைவேற்ற நிறைய பணம் தேவைப்பட்டது. இந்தியாவில் குழப்பம் ஏற்படுத்தத்தான் அந்தப் பணம் என்பதால் அதை உங்களுக்கு வழங்க வெளிநாட்டு சக்திகள் தயாரா யிருந்தன. அவ்வப்போது பணம் கைமாறியது. சமீபத்தில் அப்படிக் கைமாறிய பணத்தை வைத்துத்தான் தசரதன் வேளச்சேரியில் வீட்டை வாடகைக்கு எடுத்தான். வெடிகுண்டு வாங்கவும், திருட்டு வாகனங்கள் வாங்கவும் பணம் உபயோகமானது.

''உன் மேல் எனக்குக் கொஞ்சம் கூட சந்தேகமே வரவில்லை. சொல்லப் போனால் அதிகப்படியான நம்பிக்கையே வைத்திருந்தேன். உன் வீட்டிற்கு நான் வந்தபோது அங்கு எதேச்சையாக ஒரு நோட்டீஸ் கிடைத்தது. உங்கள் கூட்டத்தினர் அச்சடித்து அந்த ஏரியாவில் நியூஸ் பேப்பர்களோடு நடுவில் வைத்து விநியோகித்த நோட்டீஸ். உன் வீட்டில் ஒரு புத்தகத்திற்கு நடுவில் கிடைத்தது. இ.மு.கூ. என்றால் எனக்குப் புரியாததால் அந்த நோட்டீஸைப் பற்றி அதிக விவரம் சேகரிக்க ஆசைப்பட்டேன். ரகசிய போலீஸாரிடம் பொறுப்பை ஒப்படைத்தேன். நோட்டீஸ் அச்சடித்த பிரெஸ்ஸைக் கண்டுபிடித்து, அப்புறம் மேற்கொண்டு விசாரித்தத்தில் அந்த நோட்டீஸ் அச்சடிக்கக் கொடுத்தவர் பெயர் கிடைத்தது. இந்திரஜித் என்றார்கள்.

''இரண்டு மூன்று நாட்களுக்கு முன்பு தான் அந்த விவரம் கிடைத்தது. அதற்கப்புறம் தசரதனின் உடையை எடுத்துக் கொண்டு வந்தேன். அதை வைத்து உன்னால்



ஏதாவது சொல்ல முடியுமா என்று கேட்டேன். சிரித்து மழுப்பி விட்டாய். ஆனால் இரும்புப் பாலத்தின் அடியில் வெடிகுண்டு எங்கே இருக்கிறது என்று உன்னால் பார்க்க முடிந்தது. எப்படி? வெடிகுண்டு எங்கே இருக்கும் என்பது உனக்கு ஏற்கெனவே தெரிந்ததால்.

பி.எம். வரும்பொழுது பீமண்ணத் தோட்டத் தெரு வில் அழைத்து வந்து குண்டு வெடிப்பது என்று பிளான் செய்த பின் அவரை ரூட் மாற்றி அழைத்து வர உனக்கு உதித்த ஐடியாதான் உன்னால் குண்டு இருக்கும் தெருவை அடையாளம் உணர முடியும் என்ற கப்ஸா.

''இவ்வளவு விவரம் எப்படி எனக்குக் கிடைத்தது என்று பார்க்கிறாயா? உன் கூட்டாளி சரத்குமார் எங் களிடம் நேற்று சிக்கி விட்டான். எல்லா விஷயத்தையும் கக்கி விட்டான்.

''நோ!'' என்று தலையை நம்பிக்கையில்லாமல் அசைத்தான் இந்திரஜித்.

''உங்கள் தலைவர் கதிர்வேல் இருக்கும் இடம் கூட தெரியும் எங்களுக்கு இந்த நிமிடத்தில் பிரதமரின் கார்.''

''என்னது!'' என்று வியந்தார் பிரதமர்.

''ஆமாம் சார். அவனுடைய கூட்டாளிகளைப் பொறுத்த வரை இதே இந்திரஜித் கதிர்வேல் என்ற பெயரில் உத்தரவுகள் கொடுத்துக் கொண்டிருந்திருக் கிறான். கார் வெடிக்கும்போது இவனும் சேர்ந்து இறப்பான் என்று தெரிந்திருந்தும் இவன் கூட வந்தது இவன் இயக்கத்திற்காக தன் உயிரையும் கொடுப்பான் என்ற உண்மையை அவனுடைய தொண்டர்களின் மனதில்

ஏற்ற சொன்னால் நம்ப மாட்டீர்கள். சார் என் வீட்டில் மின்சார ஒயரில் கூட விஷமம் செய்யுமளவிற்கு இவனுடைய ஆட்கள் எங்கும், எதிலும் கலந்திருக்கிறார்கள். அன்று காலை என் வீட்டிற்கு வந்த வேலைக்காரன் செய்த வேலை அது என்று இப்போது தெரிந்தது.''

''அபாயகரமானவர்கள்'' என்று தோள்களைக் குலுக்கினார், பிரதமர், காருக்கு வெளியே இருட்டை வெறித்தான் இந்திரஜித்.

சிகரெட் பற்ற வைக்கும் ஆசையை மிகுந்த கஷ்டத்துடன் நசுக்கினார். பால்ராஜ்.

பிரதமரின் கார் விரைந்தது.